

# என்மனப் பதிவுகள்

– தங்கராசா சிபவாலு M.A.

# அணிந்துரை

இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முற்பட்ட பெருமை வாய்ந்த இலக்கியங்களைத் தந்துள்ள பழம்பெரும் நாகரிகம் தமிழருடையது என்று பெருமையாகப் பேசிக் கொள்கின்றோம். எனினும் நானூறு ஆண்டுகளுக்கு முற்பட்ட காலத்து எமது வரலாற்றைக் கூடத் தெளிவாக அறிந்து கொள்ளமுடியாத நிலையில் இலங்கைத் தமிழராகிய நாம் உள்ளோம். சங்ககாலப் புலவர்களும் அவர்களின் பின்வந்தோரும் தமது அனுபவங்களைப் பாடல்களாகப் பதிவுசெய்து வைத்திருக்கும் இலக்கியப் படைப்புக்கள் வாயிலாகவே தமிழ்மக்களின் பண்டைய வாழ்க்கை முறைகளை ஓரளவேனும் அறிந்துகொள்ள முடிகின்றது. அவர்களும் எழுதிவைத்திருக்காவிடில் எமக்கென்று ஒரு வரலாறே இல்லாது போயிருக்கும். எமது வாழ்நாளில் நாம் கண்டவற்றையும் எமது அனுபவங்களையும் பதிவுசெய்வதன் மூலம் எமது வருங்காலச் சந்ததியினர் தமது முன்னோரின் வாழ்க்கை முறையையும் அவர்களது இன்ப துன்பங்களையும் அவர்கள் கடந்துவந்த பாதையையும் ஐயத்துக்கிடமின்றி அறிந்துகொள்ளமுடியும்.

இலங்கையின் வடக்குத்திசையில் யாழ்ப்பாணத்தீபகற்பத்துக்குத் தெற்கே அமைந்துள்ள வன்னிப்பிரதேசத்தைச் சேர்ந்த ஒருவர் சென்றநூற்றாண்டின் பிற்பாதியில் தாம் நடந்துவந்த பாதையைத் திரும்பிப் பார்ப்பதுபோல் அமைந்துள்ளது இந்தநூல். அந்தவகையில் இதனையும் ஓர் அவசியமான வரலாற்றுப் பதிவாக ஏற்றுக்கொள்ள முடிகின்றது.

வன்னிமைகள் இலங்கையின் வடக்கிலும் தெற்கிலும் கிழக்கிலும் மேற்கிலும் இருந்தபோதிலும் வன்னிநாடு என்பது இதுதான் என்று காட்டும் வகையில் அதன் எல்லைகளை வரையறுத்துள்ளார் ஒரு புலவர்.

எல்லை வடக்கில் எழில்யாழ்பரவுகடல்
பல்லோர் புகழருவி தெற்கெல்லை– நல்லதிருக்
கோணமலை கீழ்பால் கேதீச்சரம் தெற்கில்
மாணத்திகழ் வன்னிநாடு.

இந்தப்பாடலின்படி வடக்கே யாழ்ப்பாணப் பரவைக்கடலையும் தெற்கே அருவி ஆறு எனப்பட்ட மல்வத்து ஓயாவையும் கிழக்கில் திருக்கோணமலையையும் மேற்கில் திருக்கேதீஸ்வரத்தையும் எல்லையாகக் கொண்ட பரந்தபிரதேசத்தை உள்ளடக்கியதாக இருந்துள்ளது வன்னி நாடு.

இந்த வன்னிநாடு வரலாற்றில் மாபெரும் துன்பங்களை அனுபவித்துள்ளது. தனக்குக் கிடைத்துவரும் அற்ப சொற்ப ஆதாரங்களைக்கொண்டு இன்றுமீள எழுந்துவருகின்றது. இது வன்னிப் பகுதிக்கு உரியவன்னிமரத்தின் (Prosopis spicigera L.) இயல்பாகும். வேறு எந்த மரமும் வளரமுடியாத வரட்சி மிகுந்த நிலங்களில்கூட வேரூன்றித் தனது ஆழமான வேர்களின் மூலம் மிக ஆழத்தில் உள்ள நீரையே உறுஞ்சுவதால் மற்றத்தாவரங்களுடனான போட்டியைத் தவிர்த்து வளரக்கூடியது வன்னிமரம். வன்னிமக்களும் வன்னிமரத்தை ஒத்தவர்களேயாவர்.

வன்னிப்பிரதேசத்தைச் சேர்ந்த குமிழமுனை என்னும் குக்கிராமத்தைப் பிறப்பிட மாகக் கொண்ட திரு சிவபாலு அவர்கள் தமது வாழ்க்கை அனுபவங்களை மிகச் சுவையாகவும் உண்மையாகவும் எம்முடன் பகிர்ந்துகொண்டுள்ளார். கல்வித் துறையில் பின்தங்கிய ஒரு கிராமமாக இருந்தபோதிலும் கடின உழைப்பை வேண்டிநிற்கும் கமத்தொழிலில் தம்மை முழுமையாக ஈடுபடுத்தி ஓரளவு தன்னிறைவுடன் வாழ்ந்த மக்களின் வாழ்க்கை முறையைப் படம் பிடித்துக் காட்டியுள்ளார் ஆசிரியர் சிவபாலு அவர்கள். நகரங்களில் வாழ்ந்த மக்களால் உணரமுடியாதிருந்த வன்னிநாட்டுக் கிராமப்புற மக்கள் அனுபவித்த துன்பங் களையும் அவர்கள் தாண்டிவந்த தடைகளையும் எடுத்துரைக்கும் இந்நூல் எம் அனைவரையும் சிந்திக்கவைப்பதுடன் எம்முள் பலர் இழைத்த தவறுகளையும் துரோகங்களையும் திரும்பிப்பார்க்க வைக்கின்றது.

கி.பி. பதினாறாம் நூற்றாண்டின் இறுதியில் யாழ்ப்பாண இராச்சியத்தின் வீழ்ச்சியுடன் இலங்கைத் தமிழரின் சுதந்திர வாழ்க்கை முடிவுக்கு வந்துவிட்டது என்று பலரும் நினைத்துக்கொண்டிருக்கின்றார்கள். உண்மை அதுவல்ல. வன்னிநாட்டில் வாழ்ந்த தமிழ்மக்கள் ஆங்கிலேயர் காலம் வரை சுதந்திரமாகவே வாழ்ந்து வந்ததோடு யாழ்ப்பாணமன்னர் விட்டுசென்ற கடமைகள் சிலவற்றைத் தொடர்ந்து நிறைவேற்றியும் வந்துள்ளனர். இதற்குக் கயிலை வன்னியனார் மட தர்மசாதனப் பட்டயம் சான்றாக விளங்குகின்றது. வன்னியர் வரலாறு இன்னமும் விரிவாக ஆராய்ந்து எழுதப்படவேண்டிய ஒன்றாக உள்ளது. ஆசிரியர் சிவபாலு அவர்களின் இந்நூல் இன்னமும் முழுமையாக எழுதப்படாத வன்னியர் வரலாற்றுக்கான ஆதார நூல்களுள் ஒன்றாகக் கருத்தில் கொள்ளப்படவேண்டியது. நண்பர் சிவபாலு அவர்களின் இந்நூலாக்க முயற்சிக்கு எனது வாழ்த்துக்கள்.

முனைவர் பால. சிவகடாட்சம்
முன்னாள் சிரேட்ட விரிவுரையாளர், துறைத்தலைவர்
விவசாய பீடம், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்

# என்மனப் பதிவுகள்

வன்னியின் நிகழ்கால வரலாறு பதிவாக்கப்படல் வேண்டும் என்பதில் எனக்கு மிகுந்த அக்கறையுண்டு. ஒவ்வொருவரும் தமக்குத் தெரிந்த சம்பவங்களை அல்லது நிகழ்வுகளைப் பதிவு செய்து வைத்திருந்தால் அது பின்னர் வரலாற்று ஆவணமாகக் கருதப்படும். வன்னியில் அரசாங்கப் பிரதிநிதியாக வன்னி மாவட்ட நிர்வாகியாக பணியாற்றியவர் J.P. Lewis அவர்கள். அவர் வவுனியா மற்றும் முல்லைத்தீவு மாவட்டங்கள் பற்றி A Manual of The Vanni Districts (Vavuniya and Mullaittivu) in the Northern Province, Ceylon என்னும் நூலை எழுதி உள்ளார். அந்நூலை 1895ல் R.C. Cottle, Acting Govt. Printer. Ceylon அவர்கள் பதிப்பித்து வெளியீடு செய்தார். ஒரு நூல் ஆங்கில ஆட்சிக்காலத்தில் வன்னி மாவட்டத்தின் மக்கள் வாழ்வியலையும், கிராமங்களையும் பற்றி அறியக்கூடிய ஆதாரமாகவும் வரலாற்றுப் பதிவாகவும் காணப்படுகின்றது. போர்த்துக்கேயர் காலத்திலும், ஒல்லாந்தர் காலத்திலும் உள்ள வரலாற்றை அறிந்துகொள்ள அவர்களால் மேற்கொள்ளப்பட்ட பதிவுகளைத்தான் பார்க்கவேண்டிய நிலைமை உள்ளது. இவற்றைவிட தமிழில் எழுதப்பட்ட பாடல்கள், மருத்துவ மற்றும் சோதிட நூல்களின் துணைகொண்டும் அறியமுடிகின்றது. சிற்சில இடங்களில் ஆலயங்களில் பொறிக்கப்பட்ட கல்வெட்டுகளும், குளங்கள் கட்டுவிக்கப்பட்டதற்கான ஆதாரங்களும் சில பதிவுகளும் காணப்ப டுகின்றன. தான் மேற்கொண்ட பணிகளின் நிமித்தம் சென்ற இடங்களில் காணப்பட்ட நிலைமைகளை ஊர் ஊராகச் சென்ற சேகரித்து Manual of Vanni என்னும் பெயரில் நூலுருவாக்கி வெளியிட்டிருந்தார். அப்போது இருந்த மக்கள் தொகை ஊர்கள், விவசாயச் செயற்பாடுகள், வரிசெலுத்திய நிலைமைகள் என்பனவற்றைப் பதிவாக்கித் தந்துள்ளமை இன்று எமக்கு வரலாற்றை ஓரளவாவது அறிந்துகொள்ள உதவுகின்றது.

எமது முன்னோர்கள் பற்றியோ அன்றி வன்னிப் பிரதேசங்களில் வாழ்ந்தவர்களின் வரலாற்று ஆவணங்கள் பற்றியோ அறிந்துகொள்ள முடியாத நிலை எமக்கு ஏற்பட்டமைக்கு அவற்றை எழுதிப் பாதுகாத்து வைக்கப்படாமையேயாகும். பல்வேறு நாடுகளிலும் தங்கள் நாட்டின் பண்டைய வரலாற்றை அறிந்து கொள்ளத்தக்க ஆதாரங்களை அவர்களது மூதாதையர் விட்டுச் சென்றுள்ளனர். அவை ஏதோ வழிகளில் பாதுகாக்கப் பட்டு வந்துள்ளன. நான் நேரடியாகப் பார்த்தும் கேட்டும் கற்றும் அறிந்துகொண்ட எனது மனப்பதிவுகளையும் அனுபவங்களையும் பதிவு செய்வதில் ஏதோ ஒரு வகையில் எதிர்காலச் சந்ததியினருக்குப் பயன்பாடாக அமையும் என்னும் நோக்கமே இந்த நூலின் அடிப்டையாக உள்ளது.

இந்த நூலில் நான் பிறந்து வளர்ந்த “குமுளமுனை“ பற்றி ஒரு கட்டுரையைப் உள்ளடக்கியுள்ளேன். அதனைப் போன்று ஒவ்வாரு ஊர் பற்றியும் அந்தந்த ஊரைச் சேர்ந்தவர்கள் பதிவு செய்து வைத்திருப்பது மிக முக்கியமானது. யாழ்ப்பாண மாவட்டத்தில் உள்ள பல்வேறு கிராமங்கள் பற்றிய பதிவுகள் சில நூல்களாக வெளிவந்துள்ளன. ஆனால் வன்னி மாவட்டத்தில் உள்ள கிராமங்கள் அல்லது குளங்களின் வரலாறுகள் பதிவு செய்யப்படாமை கவலைக்கிடமாகும். பண்டாரவன்னியனின் வரலாற்றை நாடகமாக ஆக்கி எழுத்துருவாக்கியுள்ளார் “முல்லைமணி“ என அறியப்பட்ட பிரபல எழுத்தாளரும் ஆசிரியர் கலாசாலை விரிவுரையாளராகவும் பின்னர் முல்லைத்தீவு மாவட்டக் கல்விப் பணிப்பாளராகப் பணியாற்றியவருமான வே. சுப்பிரமணியம் அவர்கள். அவ்விதமே அருணா செல்லத்துரை அவர்கள் வன்னியின் வரலாறுபற்றிய நாடகத்தையும், அரியான் பொய்கை செல்லத்துரை அவர்கள் அரியாத்தை என்னும் நாடகத்தையும் ஆக்கித் தந்துள்ளனர். மெட்டாஸ் மெயில், அரியான் பொய்கை செல்லத்துரை அருணா செல்லத்துரை போன்றோர் முல்லைத்தீவுப் பிரதேசத்தில் வன்னியர்களின் ஆட்சிக்காலத்தில் இடம்பெற்ற சிற்சில சம்பவங்களை அடிப்படையாகக் கொண்டதாக சில பதிவுகளை நூலுருவாக தந்துள்ளனர்.

வன்னியில் உள்ள ஆலயங்கள், குளங்கள், குடியிருப்புக்கள் என்பனபற்றிய வரலாற்றுப் பதிவுகள் பெருமளவில் மூடுதிரை போடப்பட்ட கர்ண பரம்பரைக் கதைகளாகவே கேட்க முடிகின்றன. ஒரு வரன் முறையான வரலாற்றுப் பதிவுகளாகவோ வரலாற்று ஆதாரங்களாகவோ ஏற்றுக் கொள்ளத்தக்கன என்று கொள்ள முடியாதவையாகவே காணப்படுகின்றன.

எனது மனப்பதிவுளை என்னோடு மறைந்து போகாமல் பாதுகாக்கவேண்டும் என்னும் நீண்டகால எண்ணத்தின் வெளிப்பாடாகவே இந்த ஆக்கம் உருவானது.

மனதில் உள்ளவற்றில் ஒரு சிலவற்றையாவது பதிந்துவிட வேண்டும் என்னும் முனைப்பினால் ஏற்பட்ட இந்த நூலில் நான் பிறந்தது முதல் இன்றுவரையான அனைத்து விடயங்களையும் அடக்கிவிட முடியாது என்பது எனது எண்ணம். நினைவில் நிற்பவை சிலவற்றையாவது பதிந்துவிட வேண்டும் என்பது எனது விருப்பமாகும். இந்நூலில் சில கட்டுரைகளையும் வாசகர்களின் பயன் கருதிப் பதியத்தந்துள்ளேன். குறிப்பாக வன்னியில் பாவிக்கப்பட்டு வந்த செந்தமிழ்ச் சொற்கள் பற்பல தூய்மை மாறாமல் வயல் நிலங்களில் பயன்படுத்தப்பட்டு வந்துள்ளமையை நான் எனது இளமைக் காலத்தில் செவியுற்றுள்ளேன். அவற்றுள் பல இன்று பாவனையில் இல்லாமல் மறைந்து போயுள்ளமை மனதில் ஒரு நெருடலை ஏற்படுத்தியிருந்தது. அத்தோடு இன்று எங்களது வரலாறு மாற்றி எழுதப்படுவதும், மறைக்கப்படுவதும் கண்கூடாகக் காணமுடிகின்றது. புத்த மதம் இலங்கைக்கு மட்டுமல்ல தூர கிழக்கு நாடுகளான யப்பான், சீனா போன்றவற்றிற்கும் பரவியிருந்தன. எனவே யாழ்ப்பாணத்தில் வாழ்ந்த தமிழர்களும் புத்தர்களாக மாறியிருப்பதற்கான சான்றுகள் நிறையவே உண்டு. மணிபல்லவம் தமிழர்களின் பாரம்பரிய இடமாகவே இருந்துள்ளது. இன்று அதற்கு உரிமை கொண்டாடுபவர்கள் பௌத்தர்கள் என்றால் ஏற்றுக்கொள்ளலாம், ஆனால் அது சிங்கள பௌத்தர்களின் பாரம்பரிய இடமாகக் கொள்ள முனைந்திருப்பது எத்துணை வராற்றுப் புரளி என்பதனை ஏற்றுக்கொள்ளமுடியவில்லை.

எனவேதான் எம்மோடு தொடர்புடைய வரலாற்றை, எமக்குத் தெரிந்த வரலாற்றை நாம் பதிவாக்கவேண்டும் என்னும் எண்ணம் என்னுள்ளத்தில் முளைவிட்டுள்ளது. அவற்றுள் சிலவற்றையாவது பகிர்ந்து கொள்ள முயற்சித்துள்ளேன். மனிதனது கூட்டு வாழ்க்கையே குமுகம். குமுகத்தில் நானம் ஒரங்கம். எனது வரலாறும் குமுகத்தின் ஓரங்கமே. வாசகர்களின் கருத்துக்களை மனதார வரவேற்கின்றேன். இந்நூலை மீள்பதிப்பு செய்து விடப்பட்ட பல விடயங்களை உள்ளடக்குவதற்கு வன்னி பற்றிய தகவல்களை தந்துதவினால் பேருதவியாக அமையும்.

நீண்டகாலமாக பதிவாக்கவேண்டும் என்ற என் எண்ணத்தை விரைவாக செய்வதற்கு தூண்டுகோலாக அமைந்தவர்கள் சுவிஸ்நாட்டின் எனது மாணவர்கள். தங்கள் விழாவிற்கு ஒரு நூலை ஆக்கி அதனை வெளியீடு செய்யவேண்டும் என அன்பு வேண்டுகோள் விடுத்தனர். அதன் விளைவே இந்நூலாகும். அவர்களுக்கு எனது மனம்கனிந்த நன்றியை தருகின்றேன். அத்தோடு இந்நூலை அழகுற முகப்பு வடிவமைத்து, பதிப்பித்த நண்பர் கிருஷ்ணகுமார் அவர்களுக்கும், அணிந்துரை தந்த முனைவர் பாலசிவகடாட்சம் அவர்களுக்கும், ஒப்புநோக்கி திருத்த உதவிய

திருவாளர்கள் சபா .இராஜேஸ்வரன், கலாநிதி சு. சிவநாயகமூர்த்தி ஆகியோருக்கும் பல வழிகளிலும் உறுதுணையாக இருக்கும் எனது துணைவி திருமதி தயாதேவி அவர்களுக்கும் சுவிஸிலிருந்து அடிக்கடி அழைப்பு விடுக்கும் திருவாளர்கள் இ. சிவகுலநாதன், ப. கிருபாகரன், சி. சிவானந்தன் ஆகியோருக்கு எனது உளமார்ந்த நன்றிகள்.

நன்றி
**த.சிவபாலு**
416-5461394

# திரும்பிப் பார்க்கின்றேன் . . . .

## எனது பாடசாலைக் காலம்

### எனது ஆரம்பப் பாடசாலை:
### குமுளமுனை அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலை

நான் பிறந்தது குமுளமுனை. என்னை எனது அன்னை வைத்திய சாலைக்குச் செல்லாமல் வீட்டில் பிரசவித்தார் என்று சொன்னார். அவருக்கு மருத்துவிச்சியாக இருந்தவர் சின்னாச்சிக் கிழவி என்று குறிப்பிடுவார். நான் பிறந்த போது அம்மாவைப் பார்ப்பதற்கு அவருக்கு தாயோ அன்றிச் சகோதரங்களோ அருகில் இருக்கவில்லை. எனது தாயாருக்கு ஒரே ஒரு சகோதரி மட்டுமே. அவரகள் இருவரையம் பெற்றெடுத்த புண்ணியவதி இளமைக் காலத்திலேயே அவர்களைத் தவிக்க விட்டுவிட்டுச் சிவலோகம் சென்று விட்டாராம். தாயாரின் தந்தையார் வீரகத்தி அவரது தம்பியை எல்லோரும் பூசாரியார் என்றுதான் அழைப்பார்கள். மச்சம் மாமிசம் சாப்பிடாத குடும்பம். ஒரு வைரவர் கோயிலை வீட்டில் வைத்தே ஆதரித்து வந்தவர்கள். அவர்களுக்கு ஒரு தங்கை. அவரது வீட்டிற்குச் செல்வதாக இருந்தால் அதுவும் பிரயாணம் செய்து வந்தால் நேரடியாக குளத்திற்கு சென்று குளித்துவிட்டுத்தான் வரவேண்டும் அது எனது தாயார் பிறந்த கரவெட்டிக் கிராமத்தில் இருந்த நிலைமை.

குமுளமுனை முல்லைத்தீவு மாவட்டத்தில் இன்று எல்லைக்கிராமமாக

மாறிவிட்ட ஒரு பழமை நிறைந்த கிராமம். தண்ணிமுறிப்பு என்னும் குளத்தினால் பயனடையும் ஒரு விவசாயக் கிராமம். 1958ல் தண்ணிமுறிப்புக் குளம் டட்லி சேனநாயக்காவின் அரசின் கீழ் புனர்நிர்மாணம் செய்யப்படும் வரை மழையை நம்பிய மானாவரிப் பயிர்ச்செய்கையே இடம்பெற்றது. பெரியவெளி, ஆலடிவயல், ஆற்றங்கடவை, சாரலிவயல், இளங்கலயன் வயல் போன்றன நெற்செய்கைக்கான நிலங்களாகக் காணப்பட்டன. கொட்டுக் கிணற்று வயல் என்பது எமது ஊரின் நந்திக்கடலோரமாக அமைந்த ஒரு சிறு காணித்துண்டு. அது அ. உ. நல்லதம்பி உடையார் அவர்களின் காணி இதனைப்பற்றிய வரலாற்றுப் பதிவு இந்த நூலில் குமுளமுனைக் கிராமம் என்ற தலைப்பில் தரப்பட்டுள்ளது. எங்களது வீடு இந்தக் கடற்கரை ஓர வயலிலிருந்து 500 மீற்றர் தூரத்தில் உள்ளது. எனது வீட்டிற்கு முன்பாகத்தான் எனது தந்தையார் படித்த அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலை உள்ளது. அந்தப் பள்ளிக்கூடந்தான் அந்தக் கிராமத்துப் பிள்ளைகளின் கல்வித் தொட்டில். அந்தப் பாடசாலையில் இருந்த ஒரு கட்டிடம் ஆங்கிலேயர் ஆட்சிக் காலத்தில் அதாவது இலங்கை சுதந்திரம் அடையும் முன்னர் கட்டப்பட்டிருந்தது. அந்தக் கட்டிடத்தில் இரண்டு வகுப்புக்ளுக்குப் போதுமான ஒரு மண்டபத்தில் மகாராணியாரின முடி பதிக்கப்பட்டு அதன்கீழ் 1932 எனக் குறிப்பிடப்பட்டிருந்தது. அதில் இருந்த அந்தக் கட்டிடத்தின் வயதை எங்களால் ஊகிக்க முடிந்தது. நான் இரண்டாம் அல்லது மூன்றாம் வகுப்பு படிக்கும் வரையில் கரவெட்டியைச் சேர்ந்த சின்னையா தலைமை ஆசிரியராக இருந்தார். அவரின் பின் நாரந்தனை யைச் சேர்ந்த பிரமச்சாரியான ஆசிரியர் திரு. கந்தையா அவர்கள் வந்தவேளை நான்கோ அல்லது ஐந்தோ ஆசிரியர்கள் கற்பித்துக்கொண் டிருந்தார்கள். பாடசாலை தரம் அதிகரித்திருந்தது. அவர் ஒரு மரக்கறிப் பிரியர் பத்துப் பதினைந்து கறிகளைச் சமைப்பார். என்னைக் கூட்டிக் கொண்டு காட்டுப்பக்கம்போய் அங்கு பார்த்து எங்கள் ஊரவர்கள் தேடியும் பார்க்காத காட்டுக் கருணைக் கிழங்கு, அதன் இலை, தும்பங்காய், குருவித்லைப் பாகற்காய், பனங்கீரை, முல்லை, முசிட்டை போன்ற இலைவகைகளை எல்லாம் கொண்டுவந்து பத்துப் பதினைந்து கறிகளை இலையில் ஒன்று தண்டில் ஒன்று, கிழங்கில் ஒன்று, வறை, சம்பல் எனப் பலவிதமான நளபாகங்கள். நான் ஆறாம் வகுப்பிலிருந்து ஏழாம் வகுப்புவரை படிக்கும்போது திரு. வீரகத்தி தலைமை ஆசிரியராக இடமாற்றம் பெற்று வந்தார். எனது தாயாரின் தாய்கு அதாவது எனது அம்மம்மாவுக்கு அவர் உறவினர். அம்மாவிற்கு சிறிய தந்தை முறையாம். அவர் நல்ல உயரமான மெல்லிய மனிதர். ஆறடி உயரம் இருக்கும் என நினைக்கின றேன். ஒரு குடுமி வைத்திருந்தார். ஊரவர்கள் குடுமி வைததிருக்கும் ஆண்களை வாழைப்பூ எனப்பட்டம் சூட்டி அழைப்பார்கள். அவரும் அந்தப் பட்டப்பெயர் சூட்டப் பட்டார். எங்கள் ஊரில் இரு ஆண்கள் குடுமி

வைத்திருந்தனர். ஒன்று திரு. மா. வல்லிபுரத்தார் கொட்டுக்கிணற்றுக் கோயிலுக்கு அண்மையான இருப்பவர். இன்னொருவர் திரு. த. நாகலிங்கம் இவர்களுக்கு வேறு பெயர்கள் அடைமொழயாகப் பாவிக்கப்பட்டதால் வாழைப்பூ நிலைபெறவில்லை. வீரகத்தி ஆசிரியரும் கந்தையா வாத்தியாரைப் போன்று தாவர சோஷணி தான். மச்சம் மாமிசம் சாப்பிடமாட்டார். காலையில் எழுந்து குளித்துவிட்டு நந்தியாவட்டை மலர் பறித்து தான் அறையுள் வைத்திருக்கும் கடவுள் படங்களுக்குப் பூசை செய்வார். அவருக்கு பாடசாலைக்கு முன்னால் இருந்த சின்னப்பொடி என்னும் கிழவர் தான் உணவு தயாரித்துக் கொடுப்பார். சில வேளைகளில் பாடசாலைக்கு முன்னள் இருந்த ஆசிரியை திருமதி முருகேசு அவர்கள் வீட்டில் இருந்தும் உணவு வரும். அவரும் கரணவாய் குருக்கள் பகுதியைச் சேர்ந்தவர். எனது பிறப்புச் ஜாதகத்தை எழுதித்தந்த மாணிக்க விதானையாரின் பெறாமகனைத் திருமணம் செய்திருந்தார். அதனால் விரும்பியே மாற்றலாகி எங்கள் பாடசாலைக்கு வந்தார். பாடசாலைக்கு முன்னால் அவர்களுக்குச் சொந்தமாக இருந்த காணியில் ஒரு வீட்டைக் கட்டிக் கொண்டு அதிலேயே இருந்தார்கள்.

நான் ஏழாம் வகுப்பில் படிக்கும்போது அங்கு படிப்பித்த ஆசிரியர்களில் கணபதிப்பிள்ளை அசிரியர் வெள்ளிக்கிழமை ஊருக்குப்போவதற்கு எங்கள் துவிச்சக்கர வண்டியில் யாரையாவது அழைத்துச் சென்று அயல்கிராமமான அளம்பலில் திருப்பி அனுப்பி விட்டு பருத்தித்துறைக்கு பஸ் எடுத்துச் செல்லுவார். ஒரு நாள் என்னை அழைத்து இடைவேளையின் போது வீட்டுக்குச் சென்று துவிச் சக்கரவண்டி நின்றால் தந்தையாரிடம் கேட்டுவரும்படி அனுப்பினார். நான் செல்லுவதைக் கவனித்த தலைமை ஆசிரியர் என்னை உரத்துக் கத்தி அழைத்து எங்கே போகின்றாய் எனச சத்தமிட்டார். நான் கணபதிப்பிள்ளை வாத்தியார் போய்வரச் சொன்னவர் என்றேன். அவர் அவருக்கும் சேர்த்து மிரட்டுவதுத போன்று எனக்கு ஒரு பிரம்பு எடுத்து ஐந்து ஆறு அடி அடித்திருப்பார் என்று நினைக்கின்றேன் அத்தோடு உனது அப்பர் மில் போடப்போகின்றார் நீ போய் அதில் வேலை செய் எனவும் குத்திக் காட்டி கேலியாகப் பேசினார். அந்த நேரத்தில் எனது தாயார் கடைக்குச் சென்று கொண்டிருந்தார். பாடசாலை ஓரந்தாந் அந்த வீதி. புாடசாலையின் பெரிய அந்த இரும்குக்கேற்றடியில் நின்று என்னை அழைத்து ஏன் அடித்தார் என வினவ நான் நடந்தவற்றைச் சொன்னேன். உடனடியாக புத்தகத்தை எடுத்துக்கொண்டு வரும்படி சொல்லிவிட்டுச் சென்றார். அந்த வாக்கியம் எனக்குத் தேவ வாக்காகக் கேட்டது. தவறு செய்யாமல் தண்டனை பெற்றது எனது மனதில் வேதனையை ஏற்படுத்தியது. அவர் சிநேகம் வைதிருந்த ஒரு குடும்பத்திற்கு வட்டிக்குக் பணம் கொடுத்து மில் எடுக்க உதவுவதாக வாக்களித்திருந்தார் என்பது

அவரது வார்த்தைப் பிரயோகத்தின் பின்னர்தான் தெரியவந்தது. அதன் பின் எனது கல்வி தடைப்பட்டது. ஓராண்டு வீணே கழிந்தது.

நான் முல்லைத்தீவில் ஆசிரியராகப் பணியாற்றிய வேளை கல்விப் பணிப்பாளர் திரு. சிமியாம்பிள்ளை அவர்கள் கல்வியதி காரிகளோடு மாதாந்தம் வவுனியாவில் இருந்த வந்து முல்லைத்தீவு ம.வி.யில் ஒரு இரவு தங்கிச்செல்லுவது வழக்கம் அப்படி வந்து தங்கும் வேளைகளில் நானும் திரு. ப.சிவலிங்கம் அவர்களும் அதிபரின் வேண்டுகோளின் படி பிரசன்னமாய் இருந்து அவர்களுக்கான உணவு வகைகளைக் கவனிப்பது வழக்கம். ஒருமுறை 1977 நொவம்பார் மாதத்தில் என நினைக்கின்றேன். அவரோடு கலவிப்பணிமனையில் பணியாற்றிய சகோதரியின் கணவர் திரு. க. கந்தசாமி அவர்கள் மேலதிக கல்வி அதிகாரியாகப் பணியாற்றிக் கொண்டிருந்தார். அவரிடம் மாவட்டத்திற்காக ஒதுக்கிய பணத்தில் ஒரு தொகை செலவு செய்யப்படாமல் இருப்பதாகவும், அதனைப பாவிக்கா விட்டால் அப்பணம் திரும்பச் சென்றுவிடும்எனவும் குறிப்பிட்டு ஏதாவது ஒரு பாடசாலைக்கு கட்டிடம் ஒன்று போடக் கொடுக்கலாம் என்றும் கூறியவர் உங்கள் குமுளமுனைக்கு ஒரு கட்டிடம் தேவை அதற்கு 80ஒ20 அளவில் ஒரு கட்டத்திற்கு நிதி ஒதுக்கலாம் என்றார். அதனை ஒரு மாதத்திற்குள் கட்டி முடிக்கவேண்டும் எனவும் பணித்தார். என்ன செய்யலாம் என்றவுடனே நான் பொறுப்பெடுத்துக் கட்டி முடிக்கின்றேன் அதற்கான நிதியை ஒதுக்கித் தாருங்கள் என்றேன். அடுத்த நாளே குமளமுனைக்குச் சென்று அங்கு அதிபராக இருந்த திரு. அந்தோனிமுத்து (அவரதுஉறவினர்) அவர்களுடன் கதைத்து கட்டிடம் அமைப்பதற்கான பணம் ஒதக்கப்பட்டது. யாழ்ப்பாணம் சென்று கட்டிட வேலையாட்களை அழைத்து வந்ததோடு, பனை மரம் தறித்து கைமரம் வெட்டித் தரக்கூடியவர்களையும் அழைத்து வந்தேன். கூரை வேலைக்கான பனை மரங்களையும் எங்களது காணியில் இருந்து வெட்டி கூரைக்கான வேலைகளையும் செய்ய அயத்தம் செய்தேன். வேலை மிகத் துரித கதியில் இடம்பெற்றது. கட்டிடம் பலப்பாக அமையவேண்டும் என்பதனல் ஒப்பந்தத்தில் அரையடி ஆழத்திற்கு போடவேண்டிய அத்திவாரத்தை நான் இரண்டு அடி ஆழத்தில் போட்டதோடு 80 அடி நீளத்தை 8 அடி கூட்டி 88அடியாக்கி கட்டிடத்தின் நடுவில் இரண்டு அறைகளையும் கட்டி அதில் அலுவலகம் இடம்பெறவும் அவற்றிற்கான கதவுகளையும் செய்து கொடுத்தேன் இவை ஒப்பந்தத்தில் இல்லாத மேலதிய வேலையாகச் செய்து கொடுத்தேன். இதனைக் கண்ணுற்று கல்விப்பணிப்பாளர் உங்கள் ஊருக்காக இலாபத்தில் மேலதிக வேலை செய்துள்ளீர்கள் எனப் பாராட்டினார். ஆனால் எனது ஊரவர்களில் ஒரு சிலர் மிகவும் மனம் வருந்தத்தக்கதாக நடந்து கெண்டனர். சுவருக்காக அரிநத கல் தாங்கள் செய்வதுபோன்று மண் அதிகம் போடப்பட்டதா, அது உடைகின்றதா? ஏன

அரிந்து நன்றாகக் காயாத சீமெந்துக கற்களில் ஏறி நடந்தார்கள். ஆழத்தை அளந்து பார்த்தார்கள். முறைப்பாடுகளும் செய்தார்கள். கல்வித்திணைக் களப் பொறியலாளர் வந்து அனைத்தையும் மேற்பார்வை செய்துவிட்டு சென்றனர். கட்டிடத் தொழிநுட்பவியலாளர். திரு. குமாரசாமி அவர்களும், மேற்பார்வை உத்தியோகத்தர் திரு. பாலச்சந்திரனும் வந்து அரையடி ஆழத்திற்கு இரண்டடி அத்திவாரம் போடப்பட்டுள்ளதே என முறைப்பாடு செய்தவர்களிடமும், அவர்களுக்கு பயந்து பணியாற்றிய அதிபரிடமும் சொன்னார்கள். வாயடைத்துப்போனார்கள். அத்தோடு என்னிடமேன என்னப்பா உங்களுடைய ஊராக்கள் மிக மோசமான ஆட்களாய் இருக்கிறார் களே! நீங்கள் மேலதிக வேலை செய்ததையும் சிந்திக்காமல் கதைக்கின்றார்களே என்றார். என்ன செய்வது தாங்கள் இலாபமடைய இந்த ஒப்பந்தத்தைத் தங்களிடம் தரவில்லை என்ற ஒரே காரணம்தான் என்றேன். அவர்களின் ஆலோசனையின் படி எனக்கு அந்தக் கட்டிடத் திறப்பு விழாவிற்கே அழைப்பு விடுக்கப்படவில்லை. எனக்கு அது விசனத்தை ஏற்படுத்தியிருந்தது. ஆனால் அதற்கு முன்னர் அவர்கள் கட்டிய கட்டிடத்தின் நிலமெல்லாம் தகர்ந்து கிடந்ததை ஊரவர்கள் அறிவார்கள். நிலையான சிறந்த பலம் மிக்க ஒரு கட்டிடத்தை மட்டுமன்றி மேலதிக அறைகளையும் நடுவில் ஒரு 8 பாதையையும் விட்டு அவற்றிற்கு சுவரும் எழுப்பிக் கொடுத்ததை ஊரவர்கள் பாராட்டவில்லை. சிந்திக்கவும் இல்லை. பாடசா லையின் முகப்புத்தோற்றத்தில் அந்தக் கட்டிடம் இன்றம் அழகுத் தோற்றத்தைத் தந்துகொண்டிருப்பது மனதிற்கு நிறைவைத் தருகின்றது.

## நெல்லியடி மத்திய மகாவித்தியாலயத்தில்

கணபதிப்பிள்ளை ஆசிரியர் தன்னோடு என்னை ஊரக்கு அழைத்து வந்தார். அவரது வீட்டில் மதிய உணவை உண்டபின் என்னை அழைத்துக் கொண்டு கரவெட்டி மத்தியில் உள்ள எனது சிற்றன்னை வீட்டிற்குக் கூட்டிச் சென்று குஞ்சியம்மாவிற்க எல்லாவற்றையும் கூறிவிட்டு வந்துவிட்டார். அம்மாவின் தந்தையும் அங்கிருந்தார். அதற்கு முன்னர் அவர்களது வீட்டிற்கு எதிரே இருந்த சித்தப்பாபின் கடைக்கச் சென்றவந்தார். அவரோடு நடந்தவற்றைச் சொல்லியிருக்கவேண்டும். அவர் அடுத்தநாள் என்னை நெல்லியடி மத்திய மகாவித்தியாலய செயலாளரகப் பணியாற்றும் கொமிசன் சின்னத்தம்பியிடம் அவர்களிடம் அழைத்துச் சென்று அந்தப் பாடசாலையில் சேர்த்துவிடும் படி கேட்டார். அவரது பிள்ளைகளும் அங்குதான் படிக்கின்றார்கள். அவர்களது வீடு கரவெட்டி விக்னேஸ்வரக் கல்லூரிக்கு அண்மையில் இருந்தாலும் நெல்லியடி ம.ம.வியில் கல்வி நன்றாக இடம்பெறுகின்றது என்பதே காரணம். அனுமதிக்கு பரீட்சை எழுதவேண்டும் திகதியைக் குறிப்பிட்டு பரீட்சை எழுதும்படி பணித்தார். முதல் தடவை தவறிவிட்டேன். அவர் அங்கு

பரீட்சைக்கு மேற்கொள்ளும் மாதிரிவினாத்தாட்களைத் தந்து பயிற்சி செய்யும்படி சொன்றார். அதன்படி பரீட்சையில் சித்தியெய்தினேன். ஏழாம் வகுப்பில் எனது கல்வியைத் தொடர்ந்தேன். ஆனால் 9ம் வகுப்பு வரையில் தான் எனது கல்வியை நான் தொடர்ந்தேன். ஏழாம் வகுப்பில் எனக்கு வகுப்பு ஆசிரியையாக இருந்தவர் செல்வி. கந்தையா அவர்கள். அவர் என்மீது மிகுந்த பற்றுக்கொண்டவர். பழைய பத்திரிகைகள் புத்தகங்களைத் தந்து கடையில் விற்று பணத்தை எடுக்கும் படி தருவார். தமிழை சு. கணபதிப்பிள்ளை சுகணா என அவரை எல்லோரும் அழைப்பார்கள். அவரிடம் தமிழைப் படிக்கும் வாய்ப்பும் சமயத்தை வித்துவான் ஆறுமுகம் அவர்களிடமும் படிக்கும் வாய்ப்பு ஏற்பட்டது. வித்துவான் அதிபராக ஒட்டுசுட்டான் மகாவித்தியாலயத்தில் நான் மல்லாவியில் பணியாற்றும்போது பணியாற்றியவர்.

## முள்ளியவளை வித்தியானந்தக் கல்லூரியில்

எனது அம்மாவின் தந்தையின் (அப்பா என்றுதான் அழைப்போம்) கண்டிப்பால் விடுமுறைக்குச் சென்ற நான் திரும்பி அங்குபோகமாட்டேன் என அடம்பிடித்ததால் என்னை வித்தியானந்தக் கல்லூரியில் சேர்த்துவிட்டனர். நான் முள்ளியவளை வித்தியானந்தக் கல்லூரியில் 1961ல் கல்வியைத் தொடர்ந்தேன். சிரேஷ்ட கல்விச சான்றிதழ் என்பது மாற்றப்பட்டு க.பொ. த. எனச் சான்றிதழ் வகுப்பு ஆரம்பிக்கப்பட்ட காலம். ஒன்பதாம் வகுபபிற்கு நான் சென்றவேளை ஏற்கனவே பத்தாம் வகுப்பில் படித்தவர்களை இடைநிறுத்தியிருந்தார்கள். அவர்களோடு எங்கள் கல்வி தொடர்ந்தது. புலோலியைச் சேர்ந்த திரு. சோமசுந்தரம் அவர்கள் அதிபராக விருந்தார். 1962ம் ஆண்டு க.பொ. த. சித்தியெய்திவிட்டு உயர்கல்வியைத் தொடர வாய்பின்மையால் வீட்டில் இருந்தேன்.

## யப்பான் பாடசாலை

எங்கள் உளவு இயந்திரம், நெல் குத்தும் ஆலைகளை மேற்பார்வை செய்வதோடு அவற்றை இயக்கும் பணியிலும் ஈடுபட்டிருந்தேன். அப்பொழுது பாடசாலைகள் இல்லாத கிராமங்களில் பாடசாலைகளை அமைத்து அங்கு மாணவர்கள் காணப்பட்டால் கற்பிப்பவர்களை அரசாங்கம் பொறுப்பேற்கும் என்பதனால் சிலர் ஆண்டான் குளத்தில் ஒரு பாடசாலையை ஆரம்பித்தார்கள். இந்த நேரத்தில் இவற்றை யப்பான் பாடசாலைகள் என அழைத்தார்கள். ஒன்பது பேர் குமுளமுனையைச் சேர்ந்தவர்கள் இருவர், தண்ணீருற்றைச் சேர்ந்தவர்கள் நால்வர் கொடிகாமம் உஷனைச் சேர்ந்தவர்

ஒருவர், வற்றாப்பளையைச் சேர்ந்தவர் ஒருவர் என ஒன்பதின்மர் அப்பாடசாலையில் பதிந்து பணியாற்றினார்கள். நான் ஆண்டான் குளம் பாடசாலையில் இடம்பிடிக்கமுடியாமைக்கு வயது போதாமையே காரணமாக இருந்தது. எனது தாயாரின் சித்தப்பா பூசாரியாரின் மகள் எஸ்.எஸ். சி. புடித்துவிட்டு வேலையற்று இருந்தவர். ஆவர் எங்கள்வீட்டிற்கு வந்து ஆண்டான் குளம்பாடசாலையில் கற்பதற்கு இடம் கேட்டார். எற்கனவே ஒன்பதின்மர் இடமில்லை பிள்ளைகள் போதாது என மறுத்துவிட்டனர். பின்னர் அவர் ஊரக்குச் சென்று பலவாறு ஏதாவது உத்தியோகத்திற்க முயற்சித்தார் கிடைக்கவில்லை மனமுறிவு ஏற்பட்டு தற்கொலை செய்துகொண்டார்.

வவுனியா– முல்லைத்தீவு மாவட்டத்தில் பல்வேறு கிராமங்களில் இப்படியான பாடசாலைகள் ஆரம்பிக்கப்பட்டன. நயினாமடு, பண்டாரக் குளம, தண்ணிமுறிப்பு போன்றன முல்லைத்தீவு மாவட்டத்தில் ஆரம்பிக்கப் பட்ட பாடசாலைகள். இவை அனைத்தும் பின்னர் அரசினர் பாடசாலைகளா கப் பொறப்பேற்றுக்கொள்ளப்பட்டன.

1964ம் ஆண்டு இடம்பெற்ற மாணவ ஆசிரியர் தேர்வுக்கு விண்ணப் பித்திருந்தேன் நேர்முகப்பரீட்சைக்க அழைத்திருந்தார்கள். சென்றேன் அங்கும் வயது போதாது என்ற பதிலே கிடைத்தது. எனவே எமக்கிருந்த விவசாய, அரிசி ஆலை, உளவு இயந்திரப் பணிகளோடு காலம் ஓடியது.

1966ம் ஆண்டு ஒருநாள் நான் வயலில் உழுது கொண்டிருக்கும்போது ஒரு உதிரிப்பாகம் உடைந்தமையால் வீட்டிற்கு வந்தேன். எங்கள் வீட்டிற்கு முன்பாக ஒரு சிறிய கார் ஒன்று நின்றது. வியப்போடு யார் வந்திருப்பார்கள் என்று எண்ணியவாறு உளவு இயந்திரத்தை நிறுத்திவிட்டு வந்தவேளை வீட்டு முன்றலில் இருந்த பந்தலின் கீழ் ஒரு வெள்ளை வேட்டி உடுத்த அரைக்கை சட்டையோடு ஒரு கருமையான ஒரு மனிதர் இருந்தார். அவர்தான் இலங்கைப் பொதுவுடமைக்கட்சியின் பிரபல உறுப்பினராகவும் சிறந்த பேச்சாளராகவும் இருந்த வி.பி. எனச் செல்லமாக அழைக்கப்படும் திரு. வி.பொன்னம்பலம் அவர்கள். அவர் எனது தந்தையிடம் இவர்தான் உங்கள் மகனா எனக் கேட்டார். ஆம் என்றார். நான் அவரைப் பார்த்து எனது புருவத்தை உயர்த்தினேன். அவர் நீங்கள் தொடர்ந்து படிக்கலாம்தானே என்றார். எனக்கும் விருப்பந்தான் ஆனால் வசதியில்லையே என்றேன். அப்பொழுது தன்னை வித்தியானந்தக் கல்லூரி அதிபர் என்றும் உயர்தர வகுப்பை ஆரம்பித்துள்ளோம் அதற்கு அனுமதி கிடைத்துள்ளதாகவும் அங்கு வந்து படிக்கலாம் என்றும் ஆலோசனை நல்கினார். நானும் எனது சகோதரியும் சரி என சம்மதம் தெரிவித்தோம். இருவரையும் அடுத்த வாரம்

பாடசாலைக்கு வரும்படி அழைத்திருந்தார். தொடர்ந்தது எங்கள் கல்வி. என்னோடு முன்னர் படித்த செல்வநாயகம், திருநாவுக்கரசு, விசாகலிங்கம், புதுக்குடியிருப்பிலிருந்து வீ. கனகசுந்தரசுவாமி, மு. பரமநாதன், செல்வி சரசுவதி, முல்லைத்தீவிலிருந்து திருஞானம் முள்ளிவாய்க்கால் சரசுவதி, வட்டுவாகல் பார்வதி, முள்ளியவளை பரமேஸ்வரி ஆகியோர் தடைப்பட்ட கல்வியைத் தொடர வாய்ப்பு ஏற்பட்டிருந்தது. நாங்கள் சேர்ந்த பின்னர் அதிபருக்கு எதிராக ஒருசில ஆசிரியர்கள் செயற்பட்டனர் என்பதனை அறிய முடிந்தது. குறிப்பாக உடற்கல்வி ஆசிரியர் திரு. தியாகராசா தான் வன்னியான் என்பதோடு, பாராளுமன்ற உறுப்பினர் தா. சிவசிதம்பரம் அவர்களால் கொண்டு வரப்பட்டவர் என்பதனால் காலந்தாழ்த்தி பாடசாலைக்கு வருதல், வகுப்புக்குப் போகாமல் இருத்தல், தாமதமாகப் போதல் போன்ற முறையற்ற செயற்பாடுகளால் பெரும் சிக்கல்களை அதிபர் எதிர் நோக்கினார் என்பது தெரிந்திருந்தது. எங்களோடு சேர்க்கப்பட்டவர்களை முதலில் க.பொ.த. சாதாரண தரப்பரீட்சையை மீளவும் விண்ணப்பிக்க ஆலோசனை நல்கினார். அந்த விண்ணப்பத்திற்குரிய முத்திரைகளைப் பெற என்னை வவுனியாவிற்கு அனுப்பியிருந்தார். காலையில் சென்று முத்திரைகளைப் பெற்றுக்கொண்டு மாலையில் திரும்பும்போது புளியங்குளம் தாண்டி நயினாமடுவிற்கு வந்தவேளை பேரூந்தின் சில்லுக்களில் ஒன்று காற்றுப்போய்விட்டது. அதனால் அவ்விடத்தில் நிற்கவேண்டி ஏற்பட்டது. நெடுங்கேணிக்கு துவிச்சக்கர வண்டியில் சென்று முல்லைத்தீவு பஸ் டிப்போவிற்கு செய்தி அனுப்பி பின்னர். பஸ் வந்து காற்றுப்போன ரயரை மாற்ற இரவு ஒன்பது மணியாகிவிட்டது. அந்த இடைவேளையில் பஸ்ஸில் சாராயம் வாங்கி வந்தவர்கள் சாரதியை அழைத்து அவருக்கும் வாத்துக் கொடுத்துவிட்டார்கள். நல்ல போதையில் பஸ்சை ஒட்டியவர் சிறிது தூரத்தில் பாதையை விட்டு பஸ் போய் தடம்புரண்டு பள்ளத்தில் சரிந்துவிட்டது. அந்த பஸ் நீர்கொழும்பில் இருந்து வந்த சில மீனவக் குடும்பங்களோடு வந்திருந்தது. அந்த பஸ் புரண்டபோது ஒரு பிள்ளை அந்தரத்தில் வீசப்பட்டதைக் கண்டேன். அப்பிள்ளையின் தந்தை என்ரை கடவுளே என்ரை பிள்ளை என ஓலம் எழும்பியதைக் கேட்டேன். அது மட்டுமன்றி எனக்கு கீழே முன்பக்கத்து படிகளில் நின்றவர் நெடுங்கேணியில் உளவு இயந்திர திருத்தினராக பணியாற்றியவர். ஆவர் தண்ணீரூற்றைச் சேர்ந்த கிளியரின் மகன் சின்னராசா ஆவார். அவரைக் காணாமையால் நான் பஸ்சின் முன்பக்கத்துக் கண்ணாடி உடைந்துவிட்டமையால் அதற்குள்ளால் வந்து அவரைத் தடவிப் பார்க்க முற்பட்டேன் ஆனால் அவர் எனக்குப் பின்னால் வந்து கதைகேட்ட போது சற்று நிம்மதியாக இருந்தது. காலையில் பாடசாலைக்குச் சென்று முத்திரைகளை அதிபரிடம் கொடுத்தபோது நடந்தவற்றைச் சொல்லக் கேள்வியுற்ற அதிபர் சற்று அதிர்ச்சியடைந்தார். அதற்குக் காரணம் என்னை எனது பெற்றோரின் அனுமதி பெறாமல் அனுப்பியதேயாகும். எனக்கு

ஒன்றும் காயம் ஏதும் இல்லையா என வினாவினார். யாருக்கும் ஒன்றும் நடக்கவில்லை என்பதனால் அவர் சற்று நின்மதிப் பெருமூச்சுவிட்டார்.

## வி.பி. ஐத் திரும்பக் கொண்டுவரப் போராட்டம்.

வி.பியின் அதிபர் குடிமனைக்குள் புகுந்து அவர் படுத்திருந்த கதவினை திறக்கமுடியாதபடி கைபிடியில் கயிற்றைப்போட்டு எதிர்ப்பக்கத்தில் இருந்த யன்னல் கம்பிகளில் இறுகக்கட்டி விட்டு, மனைவியின் அறைக்குள் புகுந்து அவரை கத்தியைக் காட்டி மிரட்டி அவரது தாலிக்கொடியைக் கழட்டி எடுத்துக் கொண்டு சென்றுள்ளான். கள்வன். பிள்ளைகளோடு ஊரில் இருந்து வந்த சகோதரியின் பிள்ளையோடு தூக்கத்தில் இருந்தவர்களிடம் இந்தத் துணிகரச் செயல் நடந்துவிட்டது. அவரோ அந்தப் பாடசாலையில் கல்வி கற்பிக்கும் ஆசிரியர்தான் அதனைச் செய்தார் எனக்குறிப்பிட்டார். அவருக்கு எதிராக வளக்குப் பதிவு செய்யப்பட்டது. அவர் பாடசாலையில் அதிபரோடு முரண் பட்டு இடமாற்றம் பெற்றுக்கொண்டவர். அதற்குப் பழிதீர்க்கவே இதனைச் செய்தார் என எல்லோரும் நம்பினர். அவரோ நான் கொழும்புக்குக் கண்ணாடி எடுக்கச் சென்றிருந்தேன். நான் பாடசாலையில் இருந்து அனுமதி பெற்றுக்கொண்டு புகையிரத பிரயாணத்திற்கான அரசாங்க சீட்டையும் பெற்றச் சென்றேன் எனவும் கொழும்பில் கண்ணாடி வாங்கியதற்கான தனது பெயரிலேயே உள்ள பற்றுச்சீட்டுக்களைக் காட்டி தான் அதனைச் செய்யவில்லை என வாதாடியமையால் குற்றச்சாட்டு நிரூபணமாகாமல் விடுதலை செய்யப்பட்டார். சில வருடங்களின் பின்னர் முல்லைத்தீவு போக்குவரத்தச் சபை சாரதியாக இருந்த ஆறுமுகம் அவர்களின் மகனோடு முரண்பட்டுக் கொண்டு கத்தியால் அவரைக் தாக்கிய குற்றத்திற்காக வேலையில் இருந்து இடைநிறுத்தப்பட்டார். அதன் பின்னர் அவர் தனது தலைமை ஆசிரியர் பணியில் அமரவே இல்லை. முற்பகல் செய்யின் பிற்பகல் விளையும் என்பது போன்று அந்தச் செயல் நடந்து முடிந்துள்ளது.

தாலிக்கொடி களவு போனபின்னர் அங்க இருக்கவேண்டாம் என வி.பி.யின் உறவினர்கள் வற்புறுத்தியமையால் அவர் யாழ்ப்பாணம் சென்றுவிட்டார். அவரைத் திரும்ப அழைக்கவேண்டும் என்பதற்காக பாடசாலையைப் பகிஸ்கரித்தோம். ஆனால் பாடசாலைக்கு ஒரே ஒரு மாணவி மட்டும் வருகை தந்தார். அவர் களவெடுத்தவர் எனச் சந்தேகிக்கப்பட்ட தியாகராசா ஆசிரியின் சகோதரியின் மகளாவார். அதிபர் லீவில் சென்றபோது தனது நம்பிக்கைக்கு உரியவரும் மாணவர்களின் அன்புக்குரியவருமான திரு. கா. மகாலிங்கம் அவர்களிடமே பாடசாலையின் பொறுப்பை ஒப்படைத்திருந்தார். அவர் அதிபராகக் காடமையாற்றிய வேளை நாம் பாடசாலையை நடக்காமல் தடைசெய்தோம். மாணவர்கள் அனைவரிடமும் அறியத்தந்து மறியல்

போராட்டத்தை முன்னெடுத்தோம். நான் அலுவலக வாயிலில் போய் அமர்ந்து கொள்ள என்னைத் தொடர்ந்து அனைத்து மாணவர்களும் வந்து என்னோடு அமர்ந்துகொண்டனர். யாரும் உள்ளே போகமுடியாத நிலை ஏற்பட்டது. அதிபராகக் கடமையாற்றிக்கொண்டிருந்த திரு. கா. மகாலிங்கம் அவர்களும் திரு. செ. யோகநாதன் (பிரபல எழுத்தாளரும் பின்னர் உதவி அரசாங்க அதிபராகப் பணியாற்றியவரும்) அவர்களும் எங்களோடு வந்து உரையாடினார்கள். எங்கள் பக்கம் நியாயம் இருப்பதை ஏற்றுக்கொண்டனர். ஆனால் ஒரு சிலரோ எங்களை கேவலமாக அடாத்தனகாரர் எனவும் பாடசாலையில் இருந்து வெளியேற்ற வேண்டும் எனவும் அதிபருக்கு ஆலோசனை கூறினர். திரு. மகாலிங்கம் அவர்கள் சரி நான் போய் அதிபரோடு கதைத்துவிடடு வருகின்றேன் என முடிவெடுத்து எங்களில் யாரையாவது வரும்படி கேட்டார். நான் வருவதாகக் குறிப்பிட்டதும் எனது வகுப்பு நண்பர்களான திருஞானம், கனகசுந்தரசுவாமி, செல்வநாயகம் என்போர் தாங்களும் வருவதாகப் புறப்பட்டார்கள். திரு. கா. மகாலிங்கம் அவர்களோடு நாம் அளவெட்டிக்கு வி.பி.யின் இல்லத்திற்குச் சென்றோம். அங்கு அவர் காரைநகருக்குச் சென்றுவிட்டதாகக் கூறினார்கள். நாம் அங்கு செல்ல ஒரு வாடகைக் காரை ஏற்பாடு செய்து செல்ல முற்பட்டபோது சங்கானையின் ஊடாகச் செல்வது குறுக்குவழி ஆனாலும் அங்கு இரு சமூகங்களுக்கிடையே இடம்பெறும் சண்டைகள் காரணமாக போக முடியாது எனக்குறிப்பிட்டு வேறுபாதையால் நாம் சென்றோம். அங்கு சென்றவேளை இரவு சாமத்தை எட்டிவிட்டது அனைவரும் நல்ல உறக்கத்தில் இருந்தார்கள். நாம் அவர்களை எழுப்பினோம் என்ன இரவு நேரத்தில் யார் வந்துள்ளனர் என வி.பி. யின் மாமனார் வந்து வினவினார். நாம் முள்ளியவளையில் இருந்து வந்துள்ளோம் எனக் கூறியதும் வி.பி. எழுந்துவந்தார். எங்களைக் கண்டதும் அவருக்கு என்ன சொல்லுவது என்று தெரியவில்லை. வரி நான் எதற்கும் வருகின்றேன் எனக்குறிப்பிட்டு எங்களை அன்று இரவு மறித்து மறுநாள் காலையில் வழி அனுப்பிவைத்தார். அதிபரின் ஊருக்குச் செல்ல முன்னர் அதிபரின் பதிவேட்டில் நடந்த சம்பவங்களை எழுதிவிட வேண்டியது அதிபராகக் கடமையாற்றுவரின் பொறுப்பாகும். திரு.மகாலிங்கம் அவர்கள் நான் முதலில் வந்து அலுவலகத்தை மறித்தக் கொண்டு இருந்ததாக எனது பெயரைப் பதிவு செய்திருந்தார் என்பது பின்னர் தெரியவந்தது. நான் அதனைப் பற்றிக் கவலைப் படவேயில்லை.

எங்களுக்குத் தந்த உறுதிமொழியைக் காப்பாற்றும் நோக்கோடு அங்கு வி.பி அவர்கள் திரும்பி வந்தார். அந்த அதிபர் விடுதியல் தங்கியிருக்க அவரது துணைவியார் பயந்து கொண்டிருந்தமையால் அதனை அவர் ஊரவர்கள் முன்பாகக் குறிப்பிட்டதைக் கேள்வியுற்ற திரு. குமாரையா அவர்கள் தங்கள் வீட்டில் வந்து தங்கலாம் என அழைத்து அருகருகாக இருந்த வவுனியா

பாராளுமன்ற உறுப்பினர் திரு. சிவசிதம்பரம் அவர்களின் வீட்டில் தங்க ஏற்பாடு செய்ததோடு எல்லாப் பாதுகாப்புக்கும் தாங்கள் பொறுப்பாக இருப்பதாகக் குறிப்பிட்டார். இரண்டு மூன்று வாரங்கள் கடமையாற்றியவர் அவர்களின் உறவினர்களின் வற்புறுத்தல் காரணமாக இடமாற்றம் பெற்று ஸ்கந்தவரோதயக் கல்லூரிக்குச் சென்றுவிட்டார்.

க.பொ.த. பரீட்சையில் நாம் அனைவருமே பல்கலைக்கழக புகுமுகத் தேர்வுக்குத் தகுதியானவர்களாக முடிவுகள் வந்தன. தொடர்ந்து படித்து முதன் முதலில் நானும் எனது சகோதரியும் எல்லாப் பாடங்களிலும் சித்தி எய்தியிருந்தோம். சகோதரிக்கு பல்கலைக் கழக அனுமதி கிடைத்துவிட்டது. ஆனால் எனக்குக் கிடைக்கவில்லை. ஒரு புள்ளி காணாமையால் எனது அனுமதி மறுக்கப்பட்டிருந்தது. பின்னர் நான் திரும்பவும் நெல்லியடி மகாவித்தியலத்தில் கல்வியைத் தொடர்ந்தேன். என்னோடு கல்வி பயின்ற கனகசுந்தரசுவாமி, மற்றும் திருஞானம் இருவரும் வி.பி.யிடம் சென்றனர். அவர்கள் இருவரையும் ஸ்கந்தவரரோதயக் கல்லூரியல் சேர்ந்து படிக்கும் படி ஆலோசனை வழங்கியதோடு தனது வீட்டிலேயே தங்கிருக்கவும் வசதி செய்துகொடுத்தார். நெல்லியடியில் க.பொ.த. உயர்தர பரீட்சையில் நல்ல முடிவு கிட்டியது. எனக்கு பல்கலைக்கழக அனுமதி கிட்டும் என்ற நம்பிக்கை ஏற்பட்டது. ஆனால் பல்கலைக்கழக அனுமதி பெறுமுன்னர் நான் வவுனியா பாராளுமன்ற உறுப்பினர் திரு. தா. சிவசிதம்பரம் அவர்களின் பட்டியலில் அவரது மருமகன் இராசதுரை உருத்திரமூர்த்தி, காசிப்பிள்ளை தவபாலச் சந்திரன் ஆகிய இருவரோடு எனக்கும் இலங்கைப் போக்குவரத்துச் சபையில் பஸ் தரிப்பு இடங்களை கட்டுப்படுத்தும் அதிகாரிகளாக வீதிகளில் நிறுத்தப்பட்டோம். நாம் மூவரும் கொழும்பு நகரத்தில் பணியில் ஈடுபட்ட வேளை சிங்கள மொழி தெரியாது பெரும் துன்பத்தை அனுபவித்தோம். “கோழி மேய்க்கிலும் கோர்ணமேந்தில் மேய்க்கவேண்டும்” என்பதற்கதைய “உத்தியோகம் புருஷலட்சணம்“ என்னும் மோகம் எங்களை அந்த உத்தியோகத்தை ஏற்க வைத்தது. 235 ரூபா மாதச் சம்பளத்தில் அமர்த்தப்பட்டோம். அந்த வேளை எனக்குப் பல்கலைக்கழக அனுமதி கிட்டியது. அதுவும் எல்லா வசதிகளும் மிக்க பல்கலைக் கழகமான பேராதனைப் பல்கலைக் கழகத்திற்கு அனுமதி கிட்டியமை வரப்பிரசாதமே!. நுான் பேராதனைக்குச் சென்று பதிவு செய்துகொண்டு அன்றே கொழும்பிற்குத் திரும்பிவிட்டேன். அதனால் நான் பல்கலைக்கழகத்தில் இடமபெறும் றாக்கிங்கில் இருந்து தப்பிவிட்டேன்.

ஆனால் நான் படிக்கவேண்டுமானால் வேலையை விடவேண்டும். வேலையை விட்டுவிடவா? வேண்டாமா? என்னும் மனப்போராட்டம். சிலர் வேலையை விட்டால் பின்னர் எடுக்கமுடியாது. வுலிய வந்த சீதேவியைக்

காலால் உதையாதே என ஆலாசனை நல்கினர். பலர் பல்கலைக் கழகம் பின்னர் கிட்டுமா? எனவும் அறிவுரை பகன்றனர். பல்கலைக் கழகத்தில் படித்துவிட்டு நாம் செய்யும் வேலைகளுக்கே வந்திருந்த சிங்கள இளைஞர்களைப் பார்த்ததும் பல்கலைக்கழகக் கல்வியைவிட வேலை மிக முக்கியமாகப் பட்டது. நாம் பணிக்கு அமர்த்தப்பட்ட பதினொரு மாதங்களில் பொதுத்தேர்தல் நடந்தது. யு.என்.பி அரசு படுதோல்வி அடைந்தமையாயல் சிறிமாவோ பண்டாரநாயக்க தலைமையிலான அரசாங்கம் அதிகாரத்திற்கு வந்தது. போக்குவரத்துத் துறை அமைச்சராக அனில் முனசிங்க என்னும் இடதுசாரிக் கட்சியைச் சேர்ந்தவர் பதவியேற்றதும். எங்களைச் சாதாரண ஊழியர்கள் என்றும் பார்க்கமால் சுகததாஸ என்னும் போக்குவரத்துத் துறை அமைச்சரால் வழங்கப்பட்ட நியமனங்கள் ஒருவருடத்திற்கு உட்பட்டவை அனைத்தையும், சிங்கள இனத்தவர்கள் உட்பட 243 பேரை வேலையில் இருந்து நீக்கிவிட்டார்கள்.

இதனால் தொழிற்சங்க பிரமுகரும் சீனசார்புக் கம்யூனிஸ்ட் கட்சியின் பொதுச் செயலாளருமான நா. சண்முகநாதன் அவர்களை அணுகினோம். அவர் தொழிலாளர் விசாரணை மன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்தார். அந்தவேளை நான் மீண்டும் பல்கலைக்கழகத்தில் இணைந்துகொண்டேன். அதற்கும் எனக்கு பேராசிரியர் கா. இந்திரபாலா அவர்கள் உதவி செய்தமையால் ஓராண்டின் பின்னர் தொடரும் வாய்ப்பைப் பெற்றேன். ஓராண்டு செல்லாமைக்கான காரணத்தை நிரூபிக்கவேண்டிய நிற்பந்தம் ஏறபட்டது. அதற்க நெல்லியடியில் பணியாற்றிய ஒரு ஆயர்வேத வைத்தியர் கைகொடுத்தார். மருத்துவச் சான்றிதழுடன் சென்றேன். பேராதனைப் பல்கலைக்கழக உடல் நல நிலையத்தில் அதனைக் கொடுத்தபோது. அதனைக் கண்ணுற்ற வைத்தியக் கலாநிதி  நாணயக்கார யாரப்பா இந்த வைத்தியர் என்று வாயல் கையைவைத்தார். நான் பேராசிரியர் இந்திரபாலாவுடன் சென்றமையல் அதிகம் ஏதும் கேட்கவில்லை. இப்பொழுது எப்படி என்று கேட்டார். நலம் என்றேன். படிக்க விளைபவர் களை தடைசெய்ய அவரது உள்ளம் இடங்கொடுக்கவில்லைப் போலும். சுரி என சிபார்சு செய்து செனற்றுக்கு அனுப்பிவிட்டார். அனுமதியும் கிடைத்தது தொடர்ந்தேன்.

முதலாம் ஆண்டுப் பரீட்சையில் திறமைக் சித்தி எய்தியவர்கள் மட்டுமே கல்வி மாணிப்பட்டப் படிப்பைத் தொடர முடியும் என்னும் விதி இருந்தமையால் எனக்கு அந்த தகமை இருந்தமையால் அதற்கு விண்ணப்பித்தேன். எங்களில் ஆறு மாணவர்கள் மட்டும் தகுதி பெற்று அதனைத் தொடர்ந்தோம்.

## கட்டுகாஸ்தோட்டை கத்தோலிக்க பாடசாலையில்

முதன் முதலில் ஆசிரியப் பணியை நான் ஆரம்பித்ததே இந்தப் பாடசாலையில்தான். அதிபராகப் பெரும்பான்மையினத்தைச் சேர்ந்த பங்குத் தந்தை ஏடின் டீ. சில்வா அவர்கள் பணியாற்றிக் கொண்டிருந்தார். பார்ப்பதற்கு பயந்தரத்தக்க அஜானபாகுவான தோற்றம். போதகருக்கு உரிய எளிமை எள்ளவும்கூட அவரிடம் இல்லை. குடியேற்ற காலத்தய அதிபருக் குரிய மிடுக்கும் மேலாண்மையும் குடிகொண்டிருந்தன. ஆசிரியர்களே நடு நடுங்கும் தொனி அவரிடம் இயல்பாகவே காணப்பட்டது. என்னைக் கண்டதும் ஒரு பார்வையாலேயே அளந்துவிட்டது போன்று நன்றாகப் படிப்பிக்கவேண்டும். மாணவர்களின் நேரத்தை வீணடிக்கக்கூடாது என்ற மிகக் கண்டிப்பான தொனியில் குறிப்பிட்டார். எனக்கு ஆறாம் வகுப்பு ஒப்படைக்கப்பட்டது. அது ஒரு ஆண்கள் பாடசாலை. பரங்கியர் இனத்தைச் சேர்ந்த பல மாணவர்கள் அங்கு படித்துவந்ததை அவதானிக்க முடிந்தது. ஆறாம் வகுப்பில் வவுனியா வர்த்தகர் சண்முகத்தின் இரணைப்பிள்ளைகள் இருந்தனர். முதல்நாள் அறிமுகப் படலத்தில் பாடசாலை விடுதியில் தங்கி இருந்து படிப்போரில் இவர்கள் இருவரும் வவுனியாவைச் சேர்ந்தவர்கள் என்பது எனக்கு ஒரு பற்றை ஏற்படுத்தியிருந்தது. அன்பொழுக மாணவர்களோடு அளவளாவியது அவர்களை என்மீது ஒரு ஈர்ப்பை ஏற்படுத்தி யிருக்கவேண்டும். எல்லோரும் மலர்ந்த முகத்தோடு என்னை வரவேற்றமையும் அமைதியகாக பாடத்தைக் கேட்டமையம் என்னை அக்கறையோடு கற்பிதச் செயலை ஊக்குவித்தது. பேராசிரியர் சு.வித்தியானந்தனின் மனைவியார் ஆங்கு கற்பித்துக் கொண்டிருந்தார். எனக்கு அவரது அன்பும் ஆதரவும் கிட்டியது. நுான் போனபோது ஒரு கண்காட்சிக்கு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. தமிழ் பகுதிக்கான ஒரு சில காட்சிக்கான படங்களை நான் வரைத்து உதவியது அதற்குப் பொறுப்பாக இருந்த திருமதி கமலா வித்தியானந்தனை மகிழ்வித்திருந்தது. எனது ஆசிரியர் பயிற்சியின் போது அதனை மேற்பார்வை செய்ய பேராதனைப் பல்கலைக்கழ கல்வித்துறைப் பேராசியர்களாக விருந்த திரு. ந. சந்திரசேகரம் அவர்களும் திரு. வேலாயுதம் அவர்களும் இடையிடையே வருவார்கள்.

நான் பேராதனைப் பல்கலைக்கழகத்தில் படித்த காலத்தில் வவுனியா மாவட்டத்தைச் சேர்ந்தவர்கள் ஆண்டுக்கு ஒருமுறை கூடுவது வழக்கம். மிகக் குறைந்த தொகையினரே அன்று அங்கு கூடுவோம். யாழ் மாவட்டத்துப் பாடசாலைகளில் ஒரு பாடசாலையில் உள்ள மாணவர்களின் தொகைக்கு எமது முல்லைத்தீவு, மன்னார், வவுனியா மாவட்டங்களின் மாணவர்களின் தொகை ஈடு செய்யமுடியாததாக இருக்கும். எங்களது ஒன்று கூடலைக் கேள்வியுறும் மாணவர்கள் “வன்னியா“ எனக் கேலி செய்வதும் வழக்கம்.

எங்களில் பலர் யாழ் மாவட்டப் பாடசாலைகளில் கல்வி கற்று பல்கலைக்கழகத்திற்கு வந்தவர்கள். ஏதோ மோம்பம்பிடித்து வன்னி மாவட்டத்தவர்களை இனங்கண்டு அழைப்போம். ஆத்தோடு நாம் படித்த பாடசாலைகளின் ஒன்று கூடல்களிலும் கலந்துகொள்ளுவோம். இவற்றை விட ஆண்டுக்கு ஒருமுறை மாணவர் இராப்பேசன விருந்து ஒவ்வொரு மண்டபத்திலும் தனித்தனியாக நடைபெறும். எனவே ஏனைய விடுதிகளில் உள்ள நண்பர்களை அழைத்து மகிழ்து நடனமாடிக் கொண்டாடுவது வழக்கம். இங்கு தமிழ் சிங்கள ஒற்றுமை மேலோங்கி நிற்கும். ஆண்கள் பெண்கள் விடுதிக்கும் பெண்கள் ஆண்கள் விடுதிக்கும் செல்வது அந்த ஒரு நாளே ஆகும்.

## முல்லைத்தீவு மகாவித்தியாலயத்தில் எனது பணி

முல்லைத்தீவு மகாவித்தியாலயத்தில் பட்டதாரி ஆசிரியராக நியமனம் கிடைத்தது. 15.6.1975 பணியை ஏற்றுக்கொண்டேன். நான் 14ம் திகதியே பாடசாலைக்குச் சென்று அதிபர் ஆசிரியர்களோடு அளவளாவி வந்தேன். அதிபர் வித்தியானந்தக் கல்லூரியில் எனக்கு வரலாற்று ஆசிரியராக இருந்தவர். என்னைக் கண்டதும் மகிழ்ச்சியோடு வரவேற்றார். அத்தோடு எனக்குப் பழக்கமானவர்கள் திருவாளர்கள் கனகராசா, சங்கரப்பிள்ளை, குணரத்தினம் ஆகியோர். இவர்களை விட முல்லைத்தீவைச் சேர்ந்த கனகசபாபதி முதலியாரின் மகள் திருமதி மரகதம் நடராசா, சேவையர் சுப்பிரமணியம் திரு. இரத்தினசிங்கம் அவர்களின் புதல்வி திருமதி. மோகனராணி குகதாசன், சிலாவத்தையைச் சேர்ந்த திரு. கிருஷ்ணராஜா ஆகியோரும் எனக்குப பரிட்சயமானவர்கள். நான் சிறியவனாக இருக்கும் போது 1956ம் ஆண்டு எனது தந்தையாரால் அமைக்கப்பட்ட நெல்லரிசி ஆலையைத் திறந்து வைத்து முதலில் தனது கைகளாலேயே நெல்லை இயந்திரத்தில் இட்டுத் தொடங்கி வைத்தவர். எனது தந்தைக்கு மிக வேண்டியவரும் விருப்பமானவர் முதலியார் அவர்கள். சேவியர் இரத்தினசிங்கம் அவகள் நில அளவையின் பொருட்டு எங்கள் ஊரவர்களை பணிக்கு அமர்த்தியிருந்தார். எங்கள் ஊர் குமுளமுனைக்கு வரும் போதெல்லாம் எங்கள் வீட்டிற்கு முன்னால் அவரது வாகனம் நிறுத்தப் பட்டால் அவருக்கு தயிர் கொடுத்தனுப்புவது வழக்கம். தங்கராசா என அவரது இனிமையான அழைப்பு வரும். அவரும் எனக்கு மிகவும் பழக்கமானவர் மட்டுமல்ல என்னையும் தங்கராசா என்று எனது தந்தையாரின் பெயரைச் சொல்லி எப்படி அப்பா எனக்கேட்டுவைப்பார். அவரது மகள் உட்பட மிக அருமையான மிக நெருக்கமான ஆசிரியர் குழாத்தோடு பணியாற்றியது மிகவும் மகிழ்ச்சிகரமாக இருந்தது.

எனக்கும் மல்லாவி மகாவித்தியாலத்திற்கு இடமாற்றம் கிடைத்தது. 1974ல் இருந்து 1978 வரை முல்லைத்தீவு மகாவித்தியாலயத்தில் பணியாற்றிய காலம் மிகவும் நல்ல நண்பர்களையும் நல்ல அனுபவத்தையும் பெற்றுத்தந்தது. அரசியல் தலையீடுகள் எங்கள் பாடசாலைகளையும் மாணவர்களது கல்வியையும் எவ்வளவிற்குச் சீரழிக்கின்றது என்பதன் நிதர்சனத்தை நேரடியாகக் கண்டு அனுபவ ரீதியாக உணரும் கசப்பான அனுபவங்கள் ஏற்பட்டமை நெச்சத்தில் மறக்கமுடியாத நிலைமை. முல்லைத்தீவு பாடசாலைக்கு ஒரு விஞ்ஞானகூடத்திற்கான அனைத்து தளபாடங்களையும் தருவதாகவும் அதற்கான கட்டிடத்தை பெற்றார் ஆசிரியர் சங்கத்தினரே கட்டவேண்டும் எனவும் வவுனியா கல்வி மாவட்டத்திற்கான பிரதம கல்வியதிகாரி திரு. சிமியாம்பிள்ளை அவர்கள் 1977ம் ஆண்டு அதிபரிடம் தெரிவித்தார். அதிபராக இருந்தவர் முல்லைத்தீவைச் சேர்ந்த பிரபல மீன்பிடி வர்த்தகர் பிரான்சிஸ் சம்மாட்டியாரின் புதல்வனான திரு. இராஜேந்தரம் அவர்கள் அவர் எனது ஆசிரியரும்கூட. என்மீது அளவுகடந்த நம்பிக்கையம் அன்பும் கொண்டவர். என்னை அழைத்து 60ஒ20 அடி நீள அகலம் கொண்ட ஒரு கட்டிடத்திற்குச் காசுசேர்க்கவேண்டும் அதனைக் கட்டினால் அதற்குத் தேவையான விஞ்ஞான உபகரணங்களைகத் தருவதாக பிரதம கல்வியதிகாரி அறிவித்திருந்தார் எனக்குறிப்பிட்டார். இன்று கனடாவில் வாழ்ந்துவரும் புலோலி– உபயகதிர்காமத்தைச் சேர்ந்த விஞ்ஞான பட்டதாரியான திரு. பரமு சிவலிங்கம் அவர்கள், முல்லைத்திவு கரைச்சிக்குடியிருப்பைச் சேர்ந்த திரு. சங்கரப்பிள்ளை அவர்கள் தண்ணீரூற்றைச் சேர்ந்த நண்பர் திரு. கனகராசா ஆகியோரிடம் ஆலோசனை கேட்டார். நாம் உடனடியாக பெற்றார் ஆசிரியர் சங்கத்தைக் கூட்டவேண்டும் எனவும் அவர்களிடம் உதவி கேட்போம் எனவும் ஆலோசனை கூறி கூட்டத்திற்கு ஏற்பாடு செய்தோம். அதன் வணணம் பெற்றோர் நிதி சேர்ப்பதற்கு தங்கள் ஆதரவினைத் தெரிவித்தார்கள். ஏறக்குறைய 25000 ரூபா வரை சேர்க்கவேண்டும எனத் தெரிவிக்கப்பட்டது. அக்கூட்டத்திற்கு அப்போதைய முல்லைத்தீவு நகரசபைத் தலைவராக இருந்த பிரபல வர்த்தகர் திரு. வைஸ்தியாம்பிள்ளை, மற்றும் பிரபல வர்த்தகர் திரு. அருளப்பு உட்பட அனைத்து வர்த்தகர்களையும் அழைத்திருந்தோம். அவர்கள் அனைவரும் அதிபரின் உறிவினர்கள். எனவே அவர்கள் நிதி தருவதாக ஒப்புக் கொண்டனர். திரு. க. சங்கரப்பிள்ளை அவர்களையும் என்னையும் நிதி சேர்ப்பதற்கு செல்லும் வண்ணம் கேட்டுக்கொண்டார். நாமும் முதலில் பட்டின சபைத்தலைவராக இருந்த பிரபல வர்த்தகர் வஸ்தியாம் பிள்ளையிடம் சென்றோம். பெருந்தொகை தருவதாக ஒப்பக்கொண்டவர் இரண்டாயிரம் மட்டும் தருவதாக பெயரை எழுதிக் கையொப்பம் இட்டதோடு மட்டுமல்லாது “கரைச்சிக்குடிப் பகுதியில் உள்ளவர்களிடம் பணத்தைச் சேர்த்துக் கொள்ளுங்கள் அவர்களின் பிள்ளைகள்தானே அதிகமானவர்கள்.

அவர்கள் எதற்கும் பணம் கொடுப்பதில்லை. முதலில் அவர்களிடம் பணத்தைச் சேர்த்துவிட்டு வாருங்கள்" என்று சற்று எரிச்சலூட்டும் வண்ணம் காரசாரமாக கடிந்துகொண்டார். எனக்கு என்னோடு வந்த சங்கரப்பிள்ளை ஆசிரியரைக் குறிவைத்து அவர் இடித்துரைத்தது அப்போது ஏன் என்பது விளங்கவில்லை. எனக்கு உள்ள ஒரு குறை மூக்கு முட்டக் கோபம் இருப்பது. கோபம் வந்துவிட்டது. அதிபரிடம் நான் பணம் சேர்க்கப் போக முடியாது என்று பணம் சேர்க்கக்கொண்டு சென்ற பெயரப்பட்டியல் அடங்கிய குறிப்புப் புத்தகத்தை அவரது மேசையில் விட்டெறிந்தேன். அவர் பேயறைந்தவர் போலானார். அன்று மாலை அவர் வைஸ்தியாம் பிள்ளையிடம் சென்று "என்ன மாமா உங்களிடம் அனுப்பிய அந்தப் பொடியனை ஏசிவிட்டீர்களாமே அவர் காசு சேர்க்க மாட்டேன் என்று சொல்லிவிட்டார்" என அவரிடம் கேட்டதற்கு அவரோ "நான் அந்தப் பொடியனைப் பேசவில்லை, அவரோடு வந்த கரச்சிக்குடியிருப்பு வாத்தியாரைத் தான் குறிவைத்து அவர்கள் பகுதியில் இருந்து பணம் சேர்க்கும்படி குறிப்பிட்டேன்" என்று அதற்கான காரணத்தையும் குறிப்பிட்டுள்ளார். அடுத்தநாள் என்னிடம் வந்த அதிபர் எனது சூட்டைத் தணிக்க அன்போடு சிரித்துச் சிரித்து கரைச்சிக்குடியிருப்பு மக்கள் உதவி செய்வதில்லை என்ற ஆதங்கத்தைத் தெரிவித்தார். அவர் பக்கத்து நியாயத்தை அறிந்துகொண்ட பின்னர் நான் கரைச்சிக் குடியிருப்பைச் சேர்ந்த பெற்றோரும் பிள்ளைகளின் கல்வியல் அக்கறை கொண்டவருமான கிராமிய விவசாய தொழில் நுட்பவியல் உத்தியோகத்தர் திரு. இராஜசிங்கம் அவர்களிடம் நடந்ததை விபரித்து நீங்கள் உதவ வேண்டும் எனக் கேட்டுக்கொண்டேன். அவர்தான் அப்போதைய பெற்றார் ஆசியர் சங்கத்தின் செயலாளராவார். அதனைச் செவியுற்ற அவர் "நாங்கள் என்ன கடலில் அள்ளியா எடுக்கின்றோம். எங்கள் சம்பளம் வாழ்க்கைச் செலவுக்கே போதாமல் இருக்கின்றது." வசதியானர்வகள் தானே கொடுக்கவேண்டும் என்ற நியாயத்தைச் சொல்லிவிட்டு நாம் எதிர் பார்த்ததிலும் பார்க்கக் கூடுதலான தொகையைத் தந்தார். அதேபோன்று எங்கள் பாடசாலை ஆசிரியரும் ஓய்வுபெற்ற நில அளவைத் திணைக்கள மேலதிகாரியான திரு. இரத்தினசிங்கம் அவர்களின் மூத்த புதல்வியுமான திருமதி மோகனராணி குகதாசன் அவர்கள் தங்கள் குடும்பத்தாரும் பங்களிப்புச் செய்கின்றோம் எனக் குறிப்பிட்டவேளை, கனகசபாவதி முதலியாரின் புதல்வி திருமதி நடராசா அவர்களும் கணிசமான தொகையைத் தருவதாக ஒப்புக்கொண்டார். கரைச்சிக்குடியிருப்பில் பெருந்தொகை பணத்தைச் சேர்த்தோம். முல்லைத்தீவு வர்த்கராக இருந்த திரு. சடையர் நடராசா அவர்களும் ஒரு குறிப்பிட்ட தொகையைத் தருவதாக ஒப்புக் கொண்டார். இளைஞராக இருந்த தம்பையா புலேந்திரன் அவர்களும் ஒரு குறிப்பிடத்தக்க ஒரு தொகையைத் தருவதாகவும் தனது உளவு இயந்திரத்தில் கட்டிடத்தின் அடித்தளத்திற்குத் தேவையான கல்லை

குமுளமுனையில் இருந்து ஏற்றிவர தந்துதவுவதாகவும் ஒப்புக்கொண்டார். அனால் அவர் தனது உளவு இயந்திரத்திற்கு ஓட்டுநர் இல்லை என்பதனைப் குறிப்பிட்டதோடு என்னை மாலையில் கொண்டு சென்று காலையில் கொண்டு வந்து விடும்படி கேட்டுக்கொண்டார். நானும் அதற்குச் சம்மதம் தெரிவித்தேன். எனவே கல்லைக் கொண்டு வந்து சேர்ப்பதற்கான ஏற்பாடுகள் மிகத் துரித கதியில் ஏற்பாடு செய்யப்பட்டது. கல்லைக் கொத்தி எடுத்து விற்பனை செய்யும் எனது ஊரவர்கள் சிலரை அணுகினேன் அவர்கள் அதிகாலையில் ஏற்றிவிடச் சம்மதித்தார்கள். பாடசாலை நேரத்திற்கு முன்னர் நான் செல்லவேண்டும் என்பதனால் காலை ஆறுமணிக்கே உளவு இயந்திரத்தின் இழுவைப் பெட்டியை அவர்கள் கற்களைக் குவித்திருக்கும் கற்குவாறியில் விட்டுவிடுவேன். ஏழரை மணிக்கு நான் தயாராகி அதனைச் செலுத்திச் செல்வேன். பாடசாலையில் வந்து திரு. தம்பையா குலேந்திரன் அவர்கள் அதனை எடுத்துச் செல்வார். அத்தோடு கூரை வேலைக்கும் தளபாட வேலைக்கும் திரு. பரமு சிவலிங்கம் ஆசிரியர் அவர்கள் பொறுப்பெடுத்துக் கொண்டார். கேப்பாபுலவில் உள்ள அவரது காணியில் மரம் அரியப்பட்டு தளபாடங்கள் செய்யப்பட்டதோடு, யன்னல், கதவு முதலியன செய்யப்பட்டு கொண்டு வரப்பட்டன. ஆனால் ஒப்பந்தத்தின் படி 100 மாணவர்களுக்கான கதிரைகள் செய்யப்படாமல் இருந்தது. அவர் புறுணே நாட்டிற்கு அவசர அழைப்பின் பெயரில் குடும்பத்தோடு சென்று விட்டார். கட்டிட வேலை முடிவடைந்து விட்டது ஆனால் கல்வித்திணைக்கள ஒப்பந்தம் சற்றுத்தாமதமாகவே நடந்தது. மார்கழி மாதத்திற்கு முன்னர் பணத்தைப் பெற்றாகவேண்டும். தப்பினால் அந்தப்பணம் திரும்ப அரசாங்கத்தால் வேறு பணிகளுக்குத் திருப்பிவிடப்படும் என்ற ஐயம் இருந்தது. பிரதம கல்வி அதிகாரியோ தனது இனத்தவரான இராஜேந்திரத்தின் மீது நம்பிக்கை வைத்து காசோலையை எழுதி அதனை நிதியாளரிடமே வைத்திருக்கச் சொல்லிவிட்டார். மேசைகள் செய்யப்பட்ட நிலையில் காசோலை வந்து சேர்ந்துவிட்டது. ஆனால் கதிரைகள் செய்யப்படாமல் நிலுவையில் இருந்தது. எனக்கும் இடமாற்றம் கிடைத்து விட்டது. அதற்கு சில காரணங்களும் இருந்தன.

## சுற்றுலாச் சென்றமை:

முல்லைத்தீவு மாணவர்கள் எனது நண்பர்கள்போல பழகினார்கள். வவுனியா மாவட்டப்போட்டிக்கு 1977ல் மாணவர்களை நான் பொறுப்பாக இருந்து அழைத்துச்சென்றேன். முல்லைத்தீவு பாடசாலை கூடிய புள்ளிகளை விளையாட்டுப் போட்டியில் பெற்றுக்கொண்டது. மாணவர்களினன் மகிழ்ச்சி என்மீது அவர்களுக்கு இருந்த மதிப்பையும் அன்பையும் மேலும் அதிகரித்தது. அதன்பின்னர் 1978ஆம் ஆண்டு சித்திரை விடுமுறையின் போது

முல்லைத்தீவு இளைஞர் அமைப்பு ஒரு சுற்றுலாவை ஏற்பாடு செய்திருந்தது. அதற்கு என்னையும் வரும் வண்ணம் அழைத்திருந்தனர். நானும் அவர்களோடு இரண்டு வாரங்கள் இலங்கையின் பலபாகங்களுக்கும் மாத்தறை, கதிர்காமம், மட்டக்களப்பு, நுவரெலியா, கண்டி, திருகோணமலை ஆகிய நகரங்களுக்குச் சென்று திரும்பிய வேளை எனக்கு இடமாற்றக் கடிதம் கிடைத்திருந்தது வியப்பையும் விசனத்தையும் தந்தது. மாணவர்கள் மத்தியிலும் பெற்றோர் மத்தியிலும் எனக்கிருந்த செல்வாக்கை சிலரால் பொறுத்துக் கொள்ளமுடியவில்லை. குறிப்பாக அன்று சிலாவத்தையில் கல்வி கற்பித்துவந்தவரும் திரு. வி.பொன்னம்பலம் அவர்கள் அதிபராக முள்ளியவளை வித்தியானந்தக் கல்லூரியில் அதிபராக இருந்த வேளை அவருக்குச் சொல்லொணாத் துயரைத்தைக் கொடுத்தவருமான தண்ணீரூற்றைச் சேர்ந்த திரு. தியாகராசா மற்றும் அவரது சகோதரர் கிராம சேவையாளர் திரு. திருநாவுக்கரசு (அரசன்) உஷா தையல்மெசின் கிளையின் முகாமையாளராக பணியாற்றிய இராஜசிங்கம் அவர்களும் அவர்களோடு புதுக்குடியிருப்பைச் சேர்ந்த முன்னைநாள் கிராமசேவை யாளர் திரு. தம்பாப்பிள்ளை அவர்களும் சேர்ந்து அப்போதைய முல்லைத் தீவு தொகுதி பாராளுமன்ற உறுப்பினராக இருந்த திரு. செல்லத்தம்பு அவர்களிடம் சென்று என்னை இடமாற்றம் செய்யவேண்டும் என வேண்டுகோள்கள் விடுத்துள்ளனர்.

அவ்வேளை மாலை வேளைகளில் சிங்களப் பொலீஸ் உத்தியோகத்தர் களுக்குத் தமிழைக் கற்றுக்கொடுக்கும வண்ணம் அங்கு பொலிஸ் பொறுப்பதிகாரியாக இருந்த இன்ஸ்பெக்டர் தல்பதாது என்னிடம் வேண்டு கோள் விடுத்தார். நான் அதற்குச் சம்மதித்து அப்பணியை இலவசமாகச் செய்துவந்தேன். இதனால் பொலீஸ் உத்தியோகத்தர்கள் என்னை அன்பாக ஸ்கூலமாத்தயா என அழைப்பதோடு தாங்கள் இருக்கும் விடுதிக்கு என்னை அழைத்து உணவு தருவார்கள். ஆவர்களோடு நெருங்கிப்பழகியமையும் சிலருக்கு பொறாய்மையைத் தூண்டியது. ஏன்னை இடமாற்றும் படி கேட்டவர்களில் முல்லைத்தீவு மகாவித்தியாலய மாணவர்களின் பெற்றோர் ஒருவர் கூடச் செல்லவில்லை. இதன் விளைவாக எனக்கு வவுனிக்குளம் மகாவித்தியாலயத்திற்கு இடமாற்றம் கிடைத்தது. நான் நேரடியாக பிரதம கல்வியதிகாரியாக இருந்த திரு. சிமியாப்பிள்ளை அவர்களிடம் சென்று வினவினேன். அவர் என்னைப் பாராளுமன்ற உறுப்பினர் செல்லத்தம்புவின் கால்களில் விழுவதுதான் வழி எனத் தனது இயலாமையைக் குறிப்பிட்டார். இதனை முல்லைத்தீவு நண்பர்கள் சிலரிடம் குறிப்பிடடேன். எனது இடமாற்றத்தைக் கேள்வியுற்ற என்மீது மதிப்பும், பற்றும் கொண்டிருந்த மாணவர்கள் திரண்டு பாடசாலையைப் பகிஷ்கரித்தனர். இது அவர்களுக்குப் பெருத்த அவமானமாகப் போனது. தங்கள் கட்சிக்காரர் மட்டுமல்ல

உறவினர்களே எங்களுக்கு எதிராக செயற்படுகின்றார்கள் என எண்ணி ஆத்திரமுற்றனர். அவர்களது நெருங்கியவரகளின் பிள்ளைகளே முன்னின்று போராட்டத்தை நடத்தினர். இன்று கனடாவில் வாழ்ந்து வரும் எனது அன்பு மாணவன் கீதபொன்கலனிடம் வந்து செல்லத்தம்பு அவர்களின் மூத்த புதல்வரும் சட்டத்தரணியுமான திரு. மகேந்திரன் கையில் பிடித்து ஏன் நீ இதில் ஈடுபடுகின்றாய் எனக் கேட்டதற்கு சிறந்த ஆசிரியர்களை நீங்கள் உங்கள் சுயநலத்திற்காக இடமாற்றம் செய்வது தவுறு என நேரடியாகக் குறிப்பிட்டுளார். அவருக்கு ஒரு சவாலாகவே அமைந்தது. என்னோடு மிக நெருக்கமாகப் பழகிய முல்லைத்தீவு இளைஞன் ரஷீக் அவர்கள் மாணவர்களை மறித்ததாகக் கூறி வழக்குப் பதிவு செய்து அவர்களைக் கோட்டில் ஏற்றினர். என்னையும் பொய் வழக்கில் சிக்கவைக்க முயற்சித்தனர். இதனை எனது நண்பரான திரு. பரமு சிவலிங்கம் அவர்கள் என்னிடம் தெரியப்படுத்தினார். இதன்காரணமாக பலரின் வற்புறுத்தலின் பெயரில் நான் யோகபுரம் சென்று எனது பணியை ஏற்றுக்கொண்டேன்.

## துணுக்காய்ப் பிரதேச பாடசாலைகள் ஒரு பார்வை.

முல்லைத்தீவு மாவட்டம் தோற்றுவிக்கப்பட முன்னர் யாழ் மாவட்டம், வவுனியா மாவட்டம், மன்னார் மாவட்டம் என்னும் மூன்று மாவட்டங்களே வடமாகாணத்தில் காணப்பட்டன. அவை வடமாகாணத்தின் மூன்று கல்வி அலகுகளாகப் பிரிக்கப்பட்டிருந்தன. யாழ்பாணம், மன்னார், வவுனியா என்பனவாகும். 1978ம் ஆண்டில் இலங்கையின் மாவட்டங்கள் 25 ஆக அதிகிக்கப்பட்டவேளை முல்லைத்தீவு மாவட்டமும் கிளிநொச்சி மாவட்டமும் என வடமாகாணத்தில் மேலும் இரண்டு மாவட்டங்கள் பிரித்து உருவாக்கப்பட்டன. இவற்றிற்கு கல்வித்திணைக்கள அலுவலகங்களும் தனியாக நிறுவப்பட்டன. ஆனால் முல்லைத்தீவு, கிளிநொச்சி இரண்டும் ஒரு கல்விப்பணிப்பாளரின் கீழ் இயங்கின. மூன்று நாட்கள் ஒரு மாவட்டத்திலும் இரண்டு நாட்கள் ஒரு மாவட்டத்திலும் என் பணி இருந்து வந்துள்ளது.

இன்று (3.11.2018) சுவிஸ் நாட்டில் வாழும் மல்லாவிப் பிரதேச மாணவர்கள் ஒன்றிணைந்து ஒரு விழாவிற்கு ஏற்பாடு செய்திருப்பது பாராட்டத் தக்கது மட்டுமன்றி மனதில் மிகுந்த மகிழ்ச்சியையும் தருகின்றது. மல்லாவி மகாவித்தியாலயம் இன்று மத்திய கல்லூரி எனத் தரம் உயர்த்தப்பட்டுள் ளதுடன் 60 ஆண்டுகள் வரலாற்றைக் கொண்டது எனலாம். வவுனிக்குளத் திட்டத்தின் கீழ் யாழ்ப்பாணக் குடாநாட்டில் இருந்து பெருந்தொகையா னவர்கள் குடியேற்றப்பட்டார்கள். அவ்விதம் விருத்தி செய்யப்பட்ட குடியேற்றத் திட்டங்களில் அரசாங்க உதவியோடு பாடசாலைகள் கட்டப்பட்டுள்ளன. ஆனால் மல்லாவிப் பாடசாலை 1960களில் கற்றுவிட்டு

வேலையேதும் அற்றவர்களாக இருந்த ஒரு சிலரால் புளியடியில் ஆரம்பிக்கப்பட்ட பாடசாலை என்றே அழைக்கப்பட்டது. ஆனால் குடியேற்றத்திட்டத்திற்கமைய மல்லாவிப் பிரதேசத்தில் ஒரு பாடசாலையைத் திட்டமிட்டு 1200 மாணவர்கள் கல்வி கற்கக்கூடிய கட்டிடத் தொகுதி யொன்றினை காணி அமைச்சு அமைத்திருந்தது. இதற்கு காணி அபிவிருத்தித் திணைக்களத்தின் அதிகாரியாக திரு. க. பொன்னம்பலம் அவர்கள் கடமையாற்றியுள்ளார். அவரின் காலத்தில் பல பாடசாலைக் கட்டிடங்கள், வைதிய சாலைகள் அமைக்கப்பட்டள்ளன.

மல்லாவி அரசினர் பாடசாலைக் காக அமைக்கப்பட்ட அந்தக் கட்டிடத் தொகுதிக்குள் புளியடியில் இருந்த ஓலைக் கொட்டகைப் பாடசாலை இடம்பெயர்ந்தது.

தகரக் கொட்டகைக்குள்ளும் ஓலைக்கொட்டகைக்குள்ளும் அல்லற்பட்ட மாணவர்களும் ஆசிரியர்களும் மகிழ்ச்சியாக மூச்சுவிட்டனர். இப்பாடசாலை ஆரம்பிக்கப்பட்டதும். சில ஆசிரியர்கள் இடமாற்றம் பெற்றனர். அரசாங்கப் பாடசாலைத் தரத்தைப் பெற்றுக்கொண்ட இப்பாடசாலை படிப்படியாக முன்னேற்றம் கண்டு வந்துள்ளது.

பாண்டியன்குளம், வவுனிக்குளம் இரண்டாம் படிவம், வவுனிக்குளம் மூன்றாம் பவடிம், விநாயக புரம், பூவரசன் குளம், கொல்லவிளான்குளம் ஆகிய பகுதிகள் வவுனிக்குளத் திட்டத்தின் கீழ் வந்தமையால் சிறந்த கட்டிடங்களைப் பாடசாலைகளுக்காக நிர்மாணித்தனர்.

## முல்லை மாவட்டப் படுவான் கரையில் நான்

## யோகபுரம் மகாவித்தியாலத்தில்

நான் 1978ம் ஆண்டு யோகபுரம் மகாவித்தியாலயம் என அழைக்கப்பட்ட வவுனிக்குளம் மூன்றாம் படிவம் பாடசாலைக்கு இடமாற்றம் பெற்று வந்து பதவிப் பிரமாணம் செய்துகொண்டேன். நான் 1964ம் ஆண்டு எனது நண்பரான நாவற்குளியூர் க. குமாரசாமி அவர்களின் வேண்டுதலுக்கமைய தண்ணிமுறிப்பில் இருந்து சில பொருட்களை ஏற்றிக்கொண்டு வவுனிக்குளத்திற்கு வந்தேன். அப்பேது இடது கரை வாய்க்கால் வேலைகள் நடந்த வண்ணம் இருந்தன. பலத்த மழைக்காரணமாக சேறும் சகதியமாக இப் பிரதேசம் இருந்தது. நான் அழைத்து வந்த உளவு இயந்திர ஓட்டனரை அங்கு வேலைசெய்யப் பணித்துவிட்டு ஊருக்குத் திரும்பினேன். மல்லாவியில் கடைகள், வைத்திய சாலைகள் உண்டு என்றார்கள் ஆனால்

நான் அங்கு செல்லவில்லை.

நான் சென்ற வேளை அப்பாடசாலையின் அதிபராக இருந்தவர் திரு. சிவவாகீசர் ஆவார். அவர் இடமாற்றம் பெற்று அளவெட்டி விக்ரோறியாக் கல்லூரிக்கு அதிபாராகச் சென்றார். பாடசாலைப் பொறுப்பை நான் ஏற்றுக்கொண்டேன். அப்போதைய நிலையில் துணுக்காய், பாண்டியன் குளம் உதவி அரசாங்க அதிபர் பிரிவுகளில் காணப்பட்ட ஒரே ஒரு மகாவித்தியாலயம் அதுவாகும். அரசியல் காரணங்களுக்காக முல்லைத்தீவு மகாவித்தியாலயத்தில் இருந்து நான் 1978ல் இடமாற்றம் பெற்றேன். இளமைத் துடிப்பும், கற்பிப்பதில் ஆர்வமும் கொண்டிருந்த நான் அரசியல் பழிவாங்கலை ஒரு பொருட்டாகக் கொள்ளாது அப்பிரதேசத்து மாணவர் களின் அறிவுப்பசியைப் போக்க என்னாலான முயற்சிகளை மேற்கொண் டேன். குறிப்பாக மாணவர்களின் பல்துறைசார் திறன்களை வளர்த்தெடுக்க வேண்டும் என்னும் உள்ளக்கிடக்கை மாணவர்களை பல்வேறு வழிகளிலும் ஊக்குவிக்கக் காலாக அமைந்தது.

பண்டார வன்னியனின் வரலாறு ஆராயப்பட்டு நாடகங்கள் மேடை யேற்றப்பட்டு பண்டார வன்னியன் விழா என வவுனியா மாவட்டமே விழாக்கோலம் பூண்டவேளை நான் எங்களது உளவு இயந்திரத்தில் வவுனியா நகரத்திற்கு ஊர்வலம் சென்றமை நினைவில நிறைந்த நாட்கள். அந்த விழாவை குதூகலமாகக் கொண்டாடியதன் காரணமாக நான் பாண்டியன் குளமம், நட்டான் கண்டல், மூன்று முறிப்பு, பனங்காமம் பற்றிக் கேள்விப்பட்டவற்றை நேரில் சென்று பார்வையிட வாய்ப்பு ஏற்பட்டது. பெருந்தொகையான கனரக இயந்திரங்களின் உதவியோடு வவுனிக்குளம் புனருத்தாரண பணிகள் நடைபெற்றுக்கொண்டிருந்த வேளை. குளத்திற்கு அண்மையில் சிவபுரம் எனப்படும் பகுதியில் அங்கு கண்டெடுக்கப்பட்ட சிவனை வைத்து ஆலயம் அமைக்க முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு கட்டிடமும் அமைக்கப்பட்டிருந்தது.

மல்லாவிக் குளத்திற்கு முன்பாக மல்லாவி முருகன் ஆலயம் ஒன்று கிரமமாக பூசைகளோடு மக்கள் வழிபாடு செய்வதனை அவதானிக்க முடிந்தது. அவ்விதமே துணுக்காயிலும் ஒரு பிள்ளையார் ஆலயம் மக்களால் வழிபாடு செய்யப்படுவதனைக் காணமுடிந்தது. இதற்கென பாழ்ப்பாணத்தில் இருந்து அந்தணர்கள் வரவழைக்கப்பட்டு அங்கு நிரந்தரமாகத் தங்கியிருந்தனர். நான் இடமாற்றமாகி வந்தவேளை சைவ உணவுக்காக எனக்கு முன்பாகவே விவசாயத் திணைக்களத்தில் பயிர்ச்செய்கை உத்தியோகத்தராகப் பணியாற்றிய நண்பர் தில்லையம்பலம்சிவபாதம் மல்லாவி ஐயர் வீட்டில் உணவிற்கு ஏற்பாடு செய்திருந்தார். அங்கு சென்று உணவை அருந்தி வந்தேன்.

பாடசாலை ஒன்று நல்ல தரத்துடன் மிளிரவேண்டுமானால் அந்தப் பாடசாலைக்கான கட்டிடங்கள், விஞ்ஞான கூடம், தொழில்நுட்பப் பாடங்கள் பயிற்றுவித்தலுக்கான இடவசதிகள், விளையாட்டுத்திடல் என்பன அமைந்திருப்பதோடு தேவையான ஆசிரியர்களும் இருத்தல் வேண்டும். அந்தப் பாடசாலையில் நான் அதிபராகப் பதவியேற்றதில் இருந்து எனது செயற்பாடுகள் பாடசாலையின் தேவைகளை அதிகரிப்பதற்கான முயற்சிகளில் முனைப்புக்கொள்ள வைத்தது. பாடசாலைக்கு என ஒதுக்கப்பட்டிருந்த காணி காடெடுத்து, ஒரு பக்கத்தில் சிலர் ஆக்கிரமித்துக் குடியேறியிருந்தனர். இதுவரை இருந்த அதிபர்கள் நமக்கேன் வீண் வம்பு; நாம் கற்பித்தலோடு இருந்தால் போதும் என்னும் நோக்கத்தோடு செயற்பட்டவர்களாகவே காணப்பட்டனர். பல மைல்களுக்கு அப்பால் இருந்து வந்த ஆசிரியர்களுக்கான வசதிகள் மிகக் குறைவாகக் காணப்பட்டமையும் பெற்றோர் ஆசிரியர் தொடர்புகளும், அவர்களுக் கிடையோன ஊடாடல்களும் மிகக்குறைவாகவே காணப்பட்டது. நான் சென்றவேளை அங்கு கற்பித்தவர்களுள் திரு. சிதம்பரநாதன் அவர்கள் எனக்கு முன்னரே பரிட்சயமானவர். கரவெட்டி விக்னேஸ்வரக் கல்லூரியில் உடற் கல்வி ஆசிரியராகப் பணியாற்றியவர். நான் சென்ற வேளை அங்கு மாணவர்களுக்கான ஒரு விளையாட்டுப் போட்டியை நடத்தும் முயற்சிகள் நடைபெற்றுக் கொண்டிருந்தன. தகரைச் செடி ஓராளுயரத்திற்கு வளர்ந்திருந்தது. மாணவர்களைக் கொண்டு அவற்றைத் துப்பரவாக்கி மைதானத்தைச் சீர்படுத்தி வரைபுகள் சுண்ணாம்பு வண்ணத்தில் அடித்து மேற்கொள்ளுவதற்கான முயற்சிகள் மிக வேகமாக நடந்துகொண்டிருந்தன. பாடசாலைக் கட்டிடத்திற்கு முன்பாக இருந்த ஒரு சிறிய நிலத்துண்டில் விளையாட்டு மைதானத்தை அமைத்திருந்தனர்.

ஆனால் பாடசாலைக்கு எதிர்ப்பக்கமாக உள்ள பாடசாலைக்காக ஒதுக்கப்பட்டிருந்த பாடசாலைக் காணியில் ஆக்கிரமிப்பாளர்கள் வீடுகள் அமைத்து நிரந்தரமாகவே வாழ்ந்துவந்தனர். மீதிக்காணியும் போய்விடும் என்ற ஐயப்பாட்டைச் சில பெற்றோர் என்னிடம் தெரியத்தந்தனர். முதலில் அந்தக் காணிணைத் துப்பரவாக்கி பயன்பாட்டிற்குக் கொண்டுவர பெற்றோரின் உதவியை நாடினேன். பாடசாலையின் வளர்ச்சியில் விளையாட்டுத் திடலின் அத்தியாவசியத்தை அவர்களுக்கு எடுத்துக் கூறினேன். பாடசாலைப் பாடவிதானத்தோடு புறநிலைச் செயற்பாடுகளும் மாணவர்களை முழுமையானவர்களாக வளர்க்க உதவும் என்பதனைக் கருத்திற்கொண்டு அவர்களிடம் நான் முன்வைத்த கருத்துக்களுக்கும் முன்னெடுப்புக்களுக்கும் அவர்கள் பூரண ஒத்துழைப்பைத் தந்தனர். ஒரே நாளில் நான்கு ஏக்கர்கள் பரப்பளவைக்கொண்ட பற்றைக் காடு வெட்டித் தரைமட்டமாக்கப்பட்டது. தொடர்ந்து தீயிட்டு துப்பரவு செய்தோம். நான்

நாளாந்தம் மாலையில் அக்காணியில் எரியாமல் கிடந்த மரத்துண்டங்கள் வேர்களை அகற்றும் பணியில் பெற்றோரின் உதவியோடு செயற்பட்டேன்.

துப்பரவு செய்யப்பட்ட காணியை விளையாட்டு மைதானமாக்க அன்று வவுனிக்குளம் நீர்ப்பாசன நிறைவேற்றுப் பொறியியலாளர் திரு. ஜெயராஜா அவர்களை நாடினேன். அவர் இரு பாரிய உளவு இயந்திரங்களைத் தந்து துப்பரவுப்பணிக்கு உதவினார். அந்தக் காணித்துண்டு விளையாட்டு மைதானமாக மாறியது. அதற்கு திரு. சிவஞானம் என்னும் அன்பர் தனது உழவு இயந்திரத்தால் உழுது நிலத்தைப் பண்படுத்தித்தந்தார். நில அளவைப் பகுதியினர் கட்டிடம் அமைத்து இருந்த இடமாக ஒரு பக்கத்தில் சீமெந்துத் தகடுகள், கற்கள் என்பன மிதந்து கெண்டிருந்தன. அவற்றை எல்லாம் மாணவர்களின் உதவியோடு அகற்றினோம். அதன் பின்னர் மாணவர்களின் உதவியோடும் அப்பிரதேச வாலிபர்கள், பெற்றோர்களின் உதவியோடும் விளையாட்டு மைதானம் அமைக்கப்பட்டு முதன் முதல் உதைபந்தாட்டப் போட்டி இடம்பெற்றது. தங்கள் பிள்ளைகள் மிக ஆர்வத்தோடு விளையாடுவதைப் பெருந்திரளான மக்கள் கூடிப்பார்வையிட்டனர். ஊரே திரண்டு வந்திருந்தது. இன்றும் அது பசுமை நிறைந்த நினைவாக உள்ளது. சில இளைஞர்கள் அந்த விளையாட்டு மைதானத்திற்கு எனது பெயரைச் சூட்டவேண்டும் எனக் கேட்டுக்கொண்டனர். நான் அதற்கு முற்றாக மறுப்பைத் தெரிவித்தேன். எனது பெயருக்காகவோ அன்றிப் புகழுக்காகவோ நான் இதற்கு முயற்சிக்கவில்லை, இது உங்களால் மேற்கொள்ளப்பட்ட பணி. நான் வெறும் ஊது குழல்தானே என்றெடுத் துரைத்தேன். பெயர் சூட்டப்படுவது எனது பெயருக்குக் களங்கத்தை ஏற்படுத்தும் என்று விநயமாக எடுத்துக் கூறி அவர்களைத் திருப்தியடையவைத்தேன்.

இக்காணியை ஆக்கிரமித்தவர்களை நான் துணிந்து நின்றதன் காரணமாக அகற்றக் கூடியதாக இருந்தது. சில வேளைகளில் வெற்றியின் படியாக துணிவு செயற்பட்டுள்ளமையை என்வாழ்வில் பல சந்தர்ப்பங்களில் நான் அறிந்துகொள்ளும் வாய்ப்பினைக் கொண்டிருந்தேன். அந்த நிலத்தில் குடியிருந்தவர்களோடு முட்டிக் கொள்ளவேண்டாம், பகைக்கவேண்டாம் என சில அன்பர்கள் என்னிடம் வந்து ஆலோசனை கூறினார்கள். சிலரோ விடக்கூடாது இவர்களை அகற்றவேண்டும் நாம் துணை நிற்போம் என்றார்கள். அதில் தமிழரசு சண்முகம் என்பவர் மிக உற்சாகமாகத்துணை நின்றார். வருவது வரட்டும் என நான் பின்வாங்காமல் செயற்பட்டேன். குட்டிமணி பிடிபட்டுச் பூஷாவில் சிறையிருந்த வேளை இக்காணியில் ஆக்கிரமிப்பாளர்களின் உறவினன் ஒருவரும் அப்பகுதியில் களவாடல், வாள்வெட்டுப் போன்ற வேறு குற்றங்களுக்காக கைது செய்யப்பட்டுப் பூஷா முமாமில் அடைக்கப்பட்டிருந்தார். அந்த விளையாட்டு மைதானம்

அமைக்கப்பட்ட பின்னர் மாலையில் இளைஞர்கள் வந்து கைப்பந்தாட்டம் விளையாடுவது வழக்கம். அவ்விதம் விளையாடிக் கொண்டிருப்பதைப் பார்த்துக்கொண்டு வானொலி கேட்டக் கொண்டிருந்த வேளை மறியலில் இருந்த குட்டிமணி உட்பட 52பேர் படுகொலை செய்யப்பட்டதாக செய்தி கிடைத்தது. அதன் பின்னர் பாடசாலைக் காணியின் ஆக்கிரமிப் பாளர்களின் அடாவடித்தனம் குறைவடைந்து விட்டது. எனினும் அடாவடித்தனத்தினர் என அழைக்கப்பட்டவர்கள் என்னோடு மிக நட்பாகப் பழகியமை ஊரவர்களை ஆச்சரியத்திற்கு உள்ளாக்கியது. யாரும் பழகப் பயப்படும் அவர்களோடு எப்படி மிக நெருக்கமாகப் பழக உங்களால் முடிகின்றது என என்னைச் சிலர் கேட்டார்கள். அவர்களும் மனிதர்கள்தானே மனித நேயத்தை முன்வைத்தால் எல்லோரும் நண்பர்களாகப் பழகுவார்கள் தானே என என்பக்கத்திலிருந்து பதில் கிடைத்தது. கணேசன் ஒரு முரடன். அவன் வாள்வெட்டக்காரன் என்றவர்கள் அவன் மாலையில் என்னிடம் வந்து பணிவோடும் அன்போடும் கதைத்துச் செல்வதைக் கண்டு ஆச்சரியப்பபட்டவர்கள் ஒருசிலர். கணேசன் வந்து சென்றால் ஆபத்துப் பின்னால் இருக்கின்றது என நினைத்து என்னிடம் வந்து ஏன் வந்து சென்றார் என வினவும் அன்பு உள்ளங்களை என் உள்ளத்திலிருந்து மறக்கமுடியாது.

## மல்லாவி மகாவித்தியாலயம் – மறக்கமுடியா நினைவுகள்.

பாராளுமன்ற உறுப்பினரின் எதிரி, அவரால் இடமாற்றம் செய்யப்பட்டவர் என ஏழனமாக என்னைப் பார்த்தவர்கள் சிலர். நான் எப்.எக்ஸ். சேல்லத்தம்பு அவர்களுக்கு எதிராக திரு. சந்திரசேகரம் ஆசிரியருக்காக தேர்தலில் வேலை செய்தேன் என்பதனால் அவருக்கு ஆதரவாக இருந்த திரு, ஐ.ச. ஜெயபாலன், திரு. திலலைநாதன் என்போர் என்னோடு வந்து உறவாடினார்கள். சில வேளை அவர்கள் இரவு முழுவதும் பாடாசலை மண்டபத்தல் இருந்து கதைத்துக் கெண்டே இருப்பார்கள். பெரும்பாலான பெற்றோர் எனது செயற்பாட்டைப் பார்த்து என்னை அணைத்து அன்பாக ஏற்றுக் கொண்டார் கள். எனது கற்பித்தல் பணியை செவ்வனே செய்து மாணவர்களின் மதிப்பையும் பெற்றோரின் மதிப்பையும் பெற்றுக் கொண்டேன். பாடசாலையின் விருத்திக்காக அவர்களின் வீடு வீடாகச் சென்று ஆதரவுகேட்டேன். மறுக்காமல் உதவினார்கள். எனது உறவினர்கள் போன்று என்னோடு மிக நெருக்கமாகப் பழகத் தொடங்கினார்கள். தங்கள் வீட்டு அனைத்து சம்பவகங்களுக்கும் என்னைத் தவறாது அழைத்தார்கள். அன்போடு உபசரித்தார்கள். அவர்களில் ஒருவனாகவே மாறிவிட்டேன். நான் செல்லாத ஒரு திருமணவீடு அங்கு நடந்திருக்கவில்லை என்று கூறுமள விற்கு எனக்கு அழைப்புக்கள் குவிந்தன.

1981ம் ஆண்டில் யாழ் பல்கலைக்கழகத்தில் முதுகல்விமானிக் கற்கையை

மேற்கொள்ள விடுமுறையில் சென்று 1982ம் ஆண்டில் திரும்பி மல்லாவி மகாவித்தியாலயத்தில் இணைந்து கொண்டேன். 1983ம் ஆண்டு தொடக்கம் நான் யோகபுரம் கொத்தணி அதிபராகப் பொறுப்பேற்றுக் கொண்டேன். ஆப்பிரதேசத்தில் உள்ள 16 பாடசாலைகளின் நிருவாகப் பொறுப்புக்குத் தலைமை தாங்கி நடத்தும் பாரிய பணி என்னிடம் ஒப்படைக்கப்பட்டது. வட்டாரக் கல்வி அதிகாரி என்னும் பதவிநிலை நீக்கப்பட்டு "கொத்தணி அதிபர்" என்னும் பதவி நிலை வழக்கப்பட்டமையால் நான் துணுக்காய்ப் பகுதியில் கடமையாற்ற மல்லாவி மகாவித்தியாலயத்தை ஆதாரப் பாடசாலையாகக் கொண்டு செயற்பட்டேன். மல்லாவி மகாவித்தியாலயத் திற்கு காணித் திணைக்களத்தினால் வழங்கப்பட்ட 25 ஏக்கர் பரப்பளவான காணி, கட்டிடங்கள் தவிர்ந்த பிரதேசம் காடுமண்டிக் கிடந்தது. பாடசாலையில் இருந்த ஆசிரியர் விடுதிகளின் பின்புறம் இருண்ட பற்றைகள் நிறைந்த முட்புதர்கள் கொண்டதாக யாரும் உட்புக முடியாத சூரைக்கொடி, காரைச் செடிகள் அடர்த்தியாகக் காணப்பட்டன. இக்காடடை அழித்தால் பாடசாலை வெளிச்சத்திற்கு வரும் என்னும் எண்ணம் என்மனதில் குடிகொண்டது. எனது பெரும்பாக்கியம் பளையை சேர்ந்தவர் வல்வெட்டித்துறை சோடாக்கொம்பனி உடைமையாளரின் மகளைத் திருமணம் செய்திருந்த திரு. பொன்னுத்துரை என்னும் பொறியியலாளர் அப்பொழுது வவுனிக்குளத் திட்டத்தின் நிறைவேற்றுப் பொறியியலாளராகப் பணியாற்றிக் கொண்டிருந்தார். அவரிடம் சென்று உதவி கேட்டுப்பார்ப்போம் என்னும் மன உந்தலோடு அவரிடம் சென்றேன். அவரை எனக்கு அறிமுகமாக்கியது அப்பிரதேசத்தில் ஒப்பந்த வேலைகளைச் செய்து வந்த கரவெட்டியைச் நேர்ந்த நண்பர் தியாகு என்பவராவார். அத்தோடு நிதியாளராகக் கடமையாற்றிய கதிரவேலு அவர்களின் வீடு மல்லாவி ஒரு ஏக்கர் என அழைக்கப்டும் பகுதில் இருந்தது. அவரது வீடு நான் யோகபுரம் மகாவித்தியாலயத்தின்று வந்தவேளை தங்கியிருந்து காணித் திணைக்கள ஊத்தியோகத்தர்களின் விடுதியாகும். அவரின் வீட்டில்தான் நாங்கள் குளிப்பது வழக்கம். அவரது மகன் படித்துவிட்டு வந்து அங்கே வீட்டைக் கவனித்துக்கொண்டு இருந்தார். வாமதேவன் என்பது அவரது பெயர். நல்ல பையன். ஏல்லோரிடமும் அன்பாகப் பழகுவார். வீட்டுத் தோட்டத்தை நன்கு கவனிப்பார். அவரது அம்மப்பா திரு. கந்தையா என்னும் முதியவரும் அங்கு இருந்தார். அவரை எல்லோரும் "அரியண்டம்" கந்தையா என அழைப்பார்கள். ஏன் என்பது எனக்குத் தெரியவில்லை. எங்களோடு மிக அன்பாகப் பழகுவார்.

தியாகு, கதிரவேலு இருவரதும் பழக்கம் பொறியியலாளரை இலகுவாக அனுக முடிந்தது. பொறியியலாளர் மிகுந்த உற்சாகத்தோடு "சிங்களப் பகுதிகளில் பௌத்த மடாலயங்கள், பன்சாலைகள், தேவாலயங்கள்

அமைக்க நீர்ப்பாசனத் திணைக்கள இயந்திரங்கள் பாவிக்கப்படுகின்றன. ஏன் நாங்கள் பாவிக்கக்கூடாது” என அவரிடம் குடிகொண்டிருந்த ஆதங்கத்தை வெளிக்காட்டி இரண்டு வாரங்கள் எங்கள் பாடசாலையில் தங்கியிருந்து முழுக் காட்டையும் அழிக்க சம்மதம் தெரிவித்தார். இந்த மகிழ்ச்சிகராமன செய்தியைக் கேட்ட பெற்றோர்கள் திரண்டு தாங்கள் அந்த (D-4 Bulldozer) இயந்திரத்திற்கான எரிபொருளை வாங்க பணம் தருகின்றோம் எனக் கூறினர். இரண்டு வாரங்களில் காடு நல்ல பண்படுத்தப்பட்ட நிலமாக மாற்றம் கண்டது. வேலை ஆரம்பிக்கப் பட்டபின்னர். சில பெற்றோரை அழைத்துக்கொண்டு வீடு வீடாகச் சென்று நிதி திரட்டினோம். பாரிய இயந்திரம் அதற்கு நாளாந்தம் எரிபொருள் ஊற்றுவதற்கும் அதனை இயக்கும் இயக்குநருக்கும், உணவும் எரிபொருளும் கொடுக்கவேண்டி இருந்தது. இரண்டு வாரங்களுக்கும் 7500.00 ரூபாவிற்கு மேல் செலவானது. எங்களால் 2000 ரூபா வரையில்தான் சேர்க்கமுடிந்தது. எனது சொந்தப் பணத்தில் மாங்குளத்திலிருந்து திரு. செல்லப்பா அவர்களின் லொறி வரும்போது டீசல் வாங்கித் தரும்படி கேட்டதற்கமைய அவர் 45 கலன்கள் நிரப்பக் கூடிய தகர பீப்பாக்களில் கொண்டுவந்து தருவார். அதனை நாங்கள் அந்த இயந்திரத்திற்குப் பாவித்தோம். சுப்பையாவின் பிள்ளைகளும் அந்தப் பாடசாலையில் படித்துக்கொண்டிருந்தமையால் சுப்பையா முழமனதோடு பாடாசலைக் காணியைத் திருத்துவதில் கவனத்தைச் செலுத்தியமையும் எங்களுக்குச் சாதகமாக அமைந்தது. இயந்திர இயக்குநர் சுப்பையாமீது நிறைவேற்றுப் பொறியியலாளர் பொன்னுத்துரையவர்கள் நல்ல நம்பிக்கை வைத்திருந்தார்.

கொக்காவில் தாக்குதலுக்கு இந்த இயந்திரமே பின்னர் பாவிக்கப்பட்டது எனவும் எங்கள் காணியை திருத்தித் துப்பரவாக்க இயந்திரத்தைப் பழகிப் பயிற்சி பெற்றுக்கெண்டிருந்த பாலசிங்கம் என்னும் இளைஞனே கொண்டு சென்று வீர மரணத்தை தழுவிக்கொண்டார் என்ற செய்தியும் பின்னர் தெரியவந்தது. இதனால் பொறியியலாளருக்கு பெரும் நெருக்கடி ஏற்பட்டது. அவர் நாட்டை விட்டு வெளியேற இது ஒரு காரணமாக அமைந்தது.

திருத்தப்பட்ட 15 ஏக்கர் நிலத்துண்டை உழுந்துச் செய்கைக்காக ஒவ்வொரு ஏக்கர் வீதம் பெற்றுக்கொண்டு ஏலத்தில் தாம் கேட்டுக்கொண்ட தொகையை வழங்கினார். பெற்றார்–ஆசிரியர் சங்கம் அப்பணத்தைப் பெற்றுக்கொண்டு பாடசாலைக் கணக்கில் வங்கியில் வைப்புச் செய்தது. ஆடு மாடு வராமல் தடுப்பதற்காக அந்தக் காணியைச் சுற்றி வேலி போடவேண்டிய கட்டயா தேவை இருந்தது. சனி, ஞாயிறு தினங்களில் உயர் வகுப்பு மாணவர்களை அழைத்துக்கொண்டு கொக்காவில் றோட்டில் இருந்த நண்பர் திரு. ஐயாத்துரை அவர்களின் ஆலங்குளம் காணியில் பூவரசம் மரங்களிலிருந்து

கதியால்களை வெட்டி வந்து வேலியை அடைத்தோம். இதற்கு யோகபுரத்தைச் சேர்ந்த ஒப்பந்தகாரர் தியாகு அவர்கள் தனது உழவு இயந்திரத்தையும் அதன் இழுவைப் பெட்டியையும் கொண்டு செல்லும் படியும் அவரது மகன் கண்ணனையும் அனுப்பி வைத்தார். கண்ணன் அப்போது மல்லாவி ம.வி.யில் கல்வி கற்றுக்கொண்டிருந்தார். வேலிக்குத் தேவையான மரத்தூண்களையும் காட்டில் இருந்து பெற்றதோடு திணக்களத்தில் இருந்து பெற்றுக்கொண்ட முள்ளுக் கம்பியால் வேலியை அடைத்து அறிக்கைப்படுத்தினோம். கொக்காவில் வீதியைச் சேர்ந்த திரு. ஐயாத்துரை அவர்களின் மகன் ஐங்கரனும் தங்களது உளவு இயந்திரத்தில் கதியால்களை ஏற்றிவந்து உதவினார்.

இதுவரை ஊரவர்களின் யார்க்காடாகக் கிடந்த அந்த பற்றைக் காட்டிற்குள் முன்னர் பாவிக்கப்பட்ட ஒரு கிணறும் வெளிச்சத்திற்கு வந்தது, அந்தக் கிணற்றையும் தூர்வை எடுத்து துப்பரவாக்கி பாவனைக்கு உகந்ததாக ஆக்கிவைக்க மல்லாவி இளைஞர்கள் உதவினார்கள். இதில் முன் நின்று உழைத்தவர்களில் மு.க. நவம் அவரது சகோதரர், வளத்தான் என நான் செல்லமாக அழைக்கும் இளைஞன், சந்திரன், முனா என அழைக்கப்படும் இளைஞன், போன்றோரின் உதவி எனக்கு ஊக்கத்தைத் தந்திருந்தது. இன்று அதிபராகக் கடமையாற்றும் திரு.யேசுதானந்தர் துரைராஜா, திரு. புண்ணியநாதன் நாலாம் படிவத்தைச் சார்ந்தவர் எதற்கும் பின்வாங்காமல் வந்து உதவுவார்கள்.

இன்றைய அதிபராகக் கடமையாற்றும் யேசுதானந்தர் படித்துவிட்டு வேலை இல்லாமல் இருந்த இளைஞன், அவர் பழைய மாணவர் சங்கத்தின் செயற்பாடுகளில் மிக அக்கறையோடும் துடிப்போடும் செயற்பட்ட எனது அப்புக்குரிய இளைஞராக இருந்தவர். அவரோடு க.யோகநாதன் மாணவர்களாக இருந்த திரு. யோகானந்தராஜா, திரு. ஆ. சுந்தரமூர்த்தி, (உதவிக் கல்விப்பணிப்பாளர்) மகேஸ்வரன் செல்லப்பா, கணேசலிங்கம் செல்லப்பா, முதன்முதல் பொறியியல் துறைக்கு மல்லாவியில் இருந்து சென்ற மாணவன் நாகமணி என்போர் பாடசாலையில் மிகுந்த அக்கறையோடு செயற்பட்டவர்கள்.

நாகமணி பற்றிச் சில வார்த்தைகள் குறிப்பிடுவது பொருத்தமானது. நாகமணி, மணி மணியாக அழகாக எழுதும் தன்மை கொண்டவர். அவரைப் பயன்படுத்தி அலுவலகம், அதிபர், உதவி அதிபர், விவசாய கூடம், மனையியற் கூடம், விஞ்ஞான கூடம் என்பனபோன்றவற்றைச் சனி மற்றும் ஞாயிற்றுக் கிழமைகளில் வரவழைத்து எழுதுவித்தேன். எதற்கும் எந்தவித மறுப்பும் தெரிவியாத தங்கக் குணம் படைத்த மாணவன். அம்மாவே உலகம் என

வாழ்ந்தவர். அவர் எழுதும்போது நின்று பார்த்த நினைவு பசுமரத்தாணி போன்று நினைவில் உள்ளது. எப்போதும் நலங்காத வெள்ளை உடையில் வரும் மாணவர். தந்தையில்லாப் பிள்ளை, அத்தோடு மிக அமைதியான மாணவர் அவர்மீது அனைத்து ஆசிரியர்களும் அன்பு செலுத்தினர். அது மட்டுமன்றி நான் வெளியேறிய பின்னர் அவர் பல்கலைக்கழகம் சென்ற போது மாதாந்தம் ஆசிரியர்கள் சிலர் நிதி உதவி செய்துள்ளமை பாராட்டப் படவேண்டியது. கனடாவில் உள்ள எனது அன்புக்குரிய மாணவனும் பின்னாள் அதிபராகப் பணியாற்றியவருமான திரு. சண்முகம் தவநேசன் முன்நின்று நிதி உதவி செய்தவர் என்பது மனதிற்கு மிக்க மகழ்ச்சி தரும் விடயம். அவர் பணியாற்றிய காலத்தில் பல்வேறு இடையூறுகளை எதிர்நோக்கினார் என்பது அவரது வாயால்கேட்டு கவலை கொண்டேன். பச்சை மட்டை அடியும் வாங்கியதாகக் குறிப்பிட்டார்.

நான் பாடசாலையை விட்டு மாற்றலாகி 1989ம் ஆண்டில் செல்லும் போது வங்கிக்கணக்கில் (ரூ.30,000.00) முப்பதினாயிரம் நிலுவையில் வைக்கப் பட்டிருந்தது. ஆனால் அந்தப் பணம் முழுமையும் திரு. சிவராசா அதிபர் காலத்தில் செலவு செய்யப்பட்டுள்ளதாக அறிந்தேன்.

இதனைவிட பாடசாலை மைதானம் மிகவும் சிறப்புடையதாக ஆக்கப்பட்டு 1985ம் ஆண்டு முல்லைத்தீவு பாடசாலைகளின் மாவட்ட விளையாட்டுப் போட்டிகள் அங்கு நடத்தப்பட்டது. புதுக்குடியிருப்பு, முல்லைத்தீவு, முள்ளியவளை, ஒட்டுசுட்டான், மாங்குளம் போன்ற பகுதிப் பாடசாலைகளின் மாணவர்கள் முதன்முதலாக மல்லாவிப் பிரதேசத்தை கண்டுகொள்ளும் வாய்ப்பைப் பெற்றனர்.

என்னை இடமாற்றத்தில் அனுப்பியவர்கள் எதிர்பார்த்திருந்த எதுவுமே நடக்கவில்லை. நான் அடியுதை பட்டுக்கொண்டு தங்களின் காலடியில் விழுவேன் என எதிர்பார்த்தவர்களுக்கு பெருத்த ஏமாற்றமே கிடைத்தது. எனது பணியினைக் கண்ட அப்பிரதேசமக்கள் என்மீது மிகுந்த பற்றும் அன்பும் கொண்டிருந்தனர். அடிப்பார்கள் என எதிர்பார்த்தவர்கள் என்னை அன்புக் கரம்நீட்டி தங்களில் ஒருவனாக அணைத்துக் கொண்டார்கள். அவர்களில் ஒருவனாகவே என்னை மதித்தார்கள், போற்றினார்கள். அப்பிரதேச மக்கள் ஒவ்வாருவரினதும் வீடுகளில் நடக்கும் அனைத்து நற்காரியங்களோ துர்க்காரியங்களோ நான் பிரசன்னமாகவேண்டும் என எதிர்பார்த்தார்கள். நானும் அதனைத் தயக்கமின்றி நிறைவேற்றி வந்தேன்.

ஆனால் அதற்கு மாறாக பாடசாலைகளின் சீரழிவுக்கும் மாணவர்களின் ஒழுக்கக் குறைபாட்டிற்கும் ஈழத்தில் இடம்பெற்ற நீண்டகாலப் போராட்டம்

காரணியாக அமைந்துவிட்டது. பாடசாலை மாணவர்கள் பெற்றோரை மட்டுமல்ல ஆசிரியர்களையும் மதிக்காமல் புறக்கணித்துக் கல்வியை புறந்தள்ளி ஒழுக்கக்கேடுள்ளவர்களாக வாழப்பழகிக்கொண்டமை இக்கால கட்டத்தில் பாடசாலைகளை நிர்வகித்த அதிபர்களின் தலைவலியாக மாறிவிட்டது. ஒரு பக்கம் அரச படைகளின் மிரட்டல் இன்னொருபக்கம் தனிநாடு வேண்டும் என்னும் தணியாத தாகமுடையவர்களின் போராட்டம். இலங்கைப் படையினரும் இடைக்காலத்தில் வந்த இந்தியப்படையினரும் பாடசாலைகளைக் குறியாக வைத்திருந்தனர். என்னை முகாமுக்கு வரும் படி அழைப்பு விடுத்தார்கள். நான் தனியே செல்லப் பின்வாங்கினேன். உதவி அரசாங்க அதிபராகக் கடமையாற்றிய திரு. க. கந்தசாமி அவர்களிடம் என்னை அழைத்து வரும்படி ஆணை பிறப்பித்தார்கள். மறுக்கமுடியாமல் அவருடன் சென்றேன். பாடசாலை மாணவர்கள் பற்றியும் அவர்கள் தொடர்பு வைத்துள்ள அமைப்புக்கள் பற்றியம், போராளிகளின் நடமாட்டம் பற்றியும் செய்தி அனுப்பும்படி இந்திய இராணுக கப்டன் கேட்டுக்கொண்டார். ஏறச்சொன்னால் எருதுக்குக்கோபம் இறங்கச் சொன்னால் முடவனக்குக் கோபம் என்பதுபோன்ற திரிசங்கு நிலைதான் எனக்கு ஏற்பட்டிருந்தது. என்ன செய்வது தலையைப் பிய்த்துக் கொண்டு சரி பார்க்கலாம் என்ற சொல்லிவிட்டு வந்துவிட்டேன். ஒரு முறை இந்திய இராணுவம் காலை 7.30 அளவில் பாடசாலைக்கு முன்னால் உள்ள வீதியில் சிறிது இடைவெளியல் நின்றுகொண்டார்கள். பாடசாலைக்குள் வந்தவர்கள் உள்ளேயிருந்து வெளியே செல்லமுடியாதபடி தடுத்ததோடு பாடசாலைக்கு வரமுடியாதபடி யும் தடுத்தும் விட்டார்கள். என்னை ஒரு மலையாள கப்ரின் தன்னோடு வந்து இருக்கும்படி அழைத்தார். நாம் என்ன செய்யமுடியும் மறுத்துக் கூற முடியுமா? சென்றேன். பி.ப. இரண்டு மணிவரை அவரோடு ஆலமரத்தின் கீழ் சிறை பிடிக்கப்பட்டேன். உள்ளே வந்த ஆசிரியர்கள் ஓரிருவர் எனது அதிபர் விடுதியில் தஞ்சடைந்தார்கள். மனைவிக்குச் சற்று ஆறுதலாக இருந்தது. அவர்களுக்கு வரவேண்டிய உணவுப் பொருட்கள், ஆயுதங்கள் வந்து சேரும் வரை எங்களை எங்கும் செல்லவிடாமல் தடுத்துவிட்டார்கள் என்பதுதான் காரணம் என்பதனை பின்னர் அறிந்துகொண்டேன்.

மல்லாவி மாகவித்தியாலயத்தில் 261 பிள்ளைகளுடனும் 17 ஆசிரியர்களு டனும் 1983ம் ஆண்டு பொறுப்பேற்ற நான் 1985ம் ஆண்டில் ஓராயிரம் மாணவர்களையும் 50 ஆசிரியர்களையும் உள்ள ஒரு பெரும் பாடசாலை யாக மாற்றிக் கொள்ளமுடிந்தது. தென்னியன் குளம், பாண்டியன் குளம், நட்டான்கண்டல், கல்விளான்குளம், உயிலங்குளம், கோடடைகட்டிய குளம், விநாயகபுரம் என்னும் பிரதேசங்களில் இருந்து மட்டுமன்றி முல்லைத்தீவு, முள்ளியவளை, ஒலுமடு, பனிக்கங்குளம் போன்ற பிரதேச மாணவர்களும்

வந்து தங்கியிருந்து படிக்கும் நிலைமைக்குப் பாடசாலை வளர்ந்து வந்ததோடு அங்கு விஞ்ஞானத்துறை, கணிதத்துறையிலும் உயர்கல்வியைப் பெற்றுக் கொள்ளவும் வாய்ப்புக்கள் ஏற்பட்டது.

இக்கால கட்டத்தில் பாடசாலையின் வளங்கள் அதிகரித்தன. கல்வித் திணைக்களம் விவசாய விருத்திக்காக தொண்டமான் அவர்களின் நிதியில் இருந்து கிடைத்த பத்தாயிரம் ருபா நிதியினையும் இப்பாடசாலைக்கு ஒதுக்கித் தந்தமை குறிப்பிடத்தக்கது. பெற்றோர் பழைய மாணவர் உதவியோடு மாடுகளுக்கான ஒரு தொழுவத்தைக் கட்டினோம். இதற்காக இரண்டு கறவை மாடுகளைப் பெற்றுக்கொள்ள முற்பட்டு மல்லாவில் பணியில் இருந்த எனது நண்பரான மிருக வைத்தியர் டாக்டர் நடராசா அவர்களை நாடினேன். அவரின் சிபார்சில் 5000 ரூபாவிற்கு ஒரு கறவைப் பசுவை இரண்டாம் படிவத்தில் உள்ள கணபதிப்பிள்ளையிடம் இருந்து பெற்றுக்கொண்டோம். ஒரு கறவைப் பசுவினை தேறாங்கண்டல் பண்ணையின் உரிமையாளரிடமிருந்து பெற்றுக்கொண்டோம். இதற்கு இப்பிரதேசத்திற்கு மாதம் ஒரு முறை வருகைதரும் கல்விப் பணிப்பாளர், கல்வி அதிகாரிகள் என்போரின் ஆதரவும் நல்லெண்ணமும் காரணமாக அமைந்தது. மாடுகளைப் பராமரிப்பதற்காக எங்கள் பாடசாலையில் கல்வி பயிலும் மாணவனைப் பகுதிநேர ஊதியத்திற்கு அமர்த்தினோம். அம்மாணவன் எனது வீட்டிலேயே தங்கியிருந்து படிக்க உதவினேன்.

நான் பாடசாலையைப் பொறுப்பேற்றபோது அங்கு இருந்த ஆசிரியர்களில் சிலரைப்பற்றிக் குறிப்பிடுவது நல்லது. வல்வெட்டித்துறையைச் சேர்ந்த திரு. சக்திவடிவேல் பயிற்றப்பட்ட ஒரு கணித ஆசிரியர். ஆசிரியத் தொழிலுக்குரிய அத்தனை குணநலன்களும் பொருந்தப்பெற்றவர். மாணவர்கள் மீது அதீத அன்புகொண்டவர். கற்பித்தல் நேரத்தில் ஒரு செக்கனையாவது வீணடிக்கமாட்டார். சனி, ஞாயிறு கிழமைகளில் மேலதிக வகுப்புக்களை எடுப்பார். விடுதலைப் புலிகள் இயக்கத்தின் மிகுந்த பற்றாளர். அவரின் விடுதிக்கு இயக்க உறுப்பினராக இருந்த மாத்தயா அவர்கள் அடிக்கடி வந்து செல்லுவார். அவர்கள் இருவருமே ஓரெ ஊரவர்கள், ஒன்றாகப்படித்த வர்கள். அவர் வந்தால் என்னையும் அழைப்பார். அவரின் கற்றல் திறைனைக் கண்டு நான் ஆசிரிய ஆலோசகராகப் பணியாற்ற சிபார்சு செய்தேன். அந்தப் பதவியினால் பல ஆசிரியர்கள் பலனடைந்தார்கள். கடந்த ஆண்டு மல்லாவி மத்திய மகாவித்தியாலயத்திற்குச் சென்று சில கற்பித்தல் உபரணங்களைத் தானே செய்து கொடுத்தார் என அறிந்தேன். அவுஸ்திரேலியாவில் இருந்து ஓய்வுக்காக வந்த அவர் இவ்விதம் செயற்பட்டமை அனைவரையம் வியப்பிலாழ்த்தி இருக்கும் என்பதில் ஐயமில்லை. இவர்களோடு திரு. செல்வரட்ணம் பின்னர் எனது துணை

அதிபராகச் செயலாற்றியவர். திரு. நடராசா அவர்கள் பின்னர் நான்காம் படிவம் அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலையின் அதிபராகப் பதவி உயர்வு பெற்றுச் சென்று சிறந்த பணியை ஆற்றினார். மல்லாவி பாடசாலை செல்லமுத்து ஆச்சியின் புளியடிமர நிழலில் ஆரம்பித்த இருவரில் இவரே முக்கியமானலர். இவரோடு திருமதி சிவசக்தி என்னும் ஆசிரியரும் இணைந்தே அந்தப் பாடசாலையை ஆரம்பித்திருந்தனர்.

வவுனிக்குளத் திட்டம் ஆரம்பிப்பதற்கு முன்னர் வவுனிக்குளம் மூன்றாம் படிவம், உயிலங்குளம், ஆலங்குளம், துனுக்காய், அனிஞ்சியன் குளம், நட்டான்கண்டல், பனங்காமம், சிறாட்டிகுளம் ஆகிய கிராமங்களில் அரசாங்கப் பாடசாலைகள் இருந்துள்ளன. ஆனால் குடியேற்றத் திட்டத்தின் விளைாவாக குடியேறியவர்களின் வசதிக்காக பாடசாலைகளை உடனடிய கல்வித்திணைக்களம் அமைத்துத் தராதகாரணத்தால் தனிப்பட்டவர்களால் பாடசாலைகள் ஆரம்பிக்கப்பட்டு அவற்றை உடமையாக்கக் கோரி விண்ணப்பித்ததன் விளைவாக கல்விளான்குளம் பாடசாலையில் இருந்த திரு. செல்வராசா, திருமதி. ஆதி செல்வராசா, திருமதி பவதாரணி ஆகியோரும், மல்லாவி அ.த.க பாடசாலையில் திரு. நடராசா, திருமதி சிவசக்தி அவர்களும் வவுனிக்குளம் நாலாம் படிவம் அ.த.க.பாடசாலையில் திரு. தனிநாயகம், திரு. பேரம்பலம், திருமதி சேதுபதி அவர்களும் வவுனிக்குளம் இரண்டாம்படிவம், பாண்டியன் குளம் ஆகிய கிராமத்தில் பாடசாலைகள் பொறுப் பேற்கப் பட்டமையால் அந்தப் பாடசாலைகளில் பதிவான அசிரியர்களும் அரசாங்கப் பாடசாலைகளில் நியமனம் பெற்றனர்.

இப்பாடசாாலகளைப் பற்றி அறிந்தவற்றைப் பதிவு செய்வதும் பொருந்தும் என்பதனால் அவற்றை இவ்விடத்தில் பதிவு செய்கின்றேன்.

வவுனிக்குளம் நாலாம் படிவம் அ.த.க. பாடசாலைக்கு அடியிட்டமை

இதே காலத்தில் நாலாம் படிவத்தில் திரு. தனிநாயகம் அவர்களும் பேரம்பலம் அவர்களும், திருமதி சேதுபதி அவர்களும் இணைந்து ஒரு பாடசாலையை ஆரம்பித்தனர். இதற்கு பின்னர் அரசாங்கக் கட்டிடம் கிடைதததது.

கல்விளான் அ.த.க. பாடசாலையின் ஆரம்பம்.

கல்விளான் பாடசாலையை திரு. செல்வராசா அவர்களும், திருமதி ஆதி செல்வராசா அவர்களும், திருமதி பவதாரணி அவர்களும் இணைந்து ஆரம்பிதிருந்தார்கள். அதன் பின்னர் அப்பாடசாலையின் அதிபராக மல்லாவியில் எனக்கு முன்னர் அதிபராக இருந்த திரு. மயில்வாகனம்

அவர்கள் பணியாற்றியுள்ளார்.

## வவுனிக்குளம் இரண்டாம் படிவம்

அனைவராலும் பாண்டியன் என அழைக்கப்படும் திரு. குமாரசாமி அவர்கள்தான் இப்பாடசாலையின் ஆரம்ப கர்த்தா. இவர் இந்தப் பாசடாலையை ஆரம்பித்து; பின்னர் பாடசாலை அரசாங்கத்தால் பொறுப்பேற்ற பின்னரும் அதிபராகக் கடமையாற்றி வந்தார். அதன்பின்னர் அவர் பூவரசன் குளம் அ.த.க. பாடசாலை அதிபராக நான் தொத்தணி அதிபராகக் கடமையாற்றிய காலத்தில் பணியில் இருந்தார்.

## மல்லாவி ம.வி. ஆசிரியர்கள்:

1984ஆம் ஆண்டு புதிதாக நியமனம் பெற்ற விஞ்ஞான, கணித, பொருளியல், வர்த்தகவியல் ஆசிரியர்கள் ஐவர் ஒரே நாளில் நியமனம் பெற்று இப்பாடசாலைக்கு அனுப்பிவைக்கப்பட்டனர். இன்று யாழ் மாவட்ட அரசாங்க அதிபராக இருக்கும் 1.திரு. நா. வேதநாயகன் B.Sc. அவர்களும் இவர்களுள் ஒருவர் என்பது குறிப்பிடத்தக்கது. அத்தோடு வவுனியா மாவட்ட கல்வித் திணைக்களத்தில் உதவிக் கல்விப் பணிப்பாளராகப் பணியாற்றும் 2.திரு. இந்திரலிங்கம் B.Sc அவர்களும், கனடாவில் இன்று வீடு விற்பனை முகவராகப் பணியாற்றும் 3. திரு. மகேந்திரன் B.com (இன்று கனடாவில்) மற்றும் 4. திரு. அன்ரன் B.A, (இன்று கனடாவில்) 5.திரு. விஜேந்திர சர்மா B.Sc. கிளிநொச்சிக் கல்வித்திணைக்களத்தில் பணியாற்றும் முதலாம் படிவத்தைச் சேர்ந்த 6.செல்வி தங்கேஸ்வரி சிவகுரு B.Sc மற்றும் கொக்காவில் வீதியைச் சேர்ந்த இதே பாடசாலை அரசாங்கத்தால் பொறுப்பேற்றதும் முதலாவது மாணவியாகப் பதிவு செய்யப்பட்ட 7.செல்வி குலேஸ்வரி செல்லப்பா B.A., இரண்டாம் படிவத்தைச் சேர்ந்த 8.செல்வி சகுந்தலா கற்கண்டு B.A, யாழ்ப்பாணம் பாசையூரைச் சேர்ந்த 9.திரு. அன்ரன் B.A, சங்கத்தானை, சாவகச்சேரியைச் சேர்ந்த 10.செல்வி மல்லிகா கோவிந்தபிள்ளை B.A, வேலணையைச் சேர்ந்த 11.செல்வி கணபதிப்பிள்ளை B.A, துனுக்காயைச் சேர்ந்த திருமதி கோகிலவாணி தேவராசா B.A பின்னர் அதிபராகப் பதவிவகித்தவர். திருமதி புஸ்பமலர் B.A., திருமதி புஸ்பராணி இளையராஜா B.A போன்ற பட்டதாரி ஆசிரியர்கள் நான் அதிபராக இருந்தவேளை நியமனம் பெற்றவர்களும் பணியாற்றியவர்களுமாவர். என்பதும் அவர்களைவிட ஆங்கில பயிற்றப்பட்ட ஆசிரியர்களாக செல்வி ஹேமா பழனிவேல், செல்வி காராளகுலசிங்கம், திருமதி சுந்தரேஸ்வரி சிவதாஸ், திரு. க. கந்தசாமி, திரு. கதிர்காமநாதன் திருமதி. இந்திரா

தியாகலிங்கம், திருமதி மகேஸ்வரி நல்லதம்பி அவர்களும் வர்த்தக ஆசிரியை திருமதி க. (கார்த்திகேசு) கிருபைாதன் விஞ்ஞான ஆசிரியையாக திருமதி ராஜதிலம், செல்வி இரட்ணேஸ்வரி இரத்தினசபாபதி, திரு. கு. விஜயபாலா (மலையகத்திலிருந்து இனக்கலவரத்தில் பாதிக்கப்ட்டு வந்து தேறாங்கண்டல் என்னும் இடத்தில் குடியேறியவர்களுக்காக மாங்குளம் பங்குத்தந்தை இராசையா அவர்களி னால் அமைத்துக்கொடுக்கப்பட்ட கட்டிடத்தில் ஆரம்பிக்கப்பட்ட பாடசா லைக்கு அதிபராக என்னால் அனுப்பப்பட்டவர்), செல்வி சாந்தி டானியல், திரு. சண்முகநாதன், திரு. அரசகுலசூரியர் இங்கிலாந்தில் மருத்துவராகப் பணியாற்றும் திரு. சிறிதரன் டானியல் அவர்களும் மனையியல் ஆசிரியையாக செல்வி. புஸ்பராணி பொன்னுத்துரை அவரின் பின்னர் திருமதி இராஜேஸ்வரி கமலேஸ்வரன் அவர்களும் உடற் கல்வி ஆசிரியர் திரு. பாக்கியநாதன் அவர்களும், திரு. இரவீந்திரநாதன், திருமதி இரவீந்திரநாதன், திருமதி பு. குலசிங்கம் (விவசாய ஆசிரியை), சிறந்த பணியை ஆற்றியவர்கள் என்பதும் இசை, நடன பாடங்களுக்கான ஆசிரியைகளாக திருமதி த. சிவபாலு, செல்வி தயாநந்தி அமிர்தலிங்கம் என்போர் நியமிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. பாடசாலையின் அபரிமிதமான வளர்ச்சியைக் கண்டு மக்கள் வியந்தனர். முல்லைத்தீவு மாவட்டத்தின் படுவான் கரையில் இவ்விதமான ஒரு பாடசாலை இருப்பதை நாம் அறிந்திருக்க வில்லையென பல ஆசிரியர்கள் தெரிவித்தமை எனது செவிகளில் எட்டியது. இவர்களைவிட தொண்டர் ஆசிரியர்களாக செல்விகள் தாமரைச் செல்வி.ஜே. செல்லையா, செல்வி. ஜமுனா ஐயாத்துரை, செல்வி இராசலட்சமி ஐயாத்துரை, இராசலட்சுமி இராஜதுரை, செல்வி. தேவகி குலசேகரம்பிள்ளை போன்ற பழைய மாணவர்கள் வந்து பணியாற்றியமை பாடசாலையில் கல்வியின் விருத்திக்குக் காலாக அமைந்தது.

இவற்றைவிட மாலை நேர வளர்ந்தோருக்கான தையல் வகுப்புக்கள். தளாபாட, இரும்பு உருக்கு ஒட்டு வேலைப் பயிற்சிகளுக்கான உபகரணங்கள் பெறப்படடு தொடங்கப்பட்டன. செல்வி கலா பரஞ்சோதி அவர்கள் தையல் வகுப்பைத் தொடர்ந்து நடத்தினார். அவருக்கான கொடப்பனவுகளை பெற்றார் ஆசிரயர் சங்கம் பொறுப்பேற்றது. தையலுக்கான உபரணங்கள், துணிகள் திணைக்களத்தில் இருந்து பெறப்பட்டன. பாடசாலையின் உள்ளே உள்ள மண்டபத்திற்கு ஒரு திரைச் சீலையையும் இந்த வகுப்பு ஆசிரியை தயாரித்துத் தந்தமை குறிப்பிடத்தக்கது. இதனை பாண்டியன்குளத்தில் இடம்பெற்ற ஒரு கூத்து நிகழ்வுக்கு ஒரு விடுதலை இயக்கத்தைச் சேர்ந்த ஒருவர் வந்து பெற்றுச் சென்று திருமபக் கொண்டுவந்தபோது அதில் எரிக்கப்பட்ட சிறிய துவாரங்கள் இருப்பதைக் கண்டு மனம் நொந்தேன். இருப்பினும் என்ன செய்யலாம் என்று வாழாவிருந்தேன்.

பாடசாலையின் வளர்ச்சிக்கு அதிபரின் ஆளுமை மட்டுமனறி கல்வித் திணைக்களத்துடனான தொடர்புகளும் மிக முக்கியமானவை. எனக்கும் கல்விப்பணிப்பாளர்களுக்கும் இருந்த தொடர்பும் முக்கியமானது என்பதைக் குறிப்பிட்டுத்தான் ஆகவேண்டும். மல்லாவியில் கடமையாற்றும்போது ஆரம்பத்தில் கல்விப்பளிப்காளராக இருந்தவர் திரு. முருகையன் அவர்கள். அவரது காலத்தில் என்னை முல்லைத்தீவு மகாவித்தியாலத்திற்கு அனுப்பிவிட்டு தனக்கு விருப்பமான திரு. சிவசம்பு என்பவரைக் கொண்டுவந்தார். அவருக்கான இடமாற்றக் கடிதமும் வளங்கப்பட்டு அவர் அதிபராகப் பொறுப் பேற்றுக்கொண்டார். நான் கொழும்பிற்குச் சென்று தொழிலாளர் சங்க, ஆசிரியர் சங்கச் செயலாளர் திரு. சிவசுப்பிரமணியம் அவர்களை அணுகினேன். எனக்கு நடந்தவற்றை எடுத்துரைத்தேன். அவர் உடனடியாக என்னை மல்லாவி மகா வித்தியாலத்திற்கு இடமாற்றம் செய்து கல்வி அமைச்சின் பிரதிச் செயலாளரிடம் இருந்து கடிதத்தைப் பெற்றுத் தந்தார். அதனை நான் கொண்டு சென்று பணிப்பாளர் முருகையனிடம் காண்பித்தேன். அதற்கு அவர் இடம்கொடுக்காமல் நான் சில காரணங்களக் காகத்தன் மாற்றினேன், என மறுத்துவிடடார். நான் மீண்டும் கொழும்புக்கு அன்றிரவே புகையிரம் ஏறினேன். செயலாளரிடம் சென்று குறிப்பிட்டேன். தனக்கு மதிப்புத்தராத பணிப்பாளரா என்ற கோபத்தில் தானே நேரடியாக எனக்கு நியமனக் கடிதத்தைத் தந்து அனுப்பினார். நான் அங்கு செல்லும் முன்பே பணிப்பாளருக்குக் கடிதம் கிடைத்துவிட்டது. அவர் தான் நியமித்த அதிபரை பழைய பாடசாலைக்குச் செல்லும் வண்ணம் பணித்துவிட்டார். அதன் பின்னர் நான் நேரடிகாக மல்லாவிப் பாடசாலைக்குச் சென்று எனது பதவியேற்றலை நிலையப் பதிவேட்டில் பதிந்து கையொப்பமிட்டுவிட்டு பணியாற்றத் தொடங்கினேன். நான் சென்றவேளை திரு. சிவசம்பு அங்கிருக்கவில்லை, சுகவீன லீவில் சென்றுவிட்டதாக அறிந்தேன். திரு. செல்வரட்ணம் ஆசிரியர்தான் அங்கு உதவி அதிபராகச் செயற்பட்டுக் கெண்டிருந்தார். அவர் வந்து அலுவலகத்தைத் திறந்து எனது பணியைச் செய்ய ஒத்துழைத்தார். திரு. சிவசம்பு அவர்களுக்கு மிக நெருக்கமான நண்பராக இருந்தவர் முல்லைத்தீவு மாவட்ட அமைச்சின் செயலாளராக இருந்த திரு. செல்வரத்தினம் அவர்கள். மாவட்ட அமைச்சர் ஜனாப் அப்துல் ரஜாக் மன்சூர் ஆவார். ஆவரின் சிபார்சின் பேரில் திரு.சிவசம்பு அவர்களுக்கு மல்லாவி அதிபர் பதவியைப் பெற்றுத் தருவதாக வாக்களித்து மாவட்ட அமைச்சரோடு கதைத்துள்ளனர். எனது நண்பர் பேராசிரயர் நு.ஃ.மானின சகோதரரே மாவட்ட அமைச்சர் மன்சூரின் புதல்வியை மணம்முடித்தவர். நண்பரிடம் எனது பிரச்சினையை எடுத்துக் கூறினேன். அவர் எனக்கு முன்பாகவே மாவட்ட அமைச்சரை அழைத்து எனது பிரச்சினையைக் குறிப்பிட்டதும்; என்னோடு அமைச்சர் பேசினார். தன்னிடம் வரவேண்டாம்

நான் அனைத்தையும் பார்த்துக் கொள்ளுகின்றேன் என்றார். அவரது செயலாளர் செல்வரத்தினத்திற்க வாய்ப்பூட்டுப் போடப்பட்டுவிட்டது. திரு. சிவசம்பு அவர்களும் வேறு வழியின்றி ஒட்டுசுட்டானில் இருந்து ஓய்வுபெற்ற எனது ஆசிரியர் வித்துவான் ஆறுமுகத்தின் இடத்திற்கு மாற்றலாகிச் சென்றுவிட்டார். நிருவாக நெருக்கடி நிலைகள் தீர்ந்து அமைதியாக பாடசாலையைக் கவனிக்கும் நிலை ஏற்பட்டது. பாடசாலைக்குத் தேவைகளை திட்டமிட்டுச் செயற்படுத்த வேண்டிய கடப்பாடு எனக்குப் பாரிய பணியாக விரிந்து கிடந்தது.

கல்விப்பணிப்பாளர் முரகையன் அவர்கள் யாழ் பல்கலைக்கழ பதிவாள ராகப் பொறுப்பேற்றுக்கொண்டதன் பயனாக முல்லைத்தீவு மாவட்டக் கல்விப்பணிப்பாளராக ஜனாப் மன்சூர் அவர்கள் வந்திருந்தார். அவர் என்னோடு மிக நெருங்கிப்பழகியது மட்டுமன்றி பாடசாலைகளைப் பார்வையிடவரும்போதெல்லாம் எனது வீட்டில் தங்கிச் செல்வார். அவரிடம் நான் கேட்பவற்றைத் தாமதமின்றி நிறைவேற்றுவார். அதனால் பல விடயங்களை என்னால் இலகுவாகச் சாதிக்கமுடிந்தது. பெருந்தொகையான ஆசிரியர்களை நான் பெற்றுக்கொண்டதற்கு அவரே முக்கிய காரணம் எனலாம். ஏனைய பாடசாலைகளை விட மல்லாவிப் பாடசாலையில் அவருக்கு ஈடுபாடு இருந்ததற்கு அவர் மாதாந்தம் அங்குவந்து நிலைமை களை நன்கு அறிந்துகொள்வதும் ஒரு காரணமாகும்.

நாட்டின் நெருக்கடி நிலைமைகாரணமாக ஆசிரியர்களுக்கு அவர்களது சம்பளம் காசோலையாகவே வழங்கப்பட்டது. வங்கி இல்லாத நிலையில் அவற்றைக் பணமாக்கிக்கொள்ளுவது பெரும் சிரமமாகப் பட்டது. கடைகளில் காசோலையைக் கொடுத்து அவர்கள் தரும்போது தான் பணத்தைப் பெற்றுக்கொள்ளலாம். அதனால் நான் முல்லைத்தீவுக்குக் கொண்டு சென்று தெரிந்தவர்களின் கடைகளில் கொடுத்துப் பணமாக்கிக் கொண்டு சென்று கொடுப்பது வழக்கம். அதனால் நான் பதின்னான்காயிரம் ரூபாய்ககளை இழக்க நேரிட்டது. எனது நண்பன் ஒருவரின் பிடவைக் கடையில் அனைத்து காசோலைகளையும் கொடுத்து பின்னர் அவற்றிற்கான பணத்தை வாங்கிச் செல்வது வழக்கம். ஒரு முறை எனது நண்பன் இந்தியாவிற்குச் சென்றுவிட்டார். அவரோடு பங்காளியாக இருந்தவரிடம் வழமைபோல் காசோலையைக் கொடுத்து மாற்றி வைக்கும்படி கேட்டுக்கொண்டேன். அடுத்தவாரம் சென்று கேட்கும்போது பணம் இப்பொழுது இல்லை என காலந்தாழ்த்தினார். பல வராரங்கள் ஓடின, மாதங்கள் ஓடின பணம் கிடைக்கவே இல்லை. ஆசிரியர்களுக்கு நான் எதோ வழியில் எனது வைப்பிலிருந்து எடுத்துக் கொடுத்துவிட்டேன். உதவி செய்யப்போனதால் கிடைத்த பலன் என என்னையே நொந்துகொண்டேன். வேறு என்ன செய்யமுடியும்.

## மல்லாவி ம.வி.யில் ஒரு கலையரங்கு

திரு. க.குமாரசாமி அவர்கள் எனது காலத்தில் உயிலங்குளம் அரசினர் பாடசாலை அதிபராக இருந்தவர். அவரது ஒரே புதல்வி கலாவதனி காய்ச்சல் என மல்லாவி வைத்தியசாலைக்குக் கொண்டு சென்றனர். அங்கு தவறுதலான மருந்து ஏற்றப்பட்டு மரணத்தைத் தழுவிக்கொண்டார். மல்லாவியில் படித்துக்கொண்டிருந்த அருமையான ஒரு மாணவி. இழப்பைத் தாங்க முடியாது நண்பர் குமாரசாமியும் துணைவியாரும் துடித்த துடிப்பு சொல்லில் வடிக்கமுடியாதது. என்னைக் கண்டதும் கட்டிப் பிடித்துக் கொண்டு ஓவென அழுது புலம்பியது இன்றும் மறக்கமுடியாத அவலம். நான் 2016ல் சென்ற வேளை அவரது வீட்டிற்குச் சென்று நலம் விசாரித்து வந்தேன். தனது மகளின் நினைவாக ஒரு நினைவுச் சின்னம் ஒன்று பாடசாலையில நிறுவவேண்டும் என வேண்டிக்கொண்டார். அதற்கான முழுச் செலவி னையும் தானே ஏற்பதாகவும் குறிப்பிட்டார். நான் விளையாட்டு மைதானத் தில் ஒரு திறந்த வெளியரங்கினை நிறுவினால் பயனுள்ளதாக இருக்கும் என ஆலோசனை கூறினேன். அதற்கு எந்தவித மறுப்புமின்றி அதனை நீங்களே நிறைவேற்ற வேண்டுமென வேண்டிக்கொண்டார். என்னிடம் ரூபா ஐம்பதினாயிரத்தைத் தந்து (ரூ. 50,000.00) பணியை ஆரம்பியுங்கள் என்றார்.

நீர்ப்பாசனத் திணைக்கள நிறைவேற்றுப் பொறியியலாளர் திரு. பொன்னுத்துரை அவர்கள் அதற்கான வடிவமைப்பினை வரைந்து தந்தார். அதன்வண்ணம் இரு மருங்கிலும் அறைகளோடு கூடிய திறந்த வெளி அரங்கத்தை கட்டுவதற்காக கல்விளான் குளத்தைச் சேர்ந்த ஒரு மேசனுடன் உடன்படிக்கை மேற்கொள்ளப்பட்டு வேலைகள் ஆரம்பமானது. வேலைக்கான பல்வேறு பொருட்களை நாம் இலவசமாகப் பெற்றுக் கொண்டோம். இரும்புக் கம்பிகள் சில உடைந்துபோன கம்பங்களை உடைத்து எடுத்துப் பெற்றுக்கொண்டோம். கூரைக்குத் தேவையான தீராந்தி, கைமரங்கள், கதவிற்குத் தேவையான பலகைகள் பெறப்பட்டு கதவுகள் இரண்டு செய்யப்பட்டன. கூரைக்குத் தேவையான கைமரங்களைப் பளையில் இருந்து கொக்காவில் வீதியைச் சேர்ந்த லொறி உரிமையாளர் திரு. செல்லப்பா (குஞ்சுராசா) அவர்கள் கூலி ஏதும் வாங்காமல் கொண்டுவந்து தந்தார். கூரை வேலையும் முடிவடைந் திருந்தது. கதவுகள் பூட்டப்படாமல் அறைக்குள் வைக்கப்பட்டிருந்தது.

இந்த நிலையில் எனது மண்டைதீவு மகாவித்தியாலயத்திற்கான இடமாற்றக் கடிதம் கையில் கிடைத்தது. அத்தோடு எனக்குக் கிடைத்த நெருக்கடி

நிலைகளைத் தவிர்ப்பதற்காக அந்த இடமாற்றத்தை பெற்றுக்கெணாண்டு செல்ல வேண்டிய நிலை ஏற்பட்டது. நண்பர் குமாரசாமி அவர்களை அழைத்து செலவு செய்யப்பட்ட பணம்போக மீதியை அவரிடமே கொடுத்து தொடர்ந்து மீதி வேலையைச் செய்யும் வண்ணம் வேண்டிக்கொண்டு சென்றுவிட்டேன். வேலை மந்தமாகிவிட்டது. நாங்கள் செய்து வைத்திருந்த கதவுகள், பலகைகள், மற்றும் மீதமாக இருந்த இரும்புக்கம்பிகள் எனக்குப் பின்னராக வந்த அதிபர் ஒருவர் ஏற்றிச் சென்றுவிட்டதாக குமாரசாமி அவர்களிடம் இருந்து ஒரு கடிதம் வந்தது. இருப்பினம் அதனைக் கட்டி முடிப்பதாகக் குறிப்பிட்டு என்னை குடும்பத்தோடு வந்து அதனைத் திறந்து வைக்கவேண்டும் எனவும் எழுதியிருந்தார். அவரது அழைப்பை ஏற்றுச்செல்ல முடியாத சூழ்நிலையால் என்னலால் செல்ல முடியவில்லை.

பின்னர் அந்த அரங்கத்தின் பணிகள் செப்பமுறச் செய்யப்பட்டு திறந்து வைக்கப்பட்டதை எனது நண்பரின் கடிதம் கூறியது. மனதில் மிக்க மகிழ்ச்சியாக இருந்தது. ஆனால் மல்லாவியில் நான் சில கசப்பான அனுபவங்களையும் பெற்றுக்கொண்டேன் என்பதனையும் சொல்லித்தான் ஆகவேண்டும்.

துணுக்காயில் இருந்து மூன்று மைல்களுக்கு அப்பால் உள்ள ஒரு பண்டைய கிராமம்தான் கல்விளான். அங்கு ஒரு அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலை இரண்டு ஆசிரியர்களோடு இயங்கி வந்தது. அந்தப்பாடசாலையில் இருந்த அதிபர் இடமாற்றலாகிச் செல்ல அந்த இடத்திற்கு யோகபுரம் மகாவித்தியா லயத்தில் பணியாற்றிய திரு. பேரம்பலம் ஆசிரியர் அவர்களின் விருப்பின்படி கல்விளான் பாடசாலைக்கு இடமாற்றம் செய்வதற்கு நான் பரிந்துரைத்தேன். அவர் குடும்பத்தோடு அங்கு சென்று கல்விப்பணியைத் தொடர்ந்தார். அவரோடு வடகாட்டில் இருந்த திரு. அருளப்பு ஆசிரியரும் உதவி ஆசிரியராகப் பணியாற்றி வந்தார். விடுதலைப் புலிகளின் அரசியல் பொறுப்பாளராக இருந்த ஓரவர் என்னிடம் வந்து கல்விளான் பாடசாலை ஓராசிரியரோடு இயங்குகின்றது. மற்றைய ஆசிரயர் வருவதே இல்லை. அவர் வந்தாலும் பத்துமணிக்கு வந்து இரண்டு மணிக்குத் திரும்பிவிடுவார் அதனை நீங்கள் போய்ப்பார்பதில்லையா எனக்கேட்டார். 1988ம் ஆண்டில் நான் பாடசாலைக்குச் சென்று பார்த்தபோது அவர் இரண்டு மாதங்களாகப் பாடசாலைக்கு வருகை தராதிருந்மை தெரியவந்தது. அதிபர் திரு. பேரம்பலம் அவர்களிடம் வினவியபோது அவர் ஊருக்குப் போனவர் திரும்பி வரவில்லை என்னும் பதில் கிடைத்தது. இரண்டு மாதங்களாக கையெழுத்து ஏட்டில் அவரால் கையொப்பம் இடப்படவில்லை. அதிபரோ இடத்தை விட்டிருந்தார். நான் அவற்றை சிவப்புக் கோடிட்டு பாடசாலைக்கு வருகை தராமல் கையொப்பம் இடக்கூடாது என்பதனைக் கூறிவிட்டு வந்துவிட்டேன். வன்னிப்

பாடசாலை மாணவர்களின் கல்வி பாழாகிப் போவதற்கு இத்தகைய ஆசிரியர்களே காரணம் எனலாம். அது மட்டுமன்றி அந்த ஆசிரியர் ஓராசிரியராகக் கற்பித்த பாடசாலையில் மர நிழலில் கல்லை வைத்துவிட்டு அக்கல்லில் சூரிய வெளிச்சம் படும்போது வீட்டுக்குப் போங்கள் என்று பணித்துவிட்டு அறுவடைக்குச் சென்றுவிடுவார் என்ற கதையையும் பெற்றோர், மாணவர்களின் வாயிலாகக் கேட்கமுடிந்தது.

துணுக்காயில் இருந்த 6 கிலோ மீற்றர் தொலைவில் உள்ளது கோட்டை கட்டிய குளம். அங்குள்ள பாடசாலையில் அதிபராக இருந்தவர் தண்ணீரூற்றைச் சேர்ந்த திரு. பரமநாதன் அவர்கள். அவர் பாடசாலை நேரத்தில் புகைப்படக் கருவியோடு சென்றுவிடுவார் என்ற செய்தியைப் பெற்றோர் கூறிது மட்டுமல்லாது மாவட்டக் கல்விப் பணிப்பாளருக்கும் ஒரு கடிதத்தை எழுதிவிட்டனர். ஒரு திங்கட்கிழமை காலை முல்லைத்தீவு கல்விப் பணிமனையில் இருந்து கல்வி அதிகாரி திரு. தியாகராஜா அவர்கள் வருகைதந்து தன்னுடன் கோட்டைகட்டியகுளம் பாடசாலைக்கு வரும்படி பணித்தார். இரண்டு துவிச்சக்கர வண்டிகளை எடுத்துக்கொண்டு இருவரும் பெரும் காட்டுவழியாகச் சென்றோம். செல்லும் வழியில் உயிலங்குளம் பாடசாலையையும் பார்த்துவிட்டுத் எங்கள் பயணத்தைத் தொடர்ந்தோம். அங்கு சென்ற வேளை மாணவர்கள் விளையாடிக் கொண்டிருந்தார்கள். ஆசிரியர்கள் இருவரும் பாடசாலைக்கு வருகை தரவில்லை எனத் தெரிவித்தனர். நாங்கள் ஒரு மணிவரையில் பார்த்தோம் இருவரில் ஒருவராவது வராதது பெரும் கவலையைத் தந்தது. அங்குள்ள சில பெற்றோரை அணுகி விசாரித்தபோது திங்கட்கிழமைகளில் அவர்கள் தாமதமாகத்தான் வருவார்கள். சிலவேளை அடுத்தநாள்தான் வருவார்கள் எனக் கூறினார்கள். நாங்கள் திரும்பி விட்டோம். அவர்கள் இருவருக்கும் விளக்கமளிக்கும்படி கல்வி அதிகாரி கடிதம் அனுப்பியிருந்தார். அவர்கள் முன்கூட்டியே வைத்தியரிடம் சென்றதாக சுகவீனத்திற்கான சான்றிதழ் களைச் சமர்ப்பித்திருந்தார்கள். வளர்ச்சியடைந்த நாடுகளைப் போன்று பதில் ஆசிரயரைநியமிக்கும் முறை இலங்கையில் அதுவும் கிராமப்புறப் பாடசாலைகளில் இல்லை எனலாம். இது தவிர பாடசாலையின் கூரை ஓடுகள் காற்றால் வீசப்பட்டு உடைந்துவிட்டன. அவற்றை வாங்கி மீளவும் செப்பனிட திணைக்களத்திற்குச் சிபார்சு செய்து 5000. 00 ரூபாக்கள் பெற்றுக் கொடுத்தேன். ஆனால் அவை செப்பனிடப்படாமலே பணம் எடுக்கப்பட்டிருந்தது. அதிபரிடம் கேட்டபோது ஓட்டுக்கு பணம் கட்டிவிட்டேன் வந்ததும் மாற்றலாம் என்றார். ஆனால் அது அப்படியே மாற்றப்படாமலே கைமரங்கள் மழையிலும் வெயிலிலும் பழுதடைந்தன.

1980 களின் பின்னர் விடுதலை இயக்கங்களின் தலையீடு அதிகரிக்கத்

தொடங்கியது. ஒவ்வொரு இயக்கத்தவரும் பாடசாலைக்கு வந்து மாணவர்களின் வகுப்புக்களை விடுத்து ஒரு வகுப்பறையில் கூடும்படி அழைத்துச் சென்று மேசைமேல் எறிநின்று பிரசாரம் செய்வார்கள். மாணவர்களின் கல்வியைப் பற்றி எந்தவித அக்கறையும் இல்லாமல் மாணவர்களைத் தங்கள் பக்கம் இணைத்துக்கொள்ளுவதே அவர்களின் முழு நோக்கமாக இருந்தது. அதிபர், ஆசிரியர்களை மாணவர்கள் மதிக்காமல் கீழ்படியாமல் நடப்பதற்கும் ஒழுக்கத்தைப் பேண முடியாத நிலைக்கும் காரணிகளாக இருந்தன.

சில மாணவர்கள் தாம் சேர்ந்து படிக்கப்போகின்றோம் என யாரும் இல்லாத வீட்டில் சென்று கோழி களவெடுத்துச் சமைத்து மதுபானமும் அருந்திய செய்திகளும் காதில் எட்டின. அந்த மாணவர்களின் பெற்றோர் கவனிக்காத விடயத்தை நாம் என்ன செய்யமுடியம் என வாய்மூடி மௌனியாக இருக்கவேண்டிய நிலையும் ஏற்பட்டது. விடுதலை இயக்கத்தில் இணைந்துவிடுவார்கள் என்ற பயம் பெற்றோரை பாதித்தது. பிள்ளைகளைக் கண்டிக்கவோ, தடுக்கவோ முடியாதநிலையில் கையாலாகாதவர்களாகப் பெற்றோர் இருந்தனர்.

1989 ஆம் ஆண்டு க.பொ. த. உயர்தர வகுப்பில் தற்காலிகமாக அனுமதிக்கப் படட ஒரு மாணவன் கணிதபாடத்தில்; சாதாரண தரத்தில் சித்தியெய்தா மையால் உயர்தர வகுப்பில் இருக்கும் தகுதியைப் பெற்றுக் கொள்ளாமை காரணமாக அவரை பாடசாலைக்கு வரவேண்டாம் எனக் கூறியமைக்கு அவனோடு படித்த மாணவர்களில் பெரும்பாலோர் அவரை வகுப்பில் வைத்திருக்கவேண்டும் இல்லையேல் நாங்கள் வகுப்பிற்கு வரமாட்டோம் என பாடசாலைக்கு வராமல் வெளியே நின்றனர். பெற்றோர் வந்து கூறியும் அவர்கள் கேட்கவில்லை. அதில் முன்னணி வகுத்தவர்களில் நாலாம் படிவத்தைச் சேர்ந்த தம்பையா தயாபரன், மற்றும் கொக்காவில் வீதியைச் சேர்ந்த ஆறுமுகம் அவர்களின் புதல்வி சிவகௌரியும் பெற்றோரின் சொல்லையும் கேட்காமல் அவர்களோடு வாதாடிக் கொண்டு என்மீது பல்வேறு அவதூறுகளை எடுத்துக் கூறியதாகப் பெற்றோர் குறிப்பிட்டனர். அதன் பின்னர் அவர்களில் பெரும் பாலானோர் விடுதலை இயக்கத்தில் சேர்ந்துகொண்டனர் என அறிந்தேன். மாணவர்களின் ஒழுக்க நடத்தைகள் சீரழிந்து போவதைப் பார்த்து அதிபர். ஆசிரியர்கள் வாழாவிருந்தனர். இந்த மாணவர்களுக்குப் பின்னணியில் ஒருவிடுதலை இயக்கம் செயற்படுவதாக அறிந்து அமைதி காத்தேன். மாணவர்களைக் கட்டுப்படுத்த முடியாத ஒரு துர்ப்பாக்கிய நிலை எனக்கு ஏற்பட்டது. எனக்கு மட்டுமன்றி அனைத்துப் பாடசாலை அதிபர்களுக்கும் ஆசிரியர்களுக்கும் இந்த நிலைதான். மூச்சு விட்டால் இயக்கத்தின் கண்டனத்திற்கு மட்டுமன்றி உயிருக்கே உலை வைக்கப்படும் என்பதனை அறிந்து வாழாவிருந்தேன்.

“ஒழுக்கம் விழுப்பம் தரலான் ஒழுக்கம்
உயிரினும் ஓம்பப் படும்”

என்பதனைத் தமிழர் பல நூற்றாண்டுகளாகப் பின்பற்றிப் பழகிவந்த பண்பட்ட சமூகத்தைச் சேர்ந்தவர். சமூகவிழுமியங்கள் காற்றில் பறந்தபோது பெற்றோர், ஆசிரியர்கள் வாழாவிருப்பதைத் தவிர என்னதான் செய்யமுடியம்; என்ற நிலை வன்னியில் உள்ள பாடசாலைகளில் மட்டுமன்றி யாழ் மாவட்டப் பாடசாலைகள் அனைத்திலுமே காணப்பட்டது.

மல்லாவி மத்திய கல்லூரியில் படித்த பல மாணவர்கள் நல்ல நிலையில் உள்ளார்கள் என்பதனை அறியமுடிகின்றது. இது மனதில் பெரும் மகிழ்ச்சியை ஏற்படுத்துகின்றது. நான் அறிந்த மாணவர்கள் சிலரின் விபரத்தைப் பதிவாக்குவது பொருத்தமானதாகும்.

1. நா.நாகமணி பொறியியலாளர்
2. க.யோகானந்தராஜா அதிபர் 3ம் படிவம் (பாரதிநகர்)
3. ஆ. சுந்தரமூர்த்தி உதவிக் கல்விப்பணிப்பாளர் துணுக்காய்
4. திருமதி ஸ்ரீவள்ளி உதவிக் கல்விப்பணிப்பாளர்
5. செல்வி கிறிஸ்ரீனா பாக்கியநாதன் உதவிக் கல்விப் பணிப்பாளர்.
6. செல்வி வசந்தகுமாரி உதவிக் கல்விப்பணிப்பாளர்
7. திரு. தம்பிப்பிள்ளை பிரேமச்சந்திரன் அதிபர் (2ம் படிவம், ம.வி)
8. திரு. வேல்நம்பி யாழ்பல்கலைக்கழக வர்த்தகத்துறைப் பீடாதிபதி
   இன்னும் பலர் பல்வேறு துறைகளில் பணியாற்றுவதைக் கேட்டு இன்பமுறுகின்றேன். இவர்கள் மல்லாவி பாடசாலைக்கு மட்டுமல்ல அங்கு கற்பித்த ஆசிரியர்களுக்கும் பெருமை சேர்ப்பவர்கள்.

## மண்டைதீவு ம.வி.யில் நான்

1989ம் ஆண்டு சித்திரை மாதம் நான் மண்டைதீவு கொத்தணி அதிபராக இடமாற்றம் பெற்றுக்கொண்டேன். அங்கு குடிநீர்ப் பிரச்சனை மாணவர்களுக்கு பெருந் துன்பமாகக் காணப்பட்டது. பாவிக்கப்படாமல் இருந்த ஒரு கிணற்றை ஊரவர்களின் உதவியோடு இறைத்துத் துப்பரவாக்கி பாவனைக்காக மாற்றியது எனது முதல் பணியாக இருந்தது.

மண்டைதீவுப் பிரதேச நெருக்கடிகள் மோசமாக இருந்தது. நான் திருநெல்வேலியில் இருந்துதான் சென்று வந்தேன். அத்தோடு மல்லாவி மகாவித்தியாலத்திற்கு அதிபர் இல்லை எனப் பெற்றோர் குறைகூற அதற்குக் காரணம் நான்தான் எனக் குறிப்பிட்டு அவரை மண்டையில் போட்டால் எல்லாம் சரிவரும் என முட்டாள்தனமாகக் கூறியதைக் கேள்வியுற்ற என்

மீது அக்கறை கொண்ட திரு. தனிநாயம் ஆசிரியர், விஜயபால, திரு, குமாரசாமி ஆசிரியர் வேறும் பல ஆசிரியர்கள் திருநெல்வேலிக்கு எனது இல்லத்திற்கு வருகை தந்து என்னை யாழ்ப்பாணத்தை விட்டு வெளியேறி வேறு எங்காவது செல்லும் வண்ணம் எனது மனைவியிடம் வேண்டிக் கொண்டனர். இச்செய்தி எனது குடும்பத்தாரின் பயத்தை அதிகரித்ததோடு எனது உறவினர்களும் என்னை அங்கு பணியாற்ற வேண்டாம் வெளிநாட்டிற்குச் செல்லும்படி என்னை வற்புறுத்தினர். இந்த நிலையில் நான் நாட்டைவிட்டு வெளியேற வேண்டிய நிர்ப்பந்தம் எனக்கு ஏற்பட்டது. மனைவி, மகன், சகோதரர்களை விட்டு நீங்கியபோது எனது மனதில் ஏற்பட்ட துன்பம் சொல்லில் அடக்கமுடியாதது. கண்கள் குளமாக நாட்டைவிட்டு வெளியேறினேன்.

(வன்னியில் கல்வியின் பின்னடைவுகளுக்கான காரணிகள் பற்றிய கட்டுரை ஒன்று இதன்பின்னால் இடம்பெறுகின்றது)

# வன்னிப் பிரதேசக் கல்வி, கலை மரபுகளும்

றொறன்ரோ தமிழ்ச் சங்கத்தில் வாசிக்கப்பட்ட கட்டுரை

இக் கட்டுரையை மூன்று பகுதிகளாகப் பகுத்துப் பார்ப்பது பொருத்தமாக அமையும் என்பது எனது எண்ணம்:

1. **1944ம் ஆண்டுக்கு முன்னரான காலம் (ஐரோப்பியர் காலம்)**
   - இந்திய படையெடுப்புக்களும் வன்னியர் பரவலும)

2. **ஐரோப்பிர் காலமும் சுதந்திர வேட்கைக் காலமும் போரத்துககேயர் காலம்**
   - ஒல்லாந்தர்காலம்
   - ஆங்கிலேயர்காலம் 2. 1944ம் ஆண்டு தொடக்கம் 1970ம் ஆண்டு வரையான காலம்
   - கன்னங்கர அவர்களின் கல்விக் கொள்கையும் மாற்றங்களும்
   - 1951ல் ஏற்படுத்தப்பட்ட மாற்றங்கள்
   - 1960 தனிச் சிங்களக் கொள்கையும்; பாடசாலைகளின் தாய்மொழிக் கல்விக்கான முனைப்புக்களும்

3. **1970 களுக்குப் பின்னரான போராட்ட காலமும் அதற்குப் பின்னரும்**
   - பல்கலைக்கழகப் புகுமுகத் தரப்படுத்தலும் தமிழர் எதிர்ப் பியக்கங்களும்
   - வடக்குக்கிழக்கில் ஏற்பட்ட ஆயுதப்போராட்டங்கள்
   - 2009 தமிழ்ப் பிரதேசத்தில் அரசபடைகளின் ஆக்கிரமிப்பும் வன்னிமக்கள் வெளியேற்றப்படலமும்

வன்னியின் கல்வி வரலாறு அண்மைக்காலம் வரை எழுதப்பட்டுப்

பேணப்படாத ஒன்றாகவே அமைந்துளள்து. ஐரோப்பியர் காலத்திற்கு முன்னரான வன்னியில் கல்வியானது தொழில் சார் கல்வியாகவும்; அது குலமுறைத் தொழிலாகவும் இருந்து வந்துள்ளமையை அறியமுடிகின்றது. 2000 ஆண்டுகளுக்கு முன்னரே ஒழுங்கமைக்கப்படட் ஆட்சிமுறைகளும், வெளிநாட்டுத் தொடர்புகளும் இருந்ததற்கான ஆதாரங்ள் அண்மையில் கண்டறியப்பட்டுள்ளன. 21 தொல்லியல் சான்றுகள் கண்டறியப் பட்டுள்ளன. அவற்றுள் 10க்கு மேற்பட்டவை வன்னியில் கணடு பிடிக்கப்படட் வையாகும். தமிழ் எழுத்துக்கள் பொறிக்கப்பட்ட நாணயங்கள், கல்வெட்டுக்கள், மட்பாண்டங்கள் என்பன கண்டெடுக்கப் பட்டுள்ளன.

வரலாற்றுக் காலத்து கீழைத்தேசக் கல்விமுறையானது ஆலயங்களைச் சுற்றியுள்ள பகுதிகளில் குடியிருந்த அந்தணக் குடும்பங்களுக்கான கல்வி முறையாகும். ஆலயங்களில் மந்திரங்களை சொல்லக்கூடிய வகையான கல்வியே முக்கியமான இடத்தைப் பெற்று வந்துள்ளது. இவற்றைவிட ஆலயங்களில் இடம்பெறும் கதாப்பிரசங்களை மக்கள் செவிவழியாகக் கேட்டு சமய அறிவினைப் பெற்றுக் கொண்டமை மனித நேயத்தையும், மானிடப் பண்பையும் வளர்க்க உதவியுள்ளன. பாவச் செயல்களை புரியாது தடுப்பதற்கு இவை பெரிதும் பயன்பட்டள்ளன. இவற்றைவிட கிராமங்களில் உள்ள பண்டிதர்கள் திண்ணைப் பள்ளிகள் எனப்படும் வீட்டுத் திண்ணைகளில் வைத்துக் கற்பிக்கும் முறை நிலைபெற்று வந்துள்ளது. ஆலயங்களுக்கான கட்டிடக்கலை, சிற்பக்கலை என்பனவும் பெற்றோரிடம் இருந்து பிள்ளைகளுக்குக் கடத்தப்பட்டுள்ளது. அல்லது வல்லுநர்களிடம் அனுப்பி அவர்களின் வீட்டிலேய தங்கியிருந்து குருவின் சீடராக இருந்து கற்றுக்கொள்ளும் பாங்கினையும் கொண்டிருந்தது. பொதுவாக இலங்கையில் பௌத்தமதத்தைப் பினப்றியவர்களிடம் பிரிவேனாக்கள் அல்லது பன்சல எனப்படும் பௌத்த கோயில்களால் நடத்தபபட்டதாகவே குறிப்புக்கள் காணப்படுகினற்ன. அவை புத்த பிக்குகள் அல்லது பிக்குணிகளுக்கு ஆட்சேர்க்கப் படுவதற்கான கல்வியாகவே காணப்பட்டது.

ஆனால் தமிழர்கள் சைவ சமயத்தவர்களாக இருந்தமையால் அவர்களின் கல்வியானது சமயம் தொடர்பான ஆட்சேரப்பதற்கான கல்வியாக அமையவில்லை. ஆனால் பிறப்பால் பிராமணர்களே ஆலய அர்ச்சகர்களாக இருக்கத் தகுதியுடையவர்கள் என்பதால் அவர்களிடமே சாஸ்திர, மந்திர மற்றும் சோதிடத்தைக் கற்றுக்கொளளும் வாய்ப்புக்கள் கிட்டின. எனினும் வேளாளர் மத்தியிலும் தமிழ் புலமை மிக்கவர்கள் இருந்துளள்னர் என்பதற்கு ஈழத்துப் பூதந்தேவனார் போன்றோரை அடையாளப்படுத்த முடிகின்றது. கிராமிய பாடசாலைகள் ஆலயங்களுக்கு அருகாமையிலேயே அமைந்திருந்ததோடு அவை வேளாளர் என்னும் உயர் சாதியினரின்

கடடுப்பாட்டிலும் காணப்பட்டன. இப்பாடசாலைகளின் ஆசிரியர்களாக கல்வி கற்ற பிராமணர்களோ அன்றி உயர் குலத்தவராகவே காணப்பட்டனர். மிக உயர்வான தொழில் நுட்பக் கல்வி பெற்றவர்கள் சிற்பக்கலை, கட்டிடக்கலை போன்றவற்றை பெற்றோரிடமிருந்தே கற்றுக்கொண்டனர். அல்லது அவர்களது சமூகத்தைச் சேரந்தவர்களிடமே பெற்றுக்கொள்ள முடிந்தது. இவை சாதிய அடிப்படையில் அமைந்திருந்தமை குறிப்பிடத்தக்கது. உழவுத்தொழில், மற்றும் கட்டடத் தளபாடத் தொழில் புரிவோரும் தங்கள் பெற்றோரிடம் இருந்து கற்றுக்கொண்ட குலத்தொழிலாகவே இவற்றைத் தொடர்ந்து செய்துவந்தனர். தம்பதெனிய, கோட்டை போன்ற சிங்கள ஆட்சியாளர்களின் காலத்தில் அரசசபைகளில் தமிழ் மொழி கோலோச்சி யுள்ளமை கருத்திற் கொள்ளற்பாலது. மருத்துவம், சோதிடம், இந்து ஆலய பரிபாலனம் தொடர்பாகவும் அதன் கல்விதொடர்பாகவும் பிராமணர்களின் செல்வாக்கு இருந்துள்ளது. பராக்கிரமபாகுவின் காலத்தில் “சரசோதிமாலை” என்னும் நூல் 1310ம் ஆண்டில் அரங்கேறியுள்ளமையும், அக்காலத்தில் முனீஸ்வரம் ஆலயத்திற்கான விழாக்கள் அரசனின் அனுசரணையோடு நடந்துள்ளமையையும், திருகேதீஸ்வரம் யாழ் மன்னர்களின் அனுசரணை யுடன் நடந்தமையையும் அறியமுடிகின்றது. வரலாறு தரும் செய்திகள். சிங்கள ஆட்சியாளர்கள் தமிழையும் சிங்கள மொழியையும் சரிசமமாகக்கருதி வந்துள்ளனர் என்பது கருத்திற் கொள்ளற்பாலது. கற்றறிந்த புலவர்கள் யாழ் மன்னர் காலத்திலும் வன்னியர் காலத்திலும் இருந்துள்ளனர் எனலாம், தக்கணகயிலாய புராணத்தை இயற்றிய பண்டிதராசர், செகராச சேகரமாலையை யாத்த சோமசன்மசகவீரன், கோணேச சாசனம் யாத்த கவிராசர், திருக்கரசைப் புராணத்தை யாத்த கரசைப்புலவர் போன்றோர் தமிழ் மொழி வல்லாளர்களாக திகழ்ந்துள்ள்னர் எனின் தமிழ் மொழி, தமிழ் மக்கள் வாழ்ந்த பட்டி தொட்டியெங்கும் பயிற்றப்பட்டு வந்துள்ளமையை உணரமுடிகின்றது. ஐரோப்பியரின் வருகையின் பின்னர் கல்வித்துறையில் மாற்றங்கள் ஏற்படத் தொடங்கின. ஐரோப்பிய கல்விமுறை இங்கு அறிமுகப்படுத் தப்பட்டது.

**போர்த்துக்கேயர் காலம்:**

போரத்துககேயர் கரையோரப் பிரதேசங்களில் றோமன் கத்தோலிக்க பாடசாலைகளை அமைத்தனர். மதம்மாற்றும் நோக்கத்துடன் இவை மேற்கொள்ளப்பட்டாலும் நல்ல கல்வியை மாணர்வள் பெறும் வாய்ப்பை ஏறக்குறைய 100 பாடசாலைகள் வரை மேற்கொண்டன. வன்னி மாவட்டத்தில் இக்காலகட்டத்தில் மன்னார், முல்லைத்தீவு, திருகோணமலை, மட்டக்களப்புப் பிரதேசக் கரையோரங்களில் கத்தோலிக்க தேவாலயங்களும் பாடசாலைகளும் அமைக்கப்பட்டன. கத்தோலிக்க மதத்தை வளர்த்துக் கொள்ளவும், தங்களுக்குத் தேவையான வரியைப் பெற்றுக் கொள்ளவும்,

வருவாயைப் பெருக்கிக் கொள்ளவும்; தேவையான ஆளணியினரைத் திரட்டிக் கொள்ளும் நோக்கத்தையும் இப்பாடசாலைகள் கொண்டிருந்தன. இலங்கையின் ˙மேற்குப் பகுதியிலோ அன்றி யாழ் மாவட்டத்திலோ ஏற்படுத்தப்பட்ட கல்விக்கான முனைப்பு வன்னிப் பிரதேசத்தில் கொள்ளப்படவில்லை. மன்னார், திருகோணமலை, மட்டக்களப்பு நீங்கலாக முல்லைத்தீவு, வவுனியா, கிளிநொச்சி போன்ற பகுதிகளில் தேவாலய ங்களோ அல்லது பாடசாலைகளோ ஒப்பீட்டு ரீதியாக ஏற்படுத்தப் படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. இதுவரை பேணப்படடு வந்த கல்வி, மற்றும் பண்பாட்டு அம்சங்களைப் பாதுகாத்து வந்த இந்து ஆலயங்களைப் பெருமளவில் அழித்து சிதைத்தமை இலங்கைத்தீவின் முழுமையும் இடம்பெற்றதெனினும் வன்னிமாவட்டத்தில் பெரும் சீரழிவை ஏற்படுத்தி யிருந்தமையால் கல்வியிலும் மாற்றத்தைக் கொண்டுவந்தது எனலாம். கரையோரம் தவிரந்த குக்கிராமங்களில் போர்த்துக்கேயரின் செல்வாக்கு எதிர்பார்த்த அளவிற்கு இடம்பெறவில்லை எனலாம். போர்த்துக்கீசரால் அமைக்கபட்ட 100 பாடசாலைகளில் நான்கு பாடசாலைகள் மன்னாரிலும் ஒரே ஒரு பாடசாலை முல்லைத்தீவிலும் அமைக்கப்பட்டது. மன்னார்ப் பிரதேச மக்கள் தாமாகவே முன்வந்து மதம் மாறுவதற்காக இந்தியாவில் இருந்த போர்த்துக்கேய மதகுருமாரை அணுகினர் எனப்போர்த்துக்கேயக் குறிப்பொன்று கூறுகின்றது. இதனால் ஆத்திரமுற்ற சங்கிலி மன்னன் மன்னாரில் மதம் மாறியவர்கள் திரும்பவும் சைவசமயத்திற்கு மாறவேண்டும் என ஆணைபிறப்பித்தான். ஆனால் அதனை ஏற்றுக் கொள்ளாத 600க்கு மேற்பட்ட கத்தோலிக்கர்கள் யாழ்ப்பாண மன்னன் சங்கிலியனால் கொன்றொழிக்கப்பட்டனர். இதனால் போரத்துகக்கேயர் தலையிட்டு சங்கிலியனுக்கெதிராகப் படைகளை அனுப்பி அவனைக் கைது செய்தனர். இந்த இடத்தில் பின்னர் கட்டப்பட்ட ஆலயத்தை "தேவசாட்சியம்" எனப் பெயரிட்டு மேலும் மக்களைக் கத்தோலிக்க மதத்திற்கு மாற்றினர்.

மடு போன்ற இடங்களில் ஆலயங்களையும்; அதன் அயலில் பாடசாலை களையும் அமைத்தனர். ஆரம்பக் கல்வியினை பிரான்ஸிஸ்கன் மிசனரியினர் மேற்கொணட்னர். இவர்கள் கோட்டையிலும் யாழ்ப்பாணத்திலும் 16 பாடசாலைகளை அமைத்தனர். இவ்விதமே யேசுஸ்ட் சபையினரும் பாடசாலைகளை நிறுவி கல்வியின் மூலம் மதத்தைப் பரப்பினர். இவர்கள் அரம்ப மற்றும் இடை நிலைக்கல்வி நிறுவனங்களை நிறுவினர் எனினும் அரசின் ஆதரவு இவர்களுக்குக் கிடைக்கல்லை. இதனால் இவர்களின் செயற்பாடு அதிகளவு பயனளிக்கவில்லை.

"போர்த்துக்கீச ஆட்சியாளர்களினால் யாழ்ப்பாண மக்கள் ஆகக்கூடிய துன்பத்திற்கு ஆளாக்கப்பட்டனர். போர்த்துக்கீசர் அங்கு இழைத்த அநீதிகள்,

வன்முறைகள், தவறுகள் என்பற்றைச் சுட்டிக் காட்ட நான் இங்கு முன்வருகிறேன். இறைவனால் போர்த்துக்கீசருக்கு அளிக்கப்பட்ட தண்டனை மிக நியாயமானதாகும்" என போர்த்துக்கீச வரலாற்றாசிரியரான பெர்னாணடோ டி. குவைரோஸ் குறிப்பிடுகின்றார்.

பேராசிரியர் அபேசிங்க அவர்களும் "யாழ்ப்பாணத்தைப் பொறுத்த மட்டில் போத்துகக்கீச ஆதிக்கமானது பேரழிவாகவே அமைந்தது. அதன் சனத்தொகை குறைந்தது. வர்த்தகம் பாதிக்கப்படடது. அதன் மக்கள் மேலும் ஏழைகளாயினர்" என்னும் கூற்று எவ்வளவு தூரம் தமிழ்ப்பிரதேசங்களில் வாழ்ந்த மக்கள் பாதிக்கபபட்டனர் என்பதனைக் காட்டுகின்றது. போர்த்துக்கீசர் காலம் ஒரு போர்க்காலச் சூழ்நிலையையே தந்திருந்தது. விவசாயம் செய்யபப்டாமல் நிலங்கள் தரிசுநிலங்களாக மாறின. விவசா யிகள் யானை பிடிப்பதிலும் அவர்களுக்கான வருவாயைப் பெருக்குவதி லுமே ஈடுபடுத்தப்பட்னர். தமிழ்ப்பிரதேசங்களில் ஒட்டுமொதத்மாக போர்த்துக்கீசரின் ஆட்சி பெரும் அழிவுகளையே மேற்கொண்டிருந்தது. அரசியல், பொருளாதார, சமய, சமூக நிலைமைகள் பெரும் அழிவுகளைக் கொண்டிருந்தது. என்பதிலிருந்து பாரம்பரிய கல்வி, பண்பாட்டு, சமய நிலைமைகள் சீரழிந்து காணப்பட்டன. வன்னியில் இருந்து யானை, யானைத்தந்தம் முத்துப் போன்றவற்றைப் பெற்றுக்கொள்ளுவதே போர்த்துக் கீசரின் முக்கிய குறிக்கோளாகக் காணப்பட்டது. வன்னியர்களின் எதிர்ப்பும். இயற்கை அமைப்பும் அவர்கள் எண்ணியவாறு இலகுவாக இவற்றைப் பெற்றுக்கொள்ள வழி விடவில்லை எனலாம். ஞானப்பள்ளு, ஞானானந்த புராணம், அர்ச். யாக்கப்பர் அம்மானை என்பன போர்த்துக்கேயர் காலத்தில் எழுந்த நூல்களாகக் கொள்ளப்படுகின்றது. இவை இக்காலத்துத் தமிழ் மொழியின் ஆளுமையை எடுத்துக்காட்டு வனவாக உள்ளன.

**டச்சுக்காலம்**

போர்த்துக்கீசரின் பின்னர் வந்த டச்சுக்காரர்கள் கத்தோலிக்க மதத்திற்குப் பதிலாக புரட்டஸ்தாந்து மதத்தைப் பரப்ப முற்பட்டனர் எனினும் பெருமளவி ற்குப் போர்த்தக்கீசரின் நடைமுறைகளில் இருந்து மாற்றங்களைக் கொண்டு வரவில்லை எனலாம். வன்னிப்பிரதேசத்தில் போர்த்துக்கீசர் பின்பற்றிய அதே நிலைமைகளையே புரட்டஸ்தாந்த மதத்தினர் பின்பற்றினர் எனினும் வரி அறவிடுதல் யானை, முத்துக் குளித்தல் போன்றவற்றில் கூடிய கவனம் செலுத்தினர். டச்சுத் தளபதி வான் கோண்ஸ் போர்த்துக்கீசரை வெளியேற்ற வேண்டும் என்பதில் முனைப்புக்காட்டினார். "இலங்கைத் தீவில் எதிரியின் வசமுள்ள பகுதிகளைக் கம்பனியின் கட்டுப்பாட்டின் கீழ் கொண்டு வருதல், அதேவேளை, போத்துக்கீசரை இங்கிருந்து வெளியேற்றி கடவுளின் உண் மையான திருச்சபையை இங்கு நிலை நிறுத்துதல்" "யாழ்ப்பாணத்திலும்

அதன் தீவுகளிலும் உள்ள நான்கு மாகாணங்களில் வாழும் மக்கள் யாவரும் கிறிஸ்தவர்கள் ஆயினும் அவர்களில் பலர் இப்பொழுது நாகரிகமற்ற மத பகழகங்களைக் கடைப்பிடிப்பதில் விருப்பமாக உள்ளனர்" என வான்கோணஸ் அறிக்கை குறிப்பிடுகின்றது. "இத்தீவின் பெரும்பகுதி தமிழரின் வாழ்விடமாகும் கைலாயவன்னியனால் ஆட்சிபுரியும் நாடு இங்கு வாழும் மக்கள் சிங்களவரின் ஆட்சிக்கோ அல்லது எங்கள் ஆட்சிக்கோ உட்பட்டவர் அல்லர். கரையோரப்பிரதேசங்கள் இவ்விளவரசனுக்கே உரியவை. கரைப் பகுதியில் பெரும்பான்மையினர் தமிழ் மொழியைப் பேசுகின்றனர். நீர்கொழும்பு நகரத்திலிருந்து தெற்கே தேவந்திர முனைவரை சிங்கள மொழி பேசப்படுகிறது. யாழ் குடாநாட்டிலும் துணைக் கண்டத்திற் கணித்தான பகுதிகளிலும் தமிழ் பேச்சுவழக்கில் உள்ளது. றொபேட் நொக்சும் வன்னி பற்றிக் குறிப்பிட்டுள்ளதோடு தொலமியின் இலங்கைப் படத்தில் வன்னி தனித்துவமானதாகக் காட்டப்பட்டுள்ளது. எனவே ஒல்லாந்தர் காலத்துத்தாக்கங்கள் வன்னிப் பெருநிலப்பரப்பில் அதிகளவு மாற்றங்களை ஏற்படுத்தப் படாமைக்கு வன்னியின் இட அமைவும் மக்கள் சிதறி வாழ்ந்துள்ளமையும் காரணமாகும். எனவே சிற்றரசர்களின் கீழ் கல்வி ஆலயங்களிலும், திண்ணைப் பாடசாலைகளிலும் இடம் பெற்றிருத்தல் வேணடும் என்பதனை ஊகிக்கமுடிகின்றது.

டச்சுக்காரரின் காலத்தில் மறு சமங்களின் மீதான கெடுபிடிகள் குறைந்திருந் தமையினால் ஆலயங்கள் புனருத்தாரணம் செய்யப்பட்டதோடு தமிழ்க் கல்வியிலும் விருத்தி ஏற்பட்டிருந்தது. வடமொழித் தாக்கமற்ற காலமாக டச்சுக்காரர் காலம் கொள்ளப்படுகின்றது. "சித்திரவேலாயுதர் காதல்" என்னும் நூலை வீரக்கோன் முதலியார் 1686ல் யாத்துள்ளார். இவர் தம்பலகாமத்தைச் சேர்ந்த புலவர் ஆவார்.

**பிரித்தானியர் ஆட்சிக்காலம்:**

இலங்கையின் கல்வி வரலாற்றில் அந்நியர்களின் வருகையினூடே கல்வியில் விருத்தி ஏற்படத்தொடங்கியமை கல்வி வரலாற்றில ஒரு மைற்கல். துமது மதத்தைப் பரப்பும் நோக்குடன் கத்தோலிக்க, அமெரிக்க, ஆங்கிலத் திருச்சபைகள் போட்டி போட்டுக் கொண்டு செயற்பட்டன. இலகுவாக மதம் மாற்றப்படக் கூடியவர்கள் தமிழர்கள் என்பதனை அவர்கள் குறுகியகாலத்திலேயே அறிந்திருந்தனர். இதனால் தமக்கு வசதியான, மிக வாய்ப்பான இடங்களில் தமது பணிகளைத் துரிதப்படுத்திவந்தனர். மிசனறிச் சபையினர் தமது மதத்தைப் பரப்புவதற்கான ஒரு முக்கிய கருவியாகக் கல்வி புகட்டுவதைக் கையாண்டார்கள். கத்தோலிக்க திருச்சபை, அமெரிக்க மிசனறி, அங்கிலிக்கன் சபை போன்றன தமது மதங்களைப் பரப்பும் நோக்குடன் பல ஆலயங்களை நிறுவியதோடு நின்றுவிடாது அருகருகே

பாடசாலைகளையும் நிறுவி சிறார்களுக்குக் கல்வி புகட்ட ஆரம்பித்தனர். இதனால் திண்ணைப் பாடசாலையாக குருகுலக்கல்வியைப் பெற்றுவந்த இலங்கைச் சிறுவர்கள் பாடசாலை முறையிலே கல்வியைப் பயிலும் வாய்ப்பைப் பெற்றார்களாயினும் இவ்வாய்ப்புக்கள் வன்னிப் பிரதேசத்தைப் பொறுத்தளவிலே மிக அரிதாகவே காணப்பட்டன. மக்கள் சிறுசிறு குழக்களாகப் பரந்துபட்டு வாழ்ந்தமையும், மதம் மாறுவதிலும் வன்னியர் கள்காட்டிய எதிர்ப்பும் காரணிகளாகின. தமிழ்க் கல்வி தொடர்ந்தும் கற்றவர்களினால் தங்களை நாடிவந்த மாணாக்கருக்குத் திண்ணைப் பள்ளிகளில் வைத்து கற்பித்து வந்துள்ளார். இலங்கையில் பிரித்தானியர் ஆட்சிக்காலத்தில் கல்வித்துறையில் பல்வேறு முன்னேற்றகரமான மாற்றங்கள் ஏற்பட்டன. இலங்கையரின் வற்புறுத்தலுக்கிணங்க பிரித்தானிய அரசு பல்வேறு காலகட்டங்களில் அரசில் மாற்றங்களையும் அதன் வழி கல்வியில் மாற்றங்களையும் மேற்கொண்டது. பிரித்தானியரது உள்நோக்கம் கல்வியானது நிருவாகத்திற்கான ஆளணியினரைச் சேர்க்க உதவவேண்டும் என்னும் அடிப்படை எதிர்ப்பார்ப்பாகக் காணப்பட்டது. ஆனால் கல்வியில் கூடிய ஆதிக்கம் செலுத்திய அமெரிக்கன் மிசனறிபோன்றவர்கள் மதம் மாற்றவே கல்வியைக் கையாண்டனர். எனினும் காலத்தின் தேவைகருதி வாழ்க்கைக்கான கல்வியையும் கற்பிக்கத்தொடங்கினர். ஆங்கிலக் கல்விக்கு முக்கியத்துவம் கொடுக்கப்பட்டது. வன்னியில் இருந்தவர்கள் கல்வியறிவற்றவர்களாகவும் ஆத்மீக அறிவற்றவர்களாகவும் இருந்தனர் என மதம் பரப்பச்சென்ற சேர்ச் மிசனறி சபையினர் கருதினர். "சுவிஷேசகாரருக்கு இந்த இடங்களில் இருந்த பெரும் சிரமம், மகளினது பெரும் அறியாமையாகும், பலரைப் பொறுத்தவரையில் அவர்களுக்கு ஆத்மீக விஷயங்களையிட்டு எதுவுமே தெரியவில்லை. எனவே ஆத்மீக உண்மைகளை அவர்களுக்குப் புரியவைப்பது மிகவும் கடினமாகவுள்ளது" என வவுனியா விளாங்குளம் மிஷன் உதவியாளர் தேவசகாயம் குறிப்பிடுகின்றார்.

அடிப்படைத் தேவைகளே பூர்த்தி செய்யாது இருந்தார்கள் என்பதனையும் அவர்களை மதம் மாற்றுவதற்காக உள்ளூர்வாசிகளின் உதவியுடன் அனைத்துக் கிராமங்களுக்கும், வீடுகளுக்கும் சென்றார்கள் என்பதனை மிசனரி அறிக்கைகள் தெரிவிக்கின்றன. வன்னி மக்களின் அடிப்படைத் தேவைகள் செய்து கொடுக்கப்படவேண்டும் என்பது அவர்களின் சிபார்சாகும். சின்னத்தம்பி என்பவர் கிளிநொச்சியிலும் தேவசகாயம் வவுனியாவிலும் மதப் பணிகளை மேற்கொண்டிருந்தனர். தேவசகாயம் அவர்கள் தான் எதிர்கொண்ட நிலைமையினைப் பின்வருமாறு குறிப்பிட்டிருந்தார். "மிஷனரிமார் வவுனியா மாவட்டத்தில் முப்பது கிராமங்களுக்குச் சென்றனர். அவர்கள் சென்றவிடமெல்லாம் மக்கள் அவர்களைச் சந்தோசமாக

வரவேற்றதுடன் சில புறமதக் குடும்பங்கள் கிறஸ்தவ மத்தைப் பின்பற்ற ஆவலாய் இருந்ததுபோற் தோன்றியது. முல்லைத்தீவு மாவட்டத்தில் அவர்களது சுவிசேஷச் செயற்பாடுகள் நடந்தன. அவை ஊக்கமளிப்பதாக இருந்தன. நெடுங்கேணி முல்லைத்தீவு மாவட்டங்களில் ஆபத்தானதும் பாதுகாப்பற்றதுமான காடுகளினூடாக அவர்கள் நூறு கிராமங்களுக்குச் சென்றனர். இவற்றில் பெரும்பாலான கிராமங்களில் சுவிசேஷம் முன்னொருபோதும் நடந்திருக்கவில்லை. இவர்களுடைய செய்தியைச் சிலர் ஆர்வத்துடன் கேட்டனர். சில இடங்களில் எதிர்ப்பு இருக்கவே செய்தது. இந்தத் தூய்மையான மதத்தின் படி நடப்பது இயலாத ஒன்று எனக் காணப்பட்டது".

**I833ல் அரசியலில் மாற்றம்**

இலங்கையரின் வேண்டுதலிற்கு செவிமடுத்து ஆரசியல் முறைகளில் மாற்றங்களை மேற்கொள்ள கோல்புறூக் ஆணைக்குழு ஆங்கில அரசினால் அனுப்பப்பட்டது. இலங்கையின் பொருளாதார, போக்குவரத்து நிலைமை களில் மாற்றங்களை ஏற்படுத்த விதந்துரைத்ததோடு கல்விக் கூடங்க ளையும் ஏற்படுத்த வாய்ப்புக்களை நல்கியது. ஆறுமுகநாவலரின் பணி தமிழ் சைவர்களைக் கல்விகற்கத் தூண்டியது.

இக்காலகட்டத்தில் இந்துமதத்தினர் எதிர்ப்பினைக்காட்ட விளைந்தனர். ஆறுமுகநாவலர் மிக முக்கியமான செயற்பாடுகளில் இறங்கியதோடு சைவப் பாடசாலைகளை இலங்கையில் மட்டுமல்ல இந்தியாவிலும் நிறுவிக் கல்வி விருத்தியில் பெரும் முயற்சிகளை மேற்கொண்டார். மாணாக்கருக்கான பாலபாடம், பாலபோதினி ஆகிய நூல்கைள அச்சிட்டு விநியோகித்ததோடு ஆங்கிலத்தையும் சைவப்பாடசாலைகளில் அதே பாடவிதானத்தோடு மேற்கொள்ள நடவடிக்கைகள் மேற்கொள்ளத் தூண்டினார். இந்துப்போட் இராஜரட்ணம் அவர்களின் முயற்சியால் வன்னியில்பல பாடசாலைகள் தோன்றின.

1931 டொனமூர் சீர்திருத்தம் மேலும் தாய்மொழிக் கல்வியையும் சமயக் கல்வியையும் கற்பிப்பிதற்கான உரிமையை நல்கியது. இதனால் பல்வேறு பாடசாலைகள் ஆரம்பிக்கப்பட்டன. கத்தோலிக்க, புரட்டஸ்தாந்து மதப் பாடசாலைகளை விட பௌத்த, சைவ பாடசாலைகளையும் அமைக்கும் வாய்ப்பு வழங்கப்பட்டது. பொதுப் பாடசாலைகள் கிராமங்களில் ஆரம்பிப்பதற்கான வாய்ப்புக்கள் ஏற்படுத்தப்பட்டன.

1944ம் ஆண்டில் கன்னங்கர அவர்களின் கல்விச்சீர்திருத்தம் இலவசக் கல்வியை அறிமுகப்படத்தியது. இலவசக் கல்வி வன்னியிலும் பல கல்வி

நிலையங்கள் தோன்றக் காரணமாக அமைந்தது. இலவசக் கல்வி மட்டுமன்றி தாய்மொழிக் கல்வியினை ஆரம்ப வகுப்புக்களில் கற்றுக் கொள்வதற்கான வாய்ப்புக் களை டொனமூர் சீர்திருத்தக் குழுவினர் ஏற்படுத்தியிருந்தனர்.

"வன்னி மக்களை மதம் மாற்றுவதற்காகத் தான் கடவுளிடம் பிரார்த்திக்க வேண்டியவனாக இருந்தும், அவ்வாறு தானே அதனைச் செய்யவில்லை என அறிக்கையிட்டு, அங்கு பிரசன்னமாய் இருந்தவர்களிடம், சபையின் ஊழியர்கள் சிறந்த பலாபலன்களால் ஆசீர்வதிக்கப்பட்டு, தமது பணியில் கடவுளின் வல்லமையையும், பிரசன்னத்தையும் உணரக்கூடியதாய் இருக்க வேண்டுமெனப் பிரார்திக்கும்படி கேட்டார்". 1892ம் ஆண்டு கல்வி பிறப்புரிமை என்கின்றது ஐக்கிய நாடுகளின் மனித உரிமைச் சாசனம். ஏல்லோருக்கும் கல்வி. சமத்துகக்ல்வி, கல்வியில் சமத்துவம் என்ற வாசகங்கள் கோசங்களாக முன்வைக்கப்பட்டாலும் பல நாடுகளில் கல்வி எல்லோ ருக்கும் இலகுவில் கிடைப்பதில்லை. இலங்கையில் எழுத்தறிவு 85 விழுக்காடு எனக் கூறப்படுகின்ற போதிலும் கல்வியறிவு எத்தனை விழுக்காட்டினருக்குக் கிட்டியுள்ளது என்பது கேள்விக்குறியே? நாட்டில் உள்ள குழந்தைகள் அனைவருக்கும் கல்வி கிடைக்க வழிவகுக் கப்படவேணடும் என்பது ஐ.நா. முன்வைத்துள்ள கோரிக்கை. உலக நாடுகள் அனைத்தும் இந்த கோரிக்கையை ஏற்றுக்கொண்டு நடைமுறைப் படுத்துகின்றனவா? என்பதற்கு சரியான பதில் பெறமுடியாமைகவுப் பல காரணிகள் உள. உணவிற்கு வழியற்ற பிள்ளைகள் பாடசாலைக்குச் செல்வது எப்படி என்ற கேள்வியும் மறுபுறம் எழுகின்றது. சில நாடுகளில் சில பிரதேசங்களில் பாடசாலைகளே இல்லாதநிலை இந்த 21ம் நூற்றாண்டிலும் உண்டு என்னும் உண்மையை நாம் ஒப்புக்கொண்டு தான் ஆகவேண்டும். இந்த நிலையில் ஆசிய; ஆபிரக்க நாடுகள் முக்கியமானவையாக காணப்படுகின்றன. கிராமப்புறங்களில் உள்ள மாணவர்களுக்கு கல்வி வாய்ப்புக் கிட்டுவதில்லை. அவர்கள் பல மைல்கள் நடந்துசெல்லவேண்டிய நிலைமையால் கல்வியைப் பெறமுடியாதவர்களாக உள்ளனர். இலங்கையிலும் இந்த நிலை இன்று தலைதூக்கி நிற்பதற்கு நாட்டில் இன்று நிலவிவரும் சூழ்நிலைகளே காரணம் எனலாம். குறிப்பாக வடக்குக்கிழக்கு மாகாணங்களில் உள்ள பிள்ளைகளுக்கு கல்விவாய்ப்புக்கள் மறுக்கப் படுகின்றன என்பது மறைக்கமுடியாத உண்மையாக உள்ளது.

ஈழவழ நாடு கல்வியில் தனக்கென ஒரு நிலையைத் தக்கவைத்துக் கொண்டிருந்தது. அண்மைக்கால நிலவரங்கள் மாணவர்கள் பெறும் கல்வியிலும் பெரும் பாதிப்பை ஏற்படுத்தியுள்ளமை கண்கூடு. வன்னிப் பிரதேசத்தின் கல்வி நிலை ஆங்கில ஆட்சிக்காலத்திற்கு முன்பிருந்தே

ஏனைய தமிழ் பிரதேசங்களோடு ஒப்பு நோக்கும் போது பின்னடைவுள்ளதாகவே காணப்பட்டது. கல்விக்கான வாய்ப்புக்கள் போதியளவு இல்லாமை, வாய்ப்புக்கள் வளங்கப்படாமை, அல்லது மறுக்கப்பட்டமை, புறக்கணிக்கப்பட்டமை, பாடசாலைகளுக்கு வெகுதூரம் செல்லவேண்டிய சூழ்நிலைகள்,, குடிசனப்பரம்பல், மக்களின் தொழில் முறைகள் என்பன கல்வியில் முக்கிய பங்கொண்டு வந்துள்ளன. கிராமிய விவசாய முறைகள் பிள்ளைகளைப் பாடசாலைக்கு அனுப்பாமல் விடுவதற்குக் காரணமாக உள்ளது. வயல்களில் வேலை செய்தல், தோட்டக்காவல் போன்ற வேலைகளைச் செய்வதற்கு பெருந்தொகையான ஆளணியினர் தேவைப்படுவதனால் குடும்ப அங்கத்தவர்கள், பிள்ளைகள் உட்பட அனைவருமே சேர்ந்துசெயற்படும் நிலைமையில் பிள்ளைகள் பாடசாலைக்குச் செல்லமுடியாத நிலை உருவாகின்றது. இவ்வித வேலைகள் காரணமாக அடிக்கடி பாடசாலைக்குச் செல்லாத மாணவர்கள் தொடர்ந்து பாடசாலைக் கல்வியில் அக்கறை காட்டவோ அன்றி ஈடுபடவோ முடியாதவர்களாகப் பின் தங்கிவிடுகின்றனர். இதனால் அவர்கள் இடையில் பாடசாலைப்படிப்பை நிறுத்திக்கொள்கின்றனர். இதனால் பாடசாலையில் மாணவர் வரவு குறைவடையும் நிலையும் ஏற்படுகின்றது.

வன்னிப் பெருநிலப்பரப்பில் முல்லைத்தீவு மாவட்டத்தில் 108 பாடசாலைகளும், வவுனியா மாவட்டத்தில் 196 பாடசாலைகளும், மன்னார் மாவட்டத்தில் 113 பாடசாலைகளும், கிளிநொச்சி மாவட்டத்தில் 104 பாடசாலைகளும் உள்ளன. பரப்பளவால் கூடியதானாலும் அங்கு வாழுகின்ற மக்களின் இருப்பிடங்கள், அதனை ஒட்டி எழுந்த பாடசாலை அமைவிடங்கள் என்பன போதிய மாணவர் இல்லாத காரணத்தால் பின் தங்கியுள்ளன. ஆசிரியர் பற்றாக்குறை, மாணவர்கள் பல தரங்களில் இருப்பினும் ஒரே வகுப்பில் வைத்து கற்பித்தல் போன்றனவும், மன்னார் தொடக்கம் முல்லைத்தீவு ஈறாகப் பரந்துபட்டுக்கிடக்கும் பாரிய காடுமண்டிய பிரதேசத்தில் காணப்படும் குடியிருப்புக்கள் ஆங்காங்கு பரந்து அமைவுற்றுள்ளமையால் ஆரம்ப காலந்தொட்டே கல்வி பெறுவதற்காக வேறு இடங்களுக்கு மாணவர்களை அனுபப்வேண்டிய தேவைப்பாடு தவிர்க்க முடியாததாகக் காணப்பட்டது. வன்னிப் பிரதேசங்களில் அமைக்கப்பட்ட கல்விக்கூடங்களைச்சற்று நோக்கினால் இவ் உண்மை தெள்ளெனப் புரியும். மன்னார் மாவட்டத்தில் மட்டும் எருக்கலம் பிட்டி மகாவித்தியாலயமே வன்னியின் ஆரம்பத்தில் காணப்பட்ட உயர்நிலைக் கல்வி கற்கக்கூடிய பாடசாலை ஒன்றாகக் காணப்பட்டது. வவுனியாவிலோ, முல்லைத்தீவிலோ இத்தகைய பாடசாலைகள் இடம்பெறாமை துர் அதிஸ்ரமே. வவுனியா, முல்லைத்தீவு பிரதேசத்திலிருந்து மன்னாருக்கு அல்லது யாழ்ப்பாணப்பாடசாலைகளுக்குச் செல்லவேண்டிய நிலையே வித்தியானந்தக் கல்லூரி முள்ளியவளையில்

அமையும் வரை காணப்பட்டது. வவுனியா மாகாணத்தில் ஒரு மத்திய கல்வி நிலையம் அமையவேண்டும் என்ற நிலையை முன்வைத்தவர் அன்று வவுனியா முல்லைத்தீவு உள்ளடங்கலாக இருந்த வவுனியாப் பாராளுமன்ற உறுப்பினராக இருந்த சட்டத்தரணி சி. சுந்தரலிங்கம் அவர்கள். அவர் முள்ளியவளை தனியூற்று ஆகிய கிராமங்களை இணைக்கும் எல்லையில் இந்தப் பாடசாலையை நிறுவியமைக்கு அந்தப்பிரதேசத்தின் மத்தியில் அமையவேணடும் என்பதனாலேயாம். இந்தப் பாடசாலையே வன்னியில் 1951க்குப் பின்னர் மன்னாருக்கு அடுத்ததாக அமைந்த இந்தப் பாடசாலையே உயர் கல்வியைத் தரத்தக்க ஒரு நிலையமாக அமைக்கப் படட்டிருந்தது. இதே நேரம் மட்டகக்ளப்பில் சிவானந்த வித்தியாலயம் போன்று வித்தியானந்தக் கல்லூரி இப்பிரதேசத்தின் ஏழைப்பிள்ளைகளின் கல்விப்பசியைத் தீர்க்கும் அமுதமாக அமைந்திருந்தது. வெளியிடங்களுக்குச் செல்லமுடியாத மாணவர்கள் இங்கு ஆங்கில மூலக்கல்வியைப் பெற்றுக்கொள்ளும் வாய்ப்பைப்பெற்றனர். 4ம் வகுப்பிலிருந்து 10ம் வகுப்பு வரை ஆங்கில மூலம் கல்வியைப் பெற்றுக்கொள்ளும் வாய்ப்பை இந்தப்பாடசாலை தந்திருந்தமை குறிப்பிடத்தக்கது. அது 1962ம் ஆணடுவரை ஆங்கிலப் பாடசாலை என்ற பெயரைக் கொண்டிருந்தது.

### எஸ்.டபிள்யு.பண்டாரநாயக்க அரசு பாடசாலைகளைப் பொதுவுடமையாக்கியமையும் தாய்மொழிக் கல்வியும்

நகரப்புறப் பாடசாலைகளுக்கு இருந்துவந்த ஆதிக்க நிலையை பண்டார நாயக்காவின் புரட்சிகர மாற்றங்கள் வலுவிளக்கச் செய்ததோடு. ஆங்கிலக் கல்விக்கு இருந்துவந்த முக்கியத்துவமும் குறைக்கப்பட்டது. தனியார் பாடசாலைகளின் ஏகபோக உரிமைக்கும் உலைவக்கப்பட்டது. தாய் மொழிக்கல்வியே சாலச்சிறந்தது என்னும் ஆதாரக் கல்வியின் வழி பண்டாரநாயக்க அவர்கள் இலங்கையின் கிராமியப் பிரதேசப் பாடசாலை களின் கல்வியில் மாற்றத்தை ஏற்படுத்த விளைந்தார். மேட்டுக்குடியிருப் பாரின் எதிர்ப்புகளுக்கு மத்தியில் கிராமியப் பாடசாலைகளைப் புனருத் தாரணம் செய்ததோடு அவற்றின் தரத்தையும் உயர்த்த அவர் பல்வேறு முயற்சிகளைச் செய்தார். தாய்மொழி மூலம் கல்வி கற்பது கிராமிய விவசாயிகளின் பிள்ளைகளுக்கு வரப்பிரசாதமாக அமைந்தது. அறிவை விருத்தி செய்யத் தாய்மொழிக் கல்வி சாலச் சிறந்தது என்னும் கல்வியாளர்களின் கொள்கையை ஏற்றுக் கொண்டு இதனை அவர் நடைமுறைப்படுத்தினார். இதனால் பெருந்தொகையான மாணவர்கள் உயர்கல்வி பெறும் வாய்ப்பினைப் பெற்றனர்.

இந்தப் பாதிப்பு வன்னிப் பிரதேசத்திலும் தாக்கத்தைக் கொண்டிருந்தது. ஐந்தாம் அல்லது எட்டாம் வகுப்புக்களுக்குப் பின்னர் கல்வியை

முடித்துக்கொள்ளும் கிராமிய விவசாயிகளின் பிள்ளைகள் மேற்படிப்பினைப் பெற்றுக்கொள்ளும் நிலையில் 1960க்குப் பின்னர் மாற்றம் ஏற்படத் தொடங்கியமை கல்வி விருத்தியில் பாரிய முன்னேற்றம் காண வைத்தது. பாடாசலைகள் அரசுடமையாக்கப்பட்டமையால் வன்னியில் இருந்து ஒரு சில கத்தோலிக்க மதப்பாடசாலைகள் அரசாங்க பாடசாலைகளாக மாற்றம் பெற்றன. மதக்கல்வியைக் கட்டாயமாகப் போதித்த பாடசாலைாகள் அவற்றில் தளர்வை ஏற்படுத்தின. இதுவரை ஆங்கிலக் கல்விக்கு முக்கியத்துவம் கொடுத்துவந்த நிலைமையும் மாற்றம் பெற்றது.

முதற்கட்டாமாக பண்டாரநாயக்காவின் சுயமொழிக் கல்வி, பாடசாலைகள் அரச உடமையாக்கப்பட்டமை போன்ற காரணங்களால் வன்னிப் பிரதேசத்தில் கல்வியில் ஒரு திருப்புமுனை ஏற்பட்டமையினையும் நாம் அவதானிக்கலாம். இந்தக் காலத்தில் வன்னிப் பிரதேசத்துக் கிராமங்கள் பலவற்றில் புதிய பாடசாலைகள் தோன்றும் நிலை ஏற்பட்டிருந்தது. இரண்டு மைல் சுற்றுவட்டத்தினுள் பாடசாலைகள் இல்லாத நிலையில் போதியளவு மாணவர்கள் இருந்தால் பாடசாலைகளை ஆரம்பிக்கலாம் என பண்டாரநாயக்க அரசு பச்சைக் கொடி காட்டியதன் விளைவாக. வன்னியில் பல கிராமங்களில் பாடசாலைகள் ஆரம்பிக்கபப்ட்டன. 1960களின் ஆரம்பத்தில் புற்றீசல்களாக வன்னி மாவட்டத்தில் பல பாடசாலைகள் தோற்றம் பெறத்தொடங்கின.

இதற்கு ஒருகாரணமாக இவ்வித பாடசாலைகள் அரசாங்கத்தால் பொறுப்பேற்கும்போது அந்தப் பாடசாலையில் பணியாற்றும் ஆசிரியர்கள் நிரந்தர ஆசிரியர்களாகச் சேரத்துக்கொள்ளுதல் வேண்டும் என்னும் கல்விச் சுற்றறிக்கை பெரும் வரப்பிரசாதமாக அமைந்தது. வன்னிப்பிரதேசத்தில் எஸ்.எஸ்.சி அல்லது ஜி.சி.இ.சாதாரண தரப்பரீட்சையில் சித்தியெய்திவிட்டு வேலையில்லாது திருந்தவர்கள் தாமாகவே கிராமத்தவர்களின் உதவியோடு பாடசாலைகளை ஆரம்பிக்கத் தொடங்கினர் இதன்வழி பாடசாலைக்குச் செல்லமுடியாதிருந்த பிள்ளைகள் எழுத்தறிவைப் பெற்றுக்கொளளும் வாய்ப்பைப் பெற்றுக்கொணடார்கள் மூல்லைத்தீவு மாவட்டத்தில் ஆண்டான்குளம், பண்டாரக்குளம், சேமமடு, நயினாமடு, வவுனிக்குளம், சிவபுரம், மல்லாவி, பூவரசன்குளம், கல்விளான், புத்து வெட்டுவான், உயிலங்குளம், கோட்டை கட்டிய குளம், வன்னேரி, பாண்டியன் குளம் போன்ற இடங்களில் பாடசாலைகள் ஆரம்பிக்கப்பட்டன. இப்பாடசாலை களில் மாணவர்களின் வரவு அதிகரித்தமைக்கு வவுனிக்குளக் குடியேற்றத்திட்டம் போன்று வன்னிப்பிரதேசத்தில் புனருத்தாரணம் செய்யப்பட்ட நீர்ப்பாசனக் குளங்களை அண்டிய குடியேற்றங்கள் இடம்பெற்றமையால் பெருமளவில் யாழ் மாவட்டத்தில் இருந்து மக்கள்

புலம்பெயர்ந்தமையும் முக்கிய காரணிகளாக அமைகின்றன. துணுக்காய் கல்வி வலயத்தில் உள்ள விநாயகபுரம், தேறான்கண்டல் ஆகிய பாடசாலை கள் மலையகத்தில் இருந்து புலம்பெயர்ந்தோருக்காக ஆரம்பிக்கப்பட்ட பாடசாலைகள் ஆகும். இவற்றுள் தேறான்கண்டல் தமிழ்க்கலவன் பாடசாலை மாங்குளம் பங்குக்குரவராக இருந்த வணக்கத்திற்குரிய தந்தை தம்பிராசா அவர்களின் பெரு முயற்சியால் நிரந்தரக் கட்டிடம் அமைக்கப்படடு கல்வித்திணைகக்ளத்தால் பொறுப்பேற்கப்பட்டது. விநாயகபுரம் பாடசா லைக்கான கட்டிடத்தை காணி அபிவிருத்தித் திணைக்களத்தின் அதிகா ரியாக இருந்த திரு. பொன்னம்பலம் அவர்களால் சிபார்சு செய்யப்பட்டுக் கட்டுப்பட்டிருந்தது. இங்கு பெரும்பாலும் நெடுந்தீவுப் பகுதியைச் சார்ந்த வர்களே புலம்பெயர்ந்திருந்தனர், இவ்விரு பாடசாலைகளும் நான் கொத்தணி அதிபராக இருந்த வேளையில் எனது சிபார்சின் பெயரில் கல்வித் திணைக்களத்தினால் பொறுப்பேற்றுக்கொள்ளப்படட்வை.

மாணவர்களின் வரவின் மூலமே இந்தப்பாடசாலைகளின் உயிரைக் காப்பாற்றிக்கொள்ள முடியும். மாணவர்களைப் பாடசாலைகளுக்கு வரவைப் பதற்காகப் பெற்றோரை ஆசிரியர்கள் அடிக்கடி அணுகவேண்டிய நிலையும் இருந்துவந்தமையால் பாடசாலைக்கும் பெற்றொருக்குமான தொடர்பும் நெருக்கமானதாகக் காணப்பட்டதோடு, எமக்கென ஒரு பாடசாலையை எற்படுத்தியுள்ளோம் என்ற உணர்வும் ஊரவர்களிடம் காணப்பட்டமை குறிப்பிடத்தக்கது. பத்துப் பன்னிரணடு குடும்பங்கள் மட்டும் இருந்த பல கிராமகங்களில் பாடசாலைகள் தோற்றுவிக்கப்பட்டன. 1964ம் ஆண்டிற்குப்பின்னர் ஆசிரியர்களையும் பொறுப்பேற்கும் நிலையை அரசாங்கம் மறுத்து அதற்கான சுற்றுநிருபத்தினை அனுப்பியதனால் ஆசிரியர்களே முன்நினறு பாடசாலைகளை ஆரம்பிக்கும் நிலை தடைப்பட்டது.

**தரப்படுத்தலும் வன்னியில் கல்வி விருத்தியும்:**

இரண்டாவது மைல்கல் எனக்குறிப்பிடத்தக்கது பல்கலைக்கழக அனுமதி யில் ஏற்படுத்தப்பட்ட தரப்படுத்தலாகும். நகரப்புறப் பாடசாலைகளில் உள்ள ஆளணி மற்றும் தொழில்நுட்பக் கற்பித்தற் சாதனங்களின் வசதிகள் வாய்ப்புக்கள் என்பன வன்னிப் பெருநிலப்பரப்பில் உள்ள எந்தவொரு பாடசாலைக்கும் கிடைக்கா நிலையில் கல்வியின் பின்தங்கிய நிலையி லேயே காணப்பட்டது. இதனால் அரசாங்கம் பின்தங்கிய மாவட்டங்களின் மாணவர்களைப் பல்கலைக்கழகங்களில் உள்வாங்கிக்கொள்வதற்காக அவர்களுக்கான அனுமதிக்கான புள்ளிகளின் மொத்தத்தை தரப்படுத்திக் கொண்டது. இதனால் வன்னிப்பிரதேசத்துப் பிள்ளைகள் பல்கலைக் கழகத்தை எட்டிப்பாரக்கவும் முடிந்தது. அது மட்டுமன்றி யாழ் மாவட்டம்

போன்ற வசதிமிக்க வளர்ச்சியடைந்த பாடசாலைகளில் இருந்து செல்லும் மாணர்வளின் தொகையைக் கட்டுப்படுத்தியமையும் வன்னிப் பாடசாலை களின் கல்வியின் தரத்தை உயர்த்தக் காணமாக அமைந்தது. வசதிபடைத் தவரக்ளின் பிள்ளைகள் யாழ்ப்பாணம் சென்று கற்றுவந்த நிலையிலும் இது சரிவை ஏற்படுத்தியது. அவர்கள் வவுனியா மகாவித்தியாலயம் அல்லது முள்ளியவளை வித்தியானந்தக்கல்லூரி போனற் வற்றிற்கு வரத்தொடங் கினர். தரப்படுத்தல் முறை வவுனியா, முலலைத்தீவு, மன்னார் ஆகிய மாவட்டங்களில் உள்ள பாடசாலைகளில் மாணவர் தொகையும் ஆசிரியர் தொகையும் அதிகரித்தமையும் வன்னிக் கல்வி விருத்தியில் ஏணிப்படி களாயின. வன்னிமாவட்டத்தில் உள்ள பெற்றோர்கள் யாழ் மாவட்டத்தில் படித்துவிட்டு பரீட்சைக்கு மட்டும் வன்னிப்பாடசாலைகளை நாடும் மாணவர் களை பாடசாலைகளில் இறுதி நேரத்தில் சேரத்துக் கொள்ளுவதனை எதிரத் தனர். க.பொ.த. பரீட்சைகளுக்காக யாழ் மாவட்ட மாணர்கள் தனிபப் ட்ட முறையில் விண்ணப்பித்து பரிட்சையில் நல்ல பெறுபேறுகளைப் பெற்றுக்கொள்ளவும் முயற்சித்தனர்.

இத்தைய சூழ்நிலைகள் வன்னிப்பிரதேசக்கல்வியின் வளர்ச்சிக்கு தடைக ளாக இருந்து வந்துள்ளன. 1970களில் முல்லைத்தீவு மாவட்டத்தில் 70க்கு மேற்பட்ட பாடசாலைகள் காணப்பட்டன. வவுனியாவில் 90 பாடசாலைகளும் மன்னாரிலும் அதே அளவினதாகக் காணப்பட்டன. சிலபாடசாலைகள் ஆசிரியர்கள் இல்லாத காரணத்தினாலும் மாணவர்கள் பற்றாக் குறைகளாலும் மூடப்படவேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டன. பனங்காம், ஆண்டான்குளம் போன்ற முல்லைத்தீவு மாவட்டத்திலுள்ள பழம்பெருமை மிக்க கிராமங்களில் உளள் பாடசாலைகள் மூடப்பட்டு அயல்கிராமங்களுக்கு மாணவர்களை அனுப்பவேண்டிய துர்ப்பாக்கிய நிலைமை தோன்றிய மைக்குத் தற்கால கெடுபிடிகளும் மகக்ளின் இடப்பெயர்வுகளும் காரணிகளாகும். மூன்றாவது கட்டமாக 1977, 1983ம் ஆண்டு கலவரங்க ளினால் பாதிக்கபடட்ட மக்கள் வன்னியில் வந்து குடியேறியமையால் அவர்கள் அதிகமாக வாழும் இடங்களில் பாடசாலைகளை அமைத்துத்தர கல்வித்திணைகக்ளம் முன்வந்தது. இதனால் வன்னியில் சில புதிய கிராமங்கள் பயனடையத் தொடங்கின.

வவுனியாவில் மொத்தமாக உளள் 196 பாடசாலைகளில் 7 பாடசாலைகள் 1AB தரத்தில் உளள்ன. (மிகவும் தரமுயர்ந்த பாடசாலைகளாக வவுனியா மத்திய கல்லூரி, விபுலாநந்தாக் கல்லூரி, வவுனியா சைவப்பிரகாச மகளிர் கல்லூரி பேன்றனவற்றின் அபரிமிதமான வளர்ச்சிக்கு போராட்ட காலத்தில் வவுனியாவை நோக்கிப் புலம்பெயர்ந்தமையே காரணமாகும். அதேவேளை கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டப் பாடசாலைகளின் மாணவர் தொகை

மிகவேகமாக குறைவடைந்ததோடு, பல பாடசாலைகள் மூடப்பட்டன. முல்லைத்தீவு மாவட்டத்தில் ஏறத்தாழ அனைத்துப் பாடசாலைகளும் மூடப்பட்டன. மக்களனைவரும் இராணுவத்தால் கட்டாயமாக வெளியேற்ற பட்பட்டதனால் பாடசாலைகள் வெறிச்சோடிக்கிடந்தன. சில பாடசாலைக் கடடிடங்கள் அழிக்கப்படடு அவை இராணுவ பாவனைக்காகப் பாவிக்கப் பட்டன. அதனைவிட அயல்கிராமங்களுக்குள் இராணுவத்தின் அனுசரணை யோடு வந்த சிங்கள இனத்தவர்கள் வீடுகள், பாடசாலைகள், அரச அலுவலகங்கள் போன்றவற்றை இடித்து தளபாடப் பொருட்களையும் எடுத்துச்சென்றனர். மன்னார் மாவட்டத்திலும் போர்க்காலத்தில் பல பாடசாலைகள் அழிக்கப்பட்டும் சிதைக்கப்பட்டும் மக்கள் இடம்பெயர்ந்த மையால் மூடப்பட்டும் கிடந்தன. மன்னாரில் உள்ள 113 பாடாசலைகளில் ஒரு சிலவே இயங்கின.

எழுபதுகளுக்குப்பின்னர் வவுனியாவில் ஆசிரியர் கல்லூரி நிறுவப்படல் வேணடும் என்னும் கருத்து முன்வைக்கப்பட்டது. அது செயற்படுத்தப்படும் வரை ஆசிரியர்களுக்கான எந்தவொரு உயர்நிலைக் கல்விக்கான கற்கை வசதிகளோ; பயிற்சிக் கலாசாலைகளோ, சேவைக் காலப் பயிற்சிகளோ வன்னி மாவட்டத்தில் இடம்பெறவில்லை. வவுனியாவில் அமைந்த விவசாயப் பாடசாலை ஒன்றே விவசாய உத்தியோகத்தர் தேவைக்கான பயிற்சிகளை நல்கும் நிலையமாகக் காணப்பட்ட ஒரு நிலையமாகும். இதுவும் மிகவும் குறைந்த அளவினரான மாணவர்களையே பயிற்றுவித்து வந்தது. இன்று வவுனியாவில் அமைந்துள்ள பல்கலைக்கழக வளாகம் காலத்தின் தேவையை ஒட்டி அமைந்து விட்டமை கல்வியின் வளர்ச்சிக்கு உந்துதலாக அமைந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

கிளிநொச்சி மாவட்டத்தில் விவசாய பீடம், பொறியியல் பீடம் என்பன ஆரம்பிக்கபட்டமை வன்னிப் பிரதேசத்தில் கல்வி வளர்ச்சிக்கு முனைப்புக் கொடுக்கும் நிலைமைக்கு வழிகாட்டிகளாக அமைந்துள்ளன.

வன்னிப் பிரதேசங்களில் ஆங்கில ஆட்சிக்காலத்தின் ஆரம்பத்தில் இடம்பெற்ற பாடசாலைகளில் ஆசிரியத் தேவைகளைப் பூர்த்திசெய்து கொள்ளும் நோக்கத்துடன் தெரிவுசெய்யப்பட்ட ஆரம்பவகுப்பு ஆசிரியர்கள் சாதாரணமாக எழுதவாசிக்கத் தெரிந்திருந்தால் போதும் என்ற கணிப்பின் அடிப்படையில் இடம்பெற்றனர். வகுப்பில் திறமைமிக்க மாணவர்கள் அல்லது ஆசிரியர்களின் பிள்ளைகள் சட்டாம்பிள்ளைகளாக நியமனம் பெற்று வந்தனர். இவர்களே பின்னர் ஆசிரியர்களாகவும் நியமனம் பெற்றனர். வளர்வுபெற்ற நாடுகளில் பின்பற்றப்படுவதுபோன்று ஆசிரியப் பயிற்சி பெற்றவர்கள் மட்டும்தான் ஆசிரியத் தொழிலில் ஈடுபடமுடியும்

என்னும் நிலை இன்றும் இலங்கை போன்ற வளர்முக நாடுகளில் பின்பற்றப் படுவதில்லை. க.பொ.த. சாதாரண அல்லது உயர்தரச் சான்றிதழ்கள் பெற்றோர் எவரும் ஆசிரியராக இருப்பதற்குத் தகுதியுடையவர்கள் என்னும் கருத்தியல் கல்வித் திணைக்களத்தின் நியமனத்தில் பின்பற்றப்படுகின்றதே யன்றி மாணவர்களின் தேவைகள், உளவியல் தாக்கங்கள், கற்பித்தல் முறைகள், பாடத்திட்டமிடல், போன்ற அறிவுத் தேவை புறக்கணிக்கப்படு வதால் எமது மாணாக்கரின் கல்வி வளர்ச்சியிலும், தனித்துவ ஆளுமை வளர்ச்சியிலும் மேம்பாட்டிலும் பல இடர்வினைகள் ஏற்படுவது தவிர்க்கமுடியாததே. அரசியல் நோக்கில் ஏதோ பெற்றோரைத் திருப்தி செய்யும் நோக்கில் பாடசாலைகளுக்கு ஆசிரிய நியமனங்கள் வழங்கப்படுகின்றதேயன்றித் தகுதி தகமைகள் கவனிக்கப்படுவதில்லை. தரப்படுத்தல், பிரததேச முதன்மை போன்றனவும் கல்வியில் பெரும் தாக்கத்தினைக் கொணடிருப்பது கண்கூடு. போர்த்துக்கேயர் காலத்திலிருந்து இலங்கை விடுதலை அடையும் காலம்வரை வன்னியின் கல்வி வரலாற்றில் பாடசாலைகள் பெரும்பாலும் ஐந்தாம் வகுப்புவரை கல்விபெற்றுத் தரும் நிறுவனங்களாகவே காணப்பட்டன. இதனால் பெற்றோர் கல்வியில் பெரிதாக அக்கறை செலுத்தியதாகக் காணப்பட வில்லை. தமது பிள்ளைகள் கையெழுத்து வைக்கத் தெரிந்திருந்தால் போதும் என்ற மனப்பாங்கோடு இருந்து வந்தனர். தமது அன்றாட வேலைகளைக் கவனிப்பதே பிள்ளைகளின் தலையாய பணி என்பதே பெற்றோரின் நோக்கமாகும். அவர்கள் கல்வி கற்று என்னதான் செய்யப் போகின்றார்கள் என்ற மனப்பாங்கு பலரிடமும் காணப்பட்டது. அவர்க ளுக்குக் கல்வி விழுமியங்களோ அதன் பலாபலன்களோ தெரிந்திருக்க வாய்ப்பு இருந்திருக்கவில்லை. கல்வி என்பது உத்தியோகம் பார்ப்பதற்கு என்னும் எண்ணம் இன்றுகூட பல பெற்றோரிடம் காணப்படுகின்றது. வாழ்வின் செம்மை, உயர்வு, வளர்வுக்குக் கல்வி பலவழிகளிலும் பயனளிக்கும் என்னும் கருத்தை அவர்கள் புறக்கணித்து வந்துள்ளனர். அல்லது தெரியாதிருந்தனர்.

இன்று வன்னிப்பிரதேசத்தில் பெருந்தொகையான மாணவர்கள் இடப் பெயர்வு, பஞ்சம், பசி, பட்டினி போன்ற காரணங்களால் பாடசாலைகளுக்குச் செல்லமுடியாத நிலையில் இருப்பதை யேர்மெனி போன்ற வெளியுலக நாடுகளின் செயற்பாடுகள் வெளியே படம் பிடித்துக் காட்டுகின்றன. உலக நாடுகள் அமையத்தின் செயற்பாடுகள் வன்னியில் உள்ள பாடசாலை மாணவர்களின் கல்வி நிலைபற்றியும், அவர்களின் குறைபாடுகள் பற்றியும் பல தகவல்களைக் கொண்டுவந்துள்ளமையோடு, ஆசிரியர் பற்றாக்கு றைக்கான காரணங்களையும் முல்லைத்தீவு, மன்னார், வவுனியா, திருகோணமலை, மட்டக்களப்பு மாகாணங்கள் கொண்டுள்ளமை

எடுத்துக்காட்டுகின்றன. போதிய உணவின்மையாலும், போசாக்கு இன்மை யாலும் பிள்ளைகள் கல்வியில் கவனம் செலுத்த முடியதா நிலையில் உள்ளனர் என்ற உண்மையையும் வெளிக்கொண்டுவந்துள்ளன. உணவுப் பற்றாக்குறை காரணமாக பெருந்தொகையான வன்னி மாணவர்கள் கண்பார்வை இழத்தல், காது கேட்காமை, மூளைவளர்ச்சிப் பாதிப்புப் போன்றவற்றிற்கு ஆளாகின்றார்கள் என்பதனை கடல் கடந்த நாடுகளில் வசிக்கின்ற ஈழத்தமிழர்கள் சற்றுச் சிந்தித்துப் பார்த்தால், எதுவித உதவியும் இன்றி அலைந்து பஞ்சத்தில் வாடிக் கொண்டிருக்கும் எம் இரத்தங்களுக்கு ஏதோ ஒரு வகையில் உதவிக்கரம் நீட்டமுடியும். மனம் இருந்தால் இடமுண்டு என்பதற்கமைய தமிழினம் செயற்படுதல் எம் இனத்தை பேரழிவிலிருந்து பாதுகாக்க உந்துகோலாக அமையும்.

வன்னிப் பிரதேசத்தின் கல்வியின் பின்னடைவிற்கு இன்று அங்கு காணப்படும் மீள்குடியேற்றத்தின் அசமந்தப்போக்கும், மக்கள் தன்னியல் பாக விவசாயத்தைச் செய்வதில் உள்ள சிரமங்கள், ஊட்டச்சத்தற்ற உணவினால் பிள்ளைகளும் பெற்றோரும் உடல் வலுவிழந்திருப்பதும், போர்ச் சூழல் தந்த உளவியற் தாக்கங்கள், எதிர்காலம்பற்றிய தெளிவற்ற நிலைமைகள், போக்குவரத்துக் கட்டுப்பாடுகளும், பாடசாலைக்கான வளங்களைப் பெற்றுக்கொள்ள முடியாத நிலையும், கற்றறிந்த அனுபவம் மிக்க ஆசிரியர்களின் வெளியேற்றமும் முக்கிய காரணிகளாக உள்ளன. பாடசாலைகளில் காணப்படும் கெடுபிடிகள் என்பன கல்வியில் ஏற்படவேண்டிய விருத்திக்கு மாறாக பின்னடைவுக்குக் காரணிகளாக அமை கின்றன. வெளிநாடுகளில் உள்ளபழைய மாணவர்கள் தங்கள் பிரதேசக் கல்வி விருத்திக்குத் தம்மாலான பங்களிப்பைச் செய்யவேண்டியது அவர்க ளின் கடப்பாடாகும்.

**நடை உடை பாவனை உணவு வகைகளில் மாற்றங்கள்:**

**உடைகள்:**
போரத்துக்கீசர் வருகையால் போரத்துக்கேயப் போர்வீரர்கள் சுதேச பெண்களை மணந்தமையால் அவர்களின் உடைகளில் போரத்துக்கேய கிமோனா, சட்டை, பாவாடை, என்பன சேலைக்குப் பதிலாக இடம்பிடித்துக் கொண்டன. ஆண்களும் சட்டைகளும் களிசான்களும் அணியும் பழக்கத்தைக் கைக்கொண்டனர். டச்சுக் கொம்பனியாரும் இதனைக் கடைப்பிடித்தனர். தங்கள் உணவு. உடை, பழக்க வழக்கங்களை மக்கள் மத்தியில் திணிக்க முற்பட்டனர். வயலின், றம் போன்ற வாத்தியங்களையும் திருமண வைபவங்களில் முதனிலைப் படுத்தினர்.

**உணவு:**

பாண் இலங்கயில் அறிமுகப்படுத்தப்பட்டது போரத்துகக்கேயரால் என்பது காலித்துறையில் நங்கூரமிடப்பட்ட கப்பலில் "கல்லை உண்டு இரத்தத்தைக் குடிக்கின்றார்கள்" என்பதிலிருந்தே அறிந்துகொள்ளலாம். இலங்கையில் மிளகாயை அறிமுகப்படத்தியவர்கள் போரத்துக்கீசரே ஆவர். இதுவரை மிளகு, கறுவா போன்றவற்றைப் பயன்படுத்திய இலங்கையர் மிளகாயையும் பயன்படுத்தத் தொடங்கினர்.

**மொழி:**

போர்த்துக்கேயச் சொற்கள் தமிழர் மத்தியிலும் சிங்களவர் மத்தியிலும் பாவனைக்கு வந்தமைக்கு காரணர்கள் போர்த்துக்கேயரே ஆவர். அன்னாசி, மேசை, லாச்சி, கதிரை, அலுமாரி, அலவாங்கு, அலுப்பூசி, அலுக்கோசு, பைலா, சுப்பு, றோதை, சாவி, ஜன்னல், கஜூ, கமுசான், கமிசு, கடதாசி, கொய்யாப்பழம், கோப்பை, குசினி, பாண், பப்பாசி, பேனை, பீங்கான், பீப்பா, சப்பாத்து, தவறணை, தாச்சி, துவாய், விறாந்தை, கக்கூசு, பாதிரி என்பன இடம்பெற்றுள்ளன.

டச்சு மொழிச் சொற்கள்: தோம்பு, கந்தோர், உலாந்தா, தபால் சொற்கள் சிங்களவர்கள் மத்தியிலும் தமிழர்கள் மத்தியிலும் பாவனைக்கு வந்தமைக்குக் காரணர்கள் அவர்களே யாவர்.

**பெயர்கள்:**

சில்வா, பெர்ணார்ந்து, பொன்சேகா, அட்றியன், அட்றியானா, அபோன்சோ, அல்பேட்டோ, அகஸ்ரினோ, அல்பேட்டினா, அல்பினோ, அல்பினா, அல்டா, அல்சியா, அலெக்ஸ், அலச்சாந்திரா, அல்பிரட், அல்பிரட்சோ, அலைஸ், அல்மெயிரொ, அல்வாடோ, அமலியா, அமன்சியோ, ஆமன்டோ, அம்புறோஸ், அனிற்றா, அரிசினோ, அகஸ்ரா, அகஸ்ரஸ், பென்சமின், பொனிபஸ், புறூணோ, கலிஸ்ரா, கலக்ரா கலிக்ஸ்ரோ, கதறீனா, சிசிலியா, சிசிலியோ, செலினா, குளோடியா, கொன்ஸர்ான்ரிக்கா, கொனஸ்ரானினா, கிறிஸ்ரினா, டானியல், டான், டாவிட், டொறத்தி, எட்மணடோ, எட்டுவாட், எலிசா, எமிலியா, கட்சன், றிச்சாட், பிலிப், புளோறா, பிரான்ஸிஸ்கோ, பிறெட், கபிறியேல், கியுமோர், கஸ்ராவோ, கென்றிக், இறிஸ், இசபெல், இசிதோர், இவோனா, இவனோற்றே, ஜக்குலின், ஜெசிக்கா, ஜெறோனிமா, ஜோர்ச், போர்துக்கீசர், ஒல்லாந்தர் காலத்தில் மதம் பரப்புவதற்காக மேலை நாட்டுக் கதைகள், கிறிஸ்தவக் கதைகள் போன்றவற்றை உள்ளடக்கிய நாட்டுக் கூத்துக்களை தமிழ்மரபுக் கதைகள், அல்லது வரலாற்றுக் கதைகளைப் போன்று ஆக்கி நடித்து மேடையேற்றினர். இவை மன்னார், முல்லைத்தீவுப் பிரதேசங்களிலேயே அதிகளவில் காணப்பட்டது.

கலைகளைப் பொறுத்தவரை நாட்டுக்கூத்து, கிராமியப் பாடல்கள் வன்னியில் தனியான இடத்தைப் பிடித்துக்கொண்டன. சிலப்பதிகாரக் கதையில் வரும் கண்ணகி வரலாறு முல்லைத்தீவில் உள்ள வற்றாப்பளை அம்மன் ஆலயத்தில் ஓலைச்சுவடியில் எழுதப்பட்ட வரலாற்றை பாடிப் பொங்கும் நிலை காணப்படுகின்றது. "சிலம்பு கூறல்" என்னும் பெயரில் இடம்பெறுவதோடு "கோவலன் கூத்தும்" மிகப் புனிதமானதாகக் கருதி ஆடப்படுகின்றது. இது வட்டக்களரி அமைத்து அதன் நடுவே நின்று கட்டியங்காரன், அண்ணாவியார் உட்பட கதாபாத்திரங்கள் ஆடிப்பாடும் முறை "முல்லைமோடி" என்னும் வகையைச் சார்த்ததாகக் கருதப்படுகின்றது. வன்னியின் ஆலயங்களின் நிகழ்வுகளில் பறை முக்கிய இடத்தைப் பிடிக்கின்றது. பறை என்பது மங்கலப் பறை எனவும் மற்றது அமங்கலப் பறை எனவும் அழைக்கப்படுவதற்கு இறப்பு நிகழ்வில் அடிக்கப்படும் முறைக்கும் காவடியாட்டம், உருவாட்டம், மடை எழுப்புதல் போன்ற நிகழ்வு களில் அடிக்கப்படும் பறைக்குமிடையே மிகுந்த வேறுபாடுகள் உள்ளன. வற்றாப்பளை கண்ணகியம்மன் ஆலயம், முள்ளியவளை காட்டாவிநாயகர் ஆலயம், புதூர்நாகதம்பிரான், புளியம்பொக்கணை அம்மன் ஆலயம் போன்றவற்றிலும் நெடுங்கேணிப் பிரதேசத்தில் உள்ள அடம்பன் என்னும் ஊரில் உள்ள ஐயனார் ஆலயம், ஆண்டான்குளம் ஐயன்மடை போன்ற வற்றில் பறையடித்தல் மிக முக்கியமானதாகும். பறை காவடி ஆட்டத்திற்கும் அடிப்படையாக அமைகின்றமை வன்னியின் முக்கியம் மிக்க பாரம்பரிய இசைக் கருவியாகக் காணப்படுகின்றது. பறை என்பது பண்டைத் தமிழரின் இசைக்கருவி என்பதனைத் தமிழியல் ஆய்வுகள் எடுத்துரைக்கின்றன.

கூத்துவகைகளை விட மகுடியாட்டம் ஸ்லாமியரோடு தொடர்புடையதாக இடம்பெற்று வந்துள்ளது. இதற்கும் பறை முழக்கம் தேவையான கருவியா கக் கொள்ளப்பட்டுள்ளது. ஸ்லாமிய மதத்தினைப்பரப்ப எடுத்த முயற்சியில் ஸ்லாமியருக்கு எதிராக இந்துமத புரோகிதர்களால் மேற்கொள்ளப்பட்ட போட்டி நிகழ்வாக இது இடம்பெற்றுள்ளது.

மரணம் நிழ்வதை அறிவித்தல், பிரேதம் எடுத்துச் செல்லுவதை ஊருக்கு தெரியத்தருதல், மூன்றாம் நாள் காடாத்தல் போன்றவற்றிலும் பறையின் பங்களிப்பு இன்றுவரை இடம் பெறுவதனைக் காணலாம். முரசறிவித்தல் போர் தொடுப்பதற்காக இடம்பெற்றமை சங்க இலக்கியங்களில் காண்கின்றோம். ஆனால் அண்மைக்காலம் வரை கிராமங்களில் பிரசித்தம் போடுதல் என்பது அரசாங்கத்தின் தீர்மானத்தை மக்களுக்கு அறியத் தருவதற்காகப் பயன்படுத்தப் பட்டுள்ளது. ஆங்கிலத் தேசாதிபதிகள் அல்லது மாவட்ட அதிகாரிகள் கிராமங்களுக்குத் தங்கள் வருகையை அறியத்தர இப்பறை பெரிதும் பயன்படுத்தப் பட்டுள்ளது.

காத்தவராயன் கூத்து, ஏழுபிள்ளை நல்லதங்காள், சத்தியவான் சாவித்திரி, அரிச்சந்திரா போன்ற கூத்துக்களும் சில கிராமங்களில் 1960களின் முன்னர் இடம்பெற்றுள்ளன. ஆனால் காத்தவராயன் கூத்து இன்று வரையிலும் பல கிராமங்களில் இடம்பெறுவதனைக் காணமுடிகின்றது. சினிமாப் படங்களின் வருகையால் கிராமிய கலைகளான நாடகங்கள், கூத்துக்கள் மறைந்து போயின. எனினும் கரையோர மக்கள் இந்த நாட்டுக்கூத்துக் கலைகளைத் தக்கவைத்தக் கொண்டிருப்பதனைக் காணலாம்.

வன்னிப் பிரதேசத்தில் நாட்டார் பாடல்கள் முக்கியம் பெற்று வந்துள்ளன. நாட்டார் பாடல்களை தொழில் முறைப் பாடல்கள், இறைவழிபாட்டுப் பாடல்கள், வரலாற்றுக் கதைப்பாடல்கள், பொதுவான பாடல்கள் என வகைப்படுத்திப் பார்க்கமுடியும், இப்பாடல்களைத் தொகுத்து புதுக்குடியிருப் பைச் சேர்ந்த மெட்றாஸ்மெயில் 1980ல் வெளியிடடார்.

முள்ளியவளையைச் சேர்ந்த அரியகுட்டி என்பார் அருவிச்சிந்து, கதிரையப்பர் பள்ளு, பன்றிப் பள்ளு, குருவிப்பள்ளு என்பனவற்றைப் பாடியுள்ளார். 1934ல் கீழ்கரவையைச் சேர்ந்த முருகேசுப் பண்டிதர் “வேலைப் பணிக்கன் பெண்சாதி அரியாத்தை பேரில் ஒப்பாரி” என்னும் ஒப்பாரிப்பாடலை வெளியிட்டார். நாட்டுப்பாடல்களில் பன்றிப் பள்ளு, பறவைப் பள்ளு என்பன பிரபலமானவை. இவை காவற்குடிலில் இருக்கும் போதும் நெல் விளைந்த பின்னர் அறுவடை செய்யும்போதும் பாடப்படுகின்றன. கதிர்காமக் கந்தனின் மீது பாடப்பட்ட கதிரமலைப் பள்ளினை அச்சுப்பதிப்பித்தவர் முல்லைத் தீவைச் சேர்ந்த கையிலாயபிள்ளை அவர்கள் ஆவார். அவர் அதனை 1927 ஆம் ஆண்டு பதிப்பித்துள்ளார். யானையை அடக்கிய அரியாத்தை என்னும் செவிவழிக் கதையை உள்வாங்கி அதனை “வேளம் படுத்த வீராங்கனை” என்னும் நாட்டுக்கூத்தாக எழுதி வெளியிட்டதோடு அதனை நாடகமாகவும் நடித்து வெளியிட்டவர் முள்ளியவளையைச் சேர்ந்த அரியான் பொய்கை செல்லத்துரை ஆவார்.

இதனை “மதயானையை வென்ற மாதரசி“ என்னும் நாடகமாக எழுதி மேடையேற்றினார் குமுளமுனையைச் சேர்ந்த சி.தெய்வேந்திரம்பிள்ளை அவர்கள். இலங்கை வானொலியில் பணியாற்றிய அருணா செல்லத்துரை முத்தையன் கட்டை மையப்படுத்தி ஒரு நாடகத்தை எழுதியுள்ளார். மேற்கூறிய இலக்கியங்கள் வன்னியின் வழக்கத்தில் இருந்தவந்துள் ளமைக்கு வன்னியில் கல்வி மேலோங்கி இருந்தது என்பதனை உய்த்தறியமுடிகின்றது.

பாடசாலைகளில் நாடகங்களை பயிற்றுவித்து மேடையேற்றும் பாங்கு 1960

களின்பின் முனைப்புக் கொண்டது, முல்லைமணி, மானிப்பாய் அப்பச்சி மகாலிங்கம் ஆசிரியர், (வித்தியானந்தக் கல்லூரி), கொம்பந்தறை பாலசிங்கம் போன்ற நாடக (குமுளமுனை) ஈடுபாடுகொண்டவர்கள் நாடகத்தைப் பழக்கி மேடையேற்றினர்.

# வன்னிப் பிரதேசக் கல்வி வளர்ச்சியின் பின்னடைவுகள்

**கொம்பறை அண்டு இதழில் வெளியான கட்டுரை–2001**

கல்வி என்பது பிறப்புரிமை என்கின்றது ஐக்கிய நாடுகளின் மனித உரிமைச் சாசனம். எல்லோருக்கும் கல்வி. சமத்துவக்கல்வி, கல்வியில் சமத்துவம் என்ற வாசகங்கள் கோசங்களாக முன்வைக்கப்பட்டாலும் பல நாடுகளில் கல்வி எல்லோருக்கும் இலகுவில் கிடைப்பதில்லை. இலங்கையில் எழுத்தறிவு 85 விழுக்காடு எனக் கூறப்படுகின்றபோதிலும் கல்வியறிவு எத்தனை விழுக்காட்டினருக்குக் கிட்டியுள்ளது என்பது கேள்விக்குறியே? நாட்டில் உள்ள குழந்தைகள் அனைவருக்கும் கல்வி கிடைக்க வழிவகுக்கப்பட வேண்டும் என்பது ஐ.நா. முன்வைத்துள்ள கோரிக்கை. உலக நாடுகள் அனைத்தும் இந்த கோரிக்கையை ஏற்றுக்கொண்டு நடைமுறைப் படுத்துகின்றனவா? என்பதற்கு சரியான பதில் பெறமுடியாமைக்குப் பல காரணிகள் உள்ளன. உணவிற்கு வழியற்ற பிள்ளைகள் பாடசாலைக்குச் செல்வது எப்படி என்ற கேள்வியும் மறுபுறம் எழுகின்றது. சில நாடுகளில் சில பிரதேசங்களில் பாடசாலைகளே இல்லாதநிலை இந்த 21ம் நூற்றாண்டிலும் உண்டு என்னும் உண்மையை நாம் ஒப்புக்கொண்டுதான் ஆகவேண்டும். இந்த நிலையில் ஆசிய ஆபிரக்க நாடுகள் முக்கியமானவையாக காணப்படுகின்றன. கிராமப்புறங்களில் உள்ள மாணவர்களுக்கு கல்வி வாய்ப்புக் கிட்டுவதில்லை. அவர்கள் பல மைல்கள் நடந்துசெல்லவேண்டிய நிலைமையால் கல்வியைப் பெறமுடியாதவர்களாக உள்ளனர். இலங்கையிலும் இந்த நிலை இன்று தலைதூக்கி நிற்பதற்கு நாட்டில் இன்று நிலவிவரும் சூழ்நிலைமைகளே காரணம் எனலாம். குறிப்பாக வடக்குக் கிழக்கு மாகாணங்களில் உள்ள பிள்ளைகளுக்கு கல்விவாய்ப்புக்கள் மறுக்கப்படுகின்றன என்றே சொல்லவேண்டும்.

ஈழவழ நாடு கல்வியில் தனக்கென ஒரு நிலையைத் தக்கவைத:தக் கொண்டிருந்தது. அண்மைக்கால நிலவரங்கள் மாணவர்கள் பெறும் கல்வியிலும் பெரும் பாதிப்பை ஏற்படுத்தியுள்ளமை கண்கூடு. வன்னிப் பிரதேசத்தின் கல்வி நிலை ஆங்கில ஆட்சிக்காலத்திற்கு முன்பிருந்தே ஏனைய தமிழ் பிரதேசங்களோடு ஒப்பு நோக்கும் போது பின்னடை வுள்ளதாகவே காணப்பட்டது. கல்விக்கான வாய்ப்புக்கள் போதியளவு இல்லாமை, வாய்ப்புக்கள் வழங்கப்படாமை, அல்லது மறுக்கப்பட்டமை, புறக்கணிக்கப்பட்டமை, பாடசாலைகளுக்கு வெகுதூரம் செல்லவேண்டிய சூழ்நிலைகள், குடிசனப்பரம்பல், மக்களின் தொழில் முறைகள் என்பன கல்வியில் முங்கிய பங்கொண்டு வந்துள்ளன. கிராமிய விவசாய முறைகள் பிள்ளைகளைப் பாடசாலைக்கு அனுப்பாமல் விடுவதற்குக்காரணமாக உள்ளது. வயல்களில்வேலை செய்தல், தோட்டக்காவல் போன்ற வேலைகளைச் செய்வதற்கு பெருந்தொகையானவர்கள் தேவைப் படுவதனால் குடும்ப அங்கத்தவர்கள் பிள்ளைகள் உட்பட அனைவருமே சேர்ந்துசெயற்படும் நிலைமையில் பிள்ளைகள் பாடசாலைக்குச் செல்ல முடியாத நிலை உருவாகின்றது. இவ்வித வேலைகள் காரணமாக அடிக்கடி பாடசாலைக்குச் செல்லாத மாணவர்கள் தொடர்ந்து பாடசாலைக்கல்வியில் அக்கறை காட்டவோ அன்றி ஈடுபடவோ முடியாதவர்களாக பின் தங்கி விடுகின்றனர். இதனால் அவர்கள் இடையில் பாடசாலைப்படிப்பை நிறுத்திக் கொள்கின்றனர். இதனால் பாடசாலையில் மாணவர் வரவு குறைவடையும் நிலையும் ஏற்படுகின்றது.

வன்னிப் பெருநிலப்பரப்பு பரப்பளவால் கூடியதானாலும் அங்கு வாழுகின்ற மக்களின் இருப்பிடங்கள், அதனை ஒட்டி எழுந்த பாடசாலை அமைவிடங்கள் என்பன போதிய மாணவர் இல்லாத காரணத்தால் பின்அடைவு காணப்படவேண்டிய நிலையைத் தோற்றுவித்தது. மன்னார் தொடக்கம் முல்லைத்தீவு ஈறாகப் பரந்துபட்டுக்கிடக்கும் பாரிய காடுமண்டிய பிரதேசத்தில் காணப்படும் குடியிருப்புக்கள் ஆங்காங்கு பரந்து அமைவுற்றுள் ளமையால் ஆரம்பகாலந்தொட்டே கல்வி பெறுவதற்காக வேற்று இடங்க ளுக்கு மாணவர்களை அனுப்பவேண்டிய தேவைப்பாடு தவிர்க்கமுடியாத தாகக் காணப்பட்டது.

இலங்கையின் கல்வி வரலாற்றில் அந்நியர்களின் வருகையினூடே கல்வியில் விருத்தி ஏற்படத்தொடங்கியமை கல்வி வரலாற்றில ஒரு மைல்கல். துமது மதத்தைப் பரப்பும் நோக்குடன் கத்தோலிக்க, அமெரிக்க, ஆங்கிலத் திருச்சபைகள் போட்டிபோட்டுக் கொண்டு செயற்பட்டன. இலகுவாக மதம் மாற்றப்படக்கூடியவர்கள் தமிழர்கள் என்பதனை அவர்கள் குறகியகாலத்திலேயே அறிந்திருந்தனர். இதனால் தமக்கு வசதியான

வாய்ப்பான இடங்களில் தமது பணிகளைத் துரிதப்படுத்தி வந்தனர். மிசனறிச் சபையினர். தமது மதத்தைப் பரப்புவதற்கான ஒரு முக்கிய சாதனமாக கல்வி புகட்டுவதைக் கையாண்டார்கள். கத்தோலிக்க திருச்சபை, அமெரிக்க மிசனறி அங்கிலிக்கன் சபை போன்றன தமது மதங்களைப் பரப்பும் நோக்குடன் பல ஆலயங்களை நிறுவியதோடு நின்றுவிடாது அருகருகே பாடசாலைகளையும் நிறுவி சிறார்களுக்குக் கல்வி புகட்ட ஆரம்பித்தனர். இதனால் திண்ணைப்பாடசாலையாக குருகுலக்கல்வியைப் பெற்றுவந்த இல்ஙகைச் சிறுவர்கள் பாடசாலை முறையிலே கல்வியைப் பயிலும் வாய்ப்பைப்பெற்றார்களாயினும் இவ் வாய்ப்புக்கள் வன்னிப் பிரதேசத்தைப்பொறுத்தளவிலே மிக அரிதாகவே காணப்பட்டன. முக்கள் சிறுசிறு குழக்களாகப் பரந்துபட்டு வாழ்ந்தமை இதற்கான காரணத்தோடு மதம் மாறுவதிலும் வன்னியர்கள் காட்டிய எதிர்ப்பும் காரணிகளாகின.

வன்னிப் பிரதேசங்களில் அமைவுற்ற கல்விக்கூடங்களைச் சற்று நோக்கினால் இவ் உண்மை தெற்றெனப் தெரியும். மன்னார் மாவட்டத்தில் மட்டும் எருக்கலம் பிட்டி மகாவித்தியாலயமே வன்னியின் ஆரம்பத்தில் காணப்பட்ட உயர்நிலைக்கல்வி கற்கக்கூடியபாடசாலை ஒன்றாகக் காணப்பட்டது. வவுனியாவிலோ முல்லைத்தீவிலோ இத்தகைய பாடசாலைகள் இடம்பெறாமை துர் அதிஸ்ரமே. வுவுனியா, முல்லைத்தீவு பிரதேசத்திலிருந்து மன்னாருக்கு அல்லாது யாழ்ப்பாணப் பாடசாலைக ளுக்குச் செல்லவேண்டிய நிலையே வித்தியானந்தக் கல்லூரி முள்ளியவ ளையில் அமையும் வரை காணப்பட்டது. வவுனியா மாகாணத்தில் ஒரு மத்திய கல்வி நிலையம் அமையவேண்டும் என்ற நிலையை முன்வைத்தவர் அன்று வவுனியா முல்லைத்தீவு உள்ளடங்கலாக இருந்த வவுனியாப் பாராளுமன்ற உறுப்பினராக இருந்த சட்டத்தரணி சி. சுந்தரலிங்கம் அவர்கள். அவர் முள்ளியவளை தனியூற்று ஆகிய கிராமங்களை இணைக்கும் எல்லையில் இந்தப் பாடசாலையை நிறுவியமைக்கு அந்தப்பிரதேசத்தின் மத்தியில் அமையவேண்டும் என்பதனாலேயாம். இந்தப் பாடசாலையே வன்னியில் 1952க்குப் பின்னர் மன்னாருக்கு அடுத்ததாக அமைந்த இந்தப்பாடசாலையே உயர்கல்வியைத் தரத்தக்க ஒரு நிலையமாக அமைக்கப்பட்டிருந்தது. இதே நேரம் மட்டக்களப்பில் சிவானந்த வித்தியாலயம் போன்று வித்தியானந்தக் கல்லூரி இப்பிரதேசத்தின் ஏழைப்பிள்ளைகளின் கல்விப்பசியைத் தீர்க்கும் அமுதமாக அமைந்திருந்தது. வெளியிடங்களுக்குச் செல்லமுடியாத மாணவர்கள் இங்கு ஆங்கில மூலக்கல்வியைப் பெற்றுக்கொள்ளும் வாய்ப்பைப்பெற்றுக் கொண்டனர். 4ம் வகுப்பிலிருந்து 10ம் வகுப்பு வரை ஆங்கில மூலம் கல்வியைப் பெற்றுக்கொள்ளும் வாய்ப்பை இந்தப்பாடசாலை தந்திருந்தமை குறிப்பிடத்தக்கது. அது 1962ம் ஆண்டு வரை ஆங்கிலப் பாடசாலை என்ற

பெயரைக் கொண்டதாக இருந்துவந்துது. ஆனால் 1962க்குப் பின்னர் இந்தநிலையில் மாற்றம் ஏற்படத் தொடங்கியமை கல்வி விருத்தியில் பாரிய முன்னேற்றம் ஏற்படத்தொடங்கியது. மாணவர்கள் தொகை கணிசமான அளவிற்கு அதிகரித்ததோடு பல்கலைக் கழகப் புகுமுறைக்கான தரப்படுத்தல் முறை வன்னிப் பிரதேசப்பாடசாலைகளின் வளர்ச்சிக்கு முக்கிய உந்து கோலாக அமைந்தன. பல்கலைக் கழகங்களுக்கு மருத்துவ, பொறியியற் துறை மாணவர்களை முதலில் அனுப்பத் தொடங்கியமையும் இந்தத் தரப்படுத்தலின் பின்னரே என்பதனை ஒத்துக்கொள்ளத்தான் வேண்டும். வித்தியானந்துக்கல்லூரி, வவுனியா மகாவித்தியாலயம், புதுக்குடியிருப்பு மகாவித்தியாலயம், மல்லாவி மகாவித்தியாலயம், ஓமந்தை மகாவித்தியா லயம் போன்றன விஞ்ஞானத்துறைக்கு மாணவர்களைத் தயார் பண்ணும் நிலைக்கு உயர்த்தப்பட்டமை இந்தக்காலத்திலே என்பது குறிப்பிடத்தக்கது. வளர்ச்சியடைந்துள்ள பாடசாலைகளில் உள்ள வசதிகள், ஆசிரியர் வளம் என்பன கிடைக்கும்போது இந்தப் பாடசாலைகளும் துரித கதியில் முன்னேற்றம் காணக்கூடியன என்பதற்குச் சான்றாக சில பாடசாலைகள் இன்று வளர்ச்சி பெற்றுள்ளன. குறிப்பாக வவுனியா மத்திய மாகவித்தி யாலயம், வித்தியானந்தக் கல்லூரி இவை இரண்டும் வன்னிப் பிரதேசத்தில் வளர்ச்சியடைந்த நிலையில் உள்ள பாடசாலைகள் எனக்கொள்ளமுடியும். இந்த நிலை மட்டக்களப்பு, திருகோணமலை, மன்னார் மாவட்டங்களிலும், கிளிநொச்சி மாவட்டத்திலும் உண்டு என்பதற்கு அங்குள்ள மத்திய மகாவித்தியாலங்கள் சான்று பகர்கின்றன.

பண்டாரநாயக்காவின் சுயமொழிக் கல்வி, பாடசாலைகள் அரசஉடமையாக் கியவை போன்ற காரணங்களால் வன்னிப்பிரதேசத்தில் கல்வியில் ஒரு திருப்புமுனை ஏற்பட்டமையினையும் நாம் அவதானிக்கலாம். இந்தக் காலத்தில் வன்னிப் பிரதேசத்துக் கிராமங்கள் பலவற்றில் புதிய பாடசாலைகள் தோன்றும் நிலை ஏற்பட்டிருந்தது. இரண்டு மைல் சுற்றுவட்டத்தினுள் பாடசாலைகள் இல்லாதிருந்தால் அந்தப்பிரதேசத்தி போதியளவு மாணவர்கள் இருந்தால் பாடசாலைகள் ஆரம்பிக்கலாம் என பண்டாரநாயக்க அரசு பச்சைக் கொடி காட்டியதன் விளைவாக. வுன்னியில் பல கிராமங்களில் பாடசாலைகள் ஆரம்பிக்கப்பட்டன. 1960களின் ஆரம்பத்தில் புற்றீசல்களாக வன்னனிமாவட்டத்தில் பல பாடசாலைகள் தோற்றம் பெறத்தொடங்கின. இதற்கு ஒருகாரணமாக அந்தப் பாடசாலைகளில் கல்வி கற்பிக்கும் ஆசிரியர்களை பாடசாலைகளைப் பொறுப்பேற்கும்போது அவர்களையும் நிரந்தர ஆசிரியர்களாகச் சேர்த்துக்கொள்ளும் வாய்ப்புக்காணப்பட்டமையால் வன்னிப்பிரதேசத்தில் எஸ்.எஸ்.சி அல்லது ஜி.சி.இ.சாதாரண தரப்பரீட்சையில் சித்தியெய்திவிட்டு வேலையில்லாதிருந்தவர்கள் தாமாகவே கிராமத்தவர்களின் உதவியோடு

பாடசாலைகளை ஆரம்பிக்கத் தொடங்கினர். இதன்வழி பாடசாலைக்குச் செல்லமுடியாதிருந்த பிள்ளைகள் எழுத்தறிவைப் பெற்றுக்கொள்ளும் வாய்ப்பைப் பெற்றுக்கொண்டார்கள். மாணவர்களின் வரவே இந்தப்பாடசாலைகளின் உயிரைக் காப்பாற்றிக்கொள்ளும் நிலையில் மாணவர்களைப் பாடசாலைகளுக்கு வரவைப்பதற்காகப் பெற்றோரை ஆசிரியர்கள் அடிக்கடி அணுகவேண்டிய நிலையும் இருந்துவந்தமையால் பாடசாலைக்கும் பெற்றொருக்குமான தொடர்பும் நெருக்கமானதாகக் காணப்பட்டதோடு, எமக்கென ஒரு பாடசாலையை எற்படுத்தியுள்ளோம் என்ற உணர்வும் ஊரவர்களிடம் காணப்பட்டமை குறிப்பிடத்தக்கது. பத்துப் பன்னிரண்டு குடும்பங்கள் மட்டும் இருந்த பல கிராமகங்களில் பாடசாலைகள் தோற்றுவிக்கப்பட்டன. 1964ம் ஆண்டிற்குப்பின்னர் ஆசிரியர்களையும் பொறுப்பேற்கும் நிலையை அரசாங்கம் மறுத்து அதற்கான சுற்றுநிருபத்தினை அனுப்பியதனால் ஆசிரியர்களே முன்நின்று பாடசாலைகளை ஆரம்பிக்கும் நிலை தடைப்பட்டது. எனினும் 1977 கலவரம், 1983 கலவரங்களினால் பாதிக்கபட்டட மக்கள் வன்னியில் வந்துகுடியேறிய மமையால் அவர்கள் அதிகமாக வாழும் இடங்களீல் பாடசாலைகை அமைத்துத் தர கல்வித்திணைக்களம் முன்வந்துது. இதனால் வன்னியில் சில புதிய கிராமங்கள் பயனடையத் தொடங்கின.

எழுபதுகளுக்குப்பின்னர் வவுனியாவில் ஒரு ஆசிரியர் கல்லூரி நிறுவப்படல் வேண்டும் என்னும் கருத்து முன்வைக்கப்பட்டு அது செயற்படுத்தப்படும் வரை எந்தவொரு உயர்நிலைக் கற்கை வசதிகளோ வாய்ப்புக்களோ வன்னியில் இடம்பெறவில்லை எனலாம். வுவுனியாவில் அமைந்த விவசாயப்பாடசாலை ஒன்றே விவசாய உத்தியோகத்தர் தேவைக்கான பயிற்சிகளை நல்கும் நிலையமாகக் காணப்பட்ட ஒரு நிலையமாகும். இதுவும் மிகவும் குறைந்த அளவினரான மாணவர்களையே பயிற்றுவித்து வந்தது. இன்று வவுனியாவில் அமைந்துள்ள பல்கலைக்கழக வளாகம் காலத்தின் தேவையை ஒட்டி அமைந்து விட்டமை கல்வியின் வளர்வுக்கு உந்துதலாக அமைந்துள்ளது.

வன்னிப் பிரதேசங்களில் ஆங்கில ஆட்சிக்காலத்தின் ஆரம்பத்தில் இடம்பெற்ற பாடசாலைகளில் ஆசிரியத்தேவைகளைப் பூர்த்திசெய்து கொள்ளும் நோக்கத்துடன் தெரிவுசெய்யப்பட்ட ஆரம்பவகுப்பு ஆசிரியர்கள் சாதாரணமாக எழுதவாசிக்கத் தெரிந்திருந்தால் போதும் என்ற கணிப்பின் அடிப்படையில் இடம்பெற்றனர். வகுப்பில் திறமை மிக்கமாணவர்கள் அல்லது ஆசிரியர்களின் பிள்ளைகள் சட்டாம்பிள்ளைகளாக நியமனம் பெற்று வந்தனர். இவர்களே பின்னர் ஆசிரியர்களாகவும் நியமனம் பெற்றனர். இன்று வளர்வுபெற்ற நாடுகளில் பின்பற்றப்படுவதுபோன்று

ஆசிரியர்ப்பயிற்சி பெற்றவர்கள் மட்டும் தான் ஆசிரியத் தொழிலில் ஈடுபடமுடியும் என்னும் நிலை இன்றும் இலங்கைபோன்ற வளர்முக நாடுகளில் பின்பற்றப்படுவதில்லை. க.பொ.த. சா.த அல்லது உயர்தர சான்றிதழ்கள் பெற்றோர் எவரும் ஆசிரியராக இருப்பதற்குத் தகுதியுடை யவர்கள் என்னும் கருத்தே ஆசிரிய நியமனத்தில் பின்பற்றப்படுகின்றதே யன்றி மாணவர்களின் தேவைகள், உளவியல் தாக்கங்கள், கற்பித்தல் முறைகள், பாடத்திட்டமிடல், போன்ற அறிவுத் தேவை புறக்கணிக்கப் படுவதால் எமது மாணக்கரின் கல்வி வளர்ச்சியிலும தனித்துவ மேம்பாட் டிலும் பல இடர்வினைகள் ஏற்படுவத தவிர்க்கமுடியாததே. ஆரசியல் நோக்கில் எதோ பெற்றோரைத் திருப்தி செய்யம் நோக்கில் பாடசாலை களுக்கு ஆசிரிய நியமனங்கள் வழங்கப்படுகின்றதேயன்றித் தகுதி தகமைகள் கவனிக்கப்படுவதில்லை. தரப்படுத்தல், பிரதேச முதன்மை போன்றனவும் கல்வியில் பெரும் தாக்கத்தினைக் கொண்டமைவது கண்கூடு. போர்த்துக்கேயர் காலத்திலிருந்த இலங்கை விடுதலை அடையும் காலம் வரை வன்னியின் கல்வி வரலாற்றில் பாடசாலைகள் பெரும்பாலும் ஐந்தாம் வகுப்பு வரை கல்விபெற்றுத் தரும் நிறுவனங்களாகவே காணப்பட்டன. இதனால் பெற்றோர் கல்வியில் பெரிதாக அக்கறை செலுத்தியதாகக் காணப்படவில்லை. தமது பிள்ளைகள் கையெழுத்து வைக்கத்தெரிந்திருந்தால் போதும் என்ற மனப்பாங்கோடு இருந்து வந்தனர். துமது அன்றாட வேலைகளைக்கவனிப்பதே பிள்ளைகளின் தலையாய பணி என்பதே பெற்றோரின் நோக்கமாகும். அவர்கள் கல்வி கற்று என்னதான் செய்யப் போகின்றார்கள் என்ற மனப்பாங்கு பலரிடமும் காணப்பட்டது. அவர்களுக்குக் கல்வி விழுமியங்களோ அதன் பலாபலன்களோ தெரிந்தி ருக்க வாய்ப்பு இருந்திருக்க வில்லை. கல்வி என்பது உத்தியோகத்திற் காகத்தான் என்னும் எண்ணம் இன்றுகூட பல பெற்றோரிடம் காணப் படுகின்றது. வாழ்வின் செம்மை, உயர்வு, வளர்வுக்குக் கல்வி பலவழிக ளிலும் பயனளிக்கும என்னும் கருத்தை அவர்கள் புறக்கணித்து வந்தள் ளனர். ஆல்லது தெரியாதிருந்தனர் எனலாம்.

இத்தைய சூழ்நிலைகள் வன்னிப்பிரதேசக்கல்வியின் வளர்ச்சிக்கு தடைகளாக இருந்து வந்துள்ளன. 1970களில் முல்லைத்தீவு மாவட்டத்தில் 70க்கு மேற்பட்ட பாடசாலைகள் காணப்பட்டன. வவுனியாவில் 90 பாடசாலைகளும் மன்னாரிலும் அதே அளவினதாகக் காணப்பட்டன. சிலபாடசாலைகள் ஆசிரியர்கள் இல்லாத காரணத்தினாலும் மாணவர்கள பற்றாக்குறைகளாலும் மூடப்படவேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டன. பனங்காம், ஆண்டான்குளம் போன்ற முல்லைத்தீவு மாவட்டத்திலுள்ள பழம்பெருமைமிக்க கிராமங்களில் உள்ள பாடசாலைகள் மூடப்பட்டு அயல்கிராமங்களுக்கு மாணவர்களை அனுப்பவேண்டிய துர்ப்பாக்கிய

நிலைமை தோன்றியமைக்குத் தற்கால கெடுபிடிகளும் மக்களின் இடப் பெயர்வுகளும் காரணிகளாகும்.

இன்று வன்னிப்பிரதேசத்தில் பெருந்தொகையான மாணவர்கள் இடப் பெயர்வு, பஞ்சம், பசி, பட்டினி போன்ற காரணங்களால் பாடசாலைகளுக்குச் செல்லமுடியாத நிலையில் இருப்பதை யேர்மெனி போன்ற வெளியுலக நாடுகளின் செயற்பாடுகள் வெளியே படம்பிடித்துக் காட்டுகின்றன. உலக நாடுகள் அமையத்தின் செயற்பாடுகள் வன்னியில் உள்ள பாடசாலை மாணவர்களின் கல்வி நிலைபற்றியும், அவர்களின் குறைபாடுகள் பற்றியும் பல தகவல்களைக் கொண்டு வந்துள்ளமையோடு, ஆசிரியர் பற்றாக் குறைக்கான காரணங்களையும் முல்லைத்தீவு, மன்னார், வவுனியா, திருகோணமலை, மட்டக்களப்பு மாகாணங்கள் கொண்டுள்ளமை எடுத்துக்காட்டுகின்றன. போதிய உணவின்மையாலும், போசாக்கு இன்மையாலும் பிள்ளைகள் கல்வியில் அக்கறை செலுத்த முடியதா நிலையின் உள்ளனர் என்ற உண்மையையும் வெளிக்கொண்டு வந்துள்ளன. உணவுப் பற்றாக்குறைகாரணமாக பெருந்தொகையான வன்னி மாணவர்கள் கண்பார்வை இழத்தல், காது கேட்காமை, மூளைவளர்ச்சி பாதிப்புப் போன்ற வற்றிற்கு ஆளாகின்றார்கள் என்பதனை கடல் கடந்த நாடுகளில் வசிக்கின்ற ஈழத்தமிழர்கள் சற்றுச் சிந்தித்துப் பார்த்தால் எதுவித உதவியும் இன்றி அலைந்து பஞ்சத்தில் வாடிக் கொண்டிருக்கும் எம் இரத்தங்களுக்கு ஏதோ ஒரு வகையில் உதவிக்கரம் நீட்டமுடியும். முனம் இருந்தால் இடமுண்டு என்பதற்கமைய தமிழினம் செயற்படுதல் எம் இனத்தை பேரழிவிலிருந்து பாதுகாக்க உந்துகோலாக அமையும்.

வன்னிப் பிரதேசத்தின் கல்வியின் பின்னடைவிற்கு இன்று அங்கு காணப்படும் போர்மேகம் சூழ்ந்து பாடசாலைகள், வீதிகள், வீடுகள், விவசாய நீர்ப்பான நிலைகள் எனன்பன அழிந்துபோன நிலையும், போக்குவரத்துக் கட்டுப்பாடுகளும், பாடசாலைக்கான வளங்களைப் பெற்றுக்கொள்ள முடியாத நிலையும், கற்றறிந்த அனுபவம் மிக்க ஆசிரியர்களின் வெளியேற்றமும், மாணவ வளம் குறைவடைந்தமையும் முக்கிய காரணிக ளாக உள்ளன. போர் காரணமாக மூடப்பட்ட பல பாடசாலைகள் திறக்கப் படாமல் அழிய விடப்பட்டமை மக்களின் மீள் குடியேற்றம், பொருளாதார வாய்ப்புக்கள் சீரமைக்கப்படாமமையும் முக்கிய காரணிகளாக அமை கின்றன.

போர்க்காலங்களில் பாதுகாப்புத்தேடி ஒடிய மக்கள் தங்கள் வாழ்வியலைத் தாம் குடியேறிய புதிய பிரதேசங்களில் அமைத்துக்கொள்ள நீண்டகாலப்

போரும் வன்னிப்பிரதேசத்திற்குள் மக்கள் மீளக்குடியேற விடாமல் வவுனியா மாவட்டத்தில் அமைக்கப்பட்ட அகதி முகாங்களுக்குள் முடங்கிக் கொண்டமையும் காணரங்களாயின. முல்லைத்தீவு, தண்ணீரூற்று, குமுளமுனை, முள்ளியவளை, பழம்பாசி, நெடுங்கேணி, ஒட்டுசுட்டான் போன்ற கிராமங்களில் வாழ்ந்தவர்கள் வவுனியால் அல்லது வேறு இராணுவக் கட்டுப்பாடுகள் தளர்வாக உள்ள இடங்களில் குடியேறியதோடு தங்களை வலுப்படுத்திக்கொள்ள பல்வேறு முயற்சிகளையும் மேற்கொண்டனர். இதனால் பெரும்பாலானவர்கள் நகர வாழ்க்கைக்கு மாற்றம் பெற்றதனால் அவ்விடங்களைவிட்டு தங்கள் சொந்தக் கிராமங்களுக்கு மீண்டும் செல்ல தயக்கம் கொண்டுள்ளனர். நகரத்தில் புதுத் தொழில்களில் ஈடுபடத் தொடங்கியவர்கள் அந்த வாழ்க்கைக்குத் தம்மைப் பழக்கப்படுத்திக் கொண்டமையால் அவர்கள் மீண்டும் தங்கள் கிராமங்களுக்குச் சென்று மீள் குடியேற்றம் செய்துகொள்ள முனைப்புக் காட்டாமையால் மாணவர்தொகை எதிர்பார்த்ததுபோன்று பாடசாலைகளில் அதிகரிக்கவில்லை. போருக்குப் பின்னரான புனரமைப்பின்போது உலக நாடுகளால் வழங்கப்பட்ட அபிவிருத்தி நிதியில் பல பாடசாலைக் கட்டிடங்கள் கட்டப்பட்டனவாயினும் அவற்றிற்கான மாணவர் தொகை அதிகரிக்காமையால் கட்டிடங்கள் வெறிச்சோடிக் காணப்படுகின்றன. இவற்றைவிட சில கிராமங்கள் புனருத்தாரண பணிகள் மேற்கொள்ளப்படாமையால் போக்குவரத்து மிகவும் பாதிக்கப்பட்டுள்ளமை கல்வியின் வளர்ச்சிக்கு குந்தகமாக அமைந்துள்ளது. குமுளமுனைக் கிராமத்திற்கு போகும் வீதி புனரமைக்கப்படாது மேடும் பள்ளமுமாக இருப்பதால் இரு சக்கர உந்துவண்டியை மட்டுமே பாவிக்கும் நிலை உள்ளது. வாகனங்கள் இப்பாதைகளில் பயன்படுத்துவது தவிர்க்கப் படுவதற்கு அந்தவீதியில் காணப்படும் மேடும் குளிகளும் வாகனங்களை பழுதடைய வைப்பதே காரணமாகும்.

வித்தியானந்தக் கல்லூரிக்கு இலங்கைப் போக்குவரத்து சபையின் வாகனத்தில் காலையில் சென்று மாலையில் திரும்பி வந்த எமது நிலை இன்று இல்லையே என்பதனை நினைக்கும்போது எவ்வளவு தூரத்திற்கு வன்னியின் கிராமங்கள் பின்தள்ளப்பட்டள்ளன என்பது புலனாகின்றது. 30 நிமிடங்களில் செல்லக்கூடியதாக இருந்த வீதிகள் இன்று ஒன்றரை அல்லது இரண்டு மணித்தியாலங்கள் எடுப்பதனை நான் அனுபவ வாயிலாக கண்டறிந்தவன். இந்த நிலைமை போக்குவரத்து சிறப்பாக நடைபெறும் இடங்களில் இல்லை எனலாம். அங்கு மிக விரைவாக இடம்பெறுவதும் குறிப்பிடத்தக்கது. வவுனியாவிலிருந்து முல்லைத்தீவுக்கும் முல்லைத்தீவில் இருந்து வவுனியாவிற்கும், மல்லாவியில் இருந்து யாழ்ப்பாணம் மற்றும் வவுனியாவிற்கும் செல்வதற்கான போக்குவரத்துக்கள் சிறப்பாக இடம்பெறுவது குறிப்பிடத்தக்கது.

இன்று இரு சக்கர உந்து வண்டி அதிகரித்துள்ளமை பொதுப் போக்குவரத்தைப் பாதிக்கின்றமையும் கண்கூடு. இலங்கைப் போக்குவரத்துச் சபையின் வண்டிகள் ஆட்கள் இல்லாமலே செல்லும் நிலை நாளடையில் அந்தப் பகுதிகளுக்கான போக்குவரத்தை நிறுத்திவிடக் காலாக அமைகின்றது. இதற்குத் தனியார் போக்குவரத்து வாகனங்களும் காரணிகளாகும்.

ஒரு பிரதேசத்தின் கல்வி முன்னேற்றத்திற்கு அதற்கான அடிப்படை வளங்கள் முக்கியமானவையாகும். பாடசாலைாக் கட்டிடங்கள், சுற்று மதில்கள் அல்ல கல்வியின் விருத்திக்கான அடிப்படை வளங்கள். நல்ல பயிற்றப்பட்ட, அனுபவம் மிக்க துறைசார் ஆசிரியர்கள் வறிதாகிவிட்டமை கல்வியின் பின்னடைவிற்குக் காலாக அமைகின்றது. கல்வித்திணைக்களம் வழங்கும் புதிய தொழில் நுட்பக் கருவிகளை பயன்படுத்தி கற்றலை மேம்படுத்த வேண்டிய கடப்பாடு ஆசிரியர்களின் கைகளிலேயே உண்டு. கணினிமயமான நவீன உலகின் தேவைக்கேற்ப ஆசிரியர்கள் தங்களின் தரங்களை உயர்த்திக்கொள்ளவேண்டும் என்பது மேலை நாடுகளில் முக்கியமாக முன்வைக்கப்படும் உத்தியாகக் காணப்படுகின்றது. பாலர் வகுப்புத் தொடக்கம் கணினிப் பொறியை பயன்படுத்தம் தொழில் நுட்பம் மேலை நாடுகளைப் போன்று இலங்கையில் நகரப் புற வளர்ச்சியடைந்த பாடசாலைகளைத் தவிர மற்றைய கிராமப்புறப் பாடசாலைகளில் பயன் படுத்தப்படுவதில்லை. கணினி போன்ற தொழில் நுட்பக்கருவிகளைப் பயன்படுத்து மின்வலு ஒவ்வொரு பாடசாலைகளிலும் மட்டுமன்றி வீடுகளிலும் இருத்தல் வேண்டும். ஆனால் இவை கிராமப்புறங்களில் பூச்சியமாகவே உள்ளது. மின் அஞ்சல்களைக் கூடப் பயன்படுத்தப்பட முடியாத நிலை முல்லைத்தீவு மாவட்டப்பாடசாலைகளில் காணப்படுகின்றன என்பது கவலையைத் தருகின்றது.

# வன்னிப் பிரதேசத் தனித்துவமும் பண்பாடும்

**நோர்வே சுந்தரலிங்கத்தால் தொகுக்கப்பட்ட**
**வன்னி– வரலாறும் பண்பாடும் (2014)**
**என்னும் கட்டுரைத் தொகுதியில் எழுதப்பட்ட கட்டுரை)**

**வரலாற்றுச் சுருக்கம்:**

இலங்கையின் வடமாகாணத்தில் ஒருபகுதியையும் கிழக்கு மாகாணத்தில் ஒரு பகுதியையும் உள்ளடக்கிய பகுதியாக வன்னிப் பிரதேசம் அமைவுற் றுள்ளது. முல்லைத்தீவு, வவுனியா, மன்னார், கிளிநொச்சி மாவட்டங்களை உள்ளடக்கிய நிலப்பரப்பைக் கொண்ட பிரதேசத்தை இன்றைய வன்னி என்ற பதம் தாங்கி நிற்கின்றது. ஆனால் சிங்கள வன்னி, தமிழ் வன்னி என்ற பதங்கள் 1960களின் முன்னர் உபயோகத்தில் இருந்துள்ளமையை நாம் கருத்திற் கொள்ளவேண்டும். அநுரதபுரம், மதவாச்சி, ஆனைமடு, புத்தளம், பொலநறுவ போன்ற பிரதேசங்கள், சிகிரியா போன்ற பிரதேசங்கள் வன்னிப் பிரதேசமாகக் கொள்ளப்பட்டு வந்துள்ளன.

யாழ்ப்பாண மாவட்டத்திற்கு வந்து குடியேறியவர்கள் மலபாரியர்கள் அதாவது சேர மண்டலத்தில் இருந்து வந்து குடியேறிய தமிழர்கள் என்பது வரலாறு. சேர மண்டலத்தில் வாழ்ந்த தமிழர்கள் ஆரியர்களின் தாக்கத்தி னாலும் சேர, சோழ, பாண்டிய மன்னர்களிடையே நடைபெற்ற இடையறாத யுத்தங்களினாலும் தனித்து விடப்பட்டனர். “நாடு இரண்டு பட்டால் கூத்தாடிக்கு இலாபம்“ என்பது போன்று அங்கு தனிமைப்படுத்தப்பட்ட கேரளத்துத் தமிழர்கள் வடக்கிருந்து வந்தவர்களின் கலப்பினால் வடமொழிக் கலப்பு ஏற்பட்டது. அதன் தாக்கம் மலையாள மொழியின் பிறப்பு. 50 விழுக்காட்டிற்கு மேலாகத் தமிழை உபயோகித்து வருகிறார்கள். ஆனால் எழுத்துருவில் மாற்றங்களை ஏற்படுத்தி அதனை உபயோகித்து வருகிறார் கள். இந்த நிலை இன்றைய தமிழகத்தைத்தவிர ஆந்திரம், கன்னடம் என்னும் பிரதேசங்களையும் தமிழிலிருந்து வேறுபடவைத்தது. கேரளாவில் இருந்து

இலங்கையில் குடியேறிய இவர்களின் பரம்பரையினர் தமிழர்களாக மொழியில், பண்பாட்டில் ஒரே தன்மை உடையவர்களாப் பாண்டிய, சோழ சேர நாட்டினருடன் உறவு கொண்டவர்களாகக் வாழ்ந்து வருகின்றனர். வன்னியர்கள் தனித்துவம் நிறைந்தவர்களாக இருப்பதற்கு அவர்களது பிரதேசப் பின்னணியும் காரணமாகின்றது.

**இலங்கையின் புவியியற் பின்னணியும் வன்னியும்:**

இலங்கை இந்து சமுத்திரத்தில் அமைந்துள்ள ஒரு சிறு தீவாகும். இது இந்திய உப கண்டத்திற்குத் தெற்கே 18 மைல் தொலைவில் அமைந்துள்ளது. இலங்கைத் தீவு இராவணன் நகர், இராவணேஸ்வரம், சீலம், சிலோன், ஈழம், இரத்தினதுவீபம், செரண்டிப், தப்ரபேன், ஸ்ரீலங்கா, சிங்களத்தீவு, சீகளம், லங்கா, ஸ்ரீலங்கா எனப் பல பெயர்களால் அழைக்கப்பட்டு வந்துள்ளது. 1225ம் ஆண்டளவில் இலங்கைக்கு வந்த மார்க்போலோ என்னும் வெனிஸ் நகரத்து மாலுமி இலங்கை பற்றிக்குறிப்பிடும் போது “நல்ல வகை இரத்தினக் கற்கள் இங்கு விளைவதாகவும், கடலில் முத்துக்குளிப்பதாகவும், முத்துக்குளிப்பவர்களை பிடித்து உண்ணும் பெரிய மீன்கள் உள்ளதாகவும், அவற்றைக் கட்டுப்படுத்துவதற்கு மந்திரவாதிகள் படகுகளில் ஏற்றிச் செல்லப்படுவதாகவும், வெப்பம் மிக்க இப்பிரதேச மக்கள் மேலாடை அணிவதில்லை.” என்றும் குறிப்பிடுகின்றார். சீனப் பயணத்தை முடித்துக் கொண்டு திரும்பும் வழியல் திருகோணமலைத் துறைமுகத்தில் வந்திறங்கிய மார்க்கபோலோ அங்கு ஆட்சிசெய்துகொண்டிருந்த ஜெயவர்ம பாண்டியனின் அவைக்குச் சென்று அவனது ஆட்சிச்சிறப்பை புகழந்துரைத்துள்ளான்.

மத்திய பிரதேசத்தில் முக்கியமான ஐந்து மலைகள் காணப்படுகின்றன. சிவனொளிபாதம், கிரிகாலப்பொத்தை, தோட்டப்பாலை, நமுனகுல, பீதுறுதாலகாலை என்பனவே ஆகும். வடக்கு நோக்கி இம்மலைத் தொடர்கை மொழிகள் போன்று உயர்ந்தும் பதிந்தும் செல்வதால் அவற்றை (Nakals) நக்கிள்ஸ் மலைத் தொடர் எனவும் அழைக்கின்றனர். இப்பாறைத் தொடர்கள் வவுனியா வரையும் சென்று முடிவடைகின்றன. மலைப் பிரதேசத்தில் மிக உயர்ந்த நீர்வீழ்ச்சிகளும், சற்று வித்தியாசமான போக்கைக் கொண்டதான நதிகளின் போக்குக்களும் குறிப்பாக பாறை அமைப்பிற்கு எதிர்மாறாக மகாவலிகங்கை ஊடறுத்துச் செல்லும் போக்கு மேலும் அழகுதரும் காட்சிகளாகக் காணப்படுகின்றன.

மத்திய மலைநாட்டிலிருந்து நாலாபுறமும் ஓடிக் கடலில் கலக்கும் நதிகள் நாட்டிற்குச் குளிர்மையையும் வளத்தையும் தருகின்றன. இவற்றுள் களனிகங்கை, மகாவலிகங்கை, கழுகங்கை, யான்ஓயா, மதுறுஓயா, மகா ஓயா, அருவியாறு என்பன முக்கியமானவையாகக் குறிப்பிடப் படுகின்றன.

மகாவலிகங்கையில் கட்டுகாஸ்தோட்டை என்னும் இடத்தில் அணைபோடப் பட்டு நீர் அனுராதபுரம் வரையில் திருப்பப்பட்டு விவசாயத்திற்குப் பயன் படுத்தப்படும் நிலைமை வரண்ட பிரதேசத்திற்குச் செழுமை யூட்டுவதாகவும் பொருளாதார வளத்தின் விருத்திக்கு ஆதாரமாகவும் அமைந்துள்ளமை பல குடியேற்றங்கள் ஏற்படக் காரணமாயுள்ளன. ஆனால் அந்த நீரை வடக்கு நோக்கி கிளிநொச்சிவரை கொண்டுவரும் சாத்தியக் கூறு இருப்பினும் அதனைச் செய்ய அரசு முன்வரவில்லை. இரணைமடுக் குளத்திற்கு நீர் வருமானால் பெருந்தொகையான விவசாயிகள் பயனடைவர் என்பது மட்டுமன்றி குடிநீர் இன்றித் தவிக்கும் யாழ்ப்பாணத்து மக்களுக்கும் பயனை அளிப்பது இலகுவானதாக அமையும் என்பது திண்ணம்.

**இலங்கையின் வரலாற்றுப் பின்னணி:**

இலங்கையில் இயக்கர், நாகர் என்னும் திராவிட இனத்தைச்சேர்ந்த பூர்வீகக் குடிகள் கற்காலத்திற்கு முன்பிருந்தே வாழ்ந்து வந்துள்ளனர் என்பதற்கு தொல்லியல் ஆய்வாளர்கள் சான்றுகளை அடையாளப்படுத்துகின்றனர். நாக வளிபாடு, சிவவழிபாடு என்பன ஆதிகால வாசிகளிடம் குடிகொண் டுள்ளன. இயக்கர் சிவவழிபாட்டையும், நாகர் நாகவழிபாட்டையும் பின்பற்றினர் என்கின்றனர் வரலாற்று ஆய்வாளர்கள். நாகதீபம் அல்லது நயினாதீவு என்பது நாகவழிபாட்டினைப் பின்பற்றிய நாகமரபினர் வாழ்ந்தமைக்கான ஆதாரங்களைக் காட்டுகின்றனர்.

கி.மு.500 ஆண்டளவில் வட இந்தியாவிலுள்ள வங்கதேசத்திலிருந்து வந்த விஜயனும் அவனது கூட்டத்தினரும் இங்கு குடியமர்ந்ததிலிருந்தே “சிங்களர்“ என்னும் ஓர் இனம் தோற்றுவிக்கப்பட்டது. கி.மு. 500 அளவில் கௌதம புத்தரால் தோற்றுவிக்கப்பட்ட பௌத்தம் தென் ஆசிய நாடுகளில் மிக வேகமாகப் பரப்பப்பட்தற்கு இந்தியாவல் இருந்த வைணவ மற்றும் இந்து மதங்களின் நடவடிக்கைகளும் அவற்றுள் நலிந்து காணப்பட்ட குறைபாடு களுமேயாகும். கி.மு. 270ம் ஆண்டளவில் இலங்கையில் பௌத்த மதம் பரப்பப்பட்டது. அதற்கு முன்னர் சைவமே பின்பற்றப் பட்டு வந்துள்ளது. இதற்கு இராவணேசன் வரலாறு முக்கியமானது. சைவத்தை அழித்து வைணவத்தை ஓங்கவைக்க இடம்பெற்ற ஒரு போராட்டமே “இராம – இராவண“ யுத்தம் என ஊகிக்கமுடிகிறது. திடகாத்திரமும், வீரமும், அறிவாற்றலும் மிக்கவனான இராவணனின் வீரத்தை “அரக்கத்தனம்“ என வர்ணிக்கப்பட்டுள்ளது. அவனது அறிவாற்றலை விதந்துரைக்கப் பத்துத் தலை உள்ளவன் என்று குறிப்பிடப்பட்டிருத்தல் வேண்டும். தான் வணங்கும் சிவனை பூவுலகிற்குக் கொண்டுவர முயற்சி செய்தவன். அத்தோடு தனது தாய் நீண்டதுதூரம் செல்லாமல் இறைவனை வணங்க வேண்டும் என்பதற்காக இறைவன் இருந்த மலையையே பெயர்த்தெடுக்க முனைந்த பராக்கிரமம்

மிக்கவன் என்றால் அவனது ஆற்றல்தான் என்னே? இறை வனே அவனது இசையில் மயங்கி அவனை அழுத்திய காலை மெய்மறந்து விடடுவிட்டார் என்றால் அவனது தவவலிமை இறைவனையே கட்டுப் படுத்தும் தரத்தில் அல்லவா இருந்துள்ளது.

**திராவிடப் பாரம்பரியமும் ஆரிய எதிர்ப்பும்:**
வட இந்தியாவில் இருந்து புலம் பெயர்ந்தவர்கள் திராவிடர்கள். அவ்விதம் புலம் பெயர்ந்தவர்களின் தொடர்ச்சியான தாக்குதல்கள் ஆரியர்களுக்கு கெடுபிடிகளைக் கொடுத்தமையால் அவர்களை வேரோடு கிழைவதற்காகக் கங்கணம் கட்டியவர்கள் மதத்தினைக் கட்டி வளர்க்க முனைப்புக் கொண்டிருந்த முனிவர்கள் எனப் போற்றப்பட்டவர்களே. எல்லோரும் மக்கள், கடவுளின் படைப்புக்கள் என்ற கொள்கைக்கு மாறாக தம் இனத்தையும், மதத்தையும் நேசித்தவர்களால் தூபம் இட்டு வளர்க்கப்பட்ட வகுப்புவாத துவேச அலையின் பயனாக மனித யுத்தங்கள் காலத்திற்குக் காலம் எழுந்துள்ளன. இவ்விதமே கைபர் கணவாய் (இன்றைய காஷ்மீரத்திற்கு) ஊடாக இந்திய உப கண்டத்திற்குள் புகுந்தவர்கள் ஆரியர்கள். அவர்கள் தங்களை நிலைப்படுத்திக் கொள்வதற்காக இங்கு நிலையாக வாழ்ந்த மக்களைத் தாக்கி அழிக்க முற்பட்டுள்ளனர்.

குப்தப்பேரரசன் சந்திரகுப்பதனுக்கு பிரதம அமைச்சனாகவும், போர் வியூகத்தின் திட்டவரை பாளனாகவும் விளங்கியவன் பிராமண மரபில் உதித்த தென்னகத்தைச் சார்ந்த கௌடில்யன். அவனால் வகுக்கப்பட்ட “அர்த்த சாஸ்திரம்“ அயல் நாட்டின்மீது போர்தொடுத்தல் பற்றியும் போர் நெறிமுறைகள் பற்றியம் ஆட்சி அதிகாரம்பற்றியும் எடுத்துரைக்கின்றது. தனது ஆள்புலத்தைப் பலப்படுத்தி அதனை விஸ்தரித்துக் கொள்வதற்காக போர் தொடுத்தல் அறம் என்கின்றது அர்த்த சாஸ்திரம். “மக்களின் மத்தியில் காணப்படும் மோதல்கள், தலைவர்களை வெற்றிக் கொள்வதன் மூலம் தீர்க்கப்படலாம் அல்லது மோதலின் காரணத்தை நீக்குவதன் மூலம் தீர்க்கப்படலாம். தங்களிடையே போரிடும் மக்கள் அவர்களது பரஸ்பர பகையின் மூலம் அரசனுக்கு உதவுகிறார்கள். வேறொரு வகையில் அரச குடும்பத்தினுள் இருக்கும் (பதவிக்கான) சண்டைகள் தர்மசங்கடத்தைக் கொண்டு வருவதோடு மக்களுக்கு பேரழிவையும் கொண்டு வரும். மேலும் அத்தகைய சண்டைகளை முடிவுக்கு கொண்டுவர கடுமையான முயற்சிகள் தேவைப்படும். ஆகையால் அரச குடும்பத்தின் அதிகார மோதல்கள் மக்களிடையே காணப்படும் பூசல்களை விட அதிக பாதிப்பினைத் தருவதாகும். அரசன் மதி நுட்பத்தில் கை தேர்ந்தவனாக இருக்க வேண்டும். கணிப்பதில் திறமையுள்ளவனாக இருக்க வேண்டும்”.

வரலாற்றை எழுதி வைப்பதிலும், கதைகளை ஆக்குவதிலும் மதத் தலைவர் களே முன் நின்றுள்ளனர். சோழர்களினதும் பாண்டியர்களினதும் படையெ டுப்புக்களுக்கு எதிராக சிங்கள பௌத்தத் துறவியாக இருந்த மகாதேரர், சிங்களவர்கள் எழுச்சி பெறவேண்டும் என்னும் நோக்குடன் துட்டகைமுனு (துட்டகெமுனு) காவியத்தினை மகாவம்சம் என்னும் நூலாக எழுதியுள்ளார். அவ்விததே இன்னுமொரு பௌத்தத் துறவி சூளாமணி என்னும் நூலை எழுதியுள்ளார் இவை இலங்கையின் வரலாற்றைக் கூறும் வாயிலாக சிங்கள மக்களிடையே எழுச்சியினைத் தூண்டுபவையாக தமிழர்களுக்கு எதிராக துவேசத்தை வளர்ப்பனவாக விதந்து கூறப்பட்ட காவியங்களாகக் காணப்படுகின்றன.

மதத்தின் பெயரால் மேற்கொள்ளப்படும் இத்தகைய நியாயத்திற்குப் பிறிதான செயற்பாடுகளைக் காலத்திற்குக்காலம் சில மகான்கள் உணர்ந்த செயற்படவும் சமுதாயத்தில் காணப்படும் வேண்டப்படாத செயல்களைத் தடுக்கவும்உதித்துள்ளார்கள். இந்த வகையிலே இந்தியாவில் சமண மதம் பரவவும், பௌத்தம் தோன்றி வளர்ச்சிபெற்று தூர கிழக்கு நாடுகளுக்குப் பரவவும் காலக அமைந்தவை இந்து மதத்தில் காணப்பட்ட குறைகளே எனின் தவறில்லை. இந்து மதத்தின் எழுச்சியிற்கூட ஆரிய வாதம் முன் நிற்பதனை நாம் உணரவேண்டும். இராம காதை மூலம் தென் இந்தியாவில் வாழ்ந்த மக்களை நாகரீகமற்றவர்களாகச் சித்தரிக்க வான்மீகி முயன்றதன் காரணமே அரக்கர்களாக வடிவமைக்கப்பட்டுள்மை நோக்கத்தக்கது. இது மட்டுமன்றி ஆரியருக்கு மிக விசுவாசமாக நடந்துகொண்டவர்களைக கூட அவர்கள் மனிதராக மதிக்க வில்லை மாறாகக் குரங்குகளாகவே சித்தரிக்கின்றனர். மதத்தின் அடிப்படைக் தத்துவத்திற்கு மாறாக அதனைத் தமது கைகளில் எடுத்துக்கொண்டவர்கள் நடக்க முற்பட்டதன் விளைவே ஏனைய மதங்கள் தோன்றக் காரணமாயின. இத்தகைய தாக்கங்கள் இலங்கைத் திரு நாட்டிலும் ஏற்படாமலில்லை.

இராவணன் அழிக்கப்பட்டாலும் அவனது பரம்பரையின் எச்ச சொச்சங்களே இன்று இலங்கையில் உள்ள இயக்கர், நாகர் பரம்பரையினராவர். இவர்கள் வங்கத்தின் இளவரசனான விஜயனின் வருகையோடு கலப்புண்டு மொழி மாற்றம் பெற்று சிங்கள மொழி உருவாகவும் சிங்கள இனம் உருவாகவும் காலாக அமைந்தனர். ஆரம்பத்தில் இயற்கையையும், நாக வழிபாட்டையும், கொண்டிருந்த இயக்கர்களும் நாகர்களும் பின்னர் இந்துக்களாகவும் பௌத்தர்களாகவும் மாறியதற்கான தாக்கங்கள் இந்தியாவிலிருந்தே வந்துள்ளன". என்பதை பேராசிரியர் க. கைலாசபதி அவர்கள் வலியுறுத்தி யுள்ளார்.

இந்தத் தாக்கத்தின் படி அசோகச் சக்கரவர்த்தியின் காலத்திலும், சந்திர குப்த மௌரியனது காலத்தில் இலங்கை, சீனம், ஜப்பான், பர்மா, தாய்லாந்து ஆகிய நாடுகளுக்கு புத்த மதம் பரப்பப்பட்டது. அதனடிப்படையில் தமிழர்கள் கூட புத்தமதத்தைத் தழுவி இருந்தனர் எனினும் காலப்போக்கில் அவர்கள் இந்து மத்தினராக மாறியுள்ளனர். சமண சமயம் எப்படி செல்வாக்குப் பெற்றதாக ஒருகாலத்தில் இந்தியாவில் முதனிலையில் இருந்ததோ அவ்விதமே புத்த மதமும் இந்திய உபகண்டம் எங்கும் பரவியிருந்தது. ஆனால் காலப்போக்கில் இவை அருகியுள்ளன. இவ்விதம் பரவியிருந்த காலத்தில் தமிழர் வாழ்ந்த பிரதேசங்களில் புத்த சிலைகள் வைத்து வழிபட்டிருப்பது வழமையாக இருந்துள்ளது. எனவே மணி பல்லவம் என சிவப்பதிகாரத்தில் இளங்கோவ டிகள் குறிப்பிடும் ஈழத்தில் தமிழர்கள் பௌத்தத்தை தழுவி இருந்துள் ளார்கள் என்பது புலனாகின்றது. எனவே இங்கெல்லாம் சிங்களவர்கள் வாழ்ந்துள்ளார்கள் என்று சில வரலாற்றாசிரியர்கள் திரித்துக்கூற முற்படுவதில் எந்தவித உண்மையும் இல்லை என்பதை நாம் உணர்ந்து கொள்ள வேண்டும். புத்த சிலைகள் இருந்த இடங்களில் எல்லாம் புத்தர்கள் இருந்துள்ளார்கள் ஆனால் சிங்களப் புத்தர்கள் தான் இருந்தார்கள் என்று கூறுவது பொருத்தமான வரலாறாக அமையாது.

இலங்கையின் வடக்கிலும் கிழக்கிலும் தமிழ் மக்கள் பெரும்பான்மையி னராகவும் ஏனைய மாகாணங்களில் சிங்களவர்கள் பெரும்பான்மையா கவும் வாழ்கின்றார்கள். இற்றைக்குப் பத்தாயிரம் ஆண்டுகளுக்கு முன்பே தென் இந்தியாவின் ஆதிக்கத்திற்கு இலங்கை உட்பட்டிருந்தது. கி. பி. 10ம் நூற்றாண்டில் தென்னிந்தியாவில் ஆதிக்கம் செலுத்திய சோழ அரசர்கள் இலங்கையையும் கைப்பற்றித் தமது ஆதிக்கத்தின் கீழ் வைத்திருந்தனர்.

இலங்கைத் தீவானது சிங்கள மன்னர்களாலும் தமிழ் மன்னர்களாலும் ஆட்சி செய்யப்பட்டு வந்துள்ளது. தமிழர்கள் பரந்து வாழும் வடக்கு, கிழக்கு மாகாணங்கள் தமிழ் அரசர்களினால் ஆட்சி செய்யப்பட்டு வந்துள்ளது. கண்டி, கோட்டை என்னும் இரு பெரும் இராச்சியங்கள் காணப்பட்டன. வர்த்தக நோக்கத்தோடு தரைமார்க்கமாக வந்த அராபியர்களின் வாரிசுகளாகிய ஸ்லாமியரும் இங்கு வாழ்ந்து வருகிறார்கள். ஐரோப்பியரான போர்த்துக்கேயர் வந்தபோது (1505) கோட்டை இராச்சியத்தைப் பங்குபோட்டு அரசாட்சி செய்த சகோதர்கள், தமக்கிடையே ஒற்றுமை இன்மையால் மூன்று பிரிவாகப் பகுத்துக் கொண்டனர். ஆவர்கள் ஒருவரை ஒருவர் தாக்கி முழு இராச்சியத்தையும் கைப்பற்றிக் கொள்ள இடையறாது போரிட்டுக் கொண்டிருந்தனர். கோட்டைப் பகுதியை ஆட்சி செய்ய புவனேகபாகு அங்கு வந்த போர்த்துக்கேயரின் உதவியை நாடினான். அதனால் போர்த்துக்கேயர் இலகுவாக அதிகாரத்தைக் கைப்பற்றிக் கொள்ளும் வாய்ப்பைப்

பெற்றிரந்தனர். “நாடு பிளவுபட்டால் கூத்தாடிக்கு இலாபம்“ என்பதனை உணர்ந்துகொண்ட போர்த்துக்கேயர் வியாபார நோக்கத்தோடு வந்தனர் எனினும் தமது மேலாண்மையை இங்கு இலகுவாக நிலைா நாட்ட வாய்ப்பாக அமைந்தது. வடக்கிலும் கிழக்கிலும் யாழ்ப்பாண இராச்சியம், வன்னி இராச்சியம் என இரு பெரும் ஆட்சிப் பிரிவுகள் காணப்பட்டன. யாழ்ப்பாண இராச்சியத்தை ஆண்ட கடைசி மன்னன் சங்கிலியன் ஆவான். இவன் போர்த்துக்கேயரால் 1619ல் இலகுவாகத் தோற்கடிக்கப்பட்டான். அதற்கும் அவர்களிடையே இருந்த ஒற்றுமையீனமே காரணமாக அமைந்தது. அதன் பின்னர் இலங்கைக்கு வந்த ஒல்லாந்தர் போர்த்துக்கேயரோடு போர் தொடுத்தனர் போர்த்துக்கேயரைத் தோற்கடித்த ஒல்லாந்தர் இலங்கையின் கரையோரங்களில் தமது அதிகாரத்தைச் செலுத்தினர் எனினும் வன்னி, கண்டி அரசுகள் ஆங்கிலேயரால் கைப்பற்றப்படும் வரை சுயாதீனமாகவே இயங்கி வந்தன.

1665இல் வந்த ஒல்லாந்தர் போர்த்துக்கேயரிடமிருந்து அதிகாரத்தைக் கைப்பற்றிக் கெண்டனர். ஆங்கிலேயர் 1796இல் இலங்கையின் கரையோரப் பிரதேசங்களைகத் தமதாக்கிக் கொண்டனர். ஒல்லாந்த படைவீரர்களில் ஒரு பகுதியினர் இங்கு தங்கி விட்டனர் அவர்கள் கரையோரங்களில் இருந்த சுதேசமக்களுடன் கலந்து திருமண உறவுகளை ஏற்படுத்திக்கொண்டதன் விளைவாக இலங்கைப் பறங்கியர் சமூகம் தோன்றக் காலாக அமைந்தனர். கண்டி இராச்சியம் ஆங்கிலேயரால் 1815ஆம் ஆண்டு கைப்பற்றப்பட்டது. கண்டியின் இறுதி மன்னன் ஸ்ரீவிக்கிரம இராஜசிங்கன். கண்டி இராச்சியத்திற்கு வாரிசு இல்லாத காரணத்தால் பட்டத்து இராணியின் சகோதரனான இவன் முடிசூட்டப்பட்டான். இவனின் இயற் பெயர் கண்ணுச் சாமி. ஆங்கிலேயரால் தோற்கடிக்கப்பட்ட இவன் வேலூருக்கு நாடுகடத்தப் பட்டான். வன்னி இராச்சியத்தின் இறுதி மன்னன் குலசேகரன் வைரமுத்து பண்டார வன்னியன் ஆவான். அவன் 1811ம் ஆண்டு ஆங்கிலேயருடன் இடம்பெற்ற யுத்தத்தில் குண்டு பட்டு பனங்காமத்தில் உயிர் துறந்தான். “இறுதியாக உடையாவூரில் இடம்பெற்ற போருக்குப்பின்னர் எந்த எதிர்ப்பும் இருக்கவில்லை” என கப்ரின் றிபேக்கை மேற்கோள்கட்டி ஜெ.பி. லூயிஸ் குறிப்பிடுகின்றார். 1796 இலங்கையின் கரைசார் மானிலங்களைக் கைப்பற்றிய ஆங்கிலேயர் ஈற்றில் அகில இலங்கையையும் தமது ஆதிக்கத்திற்குள் கொண்டு வந்தனர். 1889இல் இலங்கை ஒன்பது மாகாணங்களாகப் பிரித்து ஆட்சி செய்தனர். இலங்கை 1948ம் ஆண்டு பெப்ரவரி 4ம் திகதி ஆள்நிலப் பத உரிமையைப் பெற்றுக்கொண்டது. ஆங்கிலேயரின் குடியேற்ற நாடாக இருந்த இலங்கைக்குப் பிரித்தானிய அரசியே அரசியாகவும் இருந்தார். 1948ஆம் ஆண்டு தொடக்கம் ஈழத் தமிழர்கள் தமது உரிமைகளுக்காகப் போராடி வருகின்றனர். 1956இல்

தமிழ்ர்களுக்கும் சிங்களவர்களுக்கமிடையே இனக்கல வரம் வெடித்தது. இன்றுவரை அடிக்கடி இனக்கலவரங்கள் இடம் பெறுவதனைக் காணலாம்.

இலங்கைக்கு விடுதலை கிடைக்கவேண்டும் என்று போராடியபோது சிங்களவர் தமிழர்களோடு இணைந்து போராடினார்கள். அனைத்து மக்களுக்கும் விடுதலை என்ற சித்தாந்தம் முன்வைக்கப்பட்டிருந்தாலும் ஈழ வரலாற்றில் எல்லாளன் காலத்திற்கு முன்பிருந்தே சோழ, பாண்டிய படை எடுப்புக்கள் சிங்களவர்களிடையே தனித்துவத்தையும், எதிர்ப்புணர்வையும் வளர்த்து வந்திருந்தமைக்கு மொழி, மதம் இரண்டும் முக்கிய காரணிகளாக அமைந்தன. பாண்டியரின் படையெடுப்புக்களால் நாட்டைவிட்டுத் துரத்தப்பட்டு காட்டில் மறைந்து வாழ்ந்தவன் வாலகம்பாகு என்பதனை மகாநாமதேரர் தனது மகாவம்சத்தில் குறிப்பிடுகின்றார். “தெற்கிலும் மேற்கிலும் கடலின் நெருக்குதலுக்கும் வடக்கே தமிழனின் நெருக்குத லுக்கும் நடுவே நான் எப்படி காலைக் கையை நீட்டி உறங்குவேன்” என மகாவம்ச காவியத்தின் காவியத் தலைவனாக சித்தரிக்கப்பட்டள்ள துட்டகெமுனு பதிலளித்தானாம். தமிழருக்கு எதிரான எண்ணம் அவர்களிடம் தூபமிட்டு வளர்க்கப்படுகின்றது என்பதனை இந்த வாசகம் எடுத்துக்காட்டு கின்றது. மொழியால் சிங்களவர்களாக மட்டுமன்றி மதத்தாலும் பௌத்தர்களாகவும் காணப்பட்டமையும் தமிழர்கள் தமிழ் மொழியைப் பேசுவதோடு மட்டுமன்றி இந்துக்களாக இருந்தமையும் முக்கிய காரணிகளா கக் காணப்பட்டன. இவற்றை விட சிங்கள மக்கள் அனுபவிக்கும் அதே உரிமைகள் தமக்கும் தேவை எனவும் தமது பாரம்பரியத் தாயகம் பாதுகாக் கப்பட வேண்டும் என்றும் தமிழர்கள் போராட்டங்களை நடாத்திவரு கின்றனர். சமத்துவம், சமாதானம், சம உரிமை என்பன ஒரு நாட்டு மக்களின் அடிப்படைத் தேவைகளாகும். இதனைப் பல்மொழி, கல்கலாச்சாரம் பேணப்படும் நாடுகளைப் பார்த்தாவது பின்பற்றவேண்டும்.

**வன்னியரின் ஆட்சியும் பாரம்பரியமும்:**

வன்னியர்கள் தென்னிந்திய படையெடுப்புக்களோடு போர்வீரர்களாக வந்தவர்கள். இங்கு குழுக்களாகத் தங்கி வன்னியின் வனப்பினைத் தமதாக்கிக் கொண்டு வாழ முற்பட்டவர்கள். அதன் பின்னர் தமது உறவுகளை வரவழைத்துதுத் தமது வாழ்வை நிலைபெறச் செய்துவந்தார்கள். அவர்கள் வரும்போது தங்களுக்கான தனித்துவத்தைப் பேணிக்காக்கத் தவறவில்லை. தம்மோடு தாம் வணங்கிவந்த குலதெய்வமாம் பிள்ளையார் வழிபாட்டையும், கண்ணகி அம்மன் வழிபாட்டையும் கொண்டுவந்தனர். தமிழ் நாட்டில் இருந்து வந்து குடியேறிய இவர்களிடம் தமிழ் நாட்டில் தாம் வாழ்ந்த பிரசேதத்தின் பண்பாடு ஒட்டிக்கொண்டது. காலப்போக்கில் இவர்க்ள் யாழ்ப்பாணப் பிரதேசத் தமிழர்களோடு கலந்து உறவாடுகின்ற பாங்கினால்

வன்னியருக்கான தனித்துவப்பண்புகள் யாழ்ப்பாணத்தில் வாழும் தமிழர்களுடன் இணைந்ததாகவும் இடம்பெறத் தொடங்கியது. குளக்கோட்டன் படையெடுப்பின்போது இலங்கைக்கு வந்த 60 வன்னியத் தலைவர்களில் 59 வன்னியர்கள் கிழக்குப் பிரதேசத்திலும் வட மத்திய பிரதேசத்திலும் வனப்புமிக்க விவசாய பிரதேசத்தில் நீர்ப்பாசன வாய்ப்புக் களைப் பயன்படுத்தி தங்கள் குடியிருப்புக்களை வியாபித்துக்கொண்டனர். குளக்கோட்டனால் அமைக்கப்பட்ட கந்தளாய்க் குளமும், வவுனிக்குளமும் பாரிய நீர்ப்பாசன திட்டங்களாக அமைந்திருந்தன. இவற்றைவிட பல்வேறு குழங்களை சீர்திருத்தியும் புதிகாக அமைந்தும் விவசாயத்தை வளர்த்து வன்னியை வளமுடைய மருதநில இயல்பினை ஏற்படுத்திவந்துள்ளனர்.

ஆங்கில ஆட்சிக் காலத்தில் தமது வருவாயைப் பெற்றுக் கொள்வதற்காக இந்தியாவிலிருந்து கொண்டுவரப்பட்ட படித்தவர்கள் தாம் பிரித்தானியர் களின் செல்லப்பிள்ளைகளாகவும் சமுதாயத்தில் தனித்துவ மானவர்களா கவும் ஏனையவர்களைவிடத் தாம் உயர்ந்தவர்களாகவும் காட்டிக்கொண்டு வாழவும் தலைப்பட்டனர். இதனால் அவர்கள் ஏனையவர்களோடு கலக்காது தனித்துவமான குழுக்களாக சிற்சில கிராமங்களைத் தமதாக்கிக்கொண்டு வாழத்தலைப்பட்டனர். இத்தகைய தனித்துவப் பண்புகள் வன்னியில் காணப்படுகின்றது. இது தவிர சிங்களப்படை யெடுப்புக்களின் காரணமாக அநுரதபுரம், பொலநறுவை, புத்தளம் போன்ற பகுதிகளில் வாழ்ந்த தமிழர்கள் தங்கள் மொழி, பண்பாடு என்பனவற்றை மறந்து சிங்களவர்களாக மாறி வாழுகின்ற துர்ப்பாக்கிய நிலையும் சிங்களவன்னி என்ற பிரதேசத்தில் நிலைத்துவிட்டது. இவ்விதமாக அமைந்த கிராமங்களின் பண்புகளையும் மக்கள் வாழ்க்கை முறையையும் அங்கு உள்ள வளங்களையும் பற்றிய செய்திகளைத் தருவதாக இத் தொடரை எழுத முனைந்துள்ளேன்.

வன்னி என்பதற்கு நெருப்பு என்பது பொருள். வன்னியர்கள் தீ போன்றவர் கள். எதனையும் சுட்டெரிக்கும் தன்மை கொண்டவர்கள் என்ற பொருளும் உண்டு. இதனைவிட வன்னி மரங்கள் நிறைந்த பிரதேசத்தில் உள்ளவர்கள் என்ற கருத்தும். தீ போன்று போராட வல்லவர்க்ள என்னும் பொருளும் கொள்ளப்படுகின்றது. வன்னியில் வாழ்ந்தவர்கள் அடங்காதவர்கள், அடக்கப்பட முடியாதவர்கள் என்ற கருத்தில் “அடங்காப்பற்று” என்னும் பெயரும் வழங்கப்படுகின்றது.

தென் இந்தியாவில் இருந்து போர்வீரர்களாக் கொண்டு வரப்பட்டவர்கள் என்பதும், அவர்கள் இங்கு குடியமர்த்தப்பட்டதால் ஏற்பட்டதே வன்னியர் பிரதேசம் என்னும் வரலாறு வன்னியர்களோடு பின்னிப்பிணைந்துள்ளது.

கி.மு. இரண்டாம், முதலாம் நூற்றாண்டுகளில் வன்னியர்களை போர்வீரர் களாக சோழர்கள் கொண்டுவந்துள்ளனர். இருப்பதற்காக அவர்களுக்கு வழங்கப்பட்ட இடங்களை அவர்கள் தாமே பரிபாலிக்க போர்த்தளபதிகளாக வந்த வன்னியத் தலைவர்கள் நியமிக்கப் பட்டுள்ளனர். திருகோணமலை யில் அமைக்கப்பட்ட கோணசர் ஆலயத்தைப் பரிபாலிக்க அவ்வாலயத்திற்கு ஆண்டுதோறும் வரி செலுத்தவேண்டும் எனப் பணிக்கப்பட்டவர்கள் வன்னியர்கள். தங்கள் வன்னிமையில் இருந்து ஆண்டுதோறும் விளை பொருட்கள், காடுபடு திரவியங்களை வழங்கிவந்ததோடு ஆலயத்தின் வருடாந்த விழாக்களிலும் கலந்துகொண்டு சிறப்பித்தனர்.

“வன்னியர்களின் அதிகாரம் தலைமுறை தலைமுறையாக வளர்ந்துவந்தது. சோழப் பேரரசு நலிவுற்ற காலத்தில், குறுநிலமன்னராகிய வன்னியர்கள் சுதந்திரமாக ஆளத்தொடங்கினர். சோழராட்சிக்குப்பின் இரண்டாவது பாண்டியப்பேரரசு நிலைபெற்ற காலத்தில் வன்னியர் பாண்டியர் ஆட்சிக்கு உட்பட்டிருந்தனர். பாண்டியப் பேரரசு தளர்வுற்ற காலத்தில், பாண்டியர்மேல் ஆதிக்கம் செலுத்திய மூன்றாம் வல்லாளதேவனாகிய கொய்சளமன்னனின் ஆணைக்குக் கட்டுப்பட்டிருந்தனர் வன்னியர். விஜயநகர மன்னர் காலத்திலே அம்மன்னர்களோடு வன்னியர் போர் நிகழ்த்தித் தோல்வியுற்றனரென ஆசிரியர் பல சான்றுகள் காட்டுகின்றார். கிருஷ்ணதேவராயர் காலத்தை யொட்டித் தமிழகத்து வன்னிமைகள் அரசியல் ஆதிக்கத்திலிருந்து அழிந்தொழிந்தன.” என பேராசிரியர் சு.வித்தியானந்தன் அவர்கள் வராற்றுப்பேராசிரியர் சி.பத்மநாதன் அவர்களின் “வன்னியர் வராலாறு” என்ற நூலுக்கு எழுதியுள்ள அணிந்துரையில் குறிப்பிட்டுள்ளமை இந்தியாவில் இருந்த வன்னியர்கள்பற்றிய குறிப்புக்களைத் தருகின்றன.

தொடர்ந்து ஈழத்து வன்னியர்வள்பற்றிக் குறிப்பிட்டுள்ள வரலாற்று நூலில் வன்னியர்களிடையே இருந்த பிரிவுகளையும் எடுத்துக்காட்டுகின்றது என்பதனை அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார்: “தமிழ், சிங்கள அரசுகளில் வன்னிமைகள், வன்னி நாடுகளின் தோற்றம், திருமலை வன்னிமைகள், முக்குவ வன்னிமைகள்” என்பனவற்றை அவரது நூலில் அவணப்படுத்தி யுள்ளமையை சு.வீதியானந்தன் குறிப்பிடுவதன் நோக்கம் வன்னியர்களி டையே பல்வேறு வகுப்பினர் வெவ்வேறு நிலைகளில் இருந்துள்ளனர் என்பதனை எடுத்துக்காட்டுவதாகும்.

பத்தாம் நூற்றாண்டில் ஈழத்திற்குப் படையெடுத்துவந்த கலிங்கமாகன் என்னும் அரசனின் படையெடுப்போடு பொலநறுவையைத் தலைநகராகக் கொண்டு ஈழம் முழுமையையும் ஆண்ட தமிழ் பேரரசுகளின் வராறு முற்றுப்பெற, பாண்டியர்களின் படையெடுப்போடு குறுநில அரசுகளின்

தோற்றப்பாடு வன்னியில் பல்வேறு பகுதிகளிலும் ஏற்பட்டிக்கின்றது.

“இதே காலத்தில், அதாவது மாகனது ஆட்சிக்குப் பின், பதின்மூன்றாம் நூற்றாண்டிலிருந்து சிங்கள அரசர் முதலிலே தம்பதெனியாவிலிருந்தும் பின் குருநாகல், கம்பளை கோட்டை முதலிய நகர்களிலிருந்தும் ஆட்சிசெயதுள்ள னர். அவ்வாட்சியிலும் வன்னி எனப்பட்ட குறுநில அரசுகள் வளர்ச்சியடைந்தி ருந்தன”. எனக்குறிப்பிடும் பேராசிரியர் சி. பத்மநாதன பதின்மூன்றாம் நூற்றாண்டிற்கு முன்பே வன்னிமைகள் இருந்துள்ளன. ஆனால் அந் நூற்றாண்டுக்கு முன்பே வன்னிமைகள் தோன்றியிருந்தன என்பதற்க அவர் தக்க ஆதாரங்களைத் தந்துள்ளார். வேளக்காரப் படைகள் ஈழத்தின் சில பகுதிகளிற் தமெக்கென அரசுகளை அமைத்துக்கொண்டு இறையாண்மை யோடு வாழ்ந்துள்ளனர். வேளைக் காரருக்குக் கொடுக்கப் பட்ட படைப் பற்றுக்கள் வன்னிமைகள் உருப்பெறு வதற்குக் காலாக இருந்தன. சோழராட்சிக் காலத்திலும் அதற்குப் பின்பும் வன்னிப் பற்றுக்கள் பல தோன்றிப் பதின்மூன்றாம் நூற்றாண்டின் பிற்பகுதியில் வளர்ச்சியடைந்தி ருந்தன என்பத அவரது கருத்தாகும்.

“கோணேசர் கல்வெட்டினையும், திருமலைக் கோட்டைக் கற்றூணில் இருக்கும் கல்வெட்டினையும் அவற்றில் உள்ள வடமொழி எழுத்துக்களை யும் ஆதாரமாகக் கொண்டு குழக்கோட்டன் எனப்படும் சோழ மன்னன் காலத்தில் வன்னிமைகள் இருந்தன” என உறுதிப்படுத்து கின்றார் சி.பத்மநாதன்.

முக்குவ வன்னிமைகளை, மட்டக்களப்பு வன்னிமை, புத்தளத்து வன்னிமை என இரு பிரிவுகளாக வகுத்து விளக்கியுள்ளார் சி.பத்மநாதன். பதின் மூன்றாம் நூற்றாண்டில் கலிங்க மன்னன் மாகன், முக்குவரை மட்டக் களப்புக்கு அழைத்து வந்து அவர்களின் படைத் தலைவருக்கு வன்னிபம் என்ற பட்டத்தை அளித்தானென மட்டக்களப்பு மான்மியம் கூறுகின்றது. சீதவாக்கையிலிருந்து மட்டக்களப்புக்குச் சென்று குடியேறிய இஸ்லாமிய குடும்பங்களின் வரலாற்றைக் கூறும் ஓரேட்டுப் பிரிதி, மட்டக்களப்பில் அதிகாரம் செலுத்திய ஏழு வன்னியர்பற்றிக் குறிப்பிடுகின்றது. தேசாதிபதி பான் கூன்ஸின் அறிக்கையையும் ஆசிரியர் ஆதாரமாகக் காட்டுகின்றார்.

வன்னியர்கள் தனித்துவமானவர்கள் என்பதனைப் ஒல்லாந்தர் குறிப்பிடும் போது “வன்னியர்களிடமிருந்து மற்றவர்களைப் போலன்றி பணிவின் மையைக் களைந்தெடுக்கமுடியாது” என அவர்களது அடங்காக் தன்மையை யும் கீழ்படிய மறுக்குந்தன்மையைப் பற்றியும் குறிப்பிட்டுள்ளனர் என்பதிலி ருந்து வன்னியர் இலகுவில் அடிபணிந்து போகதவர்கள் என்பதனை ஒல்லாந்தரும் நன்கு அறிந்திருந்தனர் என்பதனை உணர்த்துகின்றது. இதே

கருத்தினை J.B. Lewis "Manual Of The Vanni District" என்னும் நூலில் குறிப்பிட் டுள்ளதோடு வன்னியர்கள் "அடங்காத் தன்மை கொண்டவர்கள் கட்டுப் பாட்டை விரும்பாதவர்கள், சுதந்திரமாக வாழ விளைபவர்கள" என்று குறிப்பிட்டுள்ளார். கிளர்ச்சிக்காரர்கள் என வன்னியில் கடமையாற்றிய அரசாங்க அதிர்பர்கள் குறிப்பிட்டுள்ளனர்.

**வன்னியர் வாழ்வியலும் பண்பாடும்**

வன்னியில் உள்ளவர்களின் வாழ்க்கை முறை யாழ்ப்பாணத்திலுள்ள வாழ்க்கை முறையொடு ஒட்டிப்போவதாக வெளித்தோற்றத்தில் காணப்பட் டாலும் பல வேறுபாடுகளையும் கொண்டிருப்பதனை அவதானிக்கலாம். வன்னியில் உள்ள வயல் விதைப்பு, அறுவடை, சூடுவைத்தல என்பன மிகப் பரந்த அளவில் இடம்பெறுவதனால் பல வழிகளிலும் அது யாழ்ப்பாணத்து வயல்விதைப்பு முறையில் இருந்து வேறுபட்டதாக அமைகின்றது. கிராமத்தவர் இணைந்து செயற்படும் ஒரு முறையினை வன்னிப்பிரதேசங் களில் காணமுடிகின்றது. பொது வாழ்வியலில் ஈடுபட்டள்ள கிராமத்துத் தலைமை அதிகாரி (விதானையார், உடையார்), மருத்துவர்கள் போன்றோரின் வயல் வேலைகள் ஊர்மக்கள் அனைவரும் சேர்ந்து செய்யும் முறை காணப்படுகின்றது. பரத்தை அருவி வெட்டு என்பது வன்னிப் பிரதேசத்திற்கு உரிய ஒரு தனித்துவமான முறையாக உள்ளது. வீடு வேய்தல், வீடு கட்ட தேவைாயன காட்டுத்தடிகள், கப்புக்கள் போன்றன வற்றை ஊரவர்கள் சேர்ந்து காட்டிற்கு சென்று வெட்டிக்கொண்டு வருவார்கள். இதற்கு உணவைத் தவிர கூலி கொடுக்கும் முறைமகள் இருந்ததில்லை. மாடு வண்டில் வைத்திருப்போர் தமது மாட்டுவண்டிகளை இலவசமாகப் பயன்படுத்துவார்கள்.

குழுவாகக் காட்டிற்குச் சென்று இரண்டொரு நாட்கள் தங்கியிருந்து வேட்டையாடிய விலங்குகளைப் பதப்படுத்தி அவற்றை கருவாடாகக் கொண்டு வருவதும் கொண்டு வருவனவற்றை உறவினர், அயலவர்களுக்குப் பகிர்ந்து அளிப்பதும் வழமையான கிராமிய வாழ்க்கையாகும். வேட்டுவ வாழ்க்கை மனித வளர்ச்சியின் மிக முற்பட்ட நிலைகளில் ஒன்று. உணவு சேகரிக்கும் நிலை அது. அது குறிஞ்சி நில வாழ்க்கையாக–ஒழுக்கமாக– தமிழரிடையே குறிக்கப்பட்டு வந்துள்ளது. "கல்தோன்றி மண்தோன்றாக் காலத்தே முன்றோன்றி மூத்த குடி" எனத் தமிழர் தம்மைக் கூறிக்கொள்வதும் இதனை அடிப்படையாகக் கொண்டே. இத்தகைய குறிஞ்சி நில வாழ்க்கைக்குத் தெய்வமாக அமைக்கப் பட்டுள்ளான் முருகன்." எனப் பேராசிரியர் கைலாசபதி குறிப்பிடுவதினை நோக்கும்போது இத்தன்மை தொன்று தொட்டுத் தமிழரிடையே நிலவி வந்துள்ளமை புலனாகும். மரக்கறித் தோட்டம் வைத்திருப்போர் உறவினர்களோடு பகிர்ந்து

கொள்வதும் வழக்காறு. சிறு குறிஞ்சா, பெருங் குறிஞ்சா, தூதுவளை, தும்பை, முட்கீரை, பனங்கீரை போன்றன பகிர்ந்து கொள்ளப்படும் வழமையும் இருந்து வந்துள்ளது.

பழ வகைகளும் தேனும் பகிர்ந்துகொள்ளுதலும் வழக்காறு. முரலிப்பழம், பாலைப்பழம் போன்ற காட்டில் கிடைக்கும் பழவகைகளை இளைஞர்கள் சென்று பறித்துவந்து அயலவர்களோடு உண்டு மகிழ்வது மகிழ்ச்சியைத் தருவதாகும். தேன் "சுரைக்குடு" எனப்படும் காய்ந்த சுரைக்காய்ப் பாத்திரமாகப் பாவித்து தேன் எடுத்துவருவர். தேனை வைத்திருப்பவர்கள் மருந்துத் தேவைகளுக்கும் கோயில் தேவைகளுக்கும் அவற்றை வழங்குவது வழமை.

பகுத்துண்டு பல்லுயிர் ஓம்புதல் நூலோர்
தொகுத்தவற்றுள் எல்லாம் தலை

என்றார் வள்ளுவர். அதனடிப்படையில் தமிழர் சால்பினை நல்லறமாகக் கொள்ளும் இல்லறம் வன்னிப் பிரதேசத்திற்குரிய தனித்துவமாகும். காடுகள் மண்டிய தனித்துவமான பிரதேசங்களில் துணிச்சலோடு வாழ்ந்துவரும் வாழ்வியல் முறைகளை வன்னி மண்ணில் காணலாம். பாரம்பரியமாக தனிக்குடும்பத்திற்குச் சொந்தமான நீர்ப்பாசனக் குழங்களும் ஒன்று அல்லது இரண்டு குடும்பங்கள் மட்டும் உள்ள கிராமங்களும் வன்னிப்பிரதேசத்தில் உண்டு. மிகச்சிரமமான வாழ்க்கை முறையை எளிமையோடு எதிர்கொண்டு வாழ்ந்து வருபவர்கள் வன்னிப் பிரதேச மக்கள். குமுளமுனையைச் சேர்ந்த திரு நாகலிங்கம் அவர்கள் 85 வயதுகளுக்கு பின்னரும் தனது 2மைல் தொலைவில் உள்ள சாரலிலுக்கு அறுவடைக்கு சென்று வந்தமை என்னை வியப்பூட்டியது. இறப்பு வரை உழைத்து வாழவேண்டும் என்னும் மனத்திடம் வன்னி விவசாயிகளிடம் குடிகொண்டிருந்ததை அவரிடம் கண்டேன்.

வன்னியர்கள் நீண்டகாலமாக சைவத்தைப் பின்பற்றி வருபவர்கள். இராவணன் ஒரு சிறந்த சிவபக்தன் என்பதும் அவன் திருகோணமலையில் சிவனாலயத்தை அமைத்து வழிபட்டான் என்பதும் புராணக்கதை எனினும் இலங்கையில் சைவம் நிலை கொண்டிருந்தது என்னும் செய்தியைத் தருகின்றது. "சைவ சித்தாந்தமானது தென்னிந்தியாவிற்கே சிறப்பாக உரிய தனிச் சமயமாகும். தென்னிந்தியாவிலே வரலாற்றுக் காலத்திற்கு முற்பட்ட பெருஞ்சமயம் சைவம். ஆரியர் வருகைக்கு முற்பட்ட இச்சமயம் தமிழ் மக்கள் நெஞ்சத்தில் நிறைந்து விளங்குகிறது." –டாக்டர் ஜி.யூ. போப்பையர். குறிப்பிட்டுள்ளமை கருத்திற்கொள்ளற்பாலது. அசோகச்சக்கரவர்த்தியின் காலத்தில் இலங்கையில் பரப்பப்படடது பௌத்தமதம். அதன்முன்னர் சைவமே நிலைத்திருந்தது என்பதனை அறிவதற்குப் புராண இதிகாசங்களும் ஆங்காங்கு காணப்படும் பண்டைய ஆலயங்களின் அழிபாடுகளும்

சான்றாகின்றன.

வன்னிப் பிரதேசத்திற்கு வளம் நல்குவன அங்குள்ள இயற்கையின் கொடைகளான மண்வளம், நீர்வளம், காட்டுவளம், மற்றும் கடல்வளம் என்பன. வன்னிப் பிரதேசம் முல்லை, மருதம், நெய்தல், குறிஞ்சி, பாலை ஆகிய ஐந்திணை வகைகளையும் கொண்டுள்ளது. மன்னார்ப் பிரதேசத்தில் மருதம், நெய்தல், பாலை நிலத்தின் தன்மைகள் காணப்படுகின்றன. ஒரு காலத்தில் முத்துக்குளித்தலில் முதன்மைபெற்ற மாதோட்ட நன்நகர் அமைந்த இடம் மன்னார்ப் பிரதேசத்தில் உள்ளது. இன்று மீன்பிடிக்கு சிறந்ததாகவும் குறிப்பாக வடகீழ் பருவப்பயிற்சிக் காற்றொதுக்குப் பிரதேசமாகையால் இங்கு அமைதியான காலநிலை மீன்பிடிக்கு வாய்ப்பாக அமைகின்றது. மாரிகாலத்தில் முல்லைத்தீவிலிருந்து மன்னாருக்கு மீன்பிடிக்க கரைவலைகளை ஏற்றி கூலியாட்களையும் அழைத்துச் செல்வதனை நான் நேரடியாகவே கண்ணுற்றேன்.

வன்னிப்பிரதேசத்தில் உள்ள முக்கியமான நீர்வளமாக ஆறுகளும் மக்களால் அமைக்கப்பட்ட நீர்ப்பாசனக் குளங்களும் விளங்குகின்றன. கனகராயன் ஆறு, நெத்தலி ஆறு, மன்னாரில் கட்டுக்கரைகுளம் (இராட்சத குளம்), முருங்கன் குளம் என்பன முக்கியமானவை. தேராவில் ஆறு, மருதப் பிலவில் ஆறு, பாலியாறு, பேராறு, குருவிச்சை ஆறு, நாயாறு, வண்ணான் ஆறு, தேரோடும் வீதி, பறையன் ஆறு (மகாஓயா), சூரியன் ஆறு, சிலுப்பை ஆறு, அருவி ஆறு, செட்டிகுளம் ஆறு, கல்லாறு, நல்லதண்ணிஆறு அல்லது பூவல் ஆறு, நொச்சிமோட்டை ஆறு (பறங்கியாறு), பாலி ஆறு (வவுனிக்குளம்) என்பன முக்கியமானவையாயக உள்ளன. இவற்றுள் பெரும்பாலானவை கோடைகாலத்தில் வரண்டுவிடு கின்றன. மாரி மழையில் பெருக்கெடுத்தோடும் இந்த ஆறுகளை மறித்து நீர்த்தேக்கங்களை ஏற்படுத்தி வயல் நிலங்களுக்கு நீர்ப்பாசனம் செய்யும் முறைமை வன்னியரிடம் பன்நெடுங்காலமாக காணப்பட்டுள்ளது.

ஆங்கில ஆட்சிக்காலத்தில் உபயோகத்தில் இருந்த குளங்கள் மிகக் குறைந்தளவாகக் காணப்பட்டமைக்கு அரசாங்கத்தின் நிதியதவி கிடைக்கா மையும் அரசாங்கம் பெருந்தோட்டப் பயிற்செய்கையில் கவனம் செலுத்திய தும், மக்களுக்கு கோதுமை மாவை இறக்குமதி செய்து நெல்லரிசிக்குப் பதிலாக வளங்கியமையும் காரணிகளாகின்றன. தமக்கு நேரடியாக அதிக வருவாய்தராத துறைகளை ஆங்கில ஆரசோ அன்றி அவர்களுக்கு முன்பிருந்த ஒல்லாந்த அரசோ கவனம் செலுத்தாது விட்டமையால் வன்னியின் செழிப்புமிக்க மருதநில வேளாண்மைத் துறை நலிவடைந்தது. இப்பிரதேசத்தில் மாங்குளத்திற்கு வடக்கே கல்விளான்குளம், துணுக்காய் குளம், உயிலங்குளம், கோட்டை கட்டிய குளம், வன்னேரிக்குளம் என்பன

வற்றில் மக்கள் இருந்துள்ளனர். ஆனால் வவுனிக்குளம் நீண்டகாலத்திற்கு முன்னரே கைவிடப்பட்ட நிலையில் மக்களற்ற பிரதேசமாக காடாக மாறியிருந்தது. ஆனால் பனங்காமம், நட்டான்கண்டல் ஐயன்பெருமாள், மூன்று முறிப்பு, வன்னிவிளான்குளம், மல்லாவிக்குளம், ஒட்டன்குளம், மாங்குளம் என்பன நீர்ப்பாசனம் நல்கும் குளங்களாக குடியிருப்புக்களுடன் காணப்பட்டுள்ளமையை ரேணரின் குறிப்பிலிருந்து ஜே.பி. லூயிஸ் குறிப்பிடுகின்றார்.

முல்லைத்தீவுப் பிரதேசத்தில் சம்மளங்குளம், ஒட்டுசுட்டான், கற்சிலைமடு, நெடுங்கேணி, மருதமடு, தண்ணிமுறிப்பு, ஆறுமுகத்தான் குளம், மறிச்சுகட்டிக்குளம், கனுக்கேணிக்குளம், ஆலடிக்குளம், ஆண்டான் குளம், ஒதியமலைக்குளம், கறிப்பட்டமுறிப்புக்குளம், ஒலுமடுக்குளம், ஆமையன் குளம், அலைகல்லுப்போட்ட குளம், தண்டுவான், புதுக்குளம், மருக்காரமோட்டை, ஆலங்குளம், புதுப்புளியங்குளம், என்பனவும் விவசாயத்திற்குப் பயன்படுத்தப்பட்டன. ஒட்டுசுட்டான் பிரசேத்தில் முத்தையன்கட்டு குளம் ஒரு பாரிய குடியேற்றத்திட்டமாகும். இங்க வடக்கிலிருந்து வந்து குடியேறியவரகள் சிறந்த விவசாயிகளாக காணப்படுகின்றனர்.

வவுனியா மாவட்டத்தில் செட்டிகுளம், சின்னச்செட்டிகுளம், வெங்கலச் செட்டிகுளம், நடுச்செட்டிகுளம், மாதர் பணிக்கர் மகிழங்குளம், இரணைஇலுப்பைக் குளம், மாறா இலைப்பைக்குளம், கனகராயன் குளம், புதூர்க்குளம், புளியங்குளம், ஆயிலடிக்களம். அடம்பன்குளம், ஆத்திமோட்டை, சேமமடுக்குளம், பாலமோட்டை, தவசிகுளம், வேலன்குளம், வீமன்கல்லுக் குளம், வடகாடுபுளியங்குளம். துடரிக்களம், போன்று பெருந் தொகையான குளங்களை ஒட்டி குடியிருப்புக்கள் பரவலாக இருந்தமைக்கு அங்கு காணப்பட்ட நிலம் வளம்மிக்கதாகவம் நீர் வளம் காணப்பட்ட மையும் விவசாயத்திற்கு ஏற்புடையதாக அமைந்திருந்தமையேயாகும். பெரும்பாலான கிராமங்கள் குளங்களின் பெயர்களிலேயே அமைந் துள்ளமை கண்கூடு.

வன்னி பெரும்பான்மையான தமிழர்களையும், சிறுபான்மையாக சிங்களவர், முஸ்லீம் மற்றும் பறங்கியர் இனத்தினரையும் கொண்ட சனத்தொகையை உள்ளடக்கியது. தமிழர்களில் பெரும்பான்மையானவர்கள் சைவர்களாகவும் சிறபான்மை கிறித்தவர்களாகவும், முஸ்லிம்கள் ஏறத்தாழ 13 கிராமங்களில் வாழ்ந்து வருபவர்களாகவும் உள்ளனர்.

வன்னியின் பொருளாதார வளத்திற்கு மண்வளம் விவசாயத்திற்கு ஏற்புடையதாக அமைந்துள்ளமையால் முழுமையாக நவீன வசதிகளோடு பயன்படுத்தப்படுமானால் நெல் உற்பத்தியில் தன்னிறைவு கண்டு

வெளியிடங்களுக்கு ஏற்றுமதி செய்த பண்டைய நிலையை எட்டிப்பிடிக்க முடியும். “ஈழத்துணவும், காளகத்தாக்கமும்” என வரும் பட்டினப்பாலை வரிகள் வன்னியிலிருந்து அனுப்பப்பட்ட உணவுப்பொருட்களைக் குறித்து நிற்கின்றன என்பதில் ஐயமில்லை.

# வீரம் செறிந்த பண்டாரவன்னியன்

**கீதவாணி வானொலியில் வாசிக்கப்பட்ட கட்டுரை –2014**
**(1811ம் ஆண்டு பனங்காமத்தில் அவனது உயிர் பிரிந்தது.)**

மறத் தமிழர் பரம்பரையில் வன்னியை ஆண்ட மன்னர்களுள் தீரம் மிக்கவர்களாக குலசேகர வன்னியனும் பண்டாரவன்னியனும் வரலாற்றில் தமக்கென இடம்பிடித்துக்கொண்டவர்கள். தமிழர் வரலாற்றில் வீர வரலாறுபடைத்தவர்கள். வன்னிக்கு வனப்புத் தருவனவாக பத்தாம் பளை எனப்படும் வற்றாப்பளை அம்மன் கோயில், முள்ளியவளை காட்டா விநாயகர் கோயில், வட்டுவாகலில் உள்ள சப்தகன்னியர் கோயில், ஒட்டுசுட்டான் தான்தோன்றி ஈஸ்வரர்கோயில், புதூர் நாகதம்பிரான்கோயில், வன்னிவிழான்குளம் கோயில் குமுளமுனை கொட்டுக்கிணற்றுப் கழுத்துவெட்டிப் பிள்ளையார் கோயில், கோட்டகக்கேணி ஒற்றைக்கைப் பிள்ளையார் கோயில், தென்னவன் மரவடி அமரிவயல் கூன்பிள்ளையார் கோயில் போன்றன மிகவும் பிரபல்யமானவை. வன்னி நிலப்பரப்பு குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை என்னும் ஐவகை நிலத்தின் பண்புகளைமுயும் தன்னுள் அடக்கிய வளம்பொருந்திய நிலமேயாகும்.

“மோட்டுவிரால் கன்றென்று வீட்டளவும் பால்சொரியும் எருமை” இனங்கள் வன்னியின் பொருளாதார வளத்தில் முக்கியம் செலுத்துகின்றன. பெருந்தொகையான கறவையினங்கள், ஆடு போன்ற கால்நடைகள், மற்றும் காட்டு விலங்குகளும் மலிந்து காணப்படும் வளமார் மண்ணே வன்னியாகும். பால், நெய், தயிர், தேன், மா, பலா, வாழை என்னும் முக்கனிகளுக்கும் மிகவும் பெயர்போன கிராமங்களில் முன்னணி வகுப்பது குமுளமுனை என்னும் கிராமம். ஆண்டான்குளம், ஆமையன்குளம், நீத்துக்காய்க்குளம் போன்றன இன்று தமிழர்களே இல்லாத இடங்களாக மாறித் தமது பொலிவையே

இழந்து காணப்படுகின்றன.

போர்த்துக்கீசர்காலத்திலும், ஒல்லாந்தர் காலத்திலும் வன்னியர்கள் அடங்காத்தனத்துடன் அவர்களை எதிர்த்துப் போராடி வீர வரலாறு படைத்தவர்கள். இந்த வகையிலே பண்டாரவன்னியனும் ஆங்கிலேயருக்கு மிகுந்த தலையிடியைக்கொடுத்துள்ளான். அவர்களுக்கு அடிபணியமறுத்து இறுதிவரை போராடி மாண்டவன் என்பது அவனது வீரவரலாறு. பண்டார வன்னியன்– ஆம் எம் மண்ணின் அடங்காத் தமிழன். அவனது நாமத்தைச் சொல்லவே எம் உடலில் வீரம் முறுக்கேறுகின்றது நாடி நரப்புகளெல்லாம் புடைத்து இரத்தம் கொப்பளிக்கின்றன. ஈழமண்ணைத் தன் கட்டுப்பாட்டில் இறுதி மூச்சுவரை வைத்துக் காத்து வந்த மாவீரன் ஈழத்தின் இறுதி மன்னன் பண்டார வன்னியனே யாவான். 1500களில் கீழைத்தேயங்களில் உள்ள பொருளாதாரத்தினைச் சுரண்டி செல்வம் சேர்க்க வென கீழைத் தேயங்களுக்கு வந்த ஐரொப்பியர்களில் போர்த்துக்கீசர் கண்டி இராசதானியையும், வன்னி இராசதானியையும் தவிர இலங்கையின் கரையோர மானிலங்களில் தங்கள் ஆதிக்கத்தைச் செலுத்தி வந்தனர். யாழ்ப்பாணம், கொழும்பு உட்டபட ஏனைய கரையோரங்கள் இலகுவாக அவர்களால் ஆக்கிரமிக்கப்பட்டு அதிகாரத்தின்கீழ் கொண்டுவரப்பட கண்டி இராசதானியும், வன்னி இராசதானியும் தனித்து எதிர்த்து அவர்களை நிலைகொள்ளவிடாது தடுத்து வந்துள்ளன. இவ் இரு இராச்சியங்களும் ஒருவருக்கொருவர் உதவிக்கரம் நீட்டியும் எதிரிகளை விரட்டி வந்துள்ளனர்.

இலங்கையின் கொழும்பில் தமது காலை 1796ம் ஆண்டு பதித்துக்கொண்ட ஆங்கில் கிழக்கிந்திய வர்த்தகக் கொம்பனியார் தாம் வந்த நோக்கத்தை நிறைவேற்றி பொருட்களை இலகுவாகச் சுரண்டிக்கொள்ள ஆட்சி அதிகாரம் தம்மிடம் இருக்கவேண்டும் என்னும் நோக்கில் அரசியல் அதிகாரத்தைத் தமதாக்கிக்கொள்ள முற்பட்டனர். இது படிப்படியாக 1798ஆம் ஆண்டில் இருந்து ஆங்கில அரசின் நேரடி நிர்வாகத்தின் கீழ் கொண்டுவரப்பட்டது. இதனால் இலங்கை முழமையையும் தமது ஏகபோக உரிமையாக்க முனைந்தனர். பிரஞ்சுக்காரரிடமோ அன்றி யப்பானியரிடமோ உதவிகளைப் பெற்றுத் தம்மை விரட்டிவிடக்கூடும் என்ற பயமும் ஆங்கில ஆட்சியாளர்க ளுக்கு இல்லாமல் இல்லை இதுவும் அவர்கள் நாட்டைக்கைப்பற்றக் காரணியாக அமைந்திருந்தது. வன்னி இராச்சியமும் கண்டி இராச்சியமும் அவர்களுக்கு அடிபணிய மறுத்துவந்தன. கண்டியில் இருந்த மன்னன் ஸ்ரீவிக்ரமராஜசிங்கன்(கண்ணுச்சாமி)க்கும் பண்டாரவன்னியனுக்கும மிகுந்த நெருக்கமான உறவுகள் இருந்தமையால் அவர்கள் ஒருவருக்கொருவர்

படை உதவிகளைத் தேவைப்படும் வேளைகளில் அளித்துவந்தனர். இது ஆங்கிலேயருக்குப் பெருத்த இடைஞ்சலாகவும் சவாலாகவும் அமைந்தமையால் வன்னி மண்ணைத் தமது கட்டுப்பாட்டில் கொண்டுவரப் பகீரதப் பிரயத்தனம் செய்தனர். 1808ஆம் ஆண்டு பண்டாரவன்னியன் தனது படைகளோடு கண்டி அரசனுக்கு உதவிசெய்வதற்காகச் சென்றிருந்ததைக் காட்டிக் கொடுக்கும் கயவர்கள் மூலம் அறிந்திருந்த ஆங்கிலேய தேசாதிபதி சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி முல்லைத்தீவுக்குத் தனது படையை அனுப்பினார். பண்டாரவன்னியன் இல்லாதவேளை அனுப்பப்பட்ட ஆங்கிலப் படைக்கு அங்கு எதிர்ப்புக்காட்டவோ அன்றிப் போராடவோ யாரும் இல்லாத நிலையில் முல்லைத்தீவை முற்றுக்கையிட்டு ஒரு கோட்டையையும் அமைத்துக்கொண்டனர். கண்டியிலிருந்து திரும்பிய பண்டாரவன்னியன் சிங்கமெனச் சினம் கொண்டான். தானில்லாததை அறிந்து கோளைத் தனமாக, தனது மண்ணை முற்றுக்கையிட்ட ஆங்கிலப்படையை அகற்றும் வரை உறங்கமாட்டேன் எனச் சபதம் பூண்டான். படை அணி திரட்டிப் புறப்பட்டான். முல்லைத்தீவுக் கோட்டை அவனது பாதத்தில் வீழ்ந்தது. அவனது வாழ்வீச்சுக்குப் பயந்து படையினர் முதுகுகாட்டி ஓடினர்.

முல்லைத்தீவைக் கைப்பற்றிய ஆங்கிலேயர் அங்கு தமக்கென ஒரு கோட்டையையும் அமைத்ததோடு மட்டுமல்லாது பண்டாரவன்னியனுக்கு உதவினார் என்னும் குற்றத்திற்காக குலசேகர முதலியார் அவர்களைத் தூக்கிலும் இட்டனர். தூக்கிலிடப்பட்ட வெள்ளூருவை மரத்தடி என மக்களால் இன்றும் அழைக்கப்படும் இடம் இன்று முல்லைத்தீவுக் கச்சேரிக்கு அண்மையாக, நீதிமன்றத்திற்குப் பின்புறமாக உள்ளது. இது அடிமைத் தழையை அறுக்கப் பாடுபட்ட தமிழ் தியாகி ஒருவர் உயிர் நீத்த இடமாக ஆவணப்படுத்தப் பட்டுப் பாதுகாக்கப்பட வேண்டிய இடமாகும்.

ஆங்கிலேயரின் கோட்டையை கைப்பற்றிய பண்டார வன்னியன் ஆங்கிலேயரின் ஆதிக்கத்தை ஏற்றுக்கொள்ள மறுத்தே வந்தான். இதனால் தமக்கு இடையூறாக உள்ள பண்டார வன்னியனைத் தீர்த்துக் கட்டுவதற்காகப் பல வியூகங்களை அமைத்து அவனைச் சிக்கவைக்கத் திட்டம் தீட்டினர். இதன் வண்ணம் கப்ரின் வொன்றிபேக்கின் தலைமையில் மன்னாரில் இருந்து ஒருபடையும், ஆனையிறவில் இருந்து இன்னொரு படையும் திருகோணமலையில் இருந்து ஒருபடையும் என அணிவகுத்து வந்தவேளை மும்முனைகளிலிருந்தும் முன்னேறி வன்னியை ஒற்றர்களின் உதவியுடன் கைப்பற்ற முற்பட்ட ஆங்கில ஆக்கிரமிப்பாளர்களை அழித்தொழிக்கப் பண்டார வன்னியன் முல்லைத்தீவை நோக்கிப் படையெடுக்கத் திட்டமிட்டான்.

வழியில் பாசறை அமைத்து இருந்த இடமான கற்சிலை மடு என இன்று அழைக்கப்படும் முத்தையன் கட்டுப்பிரதேசத்தில் உள்ள அதாவது ஒட்டு சுட்டானுக்கு அண்மையாக உள்ள இடத்தில் அவன் நிலை கொண்டிருந்த தைக் காட்டிக்கொடுக்க ஆங்கில அரசின் அடிவருடிகளால் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டமையால் பண்டாரவன்னியன் முற்றுக்கைக்கு ஆளானான் எனினும் அவன் மின்னல் எனத் தப்பிச் சென்று விட்டான். கப்ரின் வொன்றிபேர்க் என்னும் ஆங்கிலேயன் தான் பண்டாரவன்னியனின் படையைத் தோற்கடித்துவிட்டேன் என்னும் பெருமையைக் காட்டுவதற்காக. 1810ம் ஆண்டு ஒக்டோபர் 31ம் திகதி கற்சிலைமடுவில் ஒரு கல்வெட்டை வொன்றிபேக் எழுதிச் சென்றான். அதில் பண்டாரவன்னியன் தோற்கடிக்கப் பட்டான் எனறே குறிப்பிடப்பட்டுள்ளதே ஒழிய அவன் கைப்பற்றப்பட்டதா கவோ அல்லது சிறைப்பிடிக்கப்பட்டதாகவே எந்தவித குறிப்புக்களையும் அவனால் எழுதிவைத்து விடமுடியவில்லை. இதன் பின்னர் பனங்காமத்தில் இருந்த படைகளைத் திரட்டிய பண்டாரவன்னியன் கண்டிவீதியில் உள்ள 18ம் போர் என்னும் இடத்தில் ஆங்கிலப் படைகளுடன் 1811ம் ஆண்டு போரிட்டவேளை அவர்களின் துப்பாக்கி வேட்டுக்கு இலக்காகி காயமடைந்து அங்கிருந்து பனங்காமம் சென்று தனது இல்லத்தில் மரணமானான் என்பதுதான் அவனின் உண்மை வரலாறு. வரலாற்றாசிரியர்களும், ஆங்கிலேயரும் வரலாற்றைத் திரித்து தமக்கு வாய்ப்புக்கேற்ப மாற்றிக் கூறிவருகின்றனர் எனினும் உண்மையை உணர்ந்து கொள்ளுதல் அவசியமே.

ஆங்கில சாம்ராஜ்யத்தினையே எதிர்த்து போராடி மாண்ட பண்டார வன்னியனின் என்றுமே சாகாப் புகழ் படைத்த மாவீரன் அடங்காத் தமிழ் மறவனே ஆவான். தென் இந்தியாவில் ஆங்கில ஆக்கிரமிப்பாளர்களுக்கு தீராத தொல்லை கொடுத்த வீரபாண்டியகட்டப்பொம்மன் போன்று ஈழ மண்ணிலும் அதே ஆக்கிரமிப்பாளர்களுக்கு அடங்காது அவர்களது மேலாண் மையை ஏற்காது அவர்களை எதிர்த்து இறுதிவரை போராடிய மறத் தமிழன் பண்டார வன்னியன் என்றால் அவன் எத்தகைய வீரவரலாறு படைத்துள் ளான் என்பது சொல்லித்தான் தெரியவேண்டுமா?.

கண்டியை ஆட்சி செய்த ஸ்ரீ விக்கிரமராஜசிங்கன் எனப் பெயரை மாற்றிக் கொண்ட கண்ணுச்சாமி என்னும் தமிழ் மன்னன் ஆங்கில ஆக்கிரமிப்பாளர் கள் விரித்த வலையில் வீழ்ந்து அழிந்து விடாது பாதுகாக்க தனது நேசக் கரத்தை நீட்டியவன் வன்னி மண்ணிலிருந்து கண்டி இராசதானி வரை தனது படைகளை நடாத்திச் சென்ற அடலேறு எமது பண்டார வன்னியன்.


ஒல்லாந்த ஆட்சியாளர்கள் யாழ்பிரதேசம் உள்ளடங்க இலங்கையின் கடல் சார் மானிலங்களைத் தமது ஆதிக்கத்தின் கீழ் கொண்டு வந்த போதும் வன்னி ஆழ்நிலப் பரப்பு அவர்களது ஆதிக்கத்திற்கு அடிபணிய மறுத்த தென்றால் அது வன்னியரின் தீரமேயாகும் ஆங்கிலேயரது நவீன படை பலத்தைப் பற்றி நன்கு அறிந்திருந்தும் கண்டிமன்னன் ஆயிரத்தி எண்னூற்றிப் பதினைந்தாம் ஆண்டு தோற்கடிக்கப்பட் செய்தியைக் கேட்டு வெகுண்டெழுந்தவன் எமது பண்டார வன்னியன். அன்னியரின் ஆதிக்கம் ஈழத்தில் நிலைகொள்ளக்கூடாதென்னும் உயரிய பண்பும் நேரிய நோக்கும் கொண்டவன் பண்டார வன்னியன். ‘யாமார்க்கும் குடியல்லோம் நமனை அஞ்சோம்’ என்னும் மனப்பாங்கு அவனது தாயார் அவனுக்குக் கற்றுத்தந்த பாடங்களாகும். அவனுக்கு உறுதுணையாக வாய்த்தவர்கள் அவனது சகோதரனான கைலாயவன்னியனும் அவனது தளபதியான குமாரசிங்க வன்னியனும் காதலி நல்லநாச்சனுமாகும். அவனது தாயாரோ சங்கத்தமிழ் போற்றும் வீரத்தாய் பரம்பரையில் உதித்தவர். இத்தகைய வீரத்தாயின் உதிரத்தில் தோன்றிய தமிழ் மறவன் தான் இன்று எம் நெஞ்சங்களில் நிறைந்து வாழ்கின்ற பண்டார வன்னியன். ‘வீரம் விலை போகாது விவேகம் துணைக்கு வராவிட்டால்’ என்பதனை நன்கு உணர்ந்திருந்த பெருந்தகை அவன். வன்னிப் பெரு நிலப்பரப்பை பல வன்னிமங்களாக்கி பனங்காமம் கரிக்கட்டு மூலை வடக்கு கரிக்கட்டு மூலை தெற்கு மாந்தை என நிர்வாக அலகுகளாக்கி ஆட்சிப்பரிபாலனத்தை மிகத்திறப்பட நடாத்தி வந்த பெருமையும் எங்கள் பண்டார வன்னியனையே சாரும்.

தன் மண்மீது கொண்ட பற்றுக் காரணமாக வன்னிமாதாவின் கற்பு அன்னிய ஆக்கிரமிப்பாளர்களிடம் தன் கண்முன்னே பறிபோவதனைச் சகித்துக் கொண்டு உயிர் வாழ முடியாது என்பதனை உணர்ந்த ‘தன் மயிர் நீற்பின் உயிர் நீக்கும் கவுரி மான்’ பண்பினைக் கொண்டிருந்த பண்டார வன்னியன் எதுவரினும் சரியே மலையேயாயினும் தலையே சுமப்பது என்னும் தன்னப்பிக்கை கொண்டு வன்னிமண்ணைப் பாதுகாக்க இறுதிவரை போராடிய அடங்காத் தமிழன் ஆவான். அவனது வீரம் செறிந்த வாழ்வு ஒவ்வொரு தமிழ் மகனுக்கும் பெருமை தேடித்தரும் வாழ்வாகும். கேவலம் உலகநாடுகளைஎல்லாம் அடி பணியவைத்த பிரித்தானிய வல்லரசு பண்டார வன்னியனுடன் பொருத மன்னார் திருகோணமலை யாழ் தீவகற்பம் ஆகிய மும்முனைகளில் தம் படைகளை அணிநடத்த வேண்டியிருந்ததென்றால் அவன் படை பலம், வீரம், புகழ் என்பன சொல்லும் தரமன்று. ஈற்றில் கற்சிலைமடுவில் 1803ம் ஆண்டு அவன் தோற்கடிக்கப்பட்டான் எனமட்டுமே கூறப்பட்டுள்ளது. அவனை அவர்களால் கைது செய்யமுடியவில்லை. அவன்

இறக்கும் வரை அவர்களுக்கு தீராத தொல்லைகள் கொடுத்த ஒரு வீரனாகவே காணப்படுகின்றான். அவனது வீரத்தைப் புகழ்ந்து கற்சிலையே நாட்டியுள்ளார்கள் என்றால் அவனது வீரவரலாறு ஆங்கில நாடு வரை பேசப்பட்டது என்பதே கருத்தாகும். நேரடிச் சமரில் அவன் தோற்கடிக்கப் படாது கபடத்தனமாக நயவஞ்சகமாக ஏமாற்றப்பட்டான் என்பதனை நாம் ஒருபோதும் மறக்க முடியாது. மறத் தமிழன் பண்டார வன்னியனது வீர வாழ்க்கையைப் பின்பற்றி வீர மறவர்களாக வாழக் கற்றுக் கொள்வோமாக. பண்டார வன்னியன் வன்னி மக்களுக்கு மட்டும் உரித்துடையவன் அல்ல அவன் எல்லாத் தமிழ் நெஞ் சங்களிலும் இடம் பிடித்துள்ள வீர வேங்கையாக வாழ்ந்து கொண்டே இருக்கின்றான். வாழ்க பண்டார வன்னியன்! ஓங்குக அவன் புகழ்!

# முல்லைத்தீவு மாவட்டம் முல்லைத்தீவு நகரமும்

-ஒரு பார்வை




சங்க கால நிலக்கூறுகளின் பண்பை ஒத்த நானிலத்தன்மை கொண்டதாக முல்லைத்தீவு மாவட்டம் காணப்படுகிறது. ஏன்பதற்கு முல்லைத்தீவு மாவட்டத்தில் காணப்படும் இயற்கைத் தோற்றம் உதாரணமாக உள்ளது.

- குறிஞ்சி – குருந்தூர்மலை, வாவட்டிமலை, தென்னங்கல்லு மலை, வெள்ளை மலை
- முல்லை – மாவட்ட பெரும்பகுதி காடுகளால் நிறைந்தவை.
- மருதம் – அனேகமான நிலங்கள் வயல்களும் குளங்களும்
- நெய்தல்– கிழக்கு பகுதி முழுமையாக் வங்கக் கடல்

என்பனவற்றைச் சான்றாகக் கூறலாம்.

முல்லைத்தீவு மாவட்டம் வன்னிப்பிராந்தியத்தில் அமைந்துள்ளது. யாழ்குடாநாட்டிற்கு தெற்கே கிழக்குப்புறமாக காணப்படும் பிரதேசமே முல்லைத்தீவு மாவட்டம் ஆகும். அது கிளிநொச்சி மாவட்டத்தினைற்கும் வவுனியா மாவட்டத்திற்கும் இடையேயுள்ளது இந்தப் பிரதேசம். வடமேற்குப்புறமாக கிளிநொச்சி மாவட்டத்தின் ஒரு பகுதியும் மேற்கு எல்லையாக மன்னார் மாவட்டத்தின் ஒருபகுதியும் தென் மேற்குப்பக்கமாக வவுனாயா மாவட்டத்தையும், தென் எல்லையாக பதவியாவையும், திருகோணமலையையும் எல்லைகளாகக் கொண்டுள்ளது. இது 2617 சதுரக் கிலோமீற்றர் பரப்பளவினைக் கொண்டுள்ளது.

முல்லைத்தீவு மாவட்டம் வன்னிப் பிரதேசத்தின் முக்கிய ஒரு பகுதியாக வரலாற்றில் இடம்பெற்றுள்ளது. வன்னியர்களால் ஆட்சிசெய்யப்

பட்டமையாலும் இந்தியாவில் இருந்து வருகைதந்த வன்னியர்கள் குடியேறியமையாலும் இப்பிரதேசம் வன்னி என்னும் பெயரைப் பெற்றுக்கொண்டது என்பர். இந்தியாவில் இருந்து படையெடுத்து ஈழத்தின் வடபாகத்தைக் கைப்பற்றிக்கொண்ட சோழர்கள் காலத்தில் போராளிகளாகக் கொண்டுவரப்பட்ட வன்னியர்கள் குடியேறி தமெக்கென ஆக்கிக் கொண்ட குடியிருப்புக்கள், குளங்கள் என்பனவற்றை அமைத்து வாழ்ந்தமைக்கான ஆதாரங்கள் உள. இந்தப் பரம்பரையில் 1931வரையில் வாழ்ந்தவனாக பண்டாரவன்னியன் என்னும் வன்னி மன்னன் கொள்ளப்படுகின்றான். ஒல்லாந்தர்களின் ஆட்சிக்காலத்திலும் வன்னிப்பிரதேசத்தில் இருந்து பெருந்தொகையான யானைகள் திறையாக வழங்கப்பட்டுள்ளமைக்கான ஆதாரங்கள் உள. எனவே ஆங்கில ஆட்சிக்காலம்வரை வன்னிப் பிரதேசம் ஒரு தனி அரசியல் பிரிவாக இயங்கிவந்துள்ளமையை அறியமுடிகின்றது. முல்லைத்தீவு நகரத்தில் இன்றும் நீதவான் மன்றிற்கு அண்மையாக உள்ள இடத்தை தூக்கு மரத்தடி என அழைப்பார்கள். அந்த இடம் ஆங்கிலேயர் காலத்தில் குற்றவாளிகளைத் தூக்கிலிடுவதற்காகப் பயன்பட்டது எனவும். ஆந்தத் தூக்குமரத்தில்தான் பண்டாரவன்னியனுக்கு உதவிய குற்றத்திற்காக குலசேகர முதலியார் தூக்கிலிடப்பட்டார் என்னும் வரலாறும் உண்டு.

இங்கு முல்லைத்தீவு மாவட்ட செயலர் அலுவலகும் அதாவது அரசாங்க அதிபர் பணிமனை முல்லைத்தீவு நகரத்திலேயே அமைந்துள்ளது. அதற்குக் கீழ் நான்கு உதவிச் செயலர்களின் பணிமனைகள் உள்ள. அதாவது உதவி அரசாங்க அதிபர் பணிமனைகள் முறையே

1. முல்லைத்தீவு உதவி அரசாங்க அதிபர் பணிமனை
2. புதுக்குடியிருப்பு உதவி அரசாங்க அதிபர் பணிமனை
3. ஒட்டுசுட்டான் உதவி அரசாங் அதிபர்
4. துனுக்காய் உதவி அரசாங்க அதிபர் பணிமனை
5. பாண்டியன் குளம் உதவி அதிபர் பணிமனை

இந்த ஐந்து பிரிவுகளை விட இன்று வெலியோயா என்னும் ஒரு பகுதியையும் பதவியாவிலிருந்து பிரித்து முல்லைத்தீவு மாவட்டத்தினுள் சேர்க்கப் பட்டுள்ளது. இங்குள்ள 8 கிராமசேவையாளர்கள் பகுதிகளை உள்ளடக்கியதாக இந்த புதிய வெலியோயா உதவி அதிபர் பணிமனை அமைக்கப்பட்டுள்ளது. இது இரவோடு இரவாகக் வர்த்மானியின் அறிவித்தலின் படி மேற்கொள்ளப்பட்டுள்ளமை முல்லைத்தீவு மாவட்டத்தின் பரம்பரை பரம்பரையாக தமிழர் பிரதேசமாகவும் தமிழரைப் பிரதிநிதித்துவப் படுத்தும் பிரதேசமாகவும் இருந்துவந்த பகுதிகளை சிங்களமயமாக்கும் திட்டத்தை அமுல்படுத்துவதாக காணப்படுகின்றது.

முல்லைத்தீவு மாவட்டம் 1977க்கு முன்னர் வவுனியா மாட்டத்தோடு

இணைந்ததாகவே காணப்பட்டது. பின்னர் யாழ்ப்பாண மாவட்டத்தில் உள்ள துணுக்காய் அரங்சாங்க அதிபர் பிரிவு, மன்னார் மாவட்டத்தில் இருந்த பாண்டியன் குளம் அரசாங்க அதிபர் பிரிவு என்பனவும் முல்லைத்தீவு உதவி அரசாங்க அதிபர் பணிமனையோ இணைக்கப்பட்டு மூல்லைத்தீவு மாவட்டம் உருவாக்கப்பட்டிருந்தது. அழைக்கப்பட்டு வந்தது. முல்லைத்தீவு மாவட்டத்தின் துணுக்காய் அரசாங்க பதிபர் பிரிவு யாழ்மாவட்டத்துடனேயே இணைக்கப்பட்டிருந்தது. அவ்விதமே பாண்டியன் குளம் அரச பணிமனையும் மன்னார் மாவட்டத்துடன் இணைக்கப்பட்டிருந்தன. இவை 1977இல் இந்த நான்கு உதவி அரசாங்க அதிபர் பிரிவுகளும் இணைக்கப்பட்டு முல்லைத்தீவு மாவட்டம் உருவாக்கப்பட்டது. அத்தோடு மேற்குறிப்பிட்ட ஒட்டுசுட்டான், மற்றும் புதுக்குடியிருப்பு உதவி அரசாங்க அதிபர் பிரிவுகளும் முல்லைத்தீவு உதவி அரசாங்க அதிபர் பிரிவிலிருந்து பிரிக்கப்பட்டு பணிமனைகள் அமைக்கப்பட்டன.

முல்லைத்தீவு மாவட்டம் வங்காளவிரிகுடாவிலிருந்து மேற்கே வெள்ளாங் குளம் எனபப்டும் மன்னாரின் எல்லைவரை ஏறத்தாழ 45 மைல்கள் கிழக்கு மேற்காகப் பரந்து விரிந்து செல்கின்றது. அவ்விதமே வடக்கே சுண்டிக்குளம் எனப்படும் யானையிறவு தொடுகடலின் கிழக்குப்பகுதியிலிருந்து விசுவமாடு என்னும் குடியேற்றப் பிரதேசத்தையும் உடையார் கட்டுப்பிரதேசத்தையும் உள்ளடக்கியதாக புதுக்குடியிருப்புப் பிரதேசத்தோடு இணைக்கப்பட்டு முத்தையன் கட்டு, ஒட்டுசுட்டான் பகுதிகளை உள்ளடக்கிய பரந்த விவசாயப் பிரதேசமாகக் காண்பபடுகின்றது.

இங்கு வவுனிக்குளம், முத்தையன் கட்டு, தண்ணீர்முறிப்பு என்னும் மூன்று பாரிய நீர்த்தேக்கங்கள் உள்ளன. 1956ம் ஆண்டு டட்லி சேனநாயக்க அவர்கள் விவசாய அமைச்சராக இருந்தபோது இந்தக் நீர்ப்பாசன திட்டங்க ளுக்குக் கால்கோலிடப்பட்டது என்பது குறிப்பிடத்தக்கது. வவுனிக்குளம், முத்தையன் கட்டு என்னும் இரு திட்டங்களும் வெளி இடங்களில் இருந்து குடியேற்றப்பட்டவர்களைப் பெருந்தொகையாகக் கொண்டது. நெடுந்தீவு, மண்டைதீவு, கோப்பாய், நீர்வேலி, கரவெட்டி, கொம்மந்தறை, வதிரி போன்ற கிராமங்களில் இருந்து வந்து குடியேறியவர்களை அதிகளவில் கொண் டுள்ளன. எனவே வன்னிப் பிரதேசம் யாழ்ப்பாணத்தின் பல கிராமங்களோ டும் தொடர்புடைய மாவட்டமாக மாற்றம் பெற்றது எனலாம்.

முல்லைத்தீவு நகரம் கடலும் கடல் சார்ந்து இடமாகக் காணப்படுவது யாவரும் அறிந்ததே. இங்கு கரையோரத்தில் வாழ்ந்துவரும் மக்களில் பெரும்பாலானவர்கள் மீனவர்களாக கடற்தொழிலோடு தொடர்புடைய வேலைகளைச் செய்பவர்களாகக் காணப்படுகின்றனர். தமீழீழப் போராட்டம்

தொடங்கிய காலந்தொட்டு தென்பகுதியில் இருந்து வந்து மீன்பிடித் தொழிலில் ஈடுபட்டு வந்து பெரும்பான்மையினத்தவர்களின் வருகை படிப்படியாக நிறுத்தப்பட்டிருந்தது. 1980களுக்குப் பின்னர் முள்ளிவாய்க்கால் சமர்முடிவடையும் வரை இப்பிரதேசம் தனித் தமிழ் பிரதேசமாகவே காணப்பட்டது. அதற்கு முன்னர் பல சிங்கள மீன்பிடித் தரகர்களும், சம்மாட்டிகளும் சாலையில் இருந்து கொக்கிளாய் வரை மீன்பிடித்தொழிலில் ஈடுபட்டுவந்துள்ளனர். அத்தோடு நீர்கொழுப்புப் பகுதியில் இருந்து தமிழர் களான மீன்பிடித் தொழிலாளர்களும் யாழ்ப்பாணப்பகுதியின் மயிலிட்டி, பருத்தித்துறை போன்ற பகுதிகளில் இருந்தும் பெருந்தொகையான தொழிலாளர்கள் கோடைகாலத்தில் இங்கு வந்து கரைவலை எனப்படும் மீன்பிடித் தொழிலில் ஈடுபட்டு வந்துள்ளனர்.

கரையோரங்களில் இடம்பெறும் இந்த மீன்பிடித்தொழிலில் ஒரு கரை வலைக்கு குறைந்தது 40தொழிலாளர்களாவது தேவையாக உள்ளது. இந்தத் தொழில் கொள்வோர் சம்மாட்டி என்றே அழைக்கப்படுவார். அவருக்கு அடுத்தபடியாக மேற்பார்வை செய்பவர் “மண்டாடி“ எனப்படுவார். இவரே கடலில் வள்ளத்தை செலுத்துவதற்கும் தொழிலாளர்களுக்குப் உத்தரவுகளை வழங்குபவராகவும் காணப்படுவார். கரையோரத்தில் நின்று கடலை உற்றுப்பார்த்து மீன் திரளாக வருவதை அவதானித்து வேலையாட் களை உற்சாகப்படுத்தி அந்த மீன் திரளைச் “செவ்வல்” என்பார்கள். அதனை நோக்கி கரைவலையை வளைத்து நீரில் இறக்கி கரையை நோக்கி இழுத்து மீன்களைப் பிடிக்கும் முறையே இந்த கரைவலை முறையாகும். இது மிகவும் பாரம்பரியமான முறையாகக் காணப்படுகின்றது.

இரணைப்பாலை, மாத்தளன் கரையோரம் தொடக்கம் முள்ளிவாய்க்கால், சின்னாத்தங்காடு, கள்ளப்பாடு, வண்ணாங்குளம், சிலாவத்தை, அளம்பில் என கரையோரம் கொக்கிளாய் வரைக்கும் இந்த மீன்பிடித்தொழில் இடம்பெறுவதனைக் காணலாம். கரையோரம் தோறும் தங்குவதற்காக கொட்டகைகள் அமைக்கப்பட்டு மீனைப் பாதுகாத்து வைப்பதற்கும், சமைப்பதற்குமான அறைகளும் வெவ்வேறாகக் கட்டப்பட்டிருப்பதனை காணலாம். ஐஸ்கட்டிகளை உருகாமல் பாதுகாப்பதற்காக மரத்தூள் பெருமளவில் பாவிக்கப்படுகின்றது. பிடித்த மீன்கள் மாலையில் வாகனங்களில் கொழும்புக்குக் கொண்டுசெல்லப்படுகின்றன. இவை ஐஸ்கட்டிகள் போடப்பட்டு பழுதடையாவண்ணம் பாதுகாக்கப்பட்டே கொண்டுசெல்லப்படுகின்றன.

முல்லைத்தீவில் கரைச்சிக்குடியிருப்பு, கோயில் குடியிருப்பு என்னும் இருபகுதிகள் கரையோரத்திலிருந்து சற்றுத்தூரத்தில் அமைந்துள்ளன.

இங்கு உள்ளவர்கள் விவசாயத்தில் ஈடுபடுபவர்களாகவே காணப்படுகின் றனர். தென்னை, மா, பலா போன்ற வான்பயிர்களும் நெல் உற்பத்தியுமே இவர்களது பிரதான வருவாய் மூலங்களாக உள்ளன. இவர்களுள் ஒரு பகுதியினர் அரசாங்க பணிகளில் ஈடுபட்டுவருகின்றார்கள். பிரித்தானி ஆட்சிக்காலத்தில் இவர்களில் பலர் முதலியார், உடையார், கணக்கர் என்னும் பதவிகளை வகித்ததோடு பிரித்தானிய அரசாங்கத்திடமிருந்து நன்செய் நிலங்களையும் வாங்கிக்கொண்டார்கள். இவர்கள் தங்கள் பிள்ளைகளை யாழ்ப்பாண நகரத்தில் உள்ள பாடசாலைகளுக்கு அனுப்பிக் கல்விகற்க வைத்துள்ளமையால் இவர்கள் அரசாங்க அல்லது தனியார் பணிமனைகளில் உடைநலங்காத் தொழில் போன்ற வேலைகளைத் தேடிக்கொள்ளும் வாய்ப்பைப் பெரும்பாலும் எதிர்நோக்கியுள்ளர். கோயில் குடியிருப்பில் பெரும் மதிப்போடு மக்களால் நக்கு மதிக்கப்பட வாழ்ந்தவர் முதலியார் கனகசபாபதி அவருடைய மகள் முல்லைத்தீவு மகாவித்தியா லயத்தில் நான் கற்பிக்கும் போது அவரும் அங்கு பணியாற்றினார். இன்று 90 அகவையைக் கடந்தும் ஐக்கிய அமெரிக்காவில் வாழ்ந்துகொண்டிருக் கின்றார். முதலியார் அவர்களை நான் சிறுவனாக இருக்கும்போது எனது நந்தையார் ஒருமுறை அழைத்து வந்தமை நினைவுக்கு வருகின்றது. 1956ஆம் ஆண்டு நெல்குத்தும் ஆலை ஒன்றை ஆரம்பித்து வைப்பதற்கு அவரர் பிரதம அதிதியாக வந்திருந்தமை இன்றும் எனது மனக்கண்முன்னே ஊசலாடுகின்றது. பண்டைக்காலத்துக் கார் ஒன்றில் அவர் வெள்ளை வேட்டியும் வெள்ளை நாசனலும் அதற்கு ஏற்ப உத்தரிகமும் அணிந்து வந்திருந்தமை மறக்கமுடியாது. அவருடைய பிள்ளைகள், பேரப்பிள்ளைகள் இன்றும அமெரிக்காவிலும் கனடாவிலும் வாழ்ந்துவருகின்றனர்.

சாதாரணமாக RMP (Registered Medical Prectitoner) என அழைக்கப்படும் மருத்துதவச் சான்றிதழ் பெற்றுக்கொண்டவர்கள் மருத்துவப் பணியில் ஈடுபட்டுவந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. செல்லையா டாக்குத்தர், சுப்பிரமணியம் டாக்குத்தர் மக்கள் மத்தியில் பிரபலமானவர்களாகக் காணப்படுகின்றனர். அவ்விதமே நில அளவையாளர்கள் பலபேர் குறிப்பிடத்தக்கவர்கள். Surveyor Superintend பணியாற்றிய திரு. இரத்தின சிங்கம் அவர்கள் மிகவும் பிரபலமானவராகவும் அனைத்து ஊர்மக்களாலும் அறியப்பட்டவராகவும் இருந்துவந்தமை குறிப்பிடத்தக்கது. இவரின் உறவினர்கள் பலர் நில அளவையாளர்களாகவும் நொத்தாரிசு, விதானை போன்ற தொழில்களையும் செய்துவந்தமை குறிப்பிடத்தக்கது. கலாநிதி கணேசன் என்பவர் கண்ணொறுவ விவசாய ஆய்வுமையத்தில் ஆய்வாளரா கப் பணியாற்றிவந்தமையும் குறிப்பிடத்தக்கது. அவருடைய மூத்த புதல்வி திருமதி மோகனராணி குகதாசன் அவர்கள் முல்லைத்தீவு மகாவித்தியால யத்தில் நீண்டகாலமாக ஆங்கில ஆசிரியையாகப் பணியாற்றியவர். அவரும்

இப்பொழுது கனடாவில் வாழ்ந்து வருவது குறிப்பிடத்தக்கது. கனகசபாபதி முதலியார் குடும்பமும் முல்லைத்தீவு கரைச்சிக்குடியிருப்பில் மிகுந்த செல்வாக்கோடு இருந்தவர்கள்.

முல்லைத்தீவு நகரம் மீன்பிடி காரணமாக மிகவும் கவர்ச்சிகரமான நகரமாக மாறியது. நீர்கொழும்பு, மாத்தறை போன்ற பிற இடத்து மீனவர்களின் வருகையும் உள்ளூர் மீனவர்களின் வருவாய் அதிகரிப்பு கரையோர மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்திவந்தது எனலாம். இதனல் குறிப்பிடத்தக்க மாடிக்கட்டிடங்கள், வீடுகள் கடைகள் என்பன எழுந்து நகரை அழகுபடுத்தி நின்றன.

இவையனைத்தையும் ஒரு நொடியில் காவுகொண்டது சுனாமி என்னும் ஆழிப்பேரலை. கரையோரத்தில் வாழ்ந்த மக்களை வாரிச்சுருட்டிக் கொண்டு சென்றது. எனது ஆசானாகவும் பின்னர் நான் ஆசிரியப்பணியாற்றிய போது முல்லைத்தீவு மகாவித்தியாலக அதிபராகவும் இருந்ததோடு மட்டுமல்லாமல் என்மீது மிகுந்த பற்றும் அன்பும் கொண்டவருமான பிரான்சிஸ் இராசேந்திரம் அவரும் அவரது துணைவியாரும் அந்த ஆழிப்பேரலையில் அடித்துச் செல்லப்பட்ட சோகத்தை கேள்விப்பட்டு ஆற்றொணாத்துரயமடைந்தது மட்டுமன்றி அவரால் எழுதப்பட்ட ஒரு கடிதம் அவர் இறந்து பல மாதங்களுக்குப்பின்னர் எங்கள் கையில் கிடைத்தது என்றால் அவரது பிரிவு எவ்வளவுக்கு எங்களை வாட்டியிருக்கும் என்பதனை சொல்லத் தேவை யில்லை. அது மட்டுமன்றி என்னிடம் படித்த மாணவர்கள் குடும்பம் குடும்பமாக அழிந்து போன சோகத்தையும் முல்லைத்தீவு மண் சுமந்து கொண்டுதான் இருக்கின்றது. அது மட்டுமன்றி கரையோரத்தை அண்டியதாக அமைந்திருந்த கிறிஸ்தவ தேவாலங்களும் இயற்கையின் சீற்றத்திற்கு விதிவிலக்காகவில்லை. அவையும் ஆழிப்பேரலையின் அகோரத்தாண்ட வத்தில் சுய உருவத்தை இழந்தன. கள்ளப்பாட்டில் அமைந்திருந்த பிள்ளையார் கோயிலும் அழிபாட்டிற்குள சிக்கி மீள்காட்டுமானம் பெற்று ள்ளது. இப்பிரதேசத்தில் வசதி படைத் மீனவர்கள் இழுவைப் படகுகளுக்கு உரிமையாளர்களாகவும் கனரக வண்டிகளுக்கு உரிமையாளர்களாகவும் இருந்து பல்வேறு பகுதிகளிலிருந்தும் வரும் மீனவத் தொழிலாளர்களுக்குப் பருவ கால வேலை வாய்ப்பபை நல்கினர். ஆவர்களுள் முல்லைத்தீவு நகர சபையின் தலைவராக நீண்டகாலம் பணியாற்றிய திரு. வைதியாம்பிள்ளை, மற்றும் பிரபல வர்த்தகர் அருளப்பு என்போர் மிகவும் பிரபலமானவர்களாக விளங்கினர்.

இந்தப்பிரதேசத்தில் மிகவும் பிரபலமான ஆலயங்களில் முதன்மையானது வற்றாப்பளை அம்மன் ஆலயம். முல்லைத்தீவு நகரத்தில் நிற்றுபார்த்தால்

தெரியும் தொலைவில் நந்திக்கடல் எனும் தொடுகடலால் பிரிக்கப்பட்டு உள்ளது. ஆழிவைச் சந்திக்காத ஒரு ஆலயமாக அது வன்னியில் இன்றும் நிமிர்ந்து நிற்கின்றது எனலாம். முல்லைத்தீவு நகரத்தில் வண்ணாங்குளம், சின்னாத்தங்காடு என்னும இரு பகுதிகளில் இரண்டு கிறிஸ்தவ ஆலயங்கள் உள்ள. இவை இரண்டும் சுனாமியால் அடித்துச் செல்லப்பட்டன. கள்ளப்பாடு என்னும் இடத்தில் பிள்ளையார் ஆலயம் ஒன்று கடலின் சீற்றத்திற்கு அதுவும் விதிவிலக்காகவில்லை. கரைச்சிக்குடியிருப்பில் இருக்கும் பிள்ளையர் ஆலயம் எந்தவித சேதத்தையும் எதிர்கொள்ளவில்லை எனினும் மக்கள் இடம்பெயர்ந்தமையால் கவனிப்பார் அற்று அழிந்துபோன நிலையில் காணப்படுகின்றது.

தான்தோன்றி ஈஸ்வரர் ஆலயம் நீண்டகால வரலாற்றைக் கொண்ட சிவன் ஆலயம் இது ஒட்டுசுட்டானில் அமைந்துள்ளது. இதன் கேணி (தடாகம்) மிகவும் பிரமாண்டமானதாக நிர்ணயிக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. கேணியைச் சுற்றி கட்டப் பட்டுள்ள கட்டிடம் மக்கள் கோடை காலத்தில் தங்கி ஓய்வெடுக்கக்கூடிய வகையில் அமைக்கப்பட்டுள்ளது அழகாக அமைந்துள்ளது.

முல்லைத்தீவில் போர்த்துக்கீசர் காலத்தில் ஆரம்பிக்கப்பட்ட இரண்டு பாடசாலைகள் ஒன்று ஆரம்பப்பாடசாலை அது கன்னியர் மடத்தோடு சேர்ந்ததாக அமைந்துள்ளது. அதற்கு சற்றுத் தள்ளி இடைநிலை மற்றும் உயர்நிலைப் ப்பாடசாலையாக முல்லைத்தீவு மகாவித்தியாலயம் உள்ளது. இதனை விட சற்று வசதிபடைத்தவர்கள் முள்ளியவளை வித்தியானந்தக் கல்லூரிக்கு கல்விக்காக தங்கள் பிள்ளைகளை அனுப்புவது வழக்கம். சிலாவத்தை, உண்ணாப்புலவு, கரைச்சிக்குடியிருப்பு, வட்டுவாகல், முள்ளிவாய்க்கால் ஆகிய கிராமங்களைச் சேர்ந்த பிள்ளைகள் இடை நிலைக் கல்விக்காக முல்லைத்தீவு மகாவித்தியாலத்திற்கு வந்து செல்லுவார்கள். முள்ளிவாய்க்கால், வட்டுவாகல், தனியூற்று, சிலாவத்தை போன்ற இடங்களைச் சேர்ந்த ஆசிரியர்களும் யாழ்ப்பாணத்தில் இருந்து வருகை தரும் ஆசிரியர்களும் இந்தப்பாடசாலையின் மாணாக்கருக்கு நற்பணியாற்றி வந்துள்ளனர்.

ஆரம்ப காலங்களில் முல்லைத்தீவு மாவட்டத்தில் உள்ள பாடசாலைகளில் பெரும்பாலும் யாழ் குடாநாட்டில் இருந்துவந்த ஆசிரியர்களே கல்விப் பணியை நல்கினர். சில ஆசிரியர்கள் நிரந்தரமாகத் தங்கள் குடும்பங்க ளோடு நகர்ந்துவந்து குடியேறித் தமது பணிகளை ஆற்றிவந்துள்ளமையும் குறிப்பிடத்தக்கது. போக்குவரத்துக் குறைவாகக்காணப்பட்ட பகுதிகளான குக்கிராமங்களில் காணப்பட்ட பாடசாலைகளுக்கு பணிக்காக வரும்

ஆசிரியர்கள் வார இறுதியிலோ அன்றி மாதம் ஒருமுறையோ செல்வது மிகக்குறைவாகவே காணப்பட்டது. இதனால் தங்கியிருக்கும் அவர்கள் மாலைநேரங்களில் பாடசாலையில் மாணவர்களுக்கு எழுத்தறிவுக்கும் பணியில் ஈடுபடுவதும் பெரும் பேறாக அமைந்திருந்தது.

இலங்கை சுதந்திரமடைந்தபின்னர் குறிப்பாக 1960களின் பின்னர் தாய்மொழிமூலமான கல்விக்கு முக்கியத்துவம் கொடுக்கப்பட்டமை வன்னிப் பிரதேசப் பிள்ளைகளின் கல்வியில் மலர்ச்சியேற்படத் தொடங்கியது. பொருளாதார வாய்ப்புமிக்க குடும்பங்களைச் சேர்ந்தவர்கள் அல்லது உறவினர்கள் உள்ளவர்களின் பிள்ளைகள் யாழ்மாவட்டத்திற்கு அல்லது மன்னார் மாவட்டத்திற்குச் சென்று கல்விகற்கும்பேற்றைப் பெற்றனர். குறிப்பாக வவுனியா பாராளுமன்ற உறுப்பினராக இருந்து திரு. தா. சிவசிதம்பரம் அவர்களும் அவரது சகோதர்கள் திரு. திருவாளர்கள். நடராசா, குமாரையா ஆகியோர் மன்னார் எருக்கலம்பிட்டி மகாவித்தியாலயத்தில் கல்விகற்றவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது. அவ்விதமே ஓரளவு வசதி படைத்த சிலபெற்றோர் தங்கள் பிள்ளைகளை யாழ்ப்பாணம் அனுப்பிக் கல்வி பெற வாய்பினை ஏற்படுத்திக்கொடுத்தனர். இவர்களில் பலர் அரசாங்க சேவைகளில் இணைந்துகொண்டனர். வன்னிப் பிரதேசத்திலிருந்து அரசாங்க பணிகளில் ஈடுபட்டவர்கள் விரல் விட்டு எண்ணத்தக்கவர்களாகவே 1950களின் முன்னர் காணப்பட்டனர்.

முள்ளியவளை வித்தியானந்தக் கல்லூரியை 1950களில் வவுனியா பாராளுமன்ற உறுப்பினராக இருந்த அடங்காத் தமிழன் என அழைக்கப்பட்ட திரு. சி. சுந்தரலிங்கம் அவர்கள் தொகுதிக்கு ஒரு மத்திய கல்லூரி என்னும் அரசாங்கத்தின் தீர்மானத்திற்கு அமைய கட்டுவதற்கு வசதியேற்படுத்திக் கொடுத்தமையும் முல்லைத்தீவு மாவட்டப் பிள்ளைகளின் கல்வி விருத்தியில் பாரிய பங்களிப்பை ஏற்படுத்தியது எனலாம். அந்தப் பாடாசலை ஆங்கில மொழிப்போதனையைக் கொண்டிருந்தாலும் பெரும் தொகையான மாணவர்கள் கல்விகற்று சிரேஷ்ட கல்விச் சான்றிதழைப்பெற்றுக்கொள்ளும் வாய்ப்பைப் பெற்றுக்கொண்டனர் எனலாம்.

யாழ்ப்பாணம் சென்று அங்கு தங்கியிருந்து கற்றவர்கள் பொறியியலாளர்களாகவும் மருத்துவர்களாகவும் வருவதற்கான வாய்ப்பைப் பெற்றனர் எனினும் இது மிக மிகக் குறைந்த தொகையினராகவே காணப்பட்டனர். இப்படி வாய்ப்பை அதிகளவு பயன்படுத்திக் கொண்டவர்கள் முல்லைத்தீவு நகரத்தில் உள்ள வசதிபடைத்த குடும்பத்தவர்களே. முல்லைத்தீவு கரைச்சிக்குடி யிருப்பைச் சேர்ந்தவர்களுக்கு நல்லூர்ப் பகுதியில் உறவினர்கள் இருப்பதும் அவர்களின் கல்வி ஈடுபாட்டிற்கும்

முன்னேற்றத்திற்கும் காரணிகளாக அமைந்தன.

முல்லைத்தீவு மாவட்டத்தில் உள்ளவர்கள் பெரும்பாலும் யாழ்மாவட்டத்தில் உள்ள கிராமங்களோடு ஏதோ ஒருவகையில் தொடர்புடையவர்களாகவே உள்ளனர். திருமண உறவு அல்லது பெற்றோரின் பூர்வீகம் என்பனவற்றின் அடிப்படையில் தொடர்புற்றிருப்பதனைக் காணலாம். முல்லைத்தீவு நகரம் உட்பட பெரும்பாலான கிராமங்களில் வர்த்தகத்தில் ஈடுபடுபவர்கள் வெளியிடங்களைச் சேர்ந்தவர்களாகவும் உள்ளனர். தண்ணீரூற்று, முல்லைத்தீவு, புதுக்குடியிருப்பு போன்ற பெரும் கிராமங்களில் அந்தந்த ஊரவர்களே பெரும்பாலான வர்த்தகத்தில் ஈடுபட்டுள்ளமை குறிப்பிடத் தக்கது. ஒரு சில வர்த்தக நிலையங்கள் தவிர ஏனையவை உள்ளூர் வர்த்தகர்களுடையனவாக உள்ளன.

முல்லைத்தீவு மாவட்டம் விவசாயத்தோடு தொடர்புடையமையால் விவசாயப் பொருட்களே பெரும்பாலும் உற்பத்தி செய்யப்படுகின்றன. தைத்தொழில் ஆலைகள் எனக்குறிப்பிடத்தக்களவிற்கு பெருமளவான கைத்தொழில்கள் அங்கு இடம்பெறவில்லை. விவசாயத்தோடு தொடர்பான நெல்குத்தும் ஆலைகள் தண்ணீரூற்று, முள்ளியவளை, வற்றாப்பளை ஆகிய இடங்களில் பெருமளவில் இடம்பெற்றுவந்துள்ளன. இவற்றுள் பல தொழிலாளர்கள் பணிக்கமர்த்தப்பட்டும் வந்துள்ளனர். சிறிய கிராமங்களில் இத்தொழில் சொந்தக் தைத்தொழிலாக குறிப்பாக குடிசைக் கைத்தொழில் எனப்படும் அளவிற்கே இடமபெற்றுவந்துள்ளது. புதக்குடியிருப்புப் பிரதேசம் அண்மைக் காலம் வரை சனத்தொகை கூடிய கிராமமாகக் காணப்பட்டது. 2009 போராட்டத்தின் போது அங்குள்ள மக்கள் இடம்பெயர்ந்தமையும் காணாமல் போனமையும் சனத்தொகையில் வீழ்ச்சியை ஏற்படுத்தியுள்ளது. புதக் குடியிருப்பு முத்தையன் கட்டு, விசுவமடு புதுமாத்தளன் ஆகிய பிரதேசங்கள் சத்திக்கும் இடத்தில் அமைந்தமையால் மிக விரைவாக வர்த்தக வளர்ச் சியைக் கண்டு வளரந்து வந்தது. ஆனால் போராட்டத்தால் இப்பிரதேசம் வளம் இழந்து சோபையிழந்து காட்சியளிக்கின்றது.

வவுனிக்குளம் அபிவிருத்தித் திட்டத்தின் காரணமாகவும் அதனை அண்டிய தென்னியன்குளம், பாண்டியன் குளம், ஒட்டன் குளம், போன்ற இடங் களிலும் யாழ்மாவட்டத்திலிருந்து வந்த குடியேறியவர்களால் அப் பிரதேசங்கள் வளம் கொளிக்கும் பொன்நிலமாக மாற்றம் கண்டு வருவாயைத் தரும் நிலைக்கழனாக மாறியுள்ளமை கண்கூடு.

கரையோரத்தின் மீன்பிடித்தேவைக்கேற்ற கோடைகாலத்தில் ஐஸ்க் கட்டியை உற்பத்தியாக்கும் இரண்டு ஆலைகள் முல்லைத்தீவு நகரத்தில்

செயற்பட்டுவந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. எனினும் பற்றாக்குறையான மையால் கொழும்பில் இருந்து ஐஸ்கட்டிகள் கொண்டுவரப்பட்டு மீன் பழுதாகாமல் பாதுகாப்பதற்கு உபயோகிக்கப்பட்டன.

பெருந்தொகையான தென்னந்தோட்டங்கள் இருந்தபோதிலும் அவற்றின் கைத்தொழில்களாக கிடுகு இழைத்தலைத்தவிர வேறு கைத்தொழில்களுக் கான மூலப் பொருட்களாக அவை பாவிக்கப்படவில்லை என்பதும் குறிப்பிடத்தக்கது.

கோடைகாலத்தில் உப்பு தன்னியல்பாகவே விளைகின்ற இடங்களாக நாயாறு தரவைக் கடலும், சாலைத் தொடுகடலும் காணப்பட்டன எனினும் இங்கு உப்பை பெருமளவில் உற்பத்தியாக்கு வதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்படவில்லை. அத்தோடு அவற்றை மக்களால் எடுத்துப் பயன்படுத்தவும் அனுமதி வளங்கப்படவும் இல்லை.

வாழை, எள்ளு, பயறு, கடலை, நிலக்கடலை போன்ற வான்பயிர்கள் சேனைப் பயிற்செய்கை முறையில் மேற்கொள்ளப்பட்டன. ஆனால் அத்தகைய பயிர்ச்செய்கைகளும் இன்று மழைபொய்த்தமையால் கைவிடப் பட்ட ஒரு விவசாய முறையாகவே காணப்படுகின்றது எனலாம்.

ஸ்ரீமாவோ பண்டாரநாயக்க ஆட்சிக்காலத்தில் உணவுப்பொருட்கள் தடை செய்யப்பட்டு உள்ளூர் உற்பத்தி ஊக்குவிக்கப்பட்டமையால் மிளகாய், வெங்காயம், பயறு, உழுந்துபோன்ற பயிர்ச் செய்கை வன்னிப்பிரதேசத்தில் மிகப்பிரமாண்டமான முன்னேற்றத்தைக் கண்டது எனினும் ஜே.ஆர். அறிமுகம் செய்த தாராள இறக்குமதிக் கொள்கைக்கு ஈடுகொடுக்க முடியாமல் உள்ளூர்ப் பயிற்செய்கை நலியத்தொடங்கியதும் வன்னியின் வருவாய் வீழ்ச்சியின் ஒரு கட்டமாக அமைந்திருந்தது. இந்த நிலை வன்னிப் பிரதேச விவசாயிகளை மட்டுமன்றி யாழ்ப்பாண விவசாயிகளையும் பாதித்தது என்பதில் சந்தேகமில்லை. கடந்த 30 ஆண்டுகால போராட்டச் சூழ்நிலைமைகள் வடமாகாணப் பயிற்செய்கையில் பாரிய வீழ்ச்சியை ஏற்படுத்தியமை கண்கூடு. விவசாயிகளுக்கான களைகொல்லிகள், கிருமி நாசினிகள், உரவகைகள் என்பனவற்றைப் பெற்றுக்கொள்வதில் பெரும் சிரமத்தை மக்கள் எதிர்நோக்கிய அதே வேளை நிலத்தைப் பண்படுத்து வதற்கா உளவு இயந்திரங்கள் போன்றவற்றின் பயன்பாடும் கணிசமான அறவு குறைந்தமையும் விலை அதிகரித்தமையும் விவசாயிகளைப் பாதித்த இன்னொரு காரணி எனலாம். வெளிநாடுகளில் இருந்து இறக்குமதி செய்யப்பட்ட நல்ல இன விதை நெல், மற்றும் பயிரினங்களை வடக்கு மாகாண மக்கள் பெற்றுக்கொள்ள முடியாத நிலை தோன்றியிருந்தது.

இதனை அரசாங்கமும் ஏனோதானோ மனப்பான்மையோடு நடத்தியமை யையும் அறிய முடிகின்றது. வடக்கிலிருந்து தெற்குக்கு அனுப்பப்பட்ட விவசாய உற்பத்திப் பொருட்களுக்குப் பதிலாக மகாவலி திட்டத்தின்கீழ் தென்பகுதி மக்களுக்கு காணிகள் வழங்கப்பட்டதோடு அவர்கள் மானிய அடிப்படையிலும் விவசாய உற்பத்திக்கு அதாவது உப உணவுப் பொருட்களை உற்பத்தி செய்வதற்கு ஊக்குவிக்கப்பட்டனர். இன்று வடக்கிற்கு தம்புல்லப் பிரதேசத்திலிருந்து மரக்கறி வகைகள் கொண்டு வரப்படுவது வடக்கின் உற்பத்தி முயற்சிகளுக்குச் சாவுமணி அடித்ததாகவே காணப்படுகின்றது.

கிளிநொச்சிப் பிரதேசத்தை அண்டிய இடங்களில் சிறுதோட்டப் பயிற்செய்கை மிகவும் வளர்ச்சி கண்டிருந்தது. கிளிநொச்சியிலேய சிங்கள வர்த்தகர்கள் வருகைதந்து பொருட்களை வாங்கிச்செல்லும் நிலை ஏற்பட்டதோடு மரக்கறிச் சந்தை பெரும் அளவில் விஸ்தரிக்கப்பட்டும் இருந்தது. இந்த நிலைமையும் நீடித்து நிலைத்திருக்கவில்லை.

வடமாகாணத்தில் மேற்கொள்ளப்பட்ட பயிர்ச்செய்கைக்கு மாற்றீடாக மகாவலி திட்டத்தில் காணிகள் வழங்கப்பட்டதோடு அங்கு விவசாயம் செய்யும் விவசாயிகளுக்கு மானிய விலையில் விவசாய உற்பத்திக்குத் தேவையான பொருட்கள் வழங்கப்பட்டமையால் அவர்கள் விவசாயத்தில் ஈடுபடச் செய்ததோட இலாபமீட்டும் தொழிலாகவம் மாற்றம் கண்டது. இதுவரை வடமாகணம் வகித்துவந்த உற்பத்திப் பொருட்கள் தென் மாவட்டங்களுக்கு மாற்றம் பெற்றன. உணவுத்தேவையை தாங்களே செய்துகொள்ளும் நிலைக்கு தென் பிரதேசமக்கள் உயர்வடையத் தொடங்கினர். சின்ன வெங்காயத்திற்கு வடக்கை நம்பியிருந்த மக்கள் தாங்களே அவற்றை உற்பத்தியும் செய்யத் தொடங்கினர். இதனால் வடக்கை எதிர்பார்த்திருந்த நிலை மாற்றம் கண்டது. இன்று வடக்குமக்கள் தங்களுக்குத் தேவையானவற்றைத் தான் உற்பத்தி செய்ய நிற்பந்திக்கப் பட்டுள்ளனர். அவர்களது உற்பத்ததிப்பொருட்களுக்குச் சந்தை வாய்ப்புக் கிட்டாத நிலைமையும் தோன்றியுள்ளது.

வன்னிப் பெரு நிலப்பரப்பில் காணப்படும் விவசாய அறுவடை காலங்களில் தெற்கிலிருந்தும் கிழக்கிலிருந்தும் சென்று வந்த கூலி விவசாயிகளின் வருகை தடுக்கப்பட்டமையும் வன்னிப்பிரதேசத்தின் நெற்பயிர்ச் செய்கையின் வீழ்ச்சிக்குக் காரணமாகின்றது. கூலி விவசாயிகளைப் பெற்றுக்கொள்ளமுடியாமல் அறுவடை செய்யப்படாது பயிரினம் அழிந்து போகும் நிலைமையும் ஏற்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. வன்னியில் சென்று குடியேறிய வேறு இடத்தவர்கள் தங்கள் சொந்த இடங்களுக்கு மீண்டு

சென்றமையும் வெளி மாவட்டங்களில் இருந்து அறுவடை மற்றும் பயிரிடல் காலங்களில் வந்து வேலை செய்தவர்கள் வராது விட்டமையும் இம்மாவட்டதில் உள்ளவர்கள் வெளிநாடுகள் சென்றுவிட்டமையும் இம் மாவட்டத்தின் விவசாய உற்பத்ததிக்குப் பாதகமாக அமைகின்றதோடு காலங்காலமாக வைத்திருந்து கால்நடைகள், உளவு இயந்திரங்கள் என்பனவற்றை இழந்தவர்கள் மீண்டும் தங்களை அந்த நிலைக்கு உயர்த்துவதற்குப் போதிய பொருளாதார பலமம் இன்றி இருப்பதும் காரணிகளாகின்றன.

நெல்லை, மருதம், முல்லை என மிகவும் வளங்கொளிக்கும் மாநிலமாகத் திகழ்ந்த முல்லை மாவட்டத்தில் இன்றும் கட்டிட இடிபாடுகள், கவனிப்பாரற்று புதர்கள், செடிகள் மண்டிக்கிடக்கும் தென்னந்தோட்டங்கள், விவசாய நிலங்கள் என்பன மீள்புனருத்தாரணம் செய்யப்படவேண்டும். அப்போதுதான் முல்லைத்தீவு மக்கள் இயல்பான வாழ்க்கை நிலைக்கு மீள முடியும். முல்லைத்தீவு மாவட்டத்தில் 2001-07-17இல் மேற்கொள்ளப்பட்ட குடித்தொகைக் கணக்கெடுப்பில் 121,667 ஆகக் காணப்பட்ட சனத்தொகை 2012-03-20இல் மேற்கொள்ளப்பட்ட குடித்தெகைக் கணக்கெடுப்பில் 91,947 ஆகக் காணப்பட்டுள்ளமையை நோக்கும்போது மக்கள் வெளியேற்றமும் போரின் காரணமாக இறந்துபோனவர்களினதும் நிலையால் சனத்தொகைப்பரம்பலில் பாரிய வீழ்ச்சி ஏற்பட்டள்ளமை கண்கூடு. இது 2.59வீதமாகக் கணிப்பிடப்பட்டுள்ளது.

**Population of Mullaitivu District by ethnic group 1981 to 2012**[2][13][14]

| Year | Tamil[a] | | Sinhalese | | Muslim[b] | | Other | | Total No. |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | No. | % | No. | % | No. | % | No. | % | |
| 1981 Census | 69,670 | 89.88% | 3,948 | 5.09% | 3,777 | 4.87% | 117 | 0.15% | **77,512** |
| 1999 Estimate | n/a | n/a | n/a | n/a | n/a | n/a | n/a | n/a | **184,655** |
| 2000 Estimate | n/a | n/a | n/a | n/a | n/a | n/a | n/a | n/a | **187,281** |
| 2001 Estimate[c] | n/a | n/a | n/a | n/a | n/a | n/a | n/a | n/a | **180,401** |
| 2002 Estimate | n/a | n/a | n/a | n/a | n/a | n/a | n/a | n/a | **144,959** |
| 2003 Estimate | 140,556 | 99.92% | 23 | 0.02% | 49 | 0.03% | 47 | 0.03% | **140,675** |
| 2004 Estimate | 152,724 | 99.83% | 0 | 0.00% | 237 | 0.15% | 29 | 0.02% | **152,990** |
| 2005 Estimate | 157,410 | 99.77% | 0 | 0.00% | 365 | 0.23% | 0 | 0.00% | **157,775** |
| 2006 Estimate | 214,713 | 99.75% | 1 | 0.00% | 547 | 0.25% | 0 | 0.00% | **215,261** |
| 2007 Estimate | 220,117 | 99.91% | 1 | 0.00% | 193 | 0.09% | 0 | 0.00% | **220,311** |
| 2008 Estimate[d] | 51,737 | 99.99% | 0 | 0.00% | 4 | 0.01% | 0 | 0.00% | **51,741** |
| 2009 Estimate[e] | 36,741 | 100.00% | 0 | 0.00% | 0 | 0.00% | 0 | 0.00% | **36,741** |
| 2011 Enumeration | 60,136 | 90.39% | 3,966 | 5.96% | 2,390 | 3.59% | 34 | 0.05% | **66,526** |
| 2012 Census | 81,263 | 88.38% | 8,851 | 9.63% | 1,760 | 1.91% | 73 | 0.08% | **91,947** |

# “வன்னியர் அரசோச்சிய கிராமம் குமுளமுனை”

குமுளமுனை என்பது முல்லைத்தீவு நகரில் இருந்து பத்து மைல்கள் தொலைவில் உள்ள ஒரு வளம் நிறைந்த கிராமமாகும். முல்லைத்தீவுக்கு தென் மேற்குத்திசையில் அமைந்துள்ளது. தண்ணீரூற்றிலிருந்து ஆறு மைல்கள் தெற்காகவும் அளம்பில் என்னும் கிராமத்திலிருந்து இரண்டரை மைல் மேற்காகவும் இக்கிராமம் அமைந்துள்ளது. வடக்கே கணுக்கேணிக் குளம் அல்லது முறிப்பு எனப்படும் குளத்தையும் அதன் வயற்பரப்பினையும் எல்லையாகவும், கிழக்கே அளம்பில் கிராமத்தையும் தென் கிழக்கே செம்மலைக் கிராமத்தையும், நாயாற்றுக் கடல்நீர் ஏரியையும், மேற்கே தண்ணிமுறிப்புக் குளக்கட்டினையும், குருந்து மலை என்னும் பண்டைய வரலாற்று நகரத்தையும் வடமேற்கே பூதன் வயல் என்னும் குளக் குடியிருப்பையும் எல்லைகளாகக் கொண்ட கிராமமாகும்.

‘குமுள்’; என்னும் மரங்கள் இங்கு காணப்படுகின்றன. இம்மரத்தின் இலைகளை அரைத்து பசுக்கன்றுகளுக்கும் எருமைக்கன்றுகளுக்கும் மருந்தாகப் பயன்படுத்துவர். ‘கீரைப்பூச்சி’ என்னும் நோய் வந்தால் இந்த இலையை உண்ணவைப்பதன் மூலம் அந்த பூச்சிகள் அழிந்து கன்றுகள் நோயிலிருந்து பாதுகாக்கப்படுகின்றன. இம்மரத்தின் முக்கியத்துவம் கருதி இவ்வூரின் பெயர் காரணப் பெயராக அமைந்திருத்தல் வேண்டும் என்பது இவ்வூரவர்கள் கூறும் கருத்தாகும்.

இக்கிராமத்தில் கரிக்கட்டுமூலை வன்னிமத்தின் கீழ் வன்னியர் களால் பரிபாலனம் செய்யப்பட்ட முக்கியமான இடமாகக் காணப்படுகின்றது. சேர, சோழ, பாண்டிய நாடுகளைச் சேர்ந்த வன்னியர்கள் தென்னகத்தி

லிருந்து படையெடுத்து வந்தவேளை படைகளை நடாத்தி வந்தவர்கள். இவர்கள் முல்லைத்தீவு, வவுனியா, அநுராதபுரம், பொலநறுவை, திருகோணமலை, மட்டக்களப்பு ஆகிய பிரதேசங்களில் குடியேறி அப்பிர தேசங்களைத் தமது ஆதிக்கத்துக்குள் வைத்திருந்தனர். இவர்கள் இருந்த தற்கான பல சான்றுகள் பல கிராமங்களில் காணக்கிடக்கின்றன. வன்னியை ஆண்ட வன்னி மன்னர்களின் வரலாறு இதுவரை நன்கு அறியப்படாததாகக் காணப்படுகின்றது. இன்று இராணுவ ஆக்கிரமிப்புக்கு உள்ளான தென்னவன்மரவடி, கொக்கிளாய், கொக்குத்தொடுவாய், கருநாட்டுக்கேணி, நித்தகைக்குளம், ஆமையன்குளம், சூரியன் ஆற்றுவெளி, அமெரிவயல் போன்ற பிரதேசங்கள் பரம்பரை பரம்பரையாகத் தமிழர்கள் வசித்த பகுதியாகும். இப்பிரதேசங்களில் இன்று தமிழர்கள் திட்டமிட்டு அப்புறப் படுத்தப்பட்டதோடு பெரும்பான்மை இனத்தினரின் குடியேற்றத்திட்டங்களாக மாற்றப்பட்டுவருவதும் கண்கூடு.

இவ்வித ஆக்கிரமிப்புக்கு உள்ளான எல்லைக்கிராமமாக அமைந்துள்ளது குமுளமுனைக் கிராமம். இங்கு போர்த்துக்கேயரால் சிதைத்து அழிக்கப்பட்டுப் பின்னர் ஊரவர்களால் புனரமைத்துக் கட்டப்பட்ட கற்பக விநாயகர் ஆலயமும், தலை வெட்டப்பட்ட நிலையில் உள்ள கொட்டுக்கிணற்று ஆலய மும் கிராமத்தின் கிழக்குப் பக்கத்திலும் தெற்குப் பக்கத்திலும் அமைந்து அருள்பாலித்து வருகின்றன. இவற்றை விட குமரன் ஆலயம், நாகதம்பிரான் ஆலயம் என வேறும் ஆலயங்கள் அண்மையில் தோற்றுவிக்கப்பட்டுளன. இக்கிராமத்தின் சுடுகாட்டுக்குச் செல்லும் பாதை ஓரத்தில் அரியாத்தை என்னும் வீர வன்னிச்சியினால் மதம் கொண்ட யானை ஒன்று அடக்கிப் பிடிக்கப்பட்டுக் கட்டப்பட்ட புளியமரம் ஒன்று 1970 வரை நிலைத்து நின்றது. அது யானை கட்டிய புளியென ஊரவர்களால் அழைக்கப்பட்டு வந்தது. மதம் கொண்ட யானையை அரியாத்தை அடக்கிக் கட்டினார் என்பது வரலாறு. கற்பக விநாகர் ஆலயத்திற்கு அண்மையாக வன்னியன் வளவும் வன்னியன் கிணறும் காணப்படுகின்றது. கிணறுகள் செங்கற்களால் கட்டப்பட்ட சிதைவுகள் இன்றும் காணப்படுகின்றன. இவ்வரிய சான்றுகள் வன்னியரது ஆள்புலப்பரப்பையும் அவர்கள் நிலை கொண்டிருந்த இடங்க ளையும் காட்டி நிற்கும் அரிய சான்றுகளாகக் காணப்படுகின்றன. இச் சான்றுகள் அழிந்து விடாது பாதுகாக்கப்பட வேண்டியவை என்பதன் முக்கியம் உணரப்படல் வேண்டும்.

கொட்டுக்கிணறு என்பது நிலத்தைத் தோண்டி மண் தூராத வண்ணம் மரத்தின் கொட்டினை வைத்து நன்னீர் எடுக்கப் பயன் படுத்தப்படும் கிணறாகும். இவ்விதம் ஆக்கப்பட்டு நீர் எடுத்துப் பாவிக்கப்பட்டு வந்தது. இக்கிணற்றுக்கு அண்மையாகக் காணப்பட்ட திரு. அருணாசல உடையார்

நல்லதம்பி அவர்களது வயலினைக் கொட்டுக்கிணற்று வயலென இன்றும் அழைப்பது வழக்கம். மரக் கொட்டினை நிலத்தினுள் தாழ்த்தி மண் கிணற்றைத் தூர்த்துவிடாதபடி வைத்து வயல் வேலைகளின் போது நீர் எடுப்பதற்காகத் மேற்கொள்ளப்பட்ட கிணறு இருப்பதன்காரணமாக இந்த வயல் நிலத்திற்குக் கொட்டுக்கிணற்று வயல் என்னும் பெயர் வழங்கலாயிற்று. நந்திக் கடல் ஓரமாக அமைந்துள்ளமையால் நீருற்று ஆழமற்றதாகக் காணப்படுகின்றது. ஒரு பக்கம் மலை, மறுபக்கம் கடல். குறிஞ்சி, முல்லை, நெய்தல், மருதம் என நால்வகை நிலங்களும் இந்தக் கிராமத்திற்குச் சிறப்புத் தருகின்றன.

அ. உ. நல்லதம்பி அவர்களின் பேரனார் காலத்தில் நிகழ்ந்த அற்புதமாகக் கொட்டுக் கிணற்று விநாயகர் வரலாறு காணப்படுகின்றது. பட்டாணி என ஊரவர்களால் அழைக்கப்படும் அராபிய வியாபாரி வியாபாரத்திற்காக மூன்று விநாயகர் விக்கிரகங்களைக் கருவாட்டுடன் கலந்து ஒரு கப்பலில் ஏற்றி இந்தியாவிலிருந்து கொண்டுவரும்போது கருவாட்டுடன் இருக்கப் பிடிக்காத மூன்று விநாயக விக்கிரகங்களும் கடலில் குதித்துத் தப்பித்துக் கொண்டன. இந்த விக்கிரகங்கள் மூன்றும் முல்லைத்தீவின் தென்பகுதியில் அமைந்துள்ள கிராமங்களான குமுளமுனை, கருநாட்டுக்கேணி, தென்னவன்மரவடி ஆகிய கிராமங்களுக்குச் சென்று சேர்ந்தன என்பது வரலாறு.

வயல் அறுவடை முடிந்து வைகாசி விசாகத்திற்குப் பின்னர் சோழகக் காற்றுக் காலத்தில் சூடுமிரியல் ஆரம்பமாகி நடைபெற்று நிறுத்திய பொலியுள் ஒழித்துக் கொண்ட பிள்ளையார் இரவுவேளை வயல் உரிமைக்காரராகிய உடையாரின் கனவில் தோன்றி, இவ்விடம் ஒரு பட்டாணி (வியாபாரி) வருவான். அவன் இங்கு கல்லேதும் உண்டா? எனக் கேட்டால் “நெல்லுக் குள் உள்ள கல் தவிர வேறு கல் இல்லை” என விடை கூறுக எனக் கூறிப் போந்தார். ஏன் இந்தக் கனவு எனப் புரியாமல் கண்விழித்த உடையார் அவர்களுக்கு வியப்பின் மேல் வியப்பாக இருந்தது. கனவில் தோன்றியபடியே மறுநாள் பட்டாணி ஒருவன் அங்கு வந்து இங்கு கல்லேதும் உண்டோ? என வினாவினான். அவர் விநாயகரின் கூற்றை அவ்விதமே “நெல்லுக்குள் உள்ள கல் தவிர வேறு கல் இல்லை” என விடை பகிர்ந்தார்.

சூடு மிதித்த பொலியி(நெல்லி)னைத் தூற்ற ஆரம்பித்து ஏழுநாட்கள் சென்றும் முடிவுறாது நெற்குவியல் பெருகிக் கொண்டே சென்றது. பெரும் அதிசயமாகவும் அற்புதமாகவும் இருந்தது. ஏழாம் நாள் இரவு பிள்ளையார் கனவில்த்தோன்றி நான்தான் நெற்குவியலுக்குள் இருக்கின்றேன். என்னை எடுத்து அங்குள்ள ஒரு மலையோரத்தில் வைத்து ஆதரிக்கும் வண்ணம்

கூறிப்போந்தார். அதன்படியே ஊரவர்கள் எல்லாரும் கூடி பிள்ளையாரின் பணிப்பின்படி திறந்த வெளி ஆலயம் ஒன்றை அமைத்து பிள்ளையாரை அங்கே வைத்து வழிபட்டு வரலாயினர். சில நாட்களின் பின் அதே பட்டாணி திரும்பவும் வந்து பிள்ளையார் இருப்பதனை அறிந்து அவரைத் தன்னுடன் கொண்டு செல்வதற்காகத் தகர்க்க முனைந்தான். எவ்வளவோ முனைந்தும் பிள்ளையாரை அவனால் அசைக்க முடியவில்லை. ஆதனால் ஆத்திரமுற்ற பட்டாணி வாள் கொண்டு பிள்ளையாரின் தலை முடியைத் துண்டித்தான். அதனபின் தனது குதிரையில் ஏறித் தன் பிரயாணத்தைத் தொடர்ந்தான். அவன் சிறிது தூரம் சென்றதும் வயலில் உள்ள கழிவு நீர் வடிந்தோடும் வாய்க்கால் ஒன்றினுள் குதிரை அவனது கட்டுப்பாட்டிற்கு அடங்காது துள்ளிக்குதித்துத் திமிர் எடுத்ததன் காரணமாக குதிரையில் இருந்து பட்டாணி கீழே வீழுந்து மரணமானான். இன்றும் குளத்தில் ஊடு (குளத்தூடு)என்று வழங்கப்படும் வயலில் காணப்படும் கழிவு நீர் வாய்க்காலைக் குதிரை திமிர் எடுத்த வாய்க்கால் என்று மக்களால் அழைக்கப்படுகின்றது.

“கழுத்து வெட்டிப்பிள்ளையார்” குமுளமுனையிலும் பட்டாணியால் “கையில் லாப் பிள்ளையார்” கைதுண்டிக்கப்பட்ட நிலையில் கருநாட்டுக்கேணிக் கிராமத்தில் உள்ள கோட்டகக்கேணி என்னும் வயலோரத்திலும் அமைந் துள்ளது. இதனை ‘கூளங்கைப்பிள்ளையார’ எனவும் தென்னவன்மரவ டியில் அமரிவயலில் உள்ள பிள்ளையார் தலையில் மிதித்ததன் காரணமாக கூனிய நிலையில் காணப்படுவதனால் ;கூன் பிள்ளையார்; எனவும் அழைக்கப்படுகின்றன. இம் மூன்று பிள்ளையார் ஆலயங்களும் திறந்த வெளி ஆலயங்களாகவே காணப்படுகின்றன. குமுளமுனையில் அமைவுற்றிருக்கும் கொட்டுக்கிணற்று விநாயகரைப் பல தடவைகள் மறைத்து சுவர் எழுப்ப ஊரவர்கள் முயற்சி செய்தும் பலனளிக்கவில்லை.

ஆரம்ப காலத்தில் ஊரவர்கள் பிள்ளையாரின் வெட்டப்பட்ட தலையின் பகுதியியைப் பூசை நடைபெறும் நேரங்களில் பிள்யையாரின் தலையோடு பொருத்திவைத்து வழிபடுவது வழக்கமாக இருந்து வந்தது. வழிபாடு முடிவடைந்ததன் பின்னர் தலையின் மேற்பகுதியை எடுத்து பிள்ளையார் இருந்த இடத்தின் பின்புறமாக நின்ற மரத்தின் பொந்தில் பாதுகாப்பாக வைப்பது வழக்கமாகும். இவ்வாறாகத் தொடர்ச்சியாக நடைபெற்று வருங்காலை, அம்மரப் பொந்தினைத் திடீரென ஒரு ஆலமரத்தின் விழுது துதிக்கைபோன்று சுற்றி மறைத்துக் கொண்டதால் தலையின் உடைந்த பகுதியை யாரும் தொடமுடியாத நிலை ஏற்பட்டது. மிக அண்மையில் அந்த மரம் பட்டுப் போனதால் விநாயகரின் தலையைத்தேடும் முயற்சி மேற் கொள்ளப்பட்டதெனினும் யாராலும் அதனைக் கண்டு கொள்ள முடிய

வில்லை. அந்த துதிக்கை போன்ற விழுதினை யாரும் தொடவே பயந்தார்கள். அதில் மெதுவாகச் சுரண்டினாலும் ஆலம் பாலுக்குப் பதிலாக இரத்தம் வடிந்ததாகக் கூறுவார்கள். அதனால் அந்த மரத்தைச் சுற்றிக் கும்பிடுவார் களே ஒழிய ஒருவரும் அந்தமரத்தில் தொடுவதில்லை.

கொட்டுக்கிணற்றுப் பிள்ளையார் மிகவும் அற்புதமானவர் என ஊரவர்க ளால் அவர் நிகழ்த்திய அற்புதச் செயல்கள் நினைவுகூரப்படுகின்றன. அங்குள்ளவர்கள் தங்கள் மாடுகளைக் காணவில்லை என்றால் பிள்ளை யாருக்கு முன்னால் நின்று அல்லது வீட்டில் இருந்து கொட்டுக்கிணற்றானே எனது மாடுகளைக் காட்டு நான் உனக்கு ஒரு பொங்கல் போடுகின்றேன் என வேண்டினால் மாடுகள் அவர்களைத் தேடி வருவதாகக் குறிப்பிட்டதனை நான் கேள்விப்பட்டது மட்டுமன்றி அவ்விதம் பொங்கப்படும பொங்கலையும் உருசித்து உண்ணும் வாய்பினையும் பெற்றிருக்கின்றேன். மடை அபிசேகம் என்பது ஒவ்வொரு வருடமும் ஊரவர்களால் மேற்கொள்ளப்படும் மோதக மடையாக இடம்பெறும். குறைந்தது 20 தொடக்கம் 40 கொத்து வரையான அரிசிமாவில் மோதகம் அவிப்பார்கள். அங்கு மோதகம் அவிப்பதென்றால் ஒரு மோதக கண்போட்ட பெரிய அகப்பையோடு சின்னப்பொடிக் கிழவன்தான் அடுப்போடு நிற்பார். தண்ணீரைச் சூடாக்கி அதற்குள் மோதகங்ளைப் போட்டு அவிந்ததும் அவை மிதந்துவர எடுத்துவாழையிலை பரப்பிய தட்டுக்களில் வைப்பார். நன்கு ஆறியதும் கடகப் பெட்டிகளில் அடுக்கி வைப்பார்கள். மண்டபம் நிறைந்த மோதகக் குவியலும், பலாப்பழமும், வாழைப்பழமும் பிள்ளையாருக்குப் படைப்பார்கள். இன்றும் இந்த நடைமுறை அந்த ஆலயத்தில் நடைபெறுகின்றது. அது மட்டுமன்றி சர்க்கரை அமுது நேர்த்திக்கடன் மார்கழி மாதத்தில் அன்னதானமாக இடம்பெறும். ஊரவர்கள் அனைவரும் வந்து இச் சர்க்கரை அமுதை உண்டு பசியாறுவார்கள். காலப்போக்கில் குடிகள் அதிகரிக்க அதிகரிக்க இரண்டு மூன்று நாட்களுக்கு வெவ்வேறு மக்கள் இணைந்து இச் சர்க்கரை அமுது நேர்த்திக் கடனைச் செய்வார்கள். இது மாரிகாலத்தில் தானியங்கள் முடிவுற்ற வேளையில் தனியே மரவள்ளிக் கிழங்கையோ அன்றி பனங்கிழங்கையோ, காய் கனிகளையோ உணவாகக் கொள்வோருக்கு பெரும் வரப்பிரசாதமாக அமைந்துவிடுகின்றது. குறிப்பாக கூலித் தொழிலாளருக்கு இது தேவையான ஒன்றாகவும் அவர்களின் பசிப்பிணியைப் போக்கவும் இடம் பெறுவதாகவே கருதப்படுகின்றது.

ஒருதடவை அன்பர் ஒருவர் ஏதோ ஒரு வேண்டுகோளைப் பிள்ளையாரிடம் வேண்டியுள்ளார். ஆனால் அவரது வேண்டுகோளை பிள்ளையார் செவிசாய்க்வில்லை. எனவே அவர் நீ என்னுடன் பேசு நீ பேசாவிட்டால், நீ என்ன மாடா? எனப் பேசியதோடு, அரைப் பித்துப்பிடித்தவர் போன்று நல்ல

பசுமையான புல்லை வெட்டிச் சென்று பிள்ளையாரை உண்ணும்படி கொடுத்துள்ளார். ஆனால் பிள்ளையாரோ அதனை ஏற்றுக்கொள்ள வில்லை. அதன் பின்னர் உனக்கு உயிர் இருந்தால் எழுந்துவா? எனக் கேட்டிருக்கின்றார். அசைவற்று இருந்தார் பிள்ளையார். ஆத்திரம் கொண்ட அந்த பித்துப் பிடித்தவர் காவோலையில் நெருப்பைக் கொழுத்திப் பிள்ளையாரைச் சுட்டிருக்கின்றார். ஆனால் அதற்கும் பிள்ளையார் அசையவில்லை. ஆனால் சுட்டவருக்கு உடல் எல்லாம் எரியத் தொடங்கி யிருக்கின்றது. பட்டினத்தார் கூறியது போன்று “தன்வினை தன்னைச் சுடும்“ என்பதுபோல ஆகிவிட்டது. பிள்ளையாரிடம் சென்றுள்ளார் எனது உடல் எரிவை நிற்பாட்டு, அல்லது உன்னைத் தூக்கிக் குளத்திற்குள் எறிந்து விடுவேன் என்று கூறியும் எரிவு நிற்கவில்லை. பிரமாண்டமான பிள்ளையார் எங்கள் ஊர் கொட்டுக்கிணற்றடியான். அவரை பிரட்டி உருட்டிச் சென்று குளத்திற்குள் தள்ளிவிட்டுள்ளார். அதிகாலையில் சென்ற ஊரவர்கள் பிள்ளையாரைக் காணாதாது என்ன நடந்தது எனச் பார்த்தபோது பிள்ளை யாரை உருட்டிய அடையாளத்தைக் கண்டுள்ளனர். உடனே அவர்கள் குளத்தில் இறங்கிப் பிள்ளையாரை திரும்ப தூக்கி வந்து ஆலயப் பூசகரைக் கொண்டு மீண்டும் இருப்பிட்தில் வைத்துள்ளனர். அவருக்கு உடல் வாதை குறைந்ததோ இல்லையோ தெரியாது. இந்திய இராணுவம் வந்தபோது அவர் தனிமையில் வயல்வெளியில் மாடுகளோடு இருந்தவர் என்ன நடந்தது என்பது யாருக்கும் தெரியாத விடயம். அவர் பிள்ளையாரின் தீவிர பக்தர் என்பதனை மட்டும் ஊகிக்க முடிகின்றது.

குமுளமுனையில் உள்ள கூட்டுறவுப் பண்டகசாலையில் முகாமையாள ராகக் கடமையாற்றிய திரு. கந்தப்பிள்ளை சண்முகம் என்பவர் கொட்டுக்கிணற்று விநாயகரைத்தனது குலதெய்வமாகக் கொண்டவர். அவரது அற்புதங்களை நினைந்து கும்மிப்பாட்டு, கோலாட்டப் பாட்டுக்கள் போன்றவற்றை இயற்றி புத்தாண்டு தினத்தில் சிறார்களைப் பழக்கி கோலாட்டமாடுவது வழக்கமாக இருந்துவந்தது. அவரால் இயற்றப்பட்ட பாடல்களில் இரண்டினை இங்கு தருவது அவருக்கும் அவர் குடும்பத்தின ருக்கும் செய்யும் கைமாறாக அமையும் என உணர்கின்றேன்.

தன்னனத் தன்னனத் தன்னானே தனத்
தான தன்னனத் தன்னானே

கும்மியடி பெண்ணே கும்மியடி
கூடிக்குலவிக் கும்மியடி
கொட்டுக்கிணற்றான் புகழ்பாடிக்
கூடிக் குலவிக் கும்மியடி




Pandara Vanniyan's and the Pariyari Velar forces along with the Kandyan Dissava's forces attacked Mullaitivu on the 25th of August 1803
Courtesy of www.ezilon.com

கருவாட்டுடன் கற்பூரம் கலந்தது போல்
கொண்டு சென்றான் அவன் பிள்ளையாரை

தன்னனத் தன்னனத் தன்னானே தனத்
தான தன்னனத்  தன்னானே

நாற்றம் தாங்காத பிள்ளையாரோ
கடலில் குதித்து வந்தாரே!
கொட்டுக் கிணற்று வயலினிலே அவர்
கொட்டும் பொலியினில் ஒழிந்தாரே
பொலியோ பொலிந்தது மலையாக
போற்றியே நின்றாரே உடையவரும்




தன்னனத் தன்னனத் தன்னானே தனத்
தான தன்னனத்  தன்னானே

கனவினில் தோன்றினார் பிள்ளையாரும்
கல்தேடி வருவான் பட்டாணி
கண்டதும் இல்லைநாம் கல்லேதும்
நெல்லினில் உள்ள கல்தவிர வேறு
கல்லில்லை என்றே இயம்பிடுவாய் என்றாரே

தேடி வந்தான் அங்கே பட்டாணி
கல்லேதும் வந்ததோ என்றனனே

தன்னனத் தன்னனத் தன்னானே தனத்
தான தன்னனத்  தன்னானே

வேறு நெல்லினில் உள்ள கல்தவிர என்றவர்
வேறு மொழிபகராது இருந்தார் உடையவரும்
வேறு இடந்தேடி குதிரையில் ஏகினான் பட்டாணி

உண்மையை உணர்ந்தனர் ஊரவரும்
ஒன்றாய்க் கூடிப் பொலியினிலே
தோண்டி எடுத்துமே தூய்மைசெய்தார்
தோப்புக்கரணங்கள் போட்டனரே

அருள்செய்ய வந்த விநாயகரை
அருள்கொண்டு போற்றி ஏற்றினரே
இருள்நீக்க வந்தவர் கொட்டுக்கிணறு
மருள்கொண்டார் வயலின் ஓரத்தினிலே

தன்னனத் தன்னனத் தன்னானே தனத்

தான தன்னனத் தன்னானே

மறைத்தே வைக்க வேண்டுமென்றார்
மறைநூல் உணர்ந்த உடையவரும்
கறையேதும் இல்லாக் காட்டருகே
முறையோடு வைத்தனர் விநாயகரை.

ஊரின் அயலில் வைத்துமங்கே
ஆதரிக்க வேண்டினார் என்றாரே
ஆலமரக் கூடலிலே ஆருமறியா
ஆலயம் அமைத்தனர் ஊரவரே

மீண்டும் வந்தான் பட்டாணி
மீட்டுப் போக வந்த அவன்
மீண்டும் மீண்டும் முயன்றனே
மீட்க முடியாப் பொருளானார்

கண்டு கொண்டான் அந்தப் பட்டாணி
கூவி அழைத்தான் பிள்ளையாரை
கூட வந்து சேரும் என்றே
குதிரையில் இருந்து அழைத்தானே

அசையாதிருந்தார் அமைதியுற
விசையைக்கூட்டிப் பட்டாணி தன்
திசைக்கு இழுத்தான் பட்டாணி

அசைவே இல்லா உலகானார்

கடுஞ்சினம் கொண்டான் பட்டாணி
வெஞ்சினம் கூறி நின்றான் பட்டாணி

அஞ்சா நெஞ்சன் நானென்று
விஞ்சியே வாளை உருவினானே

தன்னனத் தன்னனத் தன்னானே தனத்
தான தந்த னத் தன்னானே

கும்மியடி பெண்யே கும்மியடி
கூடிக்குலவிக் கும்மியடி
கொட்டுக்கிணற்றான் புகழ்பாடிக்
கூடிக் குலவிக் கும்மியடி

கோலாட்டப்பாட்டு

வந்தனம் தந்தோம் நாங்கள் வந்தனம் தந்தோம்
வாரணமுகவருக்கும் வந்தனம் தந்தோம்

வேறு

காசறி காட்டு விநாயகனே வந்தனம்
கற்பகப்பிள்ளையாருக்கும் வந்தனம் தந்தோம்
வந்தனம் தந்தோம் நாங்கள் வந்தனம் தந்தோம்
வாரணமுகவருக்கும் வந்தனம் தந்தோம்
கோலமுகமுடைய கொட்டுக்கிணற்றானுக்கும்
மூசிகவிநாயகர்க்கும் வந்தனம் தந்தோம்
சீரறி சித்தி விநாயகருக்கும் வந்தனம்
சிற்றம் பலவனுக்கும் வந்தனம் தந்தோம்
காசறி காட்டு விநாயகருக்கும் வந்தனம்
கற்பகப் பிள்ளையாருக்கும் வந்தனம் தந்தோம்
வந்தனம் தந்தோம் நாங்கள் வந்தனம் தந்தோம்
வாரணமுகவருக்கும் வந்தனம் தந்தோம்.

ஒவ்வொரு சித்திரைப் புத்தாண்டு தினத்திலும் கொட்டுக்கிணற்றான் முன்றலிலும் பின்னர் ஊருக்குள்ளும் பெரியவர்கள், சிறிய பிள்ளைகள் என்போர் கோலாட்டம் பழகி ஆடுவது வழக்கம்.

இந்தக் கோலாட்டத்தை நான் சிறியவனாக இருந்தபோது 1956ம் ஆண்டளவில் அப்பகுதியில் இறைவரி உத்தியோகத்தராக இருந்த எப். எக்ஸ். செல்லத்தம்பு அவர்கள் இடமாற்றாலாகிச் சென்ற வேளை ஆடியது நினைவில் இருக்கின்றது. அப்போதைய கூட்டுறவுச் சங்கக்கடையின் விற்பனை முகாமையாளராக இருந் திரு. கந்தப்பிள்ளை சண்முகம் அவர்களே எங்களைப் பழக்கி அரங்கேற்றினார். இறைவணக்கப் பாட்டோடு வேறு பாடல்களுக்கும் கோலாட்டம் கும்மி அடிப்பது அப்போதய வழக்கம்.

“ஏறாத மலை தன்னிலே ஜோரான கௌதாரி இரண்டு
தாராளமாய் இங்கே வந்து ததிங்கிண
தாம் தாளம் போடுததையா
அட போடு . . .
ஏறாத மலை தன்னிலே . . . . . . .

என்பன போன்ற தருவோடு கூடிய பாடல்களுக்கு கோலாட்டம் ஆடுவது மனதிற்கு இன்பம் தருவதாக அமைந்திருந்தது. நான் 2003ம் ஆண்டில் குமுளமுனைக்குச் சென்றிருந்தபோது திரு. சண்முகம் அவர்களின் பணியைத் தொடர்ந்து அவரின் மூத்த புதல்வன் மேற்கொண்டு வருவதனைக் கண்டு புழகாங்கிதம் அடைந்தேன். எமது நாட்டுக்கூத்துப் பாரம்பரியத்தோடு ஒட்டிய கிராமிய நடனவகையைச் சார்ந்த கோலாட்டம் அழிந்துவிடாது தொடர்ந்தும் பேணிப்பாதுகாக்கப்பட்டுவருவது பாராட்டத்தக்கதே.

அது மட்டுமன்றி அங்கு காத்தவராயன் கூத்து, பூதத்தம்பி நாடகம், சத்தியவான் சாவித்திரி, கோவலன் கூத்து போன்ற நாட்டுக்கூத்துக்கள் ஆடப்பட்டு வந்துள்ளன. எனினும் இலகுவாக ஆடக்கூடிய காத்தவராயன் கூத்து இன்றும் அங்கு தொடர்ந்து வருடாவருடம் இடம்பெறுவதனைக் காணமுடிகின்றது. ஆரம்பத்தில் தென்னவன் மரவடிக் கிராமத்தைச் சேர்ந்த பேச்சுமுத்து அண்ணாவியார், புதுக்குடியிருப்பைச் சேர்ந்த சரவணமுத்து அண்ணாவியார் போன்றோர் இங்கு சித்திரை மாதமளவில் வந்து வைகாசி மாதத்தில் காத்தவராயன் கூத்தை அரங்கேற்றம் செய்வது வழமை. கோயில் முன்றலில் இந்தக் கூத்துக்கள் பெரும்பாலும் இடம்பெறும். இல்லையேல் ஊரின் மத்தியில் அமைந்துள்ள “பிலாவடி“ வளவில் இந்தக் கூத்துக்களுக்கு மேடை அமைத்து மேடையேற்றுவார்கள். இந்தக் கூத்துக்கான மேடை அலங்காரம் காட்சித் திரைகள் வெளியிடத்திலிருந்து வருவிக்கப்படும்.

மேடைகள் தென்னைமரக் குற்றிகள் காட்டுமரங்களால் ஆக்கப்பட்டிருக்கும். ஊரவர்கள் அனைவரும் இணைந்து இந்த முயற்சியில் பங்கேற்று சிறப்பாக நடத்துவர். 1956 ஆண்டில் குமுளமுனையைச் சேர்ந்த கணபதிப்பிள்ளை என்பவர் வேதாளனாக மிக உயர்ந்த வட்டவடிவான வண்ணங்கள் நிறைந்த கூத்துக்கான உடை உடுத்து ஆடியது நினைவில் வருகின்றது. அவர் குமுளமுனை ப.நோ. கூ. சங்கப்புதிய கட்டிடத் திறப்பு விழாவிற்கு ஆடிய ஆட்டத்திற்குப் பின்னர் அப்படியான கூத்துவகைகளைக் காணமுடிய வில்லை. கூத்துக்களில் இலகுவானதாக காத்தவராயன் கூத்து காணப்படுகின்றது. கொக்கிளாய் முருகேசு அண்ணாவியார் இங்கு வந்து கூத்துப்பழக்குவார். அவரிடம் கூத்துப்பழகிய நவரத்தினம் இன்று ஒரு அண்ணாவியாராக குமுளமுனையில் செயற்படுகின்றார்.

இக்கிராமத்தின் மத்தியில் காணப்படும் சிறப்பு அம்சங்களில் ஒன்று கூட்டு வாழ்க்கை முறை. அங்குள்ள மக்கள் அனைவரும் எந்தவித ஏற்றத்தாழ்வுக ளும் இன்றி எல்லோரும் எல்லா நிகழ்சிகளிலும் பங்கு கொள்வார்கள். உணவு தேடி வந்தாலும் சரி, தேன் பாலைப்பழம், முரலிப்பழம், போன்ற காடுபடு திரவியங்களாக இருந்தாலும் சரி, வேட்டையாடிக் கொண்டுவரும் இறைச்சி வகையாக இருந்தாலும் சரி அவர்கள் பங்கிட்டு பரிமாறிக் கொள்வதினைக் காணலாம். வேட்டைக்குச் செல்லும்போது தாவடி வேட்டை என்று குறிப்பிடும் ஒரு வழக்கமும் அவர்களிடம் காணப்பட்டது. அதாவது ஊரில் உள்ள வேட்டை நாய்களுடன், வேட்டையிற் கைதேந்தவர்களும் காட்டின் திசைபற்றி அறிந்தவர்களுமான அநுபவ சாலிகளுடன் சேர்ந்து ஒரு குழுவாக அவர்கள் உணவுப்பொருட்கள், சமையலுக்கான பாத்திரங்கள் முதலியவற்றோடு காட்டில் வெகுதூரம் சென்று தங்கி இருந்து வேட்டையாடி வருவது வழக்கம். அப்படி வேட்டையாடப்படும் மான், மரை, பன்றி போன்ற விலங்குகளின் இறைச்சியை தீயில் வேகவைத்து கருவாடாக்கியும், தோல்களைப் பதனிட்டும் கொண்டு வருவார்கள். மான், மரைத் தோல்களை அவர்கள் இருப்பதற்கு, படுப்பதற்குப் பாவிப்பார்கள். கிணற்றில் வாளி போன்ற பொருட்கள் விழுந்துவிட்டால் மான் கொம்பினை உபயோகித்து மிக ஆழமான கிணறுகளிற்கூட அவற்றை இலகுவாக வெளியே எடுப்பார்கள். கத்தி, தாள்கத்தி அல்லது அரிவாள் எனப்படும் நெல் வெட்ட பயன்படுத்தப் படும் கத்திகள், போன்றவற்றிற்கு கைப்பிடிகளைப் போடுவதற்குப் பயன்படுத்துவது வழக்கம். சாதாரணமாக கையடக்கமான கத்திகளை அவர்கள் கொம்புக்கத்தி என்றே அழைப்பர். இதற்கு இவ்வித கத்திகளுக்கு மான் அல்லது மரை அல்லது மாட்டுக் கொம்பாலான பிடிகளைப் போடுவதே காரணமாகும். இருப்பினும் கருங்காலி மரத்தின் கருமையான வைரத்தை எடுத்துக் கடைந்தும் பிடி போடுவார்கள்.

காட்டுக்கத்தி அல்லது கைக்கத்தி என அவர்கள் குறிப்பிடும் கத்திக்கு மிக நீண்ட கைப்பிடிகளைப் போட்டு வைத்திருப்பதற்கு முட்களாலான பற்றைகளை வெட்ட அக்கத்திகள் உதவுவதாலேயேயாகும். கைக்கத்தியின் பிடி செய்வதற்கு வெடுக்கு நாறி, முதிரை போன்ற மரங்களைப் பாவிப்பர். குரக்கன் போன்ற தானியங்களை அரைக்கும் திருகை எனப்படும் கருவிக்கும் கைபிடித்துச் சுற்றுவதற்கான பிடி கொம்பிலேயே செய்து போடுவர். இல்லையென்றால் விளாமரத்தின் கொம்பிலிருந்து பிடிகளைப் போடுவார்கள். அவ்விதமே கலப்பை (ஏர்) செய்வதற்கும் சிறப்பான மரங்களைப் பாவிப்பர். ஏர்க்கால் என்னும் நீளமான பகுதி கலப்பையில் உழும்பகுதியையும் (படவாளையும்) மாட்டடில் பூட்டப்படும் நுகத்தையும் இணைப்பதாகும். இதற்கு காயா மரத்தின் தண்டு பயன்படுகின்றது. அவ்விதமே நுகத்திற்கு மஞ்சள் நுணா பயன் படுத்தப்படுகின்றது, மஞ்சள் நுணா என்பது பாரம் குறைந்த மரமாகும். மிகவும் மென்மையானது. மாடுகளின் தோழில் நோவையோ அல்லது உராய்வையோ ஏற்படுத்தாது. இந்தமரம் மருந்திற்கும் பாவிக்கப்படும் மரம் என்பது குறிப்பிடத்தக்கது. படவாள் என்பது பாலை அல்லது முதிரை ஆகிய வைரம்பொருந்திய மரத்தில் இருந்து அல்லது பூவரசு மரத்தில் இருந்துவளைந்திருக்கும் பகுதியை வெட்டி எடுத்துத் தயாரித்துக்கொள்வார்கள்.

இக்கிராமத்தில் இரும்புத் தொழில் புரிவோர் இன்மையால் கரவெட்டிக்கிரா மத்தில் இருந்து வந்து ஒரு வீட்டில் கம்மாலை போட்டு கலப்பை, அச்சாணி, அரிவாள், கத்தி, பாக்குவெட்டி போன்றவற்றைச் செய்து கொடுப்பார்கள். இவர்களுக்கு அறுவடை காலத்திலேயே அதற்கான பணம் கையளிக்கப்படும். அவர்கள் பெரும்பாலும் நெல்லை வாங்கிச் செல்வார்கள். இன்று இவ்வகையான செய்முறைகள் மாற்றமடைந்துள்ளது.

இங்கு உள்ள மக்கள் யானைத் தந்தத்தில் மோதிரம் செய்து கையில் அணிவது, யானை யின் வால்மயிரைக் கொண்ட காப்பினை அணிதல், புலிப்பல்லு, புலி நகம் வைத்த பதக்கங்களை கழுத்தில் தொங்கவிடுதல் குழந்தைகளுக்கு முப்பத்தி ஓராம் நாள் புலிநகப் பல்லு பதக்கமாக்கிச் சங்கிலி செய்து அணிவது போன்ற பழக்கங்கள் அண்மைக் காலம்வரையும் நிலவி வருகின்றது. இவ்வாறாக ஆபரணங்களைச் செய்து அணிவது நன்மை தருவதோடு நோய்கள் அணுகாது என்னும் நம்பிக்கையையும் கொண்டுள்ளனர்.

குமுளமுனைக் கிராமத்தின் ஒரு எல்லையாக அமைந்துள்ள நாயாறு நந்திக்கடல் கோடைகாலத்தில் நீரற்று வற்றிவிடுவதோடு உப்பு விளையும் இடமாகவும் காணப்படுகின்றது. ஆவணி, புரட்டாதி மாதத்தில் ஊரவர்கள்

தமக்குத் தேவைக்கான உப்பினை இங்கிருந்து அள்ளிச் சேமித்து வைத்துக்கொள்வது வழமை. இப்பிரதேசத்தில் ஒரு உப்புச் சேகரிப்புக் களஞ்சியம் ஒன்றினை உருவாக்கிக்கொள்ள அரசின் உதவியினை பாராளு மன்ற உறுப்பினராக இருந்த திரு.தா. சிவசிதம்பரம் அவர்கள் மேற்கொண்டிருந்தார். எனினும் இப்பிரதேசம் தமிழர் தாயகமாக இருந்தமை யால் அது கைகூடாமற் போனது எனலாம்.

குமுளமுனையில் கொட்டுக்கிணற்று வயல், நடுத்துண்டு, பெரியவெளி, சாரலிவயல், ஆற்றங்கடவை, மருதமடு மறிச்சிக்கட்டி, இளங்கலயன் வயல், ஆறுமுகத்தான் குளம், கரியல் என்னும் பெரிய வயல் நிலங்களோடு குமுளமுனைக் கிராமத்தை அண்டிய கிராமத்தவர்களுக்கும் பங்கீடு செய்து கொடுக்கப்பட்ட தண்ணிமுறிப்புக் குளத்திட்டம் இக்கிராமத்தின் வளத்திற்கு முக்கியமானவையாக அமைகின்றன. இக்கிராமத்திலிருந்து கிட்டத்தட்ட ஆறு மைல் தூர்த்திலுள்ள தண்ணிமுறிப்புக் குளக்கட்டு இலங்கையின் முதல் பிரதம அமைச்சராக இருந்த டி.டிஸ். சேனநாயக்க அவர்களின் மகனான டட்லி சேனநாயக்க அவர்கள் நீர்ப்பாசன அமைச்சராக இருந்தபோது பெரிதாகக் கட்டுவிக்கப்பட்டது. இரண்டு பெரும் வாய்க்கால்களைக் கொண்ட பெரும் நீர்த்தேக்கமாக இது அமைந்துள்ளது. இதனால் நன்கு மழை பெய்து நீர்த்தேக்கப்படும் காலங்களில் சிறுபோக நெற்செய்கையும் இப்பிரதே சத்திற்கு வளந்தருவதாக அமைந்துள்ளது. இக்குளம் குளக்கோட்டு மகாராசாவால் கட்டப்பட்டது என்பது இவ்வூரவர்கள் பேசிக்கொள்ளும் வரலாற்று உண்மையாகும்.

இங்கு வண்ணான் ஆறு, தேரோடும் வீதி, நித்தகை அல்லது நீத்துக்காய் ஆறு, மூண்டு ஆத்துப்பவிர் என்பன மாரிகாலத்தில் மழை பெய்யும் காலங்களில் பெருக்கெடுத்து ஓடுவனவாகக் காணப்படுகின்றன.

குமுளமுனையில் உள்ள சிறிய குன்றுகளில் காணப்படும் செம்பூரான் கலந்த மண்ணோடு உள்ள கற்பார்கள் செந்நிறமானதாக இருந்தாலும் மிகவும் உறுதியானவையாகக் காணப்படுவதனால் அவை கட்டிடங்கள் கட்டுவதற் கான தளம் போடுவதற்குப் பயன்படுத்தப்படுகின்றன. முல்லைத்தீவு, தண்ணீரூற்று, முள்ளியவளை, நீராவிப்பிட்டி, வற்றாப்பளை, முள்ளிவாய்க் கால் வட்டுவாகல் அளம்பில், செம்மலை போன்ற கிராமங்களில் உள்ள கட்டிடங்கள், பாலங்கள் போன்றவற்றிற்கு இக்கிராமத்துக் கற்கள் பயன்படுத்தப்பட்டு வருகின்றன என்பது குறிப்பிடத்தக்கது.

இக்கிராமத்திற்கும் வடமராட்சியில் உள்ள கரணவாய், வரணி போன்ற கிராமங்களுக்கும் நெருங்கிய தொடர்புகள் உள்ளன. இங்குள்ள பிள்ளை

யார் ஆலயங்களில் ஒன்றான கற்பகப் பிள்ளையார் கோவிலை மிக நீண்ட நெடுங்காலமாக நிருவகித்த பெருமை கரணவாய்யிலிருந்து வந்த சைவக் குருக்கள் பரம்பரையினரையே சாரும். வரணிக் கிராமத்துடன் தொடர்புடைய மாணிக்க விதானையார் என்பவர் சைவக் குருக்கள் பரம்பரையைச் சார்ந்தவர் என்பதும் ஆங்கில ஆட்சிக்காலத்திலும் பின்னர் இலங்கை சுதந்திரம் அடைந்த காலத்திலும் விதானையாராக கடமையாற்றியவர் என்பதும் கற்பக பிள்ளையார் ஆலயத்தினைப் போர்த்துக்கீசர் அழித்த பின்னர் அதனைப் புனருத்தாரணம் செய்வித்து கும்பாவிசேகம் செய்வித்தவர் என்பதும் குறிப்பிடத்தக்கது. பின்னர் இக்கோயில் ஊரவர்களால் நிருவகிக்கப்பட்டு வருகின்றது. இக்கோயில் கிராமத்தின் கீழக்குப்பாகத்தில் நந்திக் கடலோரமாக அமைந்திருக்க கொட்டுக்கிணற்றுப் பிள்ளையார் ஆலயம் ஊரின் மேற்குக்கரையோரமாக பெரியவெளி எனும் வயல் வெளியினருகே அமைந்திருப்பதும் குறிப்பிடத்தக்க அம்சம். இவ்விரு ஆலயங்களும் கிராமத்தினை இருபுறத்தேயும் இருந்து காவல் செய்வதாக ஊரவர்கள் நம்பிக்கை கொண்டுள்ளனர்.

இக்கிராமத்தின் மத்தியில் 1932ம் ஆண்டு கட்டப்பட்ட அரசினர் பாடசாலை வளர்ச்சி அடைந்து இன்று உயர்தர வகுப்புக்கள்வரை கல்வி புகட்டும் நிலையமாக வளர்வு பெற்றுள்ளது. அறுபதுகளின் பிற்பகுதிவரை இங்குள்ள வசதி படைத்த ஒருசிலரின் பிள்ளைகளே வெளியூர்களுக்குச் சென்று கல்வி கற்று வந்தனர். ஆனால் பின்னர் போக்குவரத்து வாய்ப்புக்களின் காரணமாக முள்ளியவளை வித்தியானந்தக் கல்லூரிக்குச் செல்லும் மாணவர்களின் தொகை சற்று அதிகரித்தது. 1956ல் குமுளமுனைக் கிராமத்திற்கு ஒரு போக்குவரத்துச் சேவையை மேற்கொள்ளுவதற்கான அனுமதியினை மோட்டார் போக்குவரத்து அமைச்சு வழங்கி இருந்தது. இதற்கான தலையீட்டை அப்போதைய வவுனியா பாராளுமன்ற உறுப்பினர் திரு. சி. சுந்தரலிங்கம் அவர்கள் பெற்றுத்தந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. குமுளமுனை மக்களது அபிப்பிராயத்தை அறிய வந்தபோது திரு சி. சுந்தரலிங்கம் அவர்களுக்குப் பெரும் வரவேற்புக் கொடுத்தனர். அவர் சென்று மண்டபத்தினுள் புகும்வரையும் வானத்திலிருந்து மலர் சொரிவதாக ஏற்பாடு செய்திருந்தனர். மலர் மாலைகள் அணிவித்தும் கோலாட்டம், குதிரைப் பொம்மலாட்டம் என்பனவும் இடம்பெற்றிருந்தமையை நான் பத்துவயதாக இருக்கும்போதே பார்க்கக்கூடிய வாய்ப்புக் கிட்டியிருந்தது. தனியார் துறையினருக்கா வவுனியா வடக்குப் போக்குவரத்து கூட்டுறவு அமைப்புக்கா அந்த அனுமதி தரப்படவேண்டும் என்பதே அந்த கூட்டத்தின் நோக்கமாக இருந்தது. கூட்டுறவு போக்குவரத்தை மக்கள் ஆதரித்திருந்தனர் எனினும் அவர்களிடம் போதிய பேருந்துகள் இன்மையால் தனியார் துறைக்குத் தற்காலிகமாக தரப்பட்டது அந்த வீதி அனுமதி. இருப்பினும் ஓரிரு

வருடங்களில் இலங்கைப் போக்குவரத்துச் சபை ஆரம்பிக்கப்பட்டதும் தனியார் போக்குவரதிற்கான அனுமதி சபைக்கு மாறிவிட்டது.

இக்கிராமத்தின் சிறப்பிற்கு இன்னுமொரு கதை உண்டு அரியாத்தை என்னும் வேலப்பணிக்கனின் மனைவியான இப்பெண்மணியின் வீர வரலாறு இம்மக்களிடையே மங்காத ஒன்றாக அமைந்துள்ளது. வீட்டுக்குள்ளே பெண்ணைப் பூட்டிவைத்த விந்தை மனிதனும் தலை குனிந்தான் என்பதை மெய்ப்பித்து வன்னி மண்ணில் வாழ்ந்தவள் அரியாத்தை. வன்னி மண்ணில் குமுளமுனை என்னும் ஒரு கிராமம் உண்டு. அங்கு பல ஆண்டுகளுக்கு முன் மதம்கொண்ட யானை ஒன்று காட்டில் வாழ்ந்தது. கிராமத்தவர்களின் பயிரினங்களை எல்லாம் அழித்தது மதயானை. யானையைப் பிடிப்பது பணிக்கனின் வேலை. வேலப் பணிக்கனுக்காக மதம் கொண்ட யானையை அடக்கத் தானே சென்றாள் அவனது மனைவி. மிகவும் பயங்கரமான மதயானையை நோக்கி விரைந்தாள். வேறு எங்குமல்ல பேய்கள் உறங்கும் சுடுகாட்டுப்பகுதிக்கு விரைந்தாள். அங்கு நின்று அட்டகாசம் புரிந்த மதயானையை அடக்கி ஒரு புளியமரத்தில் கட்டினாள். தன் கணவனுக்குக் களங்கம் ஏற்படக்கூடாது என்னும் எண்ணமே அவளை உந்தியது. இன்று எமது மண்ணில் தீரம்புரியும் மகளிரின் வழிகாட்டியாக இன்றும் எம்மிடையே வாழ்கின்றார் அரியாத்தை என்னும் வீராங்கனை.

## வீரமும் தீரமும் துணிவும் மிக்க பெண்மணி அரியாத்தை

அரியாத்தை என்னும் வீரமும், துணிவும் மிக்க வீரமங்கை “குமுளமுனை” என்ற கிராமத்தில் வாழ்ந்ததாகவும் தன் கணவனான வேலப்பணிக்கன் அடக்கிப் பிடிக்கமுடியாத மதம் கொண்டயானையை அடக்கி வென்றார் எனவும் குறுநில வன்னி அரசனின் ஆணையை மீறமுடியாத பயத்தினால் கணவன் படுக்கையில் ;மனச்சோர்வு; என்னும் நோய்வாய்ப்பட்டதால் மனைவியான அரியாத்தை கணவனுக்காக மதம் கொண்ட யானையை அடக்கிக் கட்டினாள் எனவும் கட்டப்பட்ட புளியமரத்தில் யாரும் அணுகாமல் யானை இறந்தது எனவும் கதை ஒன்று வழக்கில் உள்ளது. குமுள முனையில் கற்பகப்பிள்ளையார் கோவிற்புறப் பகுதியில் தாமரைக் கேணிக்குச் செல்லும் வழியில் ஒரு புளியமரத்தை ;ஆனை கட்டியபுளி; என அழைத்துவந்தனர். அந்த காணியில் இருந்து மரங்கள் அழிக்கப்பட்டு காணி பாவனைக்கு வந்தபோது எரிக்கப்பட்டபோது அந்த மாபெரும் புளியமரமும் எரிந்து சாம்பலாகிப்போனது.

அரியாத்தையின் சொந்த மாமன் மகனான நீலப்பணிக்கன், அவள் தனக்குக்

கிடைக்க வில்லை என்ற ஆத்திரத்தினால் வேலப்பணிக்கனுக்கு அரசன் இட்ட கட்டளையைச் சந்தர்ப்பமாகக் கொண்டு அரியாத்தையைப் பழிவாங்க எண்ணினான். யானையை அடக்கக் கூடியவன் வேலப்பணிக்கன் அல்ல அவனது மனையாள் அரியாத்தையே என இகழ்வு சிறப்பாக ஏளனம் செய்தான். பயிர்களை அழித்து வந்த மதம் கொண்ட யானையை அடக்கும் வழியைச் சின்னவன்னியன் சபையோரிடம் கேட்டபோது சபையினர் வேலப்பணிக்கனே தகுந்தவீரனாகக் கணித்துக் கொண்டனர். இந்த ஒளிப்பேழையில் அரியாத்தை வடிவம் வீரம் மிக்கதாகச் சித்தரிக்கப்படாதது ஆண்மையின் வீர்த்திற்கு நிகராகப் பெண்ணை ஏற்றுக்கொள்ள மறுக்கும் ஆணியச் சமுதாயத்தின் எண்ணமே எனக் கருத்துக்கள் உள்ளன. வழமையாகப் பெண்களைச் சித்திரிக்கும் நளினம், பதுமை, அடக்க ஒடுக்கம் நிரம்பிய நங்கையாக வர்ணிக்கப்பட்டு யானைமுகனை வீழ்ந்து வணங்கி அக்கடவுளின் சக்தியைப் பெற்றுக் கடவுள் கருணையினால் அந்த யானையை அடக்கியதாகக்கதை வர்ணிக்கப்பட்டிருந்தது எனக் கூறப் படுகிறது.

இன்னொரு கதை வடிவில் நீலப்பணிக்கன் தன் மாமன் மகளை அடையத் தடையாயிருந்த வேலப்பணிக்கனுக்கு சின்னவன்னியன் ஏவிய கட்ட ளையை நிறைவேற்றாது அவன் அந்தரப்பட்டால் அது அரியாத்தைக்கு ஒரு பாடமாகவும் அவள் தன்னை மன்றாடி உதவும்படி கேட்க ஒரு வழியாகவும் இருக்கும் என எண்ணினான் எனக் கூறப்படுகின்றது. அதனால் வேலப்பணிக்கனின் உணவில் நஞ்சைக்கலந்து அவனை நோயாளியாக் கினான் எனவும் கூறப்படுகிறது. தனது கணவனின் பெயருக்கு கழங்கம் ஏற்படக்கூடாது என நினைந்தவள் அந்த வீர மங்கை.

வன்னியில் சில பெண்கள் மாடுகளைத் துரத்திவந்து கட்டுதல், பால் கறத்தல், பிடிக்கமுடியாத நிலையில் கட்டாக் காலிகளாக ஓடித்திரியும் ;நாம்பன்; மாடுகளை கயிறு எறிந்தும் படுத்துக் கட்டும் முறைமூலமாகவும் பிடித்துக் கட்டுவது வழக்கமாக இருந்து வந்துள்ளது. அரியாத்தை என்ற பெண் வீரம் நிறைந்தவளாக இருந்திருக்கக் கூடிய சந்தர்ப்பம் வன்னிச் சூழலில் இருந்திருக்கின்றது. இன்றும் இருந்து வருகின்றது. அரியாத்தையின் வீர வரலாறு குமுளமுனைக் கிராமத்தின் வரலாற்றோடு பின்னிப் பிணைந்தது.

குமுளமுனையில் இன்றும் வன்னியன் வளவு, வன்னியன் கிணறு என்பன காணப்படுவதோடு, வன்னியிற் தெய்வத்திற்கு மிக ஆசாரமாக பெண்கள் குழந்தைகள் செல்லாத ஒதுக்குப்புறமாக உள்ள காட்டுப்பகுதியல் அல்லது வயலில் பொங்கிப் படைப்பது வழமை. கற்பக விநாயகர் ஆலயத்தின் வடமேற்காக சற்றுத்தொலையில் பாழடைந்த செங்கல்லால் கட்டப்பட்ட

கிணற்றையும், கடற்கரையை அண்டிய பிரதேசத்தில் வன்னியன் வளவு என்னும் ஒரு காணியில் செங்கல் கட்டுக்கொண்ட கிணற்றையும் நான் அழிந்த நிலையில் பார்த்திருக்கின்றேன். இவ்விடங்களை ஆழமாகத் தோண்டினால் பல்வேறு புதையுண்ணட வரலாற்றுச் சின்னங்கள் கிடைக்கலாம் என்பது எனது எண்ணம்.

குமுளமுனைக்கு வடமேற்குப்பக்கமாக நாகஞ்சோலை என்னும் நாக மரங்கள் நிறைந்த காடு உண்டு. இங்கிருந்து யாழ் மாவட்டத்தில் உள்ள பல கோயில்களுக்கு நாகமரங்கள் கொடிக் தம்பத்திற்காக எடுத்துச் செல்லப் பட்டன. நயினாதீவு நாகபூசணி அம்மன் ஆலயத்தின் கொடித்தம்பப் புனருத்தாரணத்திற்காக அறங்காவற் சபையின் செயலாளராக இருந்த திரு. மாசிலாமணி அவர்கள் குமுளமுனைக்கு வந்து நாகமரம் ஒன்றை வெட்டி நயினாதீவுக்குக் கொண்டு சென்றார் என்பதோடு, முல்லைத்தீவு, மன்னார், வவுனியா ஒரே தேர்தற்தொகுதியாக இருந்தபோது அரசாங்க சபைக்காகத் தேர்தலில் நின்ற ரி.எம். சபாரத்தினம் அவர்களின் மகனான புலேந்திரன் அவர்கள் வல்லிபுரக் கோவிலுக்கு ஒரு நாகமரத்தை எடுத்துச் சென்றுள்ளார் என்பதும் குறிப்பிடத்தக்கது.

பண்டாரவன்னியனும் அவனது சகாக்களும் தோற்கடிக்கப்பட்ட பின்னர் ஆங்கிலேயர் குமளமுனையில் ஒரு சுற்றுலா விடுதியினை அங்குள்ள உயரமான குன்றின் மீது அமைத்திரந்தார்கள். அதில் தேசாதிபதியின் பிரதிநிதி வந்து தங்கிச் செல்வது வழக்கம் எனவும், நீதி விசாரணைகள் அங்குதான் நடைபெறுவது வழக்கம் எனவும் ஊரவர்கள் கூறுவதை நான் கேட்டுள்ளதோடு, அந்த மண்டபத்தின் எச்ச சொச்சங்களைக் காணவும் முடிந்தது. வீடு கட்டுவதற்கான கல்லுத் தோண்டி எடுப்பதற்காக அவ்விடம் பயன்படுத்தப்பட்டதனால் இந்த எச்சங்கள் அழிக்கப்பட்டுவிட்ன. A Manual Of Vanni Districts என்னும் நூலை எழுதிய து.டீ.டுநறள தனது பதவிக் காலத்தில் இக்கிராமத்தில் வந்து தங்கி அரசாங்கத்திற்கான வரி அறவிடுதல், காணி விற்பனை என்பனவற்றைக் கவனித்துப் பதிவாக்கியுள்ளார் என்பதும் குறிப்பிடத்தக்கது.

கரையோரமாகக் கதிர்காம யாத்திரைசெய்யும் கந்தனின் அடியார்கள் குமுளமுனையில் மூன்று நாட்கள் தங்கியிருந்து இளைப்பாறித் தமது பிரயாணத்தைத் தொடர்வார்கள். அவ்விதம் தங்கியிருகும் வேளை இவ்வூரவர்கள் மிக்க பக்தி சிரத்தையோடு அடியவர்களை வரவேற்று உபசரிப்பது கண்கொள்ளாக் காட்சியாகும். அப்பூதியடிகளின் தொண்டை நினைவுகூரும் வகையில் இக்கிராமத்தவர்களின் பணி அமைந்திருக்கும் என்பது குறிப்பிடத்தக்கதாகும். அதிகமான அடியவர்கள் ஒரு நேரம் மட்டும்

உண்டு விரதம் அனுட்டிப்பார்கள். வியாழக்கிழமை மாலை வரும் அடியவர்களுக்கு அவர்களின் களைப்பைப் போக்க முறிப்புகுளத்திற்கு (கனுக்கேணிக் குளம்) அண்மையில் தண்ணீர்ப்பந்தல் வைத்து புளியில் சர்க்கரை கரைத்த நீர், மோர், ஊறுகாய் மோர் என தாகசாந்தி செய்யும் வழக்கம் நீண்டகாலமாக அவ்வூரைச் சேரந்த கந்தவனம் என்பவரின் குடும்பத்தினரால் மேற்கொள்ளப்பட்டுவந்தது. யாத்திரை செய்யும் அடியார்கள் குமுளமுனைக்கு வந்து ஆலயங்களிலும், பொது இடங்களிலும் தனியார்வீட்டு முற்றங்களிலும் தங்கி முருக பக்திப் பாடல்களையும் பஜனைகளையும் செய்து மிக்க பக்தி மயமாக ஊரையே மாற்றிவிடுவர். வெள்ளிக்கிழமை கொட்டுக்கிணற்று விநாயகர் ஆலயத்திலும், சில குடும்பத்தவர்கள் சேர்ந்து தம்மிடங்களில் அன்னதானம் கொடுப்பதுமாக சனிக்கிழை மத்தியானம் வரையும் இவ் அன்னதானம் வழங்கும் நிகழ்வு தொடரும். ஆடியவர்கள் வீடு வீடாகச் சென்று பிச்சைப்பாத்திரத்தை நிரப்பி தங்கள் வழிப்பயணத்திற்கான நிதியையும் சேர்த்துக்கொள்வார்கள். பாத்திரங்களுடன் அல்லது பைகளுடன் அடியவர்கள் வீடு வீடாகச் செல்வதும், அவர்களின் அரோகராச் சத்தமும் மன மகிழ்வைத்தரும் காட்சியாக அமைந்திருக்கும். இவர்களுடன் எமது ஊரவர்களில் சிலரும் இணைந்து கொள்ளுவார்கள். சனிக்கிழமை மாலை அவர்களது பயணம் கடற்கரை யோரமாகச் செம்மலையை நோக்கித் தொடரும். கற்பக விநாயகர் ஆலயத்தில் இடம்பெறும் மதிய அன்னதானத்தோடு அவர்களது யாத்திரை மீண்டும் ஆரம்பிக்கும். ஒரு தலைவரைப் பின்பற்றி நடப்பதுபோன்று சமய அறிவு பெற்ற அல்லது இறைபக்தி மிக்க ஒருவரின் பின்னர் ஒரு கூட்டம் சேர்ந்து நடப்பதால் அவகள் களைப்பின்றிச் செல்வதனையும் காணலாம். ஒருவருக்கொருவர் உற்ற துணையாக அவர்கள் குடும்பச் சுமைகளை எல்லாம் ஒதுக்கிவிட்டு செல்லும் நிலைமை அவர்களின் உள்ளத்தில் களிப்பை ஏற்படுத்துவதில் வியப்பில்லை.

மா, பலா, வாழைப்பழத்தோடு, விளாம்பழம், தென்னை, தோடை, அன்னமுன்னா, பனம் பழம் என்பனவற்றிற்கும் குமுளமுனை பெயர்போன கிராமமாகும். இவற்றைவிட காட்டில் சில காலங்களில் கிடைக்கும் முரலிப்பழம் மிகவும் சுவை வாய்ந்த பழங்களில் ஒன்று. இப் பழங்கிடைக்கும் காலங்களில் கிடைக்கும் தேன் மிகவும் சுவையானது என்பது குறிப்பிடத் தக்கது. அவ்விதமே பாலைப்பழமும் மிகவும் சுவைவாய்ந்ததோடு, பாலைப் பழப் பாணி காய்ச்சி அதனைப் இனிப்புப்பலகாரங்கள் செய்வதற்கும் உபயோகிக்கும் தன்மை அக்கிராமத்து மக்களிடம் உண்டு. விளாம்பழம் வயலோரங்களிலும் குளக்கரைகளிலும் மிக அதிகமாகக் கிடைகின்றது. பல விழாம்பழங்கள் முழுமையாக விழுந்து கிடந்தாலும் வெறும் கோதாக இருக்கும். அவ்விதம் இருப்பதை யானை உண்ட விளாங்கனி என்று கூறுவர்.

கறுத்தைக் கொழும்பான் வெள்ளைக் கொழும்பான், அம்பலவி, விலாட்டு இன மாம்பழங்கள் அங்கு பெருந்தொகையாகக் காணப்படுகின்றன. விலாட்டு என்பது ஐம்பதுகளுக்குப் பின்னரே எமது கிராமதில் அறிமுகமானது. அதிகளவு பழங்களைக் தரக்கூடிய உயரம் குறைந்த மரமாக வளரக்கூடியது. பலாப்பழங்களில் கூழன் என்பது மிகவும் இனிமைவாய்ந்தது. வரிக்கை என்பது சப்பிடுவதற்கு இலகுவானது. பலவகைப் பெயர்களுடன் பலாப்பழங் கள் காணப்படுகின்றன. வாழைப்பழத்தில் கதலி, தேன்கதலி, சீனிக் கதலி அல்லது இறப்பர் கதலி, இரதை, கப்பல், செவ்வாழை, மருத்துவ வாழை, கறிவாழையாகச் சாம்பல்மொந்தன், கிளிமொந்தன் போன்ற வாழை இனங்களும் இங்கு காணப்படுகின்றன. இவற்றை விட கானல் வாழை என மழையை நம்பி வாழை நடும் வழக்கமும் உண்டு. காட்டை வெட்டி அழித்துப் பயன்பாட்டிற்குக் கொண்டு வரும்போது அதனைப் புதுப்புலவு என அழைப்பார்கள். அவ்விதம் செய்துவிட்டு பின்னர் பயன்படுத்தப்படாமல் விடும் நிலங்கள், மழையைமட்டும் நம்பி மேற்கொள்ளப்படும் போது அதனைச் சேனைச் செய்கை எனவும் அழைப்பர். எள்ளு, கொள்ளு, குரக்கன், சாமை, தினை, சோளம், இறுங்கு போன்ற தானியங்கள் சேனைச் செய்கையாக மேற்கொள்ளப்படுகின்றது. புதிதாக் காடழித்து மேற்கொள்ளப்படும் புதுப் புலவுகளில் இவ்வித பயிரினங்களே ஆரம்ப காலங்களில் பயிரிடப்பட்டன.

குடியிருப்புக்களில் கிணற்றைச் சுற்றி வாழை பயிரிடப்பட்டு உள்ளூர்த் தேவைகளுக்குப் பயன் படுவனவாகக் காணப்பட்டன. தைப்பொங்கல், சித்திரைப் புத்தாண்டு, கோயில் திருவிழாக்கள், பொங்கல்கள், மடைகள் போன்றவற்றிற்கு வாழைப்பழம் இவ்விதமாகப் பயிரடப்படும் வாழைகளிலி ருந்தே பெறப்படுவது வழக்கம். இக்காலங்கள் போக ஏனைய காலங்களில் வாழையிலிருந்து கிடைக்கும் வருமானம் இன்மையால் இதனை பணப்பயிராகப் பயிரிட முடியாதநிலை ஆரம்ப காலங்களில் அதாவது ஐம்பதுகளிலும் அதற்கு முன்னரும் காணப்பட்டன. குடியேற்றங்கள், பிறப்பு வீத அதிகரிப்புப் போன்றவற்றால் சனத்தொகையில் படிப்படியாக மாற்றம் ஏற்பட்டதோடு மக்கள் வாழ்வியலிலும் மாற்றங்கள் காணப்பட்டன. இதன்வழி போக்குவரத்துப் பாதைகள் அமைக்கப்பட்டு போக்குவரத்து வாய்ப்புக்களைப் பல கிராமங்கள் பெற்றுக்கொண்டமையால் அயல் கிராமங்களோடும் பட்டினங்களோடும் தொடர்புகள் இலகுபடுத்தப் பட்டமையால் கால் நடையாகவும், மாட்டுவண்டி, இரண்டு சில்லு உதை வண்டி போன்றவற்றின் பாவனைகளால் மட்டுப்படுத்தப்பட்டிருந்த போக்குவரத்து, 1960களின் பின்னர் பேருந்து போக்குவரத்து அறிமுகப் படுத்தப்பட்டதன் பின்னர் பல கிராமங்களுக்கும் தொடர்புகளை விரைவாக ஏற்படுத்தக் காலாக அமைந்தது. குமுளமுனைக் கிராமம் 1950க்குப்பின்னர் துரித விருத்தி காண்பதற்கு அப்போது நீர்ப்பாசன அமைச்சராக இருந்த டட்லி

சேனநாயக்க அவர்களால் மேற்கொள்ளப்பட்ட தண்ணிமுறிப்புக் குளப் புனருத்தாரணம் காரணமாக அமைந்தது. தண்ணிமுறிப்புக் குளம் புனருத்தாரணம் செய்யப்படுவதற்கு முன்னர் குமுளமுனைக்கு அணித்தாக உள்ள பலசிறு குளங்கள் புது நிர்மாணம் பெற்றன. இதனால் ஆறுமுகத்தான் குளம் ஒரு கிலோமீற்றர் வரை நீளமுள்ள சிறிய அணைக்கட்டு கட்டப்பட்டு அக்கிராமத்திலுள்ள மிகவும் ஏழ்மை நிலையில் வாழ்ந்த காணியற்றவர் களுக்குக் காணிகள் வழங்கப்பட்டது. அவர்களை நிரந்தரக் குடிகளாக வைத்திருக்பதற்காகவும் வாழ்வாதரத்தை மேற்கொள்வதற்காகவும் இக் காணிகள் வழங்கப்பட்டிருத்தல் கூடும். ஒருவருக்குத் தலா ஐந்து ஏக்கர் நன்செய் நிலம் நீர்ப்பாசன வசதியோடும், ஒரு ஏக்கர் புன்செய் நிலம் குடியிருப்புக்காகவும் வழங்கப்பட்டது. இதனை அப்போது வவுனியா மாவட்ட அரசாங்க அதிபராக இருந்த மாணிக்க இடைக்காடர் (பேராசிரியர் கைலாசபதியின் மாமனார்) அவர்கள் வழங்கியிருந்தார். ஒதுக்கப்பட்ட மக்களின் நன்மை கருதி அவர் இந்த மக்களுக்கே அந்தக் குளத்தின் கீழ் அமைந்த காணிகளைப் பகிர்ந்தளித்தார் என்பது அவரின் உயர்ந்த மனப்போக்கைக் காட்டி நிற்கின்றது. உயர் சாதியினர் சிலர் ஏழைகளா யிருந்தும் தங்களுக்கு அந்த மக்களோடு இணைந்து விவசாயம் செய்ய விரும்பவில்லை எனத்தெரிவித்தமையை அடுத்து அயலூரான கணுக்கேணி, ஆண்டான்குளம் ஆகிய கிராமங்களில் இருந்த மக்களுக்கு நிலங்கள் வழங்கப்பட்டது குறிப்பிடத்தக்கது. ஆனால் தண்ணிமுறிப்புக் குளக்கட்டுப் புனருத்தாரணம் செய்யப்பட்டு 1958ம் ஆண்டு அதன் கீழ் உள்ள காணிகள் தலா மூன்று ஏக்கர்கள் வீதம் பகிர்ந்தளிக்கப்பட்டன. இத்திட்டத்தின் கீழ் குமுளமுனையில் இருந்து ஏறத்தாழ ஐந்து மைல்களுக்கப்பால் இருந்த குளக்கட்டுவரை காணப்பட்ட காடுகள் இப்பிரதேச மக்களுக்கு குறிப்பாக நிலமற்றவரக்ளுக்கு பகிர்ந்தளிக்கப்பட்டன. இதனால் ஆண்டான் அடிமை முறைமைக்குச் சற்று தீர்வுகாண்பட்டது எனலாம்.

## தண்ணி முறிப்பும் குருந்துமலையும்:

தண்ணிமுறிப்புக் குளத்தினை 1ம் அக்கபோதி மன்னன் கட்டுவித்தான் எனவும், குளக்கோட்ட மன்னன் கட்டுவித்தான் எனவும் வரலாற்க் குறிப்புக்கள் காணப்படுகின்றன. இக்குளத்திற்கு அண்மையில் குருந்துமலை எனும் உயரமான ஒரு இடம் உண்டு. இங்குள்ளவர்கள் அந்த மலைக் குன்றில் ஐயனார் கோவில் ஒன்றை வைத்து வழிபட்டு வந்துள்ளதோடு இன்றும் வழிபட்டு வருகின்றனர். வருடாவருடம் இந்த ஆலயத்திற்கு மடை போட்டுப் பூசை செய்து வழிபடுவது இவ்வூர் மக்களின் வழக்கமாகும். ஆனால் இந்த மலைக்குன்றில் புத்த கோயில் முன்னர் இருந்தது எனக்குறிப்பிட்டுக்

கொண்டு 1977–78களில் சில புத்த பிக்குக்கள் அங்கு வந்து புத்த தேவாலயம் அமைக்கும் பணியில் ஈடுபட்டனர். வவுனியாவில் இருந்து கருங்கல், கட்டிடப் பொருட்களோடு இரவோடு இரவாக இங்குவந்து அதற்கான அடிக்கல்லை நாட்டிப் பணிகளை மேற்கொள்ள முயற்சிகள் மேற்கொண்டனர். இதனை அறிந்த குமுளமுனைக் கிராம வாசிகள் அங்கு சென்று தங்கள் ஐயனார் கோயிலுக்கு நிரந்தரமான கட்டிடத்தைக் கட்டி வழிபாட்டை மேற்கொண் டனர். இவ்வரிய பணியில் அவ்வூரைச் சேர்ந்த நாகநாதி, நாகலிங்கம் (பூசகர்), தங்கராசா இராமநாதன், நமசிவாயம் கருணாகரன், தம்பையா, அழகராசா, கந்தையா மயில்வாகனம், தண்ணீரூற்றைச் சேர்ந்த செல்லையா நித்தியானந்தம் (கணக்காளர் ஒட்டுசுட்டான் ஓட்டுத் தொழிற்சாலை) போன்றோர் முன்நின்று செய்ததோடு புத்த பிக்குக்களால் கொண்டுவரப்பட்ட பொருட்களும் அகற்றப்பட்டன. புத்த பிக்குவிற்கு இதனை எடுத்துக்காட்டி இங்கு சிங்களக் குடியேற்றத்தைக் கொண்டு வருவதற்கு முயற்சி செய்தவர்க ளுள் வவுனியா மாவட்ட அரசாங்க அதிபராக இருந்த சிங்கள இனத்தினர் ஒருவரும், ஒட்டுசுட்டான் ஓட்டுத் தொழிற்சாலையில் பணியாற்றிய சிங்கள இனத்தைச் சேர்ந்த முகாமையாளர் ஒருவரும் முக்கிய மானவர்களாக, சிங்களக் குடியேற்றத்தை மேற்கொள்ளவற்கானதும், பௌத்த ஆலயம் ஒன்றை அமைத்துக்கொள்ளவும் ஒத்துழைப்புக்களை நல்கியும் வந்தனர். ஓட்டுத் தொழிற்சாலையில் இருந்து கட்டிடத் தேவைகளுக்கு இலவசமாக பொருட்களைக் கொடுத்தமை அங்கு பணியாற்றிய தமிழ் உள்ளங்களி டையே விழிப்பை ஏற்படுத்தியது. இதனால் இரவோடு இரவாக அங்கு ஐயன் ஆலயம் அமைக்க அது தூண்டியது. ஊரவர்கள் கிட்டத்தட்ட 300 அடிகளுக்கு மேல் உயரமான அந்த குன்றின் மீது கட்டிடப்பொருட்கள் அனைத்தையும் கொண்டு செல்வதற்கு ஒன்று கூடி உழைத்தமை பாராட்டத்தக்கது. இதற்கிடையே குமுளமுனையில் ஒரு வீட்டில் கூலி வேலைக்காக வந்து தங்கியிருந்த அப்புகாமி என்னும் சிங்கள இனத்தினன் இந்தப் பிரதேசத்தில் அமைந்திருந்த குருந்தூர் மலைபற்றிய தகவல்களையும் அதனைச் சென்றடையும் வழிகளையும் காட்டிக்கொடுத்து உதவினான். இவன் இந்தக் கிராமத்திற்கு வந்து கிட்டத்தட்ட 25 ஆண்டுகளுக்கு மேலாக ஊரவர்களோடு உறவாடி அவர்களோடு வாழ்ந்துவந்தவன். காடேறி என அழைக்கப்படும் அளவிற்கு காட்டிற்குத் தனியே சென்று வேட்டையாடி வருவான். அனைவராலும் மாமா என அழைக்கப்படுவான். வேட்டையாடுவதிலும், காட்டில் தனியே செல்வதிலும் மிகுந்த ஆர்வங் கொண்டவர். இவரின் உதவியை புத்த பிக்கு பெற்றுக்கொள்ள வாய்ப்பாக அமைந்தமை அவன் சிங்களவன் என்பதும் இடங்களை நன்கு அறிந்தவன் என்பதுமே. ஊரவர்களின் எதிர்ப்பைக் கண்டு அஞ்சிய புத்த பிக்கு தனது முயற்சி கைகூடாதுவிடவே பின்வாங்கிச் சென்றார். இதன் பின்னரும் இந்த ஊரில் வாழ்ந்த அப்புகாமிக்கு பின்னர் என்ன நடந்தது என்பது யாருக்கும் தெரியாத

ஒன்று. இனக்கலவரம் தீவிரம் அடைந்த பின்னர் அப்புகாமி தன் ஊருக்குத் திரும்பிச் சென்றிருக்கலாம் என ஊரவர்கள் பேசிக்கொள்வதனைக் கேட்கக்கூடியதாக இருந்தது.

அயல் கிராமமான அளம்பில் என்னும் இடத்தில் வதிரியைச் சேர்ந்தவர்கள் கள்ளுக் குத்தகை எடுத்து கோடைகாலத்தில் கள் வியாபாரத்தில் ஈடுபடுவர். அதற்கு இன்னும் ஒரு காரணம் இக்காலத்திலேயே மயிலிட்டி, பருத்தித்துறை போன்ற பிரதேசங்களிலிருந்தும் நீர்கொழும்பு, கருக்குப்பனை சிலாபம், மாத்தறை, காலி போன்ற சிங்களப் பிரதேசங்களிலிருந்தும் மீனவர்கள் வந்து தற்காலிகமாக வாடிகளை அமைத்து கரைவலை எனப்படும் முறையில் மீன்பிடிப்பதும் காரணமாகும். அவ்விதம் வந்தவர்களில் முடியப்பன் என்னும் வீரமும் பலமும் பொருந்திய எதற்கும் அஞ்சாத கள்ளூ வியாபாரியும் வந்திருந்தான். வெளியிடத்திலிருந்த யாரும் அங்கு வந்து அதிகாரம் செலுத்த முடியாத ஒரு ஒற்றுமை மிக்க ஒரு கிராமமாக குமளமுனை திகழ்ந்து வந்துள்ளது. அளவில் சிறிய கிராமமாக இருந்தாலும் அங்குள்ளவர்களி டையே ஒற்றுமை மேலோங்கி இருப்பதனைக் காணலாம். எனது தந்தையாரின் காலத்தில் இருந்தே இக்கிராமத்தில் கள்ளுக் கட்டுவதற்கோ அன்றி விற்பனை செய்வதற்கோ அனுமதிப்பதில்லை. கள்ளுக் குடிக்க விரும்புபவர்கள் அயல் கிராமங்களுக்குச் சென்று குடிக்கலாமே ஒழிய இக்கிராமத்தில் அந்த அனுமதி அண்மைக் காலம்வரை வழங்கப்படவில்லை. அளம்பில் கிராமத்தில் கோடைகாலத்தில் கள்ளுக் கட்டி விற்பனை செய்யும் தவறணை முறை நடைமுறையில் இருந்தது. இதற்கான குத்தகையினை வேற்றிடத்தவர்களே மேற்கொண்டு வந்தனர். ஒரு முறை இக்கள்ளூ வியாபாரிக்கும் குமுளமுனைக் கிராமத்தவர்களுக்கும் இடையே முறுகல் நிலை தோன்றியுள்ளது. அந்த வியாபாரியோ மிகுந்த பராக்கிரமசாலி ஆவன். ஒரே தரத்தில் பலருக்குப் பதில் சொல்லக்கூடியவன் என எனது தந்தை குறிப்பிடுவார். அந்தக் காலத்தில் முல்லைத்தீவில் பொலிஸ் நிலையம் கூட இருந்ததில்லை. அனைத்துக்கும் மாவட்ட இறைவரி அதிகாரி (னு.சு.மு) தான் பொறுப்பு. பொலீஸ் அதிகாரம் அவருக்கு உண்டு. அப்பொழுது அரசாங்க இறைவரி அதிகாரியாக கடமையாற்றியவர் திரு. எக்ஸ். எம். செல்லத்தம்பு அவர்கள். பின்னர் அவர் காணித்திணைக்கள மேலதிகாரியாகவும் பின்னர் பாராளுமன்ற உறுப்பினராகவும் இருந்துள்ளார். முல்லைத்தீவில் இவர் கடமையாற்றிய வேளை சட்டத்தையும் ஒழுங்கையும் நிலைநாட்டும் பொறுப்பு அவரிடம் ஒப்படைக்கப்பட்டிருந்தது. இந்த கள்ளுத் தவறணை வியாபாரியின் அட்டகாசம் கட்டுக்கடங்காமல் போக அனைவரும் அவரிடம் சென்று முறையிட்டனர். அவர் அவனை வரும்படி கட்டளை அனுப்பியும் அவன் வரவில்லை. அவனை யாரும் நெருங்கவே பயப்பட்டனர். இந்த நிலையில் நமக்கேன் வம்பு என்று அளம்பில் கிராமத்தவர்கள் வாய்பொத்தி

மௌனிகளாகவே இருந்தனர். இவனது அட்டகாசம் அயல் கிராமங்களின் மீதும் வியாபித்தது. குமுளமுனைக் கிராமத்திற்கு வந்து அங்கு கள்ளுக்கட்ட முயற்சிகளை மேற்கொண்டதோடு பொருட்களை பணம் கொடுக்காது எடுத்துச் செல்லவும் முற்பட்டான். முடியப்பன் எனப் பெயர் கொண்ட இவன் ஊரவர்களுக்கு ஒரு வெறுக்கப்பட்ட விரோதியாகவே காணப்பட்டான். ஒரு சமயம் எமது ஊரவர் ஒருவரைத் தாக்கி அவர்கள் சென்ற வண்டில் மாட்டை பறித்துச் சென்றுள்ளான். அதனை அறிந்த ஊரவர்கள் ஒன்றுதிரண்டு அவர்களில் நான்கு ஐந்துபேர் இவனிடம் சென்று நியாயம் கேட்க வந்தபோது வாள் எடுத்து வீசி இருக்கின்றான். அப்போது ஒரு சூரன்போரே தொடங்கி விட்டது. நான்குபேரும் அவனை அடக்கிக் கட்டிப்போட்டுவிட்டு, அரசாங்க அதிகாரிக்கு அறிவித்துள்ளார்கள். நீண்ட நாட்களாக அவனை எதிர்பார்த்தி ருந்த அரசாங்க அதிகாரி அவனைக் கைதுசெய்து நீதி மன்றத்தில் கைய ளித்துள்ளார்.

தண்ணி முறிப்புக் குளம் கட்டப்பட்டபோது அங்கு அழிபாடுகளில் இருந்து ஒரு பிள்ளையார் சிலையும், நாகதம்பிரான் சிலையும் கண்டெடுக்கப்பட்டன. பிள்ளையார் சிலையையும் நாகதம்பிரான் சிலையையும் குளக்கட்டின் அடிவாரத்தில் பிரதிட்சை செய்து கோயில் கட்டி ஆதரித்து வருகின்றனர். ஆரம்ப காலங்களில் திருவிழாக்கள் ஒழுங்காகச் செய்யப்பட்டு வந்தன. பின்னர் நாட்டின் நிலைமை காரணமாக அவை நின்றுவிட்டன.

பெரிய வெளி வயல் நிலத்திற்கு நீர்ப்பாசனம் செய்யப்பட்டுவந்த பண்டாரக்குளம் கைவிடப்பட்டு அது வயல் நிலமாக மாற்றப்பட்டதோடு மயிலிட்டியைச் சேர்ந்த சிவஞானசுந்தரம் எனனும் வர்த்தகர் அந்த நிலத்தினைக் கொள்வனவு செய்துகொண்டார். இவற்றிற்கு வண்ணான் ஆற்றில் ஒர் தற்காலிக தடையை ஏற்படுத்தி நீர்ப்பாசனம் செய்யும் வாய்ப்பும் ஏற்படுத்தப்பட்டுள்ளது.

ஆலடிக்குளத்திற்கு வடக்காக காடுமண்டிக்கிடந்த நித்தகைக்குளம் இன்று திருத்தப்படாத நிலையில் அதற்கான காணிகள் பதவியா பெரும் பகுதிக்குள் உள்ளடக்கப்பட்டு அப்பகுதியைச் சேர்ந்த சிங்களக் குடியேற்றங்களாக மாறிவருவதும். அதேபோன்று ஆமையன் குளம் வெலியோயா திட்டம் என பெயர்மாற்றப்பட்டு குடியேற்றம் செய்யப்படுவதும் இன்று இடம்பெறும் அரசியற் செயற்பாடுகளாகும்.

தென்னவன் மரவடி தமிழரின் பூர்வீக கிராமம் இன்று பதவியா திட்டத்திற்குள் உள்ளடக்கப்பட்டு அங்கிருந்து தமிழர்கள் விரட்டியடிக்கப் பட்டு வீடுகள், வயல் நிலங்கள், கால்நடைகள் என்பன அபகரிக்கப்

பட்டுள்ளமை 1983க்குப் பின்னரான செயற்பாடு. இங்கிருந்த தமிழ்க் குடும்பங்கள் குமுளமுனை, செம்மலை, தண்ணீரூற்று, புதுக்குடியிருப்பு ஆகிய கிராமங்களுக்கு இடம்பெயர்ந்து வாழ்ந்துவந்தமையை நான் நன்கு அறிவேன். தென்னவன் மரவடியில் உள்ள ஆலயத்திற்கான பூசாரியாக முள்ளியவளை கந்தசாமி ஆலயத்தின் பிரதம குருவாக இருந்த நாகராஜா குருக்களின் மகன் நடராஜா குருக்கள் (முன்னைநாள் தமிழ்ப் பேராசிரியர் நா.சுப்பிரமணியன் அவர்களின் மூத்த சகோதரர்) பிரதம குருக்களாக பணியாற்றிவந்தவர் என்பது குறிப்பிடத்தக்கது.

இக்கிராமத்திற்கு வளம் தருவன தண்ணிமுறிப்புக் குளம், ஆறுமுகத்தான் குளம், மறிச்சுக்கட்டி, ஆண்டான்குளம், ஆலடிக்குளம் என்பனவற்றோடு இங்கு மாரிகாலத்தில் ஓடிவரும் தேரோடும் வீதி, வண்ணான் ஆறு, போன்ற அருவிகளும் முன்பொரு காலத்தில் மருதமடு என அழைக்கபட்ட விவசாய நீர்த்தேக்கம் தண்ணிமுறிப்பு நீர்ப்பாசனத்திட்டத்தில் உள்ளடக்கப்பட்டு விட்டது. வளம் நிறைந்த வண்ணடல் மண்படிந்த விவசாயத்திற்கேற்ற நிலவளமும் காட்டுவளமும், கடல்வளமும் நிறைந்த இக்கிராமத்தை ஒட்டிய நிலப்பரப்பு தண்ணிமுறிப்புக் குளத்தோடு இணைந்தது. அவை அனைத்துமே இன்று புனர்நிர்மாணம் செய்யவேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டமையும் இக்கிராமத்தின் செழிப்பை இழக்கச் செய்துள்ளன. பெரிய வெளி வயல் நிலத்திற்கு நீர்ப்பாசனம் செய்யப்பட்டுவந்த பண்டாரக் குளம் கைவிடப்பட்டு அது வயல் நிலமாக மாற்றப்பட்டதோடு மயிலிட்டியைச் சேர்ந்த சிவஞான சுந்தரம் என்னும் வர்த்தகர் வாங்கிக் கொண்டார். இவற்றிற்கு வண்ணான் ஆற்றில் ஓர் தற்காலிக தடையை ஏற்படுத்தி நீர்ப்பாசனம் செய்யும் வாய்ப்பும் ஏற்படுத்தப்பட்டுள்ளது.

நெய்தல், குறிஞ்சி, மருதம், முல்லை, பாலை ஆகிய ஐந்திணை இயல்புகளும் ஒருசேர அமைந்துள்ள ஒரு கிராமமாக குமுளமுனை விளங்குகின்றது. மிகவும் அமைதியும், குளிர்மையும் நிறைந்த ஒரு இனிய கிராமம் என்பதனை இங்கு சென்றுதிரும்பிய பல வேற்றிடத்தினர் புகழ்ந்துரை பகிர்வது குறிப்பிடத்தக்கது.

### வன்னிமக்களின் விளைநிலப்பயன் பாட்டில் இருந்து வந்த

# செந்தமிழ்ச் சொற்கள்

வன்னிப் பெருநிலப்பரப்பு எனக் கொள்ளப்படும் வவுனியா முல்லைத்தீவு மன்னார் கிளிநொச்சி மாவட்டங்களையும் திருகோணமலை மாவட்டத்தின் வடபுலத்தையும் உள்ளடக்கிய விவசாயப் பிரதேசத்தில் காலாகாலமாக விவசாயத்தோடு ஒட்டி அதன் தூய்மை கருதிப்பாவிக்கப்பட்டு வந்த தூய தமிழ்ச் சொற்கள் இன்று வழக்கொழிந்து மறக்கப்பட்டு வருவது அவதானிக்கப்பாலது. இத்தூய தமிழ்ச் சொற்களையும் அதன் கருத்துக்களையும் அழிந்து விடாது பாதுகாக்க நாம் முயற்சிகள் செய்தல் வேண்டும் நோக்கத்தில் இக்கட்டுரை எழுதப்பட்டுள்ளது.

வன்னி மானிலத்தில் வாழ்ந்தோரும் வாழ்ந்து வருவோரும் தமக்கே உரித்தான் பாணியில் பல சொற்களை தமது விவசாயத் தொழிலோடு தொடர்புபடுத்தித் தனித்துவமாக பயன் படுத்தி வந்துள்ளனர். ஆவற்றுள் பல இன்று வழக்கொழிந்துபோய்க் சொண்டிருக்கின்றன. எடுத்துக்காட்டாக காடுகளை அழித்து தற்காலிகமாக ஓரிருவருடங்களுக்கு மேற்கொள்ளும் பயிற் செய்கையைச் சேனைச் செய்கை எனக் கூறுவர். அவ்விதம் காடுவெட்டி புதிதாக ஆரம்பிக்கப்படும் நிலம் புலவு என அழைக்கப்படும். சேனைச் செய்கையில் நெல், எள்ளு, கொள்ளு, சோளம், குரக்கன், சாமை, தினை, இறுங்கு, உழுந்து,பயறு போன்ற தானியங்கள் முக்கியமானவை. புயிர்ச் செய்கைப் பருவங்களுக்கு ஏற்ப அவர்கள் உபயோகிக்கும் சொற்கள் தனித்துவமும் தூய்மையும் உள்ளனவாக அவர்களால் கருதப்பட்டு பயன் படுத்தப்பட்டன. சாதாரணமாக வீட்டில் பயன்படுத்தப்படும் அல்லது பொது வழக்கில் உள்ள சொற்களுக்குமிடையே உள்ள வேறுபாடுகள் அவற்றின் தூய்மை, மேன்மை. கருத்தாழம் என்பவற்றைக் கொண்டு அமைவதனை

நாம் அவதானிக்கலாம்.. தமிழர்தம் பண்பாட்டில் வயதில் முதிர்ந்த வரகளையோ அல்லது வயது கூடியவர்களையோ பெயர் சொல்லி அழைத்தல் மரபன்று. அவ்விதம் அழைத்தல் முறைகேடானது என்றே கருதிவந்தார்கள். விளை நிலத்தை மிகவும் தெய்வாம்சம் பொருந்தியதாக தூய்மையானதாக அவர்கள் மதித்து வந்தார்கள். அவ்விதமே வயல் நிலங்களில் தொழில் செய்வோரையோ அல்லது தொழில் கொள்வோ ரையோ அவர்கள் பெயர் சொல்லி அழைப்பதை இழுக்காகக் கருதினர். அவ்விதம் அழைப்பதைத் தவிர்த்து கமக்காரன், போலன், போலி, பெரிய போலன், சின்னப் போலன் போன்ற பொதுச் சொற்களைக் கொண்டு அழைத் தொழுகினர் எனத் துணியலாம்.. மாடுகளை மிகத் தூய்மை யானவையாக விவசாயிகள் கருதுவது தமிழர் பண்பாடு. மாடுகளுக்கு விழா எடுக்கும் உயர்ந்த பண்பு வன்னிமக்களின் வாழ்வியலுடன் ஒட்டிக்கொண்ட ஓர் அம்சமாகும். ஊளவு காலத்தில் உளவன் எனவும் சூடு மிரிக்கும் காலத்தில் போலன் என்றும் அழைத்து வருவதனை இன்றும் அவதானிக்கலாம். இவ்விதமாக தூய்மையுள்ள தமிழ்ச் சொற் பதங்கள் இன்று வழக்கொழிந்து அருகி வருவதனைக் காணலாம்.

எப்பொருள் யார் யார்வாய்க்கேட்பினும்அப்பொருள்
மெய்ப் பொருள் காண்பதறிவு

என்னும் வள்ளுவர் வாக்கைக் கருத்தில் கொண்டு வன்னி மக்களால் பயன் படுத்தப்பபட்டு வந்த மரபுவழித் தூய இவ் அரும் சொற்களைத் தேடிப் பெற்று அவற்றை நூலுருவில் உருவமைத்துக் காத்தல் எம் தலையாய கடனாகும். இவற்றிற்கு மேலாக வன்னியில் வாழ்ந்த கிராமிய வைத்தியர்கள் தாம் பரம்பரை பரம்பரையாக மேற்கொண்ட வைத்தியத் தொழினினைபயின்று கொள்வதற்குப் பயன்படுத்திக்கொண்டு வந்த வாகடங்கள் இன்றும் ஏட்டு வடிவில் அவர்களது வாரிசுகளினால் பரம்பரை பரம்பரையாகப் பாது காக்கப்பட்டு வருகின்றன. ஓதியமலை என்னும் கிராமத்தில் வாழ்ந்த கோவிந்தர் என்னும் (விஷ) பாம்பு கடி வைத்தியர், குமளமுனையில் வாழ்ந்த செல்லையா வைத்தியர், காங்கேசு வைத்தியர், அழம்பிலில் வாழ்ந்த செல்லத்துரை என அழைக்கப்படும் மிக்கேற்பிள்ளை வைத்தியர், தண்ணீரூற்றில் வாழ்ந்த கைலாயபிள்ளை வைத்தியர் போன்றோரால் பாவிக்கப்பட்டுப் பேணிப்பாதுகாக்கப்பட்ட வைத்திய வாகட ஏடுகளும் கனுக்கேணியில் வாழ்ந்த இராமலிங்கம் சாத்திரியார், குமளமுனையில் வாழ்ந்த மாணிக்க விதானையார் போன்றோரால் பாவிக்கப்பட்டு வந்த சாத்திர ஏடுகளும் வற்றாப்பழை அம்மன் வரலாறு, குமாரபுர ஈஸ்வரர் வரலாறு, புதூர் நாககம்பிரான் வரலாறு, வற்றாப்பளை நாச்சிமார் வரலாறு, வன்னிவிழாங்குளம் அம்மன் வரலாறு போன்ற பழம் பெரும் தலவரலாறுகள் ஏட்டில் இன்றும் அந்தந்தக் கோவில்களில் பாதுகாக்கப்பட்டு வருகின்றன.

இன்றய நாட்டு நிலையில் இவை இலகுவில் அழிந்து போகக் கூடிய சந்தர்ப்பங்கள் எம்கண்ணெதிரே காணப்படுகின்றன. இவை போன்ற வன்னியின் அரிய தமிழ் பொக்கிசங்கள் தேடிப் பெறப்பட்டு நூலுரவாக்கப்படுதல் வேண்டும். இவற்றைத் தமிழுலகுக்குத் தந்துதவிய பழம் தமிழ் மேதைகளுக்கும் பயன்படுத்தப்பட்ட தமிழுக்கும் அதனை வரன் முறையாகப் பாவித்து வந்த வன்னி மக்களுக்கும் நாம் செய்யும் நன்றிக்கடனாகும். இதன் ஒரு ஆரம்ப முயற்சியாக சில அரும் சொற்களையும் அதற்கான விளக்கங்களையும் தருவதற்கு எடுத்துக்கொண்டுள்ள ஆரம்ப முயற்சியாக இது அமைகின்றது எனலாம்.

### விளைநிலப் பெயர்கள்

கமம்– நெல் விளையும் நிலப்பரப்பு.

தறை– நெல் விளையும் நிலப்பரப்பு.

வயல்– நெல் விளையும் நிலப்பரப்பு (பாத்திகளாக வகுக்கப்பட்டுள்ளது).

தோட்டம்: காய்கறி கீரை வகைகள் பயிரிடும் இடம்

புலவு– புதிதாக விவசாயத்திற்கு உட்படுத்தப்பட்ட நிலப்பரப்பு (மழையை நம்பி மேட்டுநிலப் பயிர்ச்செய்கையாக குரக்கன், எள்ளு, பயறு, போன்ற சிறுதானியப் பயிர்ச்செய்கையும் சோழன், வாழை, புடோல், பூசனி, நீற்றுப்பூசனி, வத்தகை போன்ற பயிர்களும் பயிரப்படும் இடமாகும்.

பெரியவெளி– நெல் விளையும் பெரிய நிலப்பரப்பு.

நடுத்துண்டு– நெல் விளையும் நிலத்தின் நடுவே உள்ள துண்டம்.

கண்டல்– நெல் விளையும் கருமண் நிலம்.

### நீர் நிலைகளின் பெயர்கள்

குளம்– தோண்டப்பட்டோ அலலது அணையாகக் கட்டப்பட்ட நீர்த்தேக்கம்.

குட்டை – இயற்கையாகவோ அல்லது மனிதனால் ஆக்கப்பட்ட மிகச் சிறிய குளம்.

மோட்டை– இயற்கையாவே அமைந்த சிறு நீர்த்தேக்கம்.

மடு– இயற்கையான ஆழம் கூடிய நீர்நிலை.

பூவல்– குடிநீர்த்தேவைக்காக மக்களால் தோண்டப்பட்ட மிகச்சிறிய கிணறு அல்லது குளி.

சுனை– இயற்கை நீரூற்றுக் கொண்ட சதுப்பு நிலம்.

கேணி– மக்களால் வெட்டப்பட்ட சிறிய நீர்த்தேக்கம்.

துரவு– மாடு இறங்கி நீர் குடிக்கக் கூடியதான அல்லது தோட்டத்திற்கு நீர் இறைக்கக் கூடியதான ஆழமான மாடுகள் இறங்கக் கூடிய நீர் நிலை(இலகுவாகத் தூர்ந்துவிடக்கூடியது).

**பயிரிடும் காலத்தில் வயற் பரப்பில் உபயோகிக்கப்படும் சொற்பதங்கள்.**

பெரும்/கால போகம்– மாரிகாலத்தில் மேற்கொள்ளப்படும் நெற்செய்கை.

சிறு/கோடைப்போகம்– கோடைகாலத்தில் மேற்கொள்ளப்படும் நெற் செய்கை.

இடைப்போகம்– மாரிப் போகத்திற்கும் கோடைப் போகத்திற்கும். இடைக்காலத்தில் மேற்கொள்ளப்படும் நெற் பயிற் செய்கை.

மானாவாரி– மழையைநம்பி மேற்கொள்ளப்படும் நெற் பயிற் செய்கை

விதைப்பு– நெல்லை வீசி எறிந்து மேற்கொள்ளும் பயிற் செய்கை

நெருக்கி எறிதல்– நெல்லை மிக நெருக்கமாக வீசுதல்

கைவிட்டெறிதல்– மிக நெருக்கமாக விதைத்தல்

இறுக்கி விதைத்தல்– மிக நெருக்கமாக விதைத்தல்

கை இறுக்கி விதைத்தல்–மிக ஐதாக நெருக்கமின்றி விதைத்தல்

ஐதாக விதைத்தல்– நெருக்கமின்றி விதைத்தல்

பலகை அடிப்பு– சேற்றில் உழுத பின் பலகையால் சேற்றைத் தடவி மட்டப்படுத்தியபின் விதைத்தல்

சுரியடித்தல்(சேறடித்தல்)– நீர் பற்றாக்குறைகாரணமாக மாடுகளால் மிதித்துசேறாக்கிய பின் விதைத்தல்

உழுதல்– மாடுகளால் கலப்பையால் நிலத்தை உழுது பண்படுத்துதல்

சால் கட்டல்– உழுவதற்காக நிலத்தை கூறாக்கி அடையாளமிடல் உளவு

சால்– உழுவதால் ஏற்படும் வழி (சால் – சாலை என்பதாயிற்று, சாலை — வீதி, பாதை, வழி)

அணையுழவு–மிக நெருக்கமாக உழுதல்

சால் பொருத உழுதல்–மிக நெருக்கமாக ஒன்றுடன் ஒன்று சேரும் வண்ணம் உழுதல்

பெரு உழவு– உழும் போது இரண்டு சால்களுக்கு இடையே ஏற்படும் இடைவெளி

மேவி வருதல்–விட்ட இடைவெளியை நிரப்பி உழுதல்

மூன்றாம் மறை–நெல் விதைத்தபின் மூன்றாம் நாள் உழுதல்

மூன்றாம் உழவு– மூன்றாம் தரம் உழுதல்

ஏர்– கலப்பை

ஏர்க்கால்– கலப்பபையில் உள்ள நீளமான தடி

ஏர்க்கால் ஆணி–ஏர்க்காலின் உள்ள குறுக்காக துவாரத்தில் உள்ள தடி இது நந்தை கொழுவி நுகத்துடன் இணைக்கப் பயன்படும்

மேழி– கையால் பிடித்து உழும் கலப்பையின் மேற்பாகத்தில் நீண்டு இருக்கும்பகுதி

படவாழ்– கொழுப் பொருத்தும் மரத்தால் செய்யப்பட்ட பகுதி

கொழு– இரும்பாலான நிலத்தினைப் பிரித்து உழவினை ஏற்படுத்தும் மிகக் கூரிய பகுதி

கொழு ஆணி–கொழுவை படவாழுடன் இணைத்து இறுக்கமாக வைத்திருக்கப் பயன் படுத்தப்படும்இரும்பால்செய்யப்பட்டது

நுகம்– மாடுகளின் தோழ்களில் வைக்கப்பட்டு கயிற்றால் கட்டப்பட்டு கலப்பையை அல்லது வண்டியை இழுக்கப் பயன் படும் நீள மொத்தமான தடி

நுகம் பிரட்டுதல்– மாடுகள் உழவுக்கு அல்லது வண்டி இழுக்க மறுத்துத துரும்புதல்

பூட்டாங்கயிறு– நுகத்தின இருமுனைகளிலும் உள்ள துவாரங்களில் மாழகளின் கழுத்துடன் இணைத்துக் கடடப்படும் கயிறு

ஆப்பு– மேழிக்கும் ஏர்க்காலுக்கும் இடையே வைக்கப்படும் ஆழமாகவோ அல்லது ஆழம் குறைத்தோ உழுவதற்குக் கலப்பையைச் சரிசெய்து கொள்ள உதவும்

நந்தை– ஏர்க்காலையும் நுகத்தையும் இணைத்துக் கொழுவி விடும் கயிறு அல்லது கொடி

வரப்பு வரைதல்– புதிதாக வரம்பு கட்டல்

வரம்பு செருக்கல்– வரம்புகளைத் துப்புரவு செய்தல்

வரம்ப சீவுதல்–வரம்பின் உட்புறங்களை வெட்டி மட்டப்படுத்துதல்

வரம்பு அறுத்துக்கட்டல்– வரம்பின் உட்புறத்தை வெட்டி வரம்பை உயரமாக்குதல்

அழை வைத்தல்–வயலில் இருந்து நீர்வடிந்தோடக்கூடியதாக வடிகால் அமைத்தல்

தாயழை– வயலின் எல்லாப்பக்கங்களிலும் எற்படுத்தப்படும் ஒன்று சேர்ந்து நீர் வடிந்தோடக்கூடிய பிரதானமான வடிகால்

வக்கடவை– நீர் வடிந்தோடக்கூடியதான வரம்பில் வெட்டி விடப்படும் கடவை அல்லது பாதை

தத்து வக்கடவை–மேலதிக நீர் வடிந்தோடக்கூடிய கடவை

மடை திறத்தல்– வயலில் மறித்து வைக்கப்பட்டிருந்த நீரைத் திறந்து விடுடதல்

அளவக்கை– நீர்வடிந்தோடும் கால்வாய் அல்லது வாய்க்கால்

விதை நெல்– விதைப்பதற்காக வைக்கப்பட்டுள்ள

நெல் முளை கட்டல்– விதைப்பதற்கு முன்பு நெல்லைப்பரிசோதித்தல்

ஊறப்போடல்– சேற்று விதைப்புக்காக நெல்லை நீரில் அமிழ்த்திவிடுதல்

நீர்வடிவு– நெல் நன்கு நனைந்த பின் (12 மணித்தியாலங்கள்) நீரை வடிய விடுதல்

சோம்பு– நெல் சூடேறி முளைவிடும் காலம்

அரும்பு– நெல் மணியில் இருந்து முளை தோன்றும் காலம்

தப்புதல்– பலகையால் சேற்றை மட்டப் படுத்திய பின் எஞ்சியவற்றை மண்வெட்டியால் கிளறி மிதித்துத் மட்டமாக்குதல்

விதைமுதல் /விதைநெல்லு/ கூரன்–விதைப்பதற்குரிய நெல்

மரக்கால்–நெல் அளக்க பயன் படும் பிரம்பினால் பின்னப்பட்ட வட்ட வடிவமான பத்துக்கொத்து அளவு கொண்டது

முளை எறிதல்–முளைகட்டப்பட்ட நெல்லை விதைத்தல்

மூலைகொத்தல்–வரப்ப மூலைகள் விதைப்பின் பின்னர் நெல்தூவிக் கொத்துதல்

நடுகை– பயிர்களை நாட்டல்

புளிக்கவிடுதல்–சேற்றுவிதைப்புக்காக நீர்விட்டு உழுது விடுதல்

சிறகை அள்ளல்–சிறகை என்னும் பறவை நீர் உள்ள இடத்தில் உள்ள நெற்களைத் தனது இறக்கைகளால் கூட்டி உண்ணுதல்

குருவிக்காவல்–பறவைகளிடமிருநதுசேற்றில் விதைத்த நெல்லைப் பாதுகாத்தல்

முல்லையான் மேய்தல்–நீரற்ற போது இளம் பயிர்களைக் கறையான் உண்ணல்

கவுண்வீசுதல்–கவுண் எனப்படும் கயிற்றால் அல்லக நாரால் பின்னப்பட்ட ஆயுதம் ஒன்றில் கல் வைத்து மிக தூரத்திற்கு வீசுதல்

கண்கழுவு– சேற்று விதைப்பின் ஏழநாட்களின் பின் முதன் முதலில் நீர் பாய்ச்சுதல்

நீர்கட்டல்– வயலில் நீரைத்தேக்கி வைத்தல்

விதை பெட்டி–விதைப்பதற்குப்பயன்படும் பனை ஓலையால் இறுக்கமாக இழைக்கப்பட்ட பெட்டி அல்லது கடகம்

உமை மிரித்தல்–வரம்பில் நண்டுகளால் எற்கடுத்தப்படும் நீர் செல்லக்கூடிய துவாரங்களை காலால் மிதித்து அடைத்தல்

மூன்றிலைப்பயிர்–நெற் பயிரில் மூன்று இலைகள் தொன்றிய நிலை

கம்பிப்பருவம்–பயிர் வளர்ந்து கருக்கட்டக் கூடிய நிலை

குடலை– பயிர் கருவுற்ற நிலை

வெடி குடலை–கதிர்கள் வெளியே வர ஆயத்தமான நிலை

விக்கல் கக்கல்–கதிர்கள் வெளியே தோன்றும் காலம்

வானம் பார்த்தகதிர்–நெற்கதிரகள் பூரணமாக வெளியே வந்தநிலை பால் ஏறாத நெற்கதிர்கள்.

பால் ஏறும் பருவம்–நெல் மணிகளில் பால் காணப்படும் நிலை தலை வணங்குதல்–நெற்ககிர்கள் முற்றிச் சாயும் நிலை

செங்கல் மங்கல்–நெல் முற்றிப் பழுக்கத் தொடங்குதல்

பெரும் பழுப்பு–நெற்கதிர்கள் நன்கு பழுத்த நிலை

பூமி பார்த்த கதிர்–நெல் நன்கு முற்றிச் சாய்ந்த நிலை

விளைவு– நெல் நன்கு விளைந்த நிலை

நீர்ச்சாவி– குடலையில் நீர் புகுந்து பழுதடைந்த நிலை

வெண்கதிர்– நோய் காரணமாக அல்லது ஈக் குடித்ததன் காரணமாக அல்லது நீர் குடலையில் உட்புதந்ததன் காரணமாக பழுதடைந்த கதிர்

அறக்கொட்டியான் விழுதல்–ஒருவகை ஈ நெற்கதிர்களை அதன் பாலைக் குடிப்பதால் நெற்கதிர்கள் பழுதடைதல்

ஈப்பார்த்தல்– ஈப்தீச்சி நெற்கதிர்களில்உள்ள பாலைக் குடித்தல்

அறுவடை/அருவிவெட்டல்–நெற்கதிர்களை அருவாள்கொண்டு அரிதல் அல்லது வெட்டுதல்

பரத்தை வெட்டு–ஊரவர்கள் எல்லோரும் சேர்ந்து வைத்தியர் களுக்கு இலவசமாக அருவி வெட்டிக் கொடுத்தல்

உப்பட்டி– நெற்கதிர்களை வெட்டி காயக்கூடியதாகப் போட்டு விடுதல்

மாவக்கை– காய்ந்த உப்பட்டிகளை ஒன்று சேர்த்து கையால் ஏடுத்துக் கட்டக்கூடிய வகையில் லைத்தல்

பிள்ளையார் பிடி–முதன்முதலில் வெட்டி வைக்கப்படும் நெற் கதிர் கட்டு– மாவக்கைகளை ஒன்று சேர்த்து கயிற்றால் கட்டுதல்

களம்– சூடு வழமையாக வைக்கப்படும் அவ்வது வைத்த இடம் களம்

திருவுதல்– சூடு வைப்பதற்காக சூடு வைக்கும் இடத்தைச் செருக்குதல்

தளம்– சூடு வைப்பதற்காக உயரமாகப் போடப்படும் மேடை போன்றது (தளம்போடுதல்)

சூடுவைத்தல்– நெற்கதிர்களை நீர் உட்புகாதவாறு அடுக்கிவைத்தல்

படைபோடுதல்– சூடுவைக்கும் போது தகிர்களைபாடமாகஅடுக்குதல்

உட்கதிர் போடுதல்– சுற்றிவர வட்டமாக அடுக்கப்பட்ட படையின் உட்பகுதியில் கதிர்களைப்பரப்பி அடுக்குதல்

தாவு கதிர் போடுதல்–சூட்டின் வெளிப்புறத்தில் உள்ள கதிர்கள் வழுகாத வாறு கதிர்கள் பின்னக் கூடியதாக வைத்தல்

கும்பி போடுதல்–சூட்டின் நடுப்பசுதி உயரமாக இருப்பதற்காக நெற் கதிர்களைக் குவித்து வைத்தல்

வளையக் கதிர் லைத்தல்–படைகளுக்கு மேலாக வட்டமாகக் கதிர்களை அடுக்குதல்

முடி சூட்டுதல்–சூட்டின் மேற்புறம் மழை நீர் உட்புகாத வண்ணம் கூர்வடிவில் வைத்தல்

பழுதை– வைக்கோல் புரியினால் தடியின் தலைப்பாகத்தில் உள்ள கவர்கள் இறுக்கமாகப் பின்னப்பட்டு சூடு வைக்கும் போது வெளிப்புறம் மட்டமாக இருக்கும் வண்ணம் தட்ட உபயோகிக்கப்படும் தடி

பழுதைக்காரன்/மேத்திரி–சூட்டின் வெளிப்புறம் வெளியே புடைக்காது தட்டி மட்டப்படுத்துபவர்

பழுதை போடுதல்–பழுதையால் தட்டுதல் ஏற்றி அடித்தல்–வெளியே வந்த கதிர்கள் உட்செல்லக்கூடிய வகையில் பலமாக அடித்தல்

போர் வைத்தல்– சூடு வைத்து எஞ்சிய கதிர்களையோ அல்லது மழை வரும் என எதிர் பார்த்தோ சிறிதாக கதிர்களை அடுக்கிவைத்தல்

கட்டுதிரி– சூடு வைக்கப்படும் போது கட்டுகளில் இருந்து உதிர்ந்து

கொட்டுப்படும் நெல்

கதிர் பொறுக்கல்– கட்டுக்கள் கட்டிய பின் காணப்படும் தவறிய
கதிர்களைப் பொறுக்குதல்

சூடு அடித்தல்/சூடு மிரித்தல்–மாடுகளைக் கொண்டு மிரித்து நெற்
கதிர்களில் இருந்து நெல் மணிகளை வேறுபடுத்துதல்
சூடு தள்ளல்/சூடு விழுத்துதல் – கதிர்களை மிரிப்பதற்காக
சூட்டில் உள்ள கதிர்களைக் கழே விழுத்துதல்

வேலைகாரன்–நெற்கதிர்களைக் கிளறுவதற்குப்பயன் படும் பலம்மிக்க “ட’
வடிவான வளைந்த தடி

குல்லம்– சுளகு

பெரு வாயன்–கடகம்

அகலப் பெருவாயன்– சாக்கு,

பொலி/கூரன்–நெல்லு

பொலிக் கொடி–வைக்கோல்

முதற் பொலி–தூற்றிய பின் முன்பாகத்தில் காணபபடும் நன்கு விளைந்த
முழுமையான மணியுள்ள நெல்

முகப்பொலி/அரைவயிறன்–தூற்றியபின் பின்புறத்தில் காணப்படும் நிறை
குறைந்த நெல்

அரைச்சாவி– நீரின்றி நன்கு விளையாத நெல்

சப்பட்டை/பதர்/சப்பி–அரிசி அற்ற கோதாகக் காணப்படும் நெல்

கூளம்–தூசு போற்காணப்படும் கழிவுகள்

கூளமகற்றி/கூட்டுமாறு–மரக் கொம்பர்களினால் கட்டப்பட்ட கூழத்தை
அகற்ற பயன் படும்

பட்டடை– நெல்லைச் சேமித்து வைப்பதற்காகத் தற்காலிகமாக
வைக்கோற் புரியினால் தடிகளை நாட்டி மிக இறுக்கமாகப்
பின்னப்பட்டகொம்பறை போன்ற வடிவமைப்புக் கொண்டது

புரி– வைக்கோலை அல்லது நாரைச் சேர்த்து முறுக்குவதன்
மூலம் செய்யப்படுவது.

முக்காலி– மூன்று தடிகளை ஒன்றாக்கி மேற்புளத்தில் கட்டி ஒருவர் அதன் மீது ஏறி நின்று நெல்லைத் தூற்றப் பயன்படுத்தப்படுவது

இளையன்– சாக்கு

வாதுராயன்– காற்று

மெல்லுதல்/ அள்ளூதல்/கோலுதல்–தூற்றுவதற்கோ அல்லது தூற்றி முடிந்த பின்போ நெல்லை அள்ளூதல்

மெண்டுவா– அள்ளி வா

கடகடப்பான்– மாட்டு வண்டி

நெடுவாலன்– பாம்பு

போலன்– மாடு அல்லது மனிதன்

நடையன்– மாடு

கட்டையடியான்– சூடுமிரிப்பதற்காகச் சூட்டுக் (களக்கட்டை) கட்டையில் கட்டப்படும் மாடு

வாட்டி– கடைசிவரை

வாட்டியான்– சூடு மிரிக்கப்படும் போது வெளிப்புறத்தில் சுற்றிவரும் மாடு

போல்– சாணம்

சலம்– நீர்/சிறுநீர்

சாமக்கதிர்– ஒர் இரவில் மிரிக்கப்படும் கதிரின் அளவில் அரைவாசி

முதல் இரவு– சூடு மிரிக்க ஆரம்பித்த நாள்

பெருமிரி– சூடு மிரியல் இறுதிநாள்

பொலி நிறுத்துதல்–நெல்லையும் வைக்கோலையும் வேறுபடுத்தித் தூற்றுவதற்குத் தயாரான நிலை

அன்னம்/அமுது–சோறு அல்லது பொங்கல்

பிளா– நீர் குடிப்பதற்கு பனை ஓலையால் செய்யப்பட்ட பாத்திரம்

தட்டுவம்– உணவு உண்பதற்காக பனை ஓலையால் செய்யப்பட்ட பாத்திரம்

கலையம்– நீர் எடுப்பதற்கு அல்லது பால் கறப்பதற்குப் பயன் படும்

மட்பாத்திரம்

வெளிச்சக்காரன்–விளக்கு அல்லது

சூழ்: தீப்பந்தம்

சூழ் கொழுத்துதல்–தீப்பந்தம் கொழுத்துதல்

தீவறை– விறகுகளை அல்லது மரக்குற்றிகளைச் சேர்த்து ஏற்படுத்தப் பட்ட நெருப்புச்சுவாலை

மினுக்கன்– விடி வெள்ளி

களப் போர்– கைம் பெண்களுக்கோ அல்லது மிகவும் வறியவர்களுக்கோ சூடுமிரியலின் இறுதி நாள் வழங்கப்படும் நெல்

கைம்பெண் – கணவனை இழந்த பெண்

களப் போலி–களப்போர் வாங்க வந்துள்ள பெண்

பொழுது– சூரியன்

கொழுக்கழட்டி–மேற்குப் பக்கம்

கொழுக்கழட்டிக்கை மின்னுதல்–மேற்கில் மின்னுதல் (மழை இல்லை என்று கருதப்பட்டது)

ஈசானம்– கிழக்குப்பக்கம்

ஈசானத்துக்குள் மின்னல்– சிழக்கில் மின்னினால் மழை இவ்லை என்று கருதப்பட்டது

மாட்டு வண்டியுடன் தொடர்பான சொற்கள்

துலா– வண்டியில் நீளமாக பனை வைரத்தினால் செய்யப்பட்டது அச்சுக்குத்தியுடன் இணைக்கப்பட்டு நுகம் கொழுவப் பயன் படும்

அச்சுக் குத்தி–பாரம் குளைந்த மரக்குற்றியினால் அச்சை இறக்கமாக வைத்திருப்பதற்காக செய்யப்பட்ட பகுதி

அச்சு– இரும்பினால் செய்யப்பட்ட சில்லுக்கள் நின்று சுழல்வது

அச்சாணி– அச்சுடன் துலாவைச் சேர்த்து இறுக்கி வைப்பது

பக்கச் சாவி– சில்லுக்கள் கழராது இருப்பதற்கு எற்ப அச்சின் துவாரத்தில் போடப்படுவது

நுகம்– வண்டியை இழுக்க துலாவில் பொருத்தி மாடுகளின் தோளில் வைத்துக் கட்டுவது

நுகத்தாணி– நுகத்துடன் துலாவைச் சேர்த்து கொழுவி விடப்படுவது

கிட்டி– நுகத்தின் இருபறத்திலும் மாளுகளை பக்கம் சாயாமல் ரைத்திருக்கம் தடிகள்

கடைக்கிட்டி–நுகத்தின் வெறிப்புறத்தில் உள்ள கிட்டிகள்

உள்க்கிட்டி– நுகத்தின் உட்புறமாக உள்ள கிட்டிகள்

நாகவடம்– துலாவின் முன்புறத்தில் நுகம் கோழுவுவதற்காக இரும்பினால் செய்யப்பட்டது

உச்சிப்பட்டம்–நுகத்தின் முன்புறத்தில் மறைத்துப் பொருத்தப்படும் தகடு

உச்சி வளையம்/நுகவளையம்–நுகத்தின் முன்புறத்திலும் பின்புறத்திலும் பாதுகாப்புக்காக இறுக்கிவிடும் இரும்பு வளையம்

பார்த்தட்டு/ பார்–வண்டியின் பலகையால் ஆன மேற்பரப்பு

பார்த்தகடு– பார்ப் பலகைகளை இறுக்கமாக வைத்திருக்கப் பொருத்தப்பட்டுள்ள இரும்புத்தகடு

ஆசனம்– வண்டி ஓட்டியின் இருக்கை

கிறாதி– வண்டியின் இருமருங்கிலும் உள்ள பாதுகாப்பான படல்

கிறாதிச் சட்டம்–கிறாதி செய்வதற்கான மரச் சட்டங்கள்

சில்லு– வண்டி உருண்டோடும் சிற்கள்

சிலைக்கம்பு–சில்லின் குடத்தையும் வளையக் குற்றியையும் இணைத்து நிற்கும் கம்பு

வளையக்குத்தி–சிலைக்கம்பைக் தயாங்கிநிற்கும் சீல்லின் வெளி வட்டப் பகுதி

குடம்– சிலைக்கம்பைப் பொருத்தி அச்சில் நின்று சுழலும் பகுதி

தோடு– குடத்தின் நடுவே பொருத்தப்படும் இரும்பினாலான உருளைவடிவானது

வளையம்– சில்லின் மேற்பரப்பில் உள்ள இரும்பாலான வளையம்

வளையம் சுடுதல்–சில்லில் வளையத்தைப் பொருத்து வதற்காக

வளையத்தை தீயிட்டு இளக வைத்தல்

பிடிகயிறு– மாடுகளின் நாணயத்தில் பொருத்தி விடும் கயிறு

நாணயக்கயிறு/மூக்குக் கயிறு– மாட்டின் மூக்குத்துவாரத்திற்கு இடையே உள்ள பகுதியில் துளையிட்டு அதன் ஊடாகச் செலுத்திக் கட்டப்படும் கயிறு

கொம்பாணி– மாடுகளின் கொம்புகளில் அழகுக்காக பொருத்தப்படும் கூர்வடிவானது

பிற்தாங்கு– வண்டியின் பின்புறத்தில் பாரத்தைத்தாங்கக் கூடியதாக இருக்கும் சிறு குற்றி

முற்தாங்கு– வண்டி நிலையாக இருப்பகற்கு மாடுகள் இல்லாத வேளை தாங்கிநிற்கும் இருதடிகள்

வெண்டயம்– மாடுகளின் கழுத்துக்களில் கட்டி ஒலி எழுப்பும் உருண்டையான பெரியசதங்கை

ஏரி– மாட்டின் தோளிற்கு மேற்புறம் உயரமாக உள்ள பகுதி

சவாரி– மாட்டு வண்டி ஓட்டப்போட்டி

இலாடன்– மாடுகளின் காற்குளம்புகளில் பாதுகாப்பிற்காகப் பொருத்தப்படும் இரும்பினால் ஆன தகடு

இலாடன் ஆணி–இலாடன் பொருத்தப் பயன்படும் ஆணி


காயடித்தல்/நலமடித்தல்–மாடுகளின் விதைகளை பிசைந்து கரைத்து விடுதல்

நலக்கிட்டி– நலமடிக்கப்பாவிக்கப்படுமஇருதடிகள் இணைக்கப்பட்டது

தோழிலடித்தல்–திடீரென நுகம் மாடுகளின் தோள்களில் பலமாக அடிப்பதால் ஏற்படும் நோவு

வலுக்காச்சியடித்தல்–தோளில் ஏற்படும் காயகங்களை ஆற்ற மேற்கொள்ளப்படும் வைத்திய முறை

குறிசுடதல்– மாடுகளுக்கு இரும்புக்கம்பியினால் சுட்டு அடையாளம் இடல்



திரு தங்கராசா சிவபாலு அவர்களின் "என்மனப்பதிவுகள்" கட்டுரைத்தொகுதி வெளிவருவது குறித்து பெரு மகிழ்ச்சியடைகிறேன். தெளிவுற அறிந்திடவும், தெளிவுபெற மொழிந்திடவும், கைவரப்பெற்றவர்கள் எழுதும் படைப்புகள் காலத்தால் என்றென்றும் போற்றப்படும். அவை என்றும் புதியவை. அத்தகு நூல்வரிசையில் "என்மனப்பதிவுகள் என்ற இந்நூலும் இடம்பெற வாழ்த்துகின்றேன்

கவிதை, விமர்சனம், அறிவியல் கட்டுரைகள் ஊடாக தேடலில் ஈடுபட்டு வந்துள்ள திரு சிவபாலு அவர்கள் ஆசிரியராக, அதிபராக, கொத்தணி அதிபராக பணியாற்றியவர். மேலும் கனடாவில் 'கனடாத்தமிழ் எழுத்தாளர் இணையத் தலைவராகவும், செயலாளராகவும் பதவிகளை பதிவுசெய்ததுடன் தற்போது கனடா தொல்காப்பிய மன்றத்தின் தலைவராக தன் இலக்கியப்பணிகளை மேற்கொண்டுவரும் இவர் இலங்கையிலும் தமிழர்கள் புலம்பெயர்ந்த தேசங்களிலும் தனது எழுத்து வல்லமையால் தன் இலக்கிய இருப்பை நிலை நிறுத்திக்கொண்டவர். இவர் தம் ஏழு தசாப்தகாலகட்டத்தின் வரலாற்றை தன் அனுபவங்களூடாக இங்கே கட்டுரைகளாக தந்துள்ளார். வன்னிப்பகுதி மக்களின் தனிமனித முயற்சி, பண்பாடு, அதனோடு இயைந்த அமைப்புகள், தொழிற்சார் அனுபவங்களை சமூகம் சார்ந்த அக்கறையுடன் முன்வைத்துள்ளார்.

இந்நூல் காலவரிசைப்படியான ஒரு வரலாற்று நூலாக காணப்படாவிடினும் இலங்கையின் வரலாற்று முரண்கள், இனப்பிணக்குகள் அவை கூர்ப்படைந்த வகை பற்றி ஆங்காங்கே விமர்சனபூர்வமாக அனுகிச் செல்கின்றார். அவ்வகையிலே ஒவ்வொரு நிலையிலும் வேறிடத்திலே சொல்லப்படாதன சொல்லப்பட்ட தன்மையினை உணர்ந்து காலரீதியான ஒரு ஆவணமாக உள்வாங்கவேண்டிய கட்டுரைத்தொகுதியாக கொள்ளத்தக்கது.

சு. கிருஷ்ணா
கிரா∴பிக் லேண்ட் அச்சகம் – கனடா